T. 1601.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் நூல் வெளியீடு

# குறுந்தொகை விளக்கம்

•

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர்

மகாவித்துவான், பாஷாகவிசேகரர்

**ரா. இராகவையங்கார் அவர்கள்**

இயற்றியது

*தமிழ்ப்பேராசிரியர்*

டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் (M.A.) அவர்கள்

எழுதிய

ஆராய்ச்சி முகவுரையுடன் கூடியது

WITH COURAGE AND FAITH

*அண்ணாமலைப் பல்கலைக் கழகம்*

1947

Page from 1 to 169 printed at the De-Nobili Press, Madura.
and the rest printed at the
Trichinopoly United Printers Limited, Trichinopoly.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| முகவுரை | ... | i — xx |
| குறுந்தொகை விளக்கம் | ... | 1—169 |
| முதற்குறிப்பகராதி | ... | 171—172 |
| பிழைதிருத்தம் | ... | 173 |

தமிழ்ப் பேராசிரியர்

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்

எழுதிய

# முகவுரை

தமிழ் மக்களது அன்பும் அறிவும் நிறைந்த இன்பவாழ்வின் இயல்பினைப் புலப்படுத்துவன பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகிய சங்க இலக்கியங்களாம். அந்நூல்கள் இற்றைக்கு ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட பழமைவாய்ந்தன என்பது பல அறிஞர்க்கு ஒப்ப முடிந்த துணிபாகும். திருமுருகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் இறுதியாக அமைந்த பாடல்கள் பத்தும் பத்துப்பாட்டெனப் பெறும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல்களாம். அத்தொகை நூல்களே தமிழர்கள் வகுத்த அகம் புறம் என்னும் பொருள் வகையினை இனிது விளக்கும் இலக்கியங்களில் தலைசிறந்தனவாகும்.

இவற்றுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றித் தொகுக்கப்பட்டன. கலித்தொகையும் பரிபாடலும் முறையே கலிப்பாவும் பரிபாடற்பாவும் ஆகிய யாப்பு வகைபற்றித் தொகுக்கப்பட்டன. ஐங்குறுநூறு என்பது ஓரம்போகியார் முதலிய நல்லிசைப்புலவர் ஐவரால் அகனைந்திணையுள் ஒவ்வொரு திணைபற்றி நூறு நூறு செய்யுட்களமையத் தனித்தனியே பாடப் பெற்றுத் தொகுக்கப்பட்டதாகும். குறுந்தொகை நற்றிணை அக நானூறு என்பன அகனைந்திணையாகிய பொருளாலும் ஆசிரியப்பா வாகிய யாப்பாலும் நானூறு பாடல்கள் என்னுந் தொகையாலும் ஒத்தவியல்பினவாம். எனினும், இவற்றைச் செய்யுட்களின் அடி

வரையறை கருதி முன்னையோர் மூன்று தொகைகளாகத் தேர்ந்து தொகுத்தனர். நாலடி முதல் எட்டடி வரை யமைந்த குறுகிய செய்யுட்களைக் குறுந்தொகையென ஒரு தொகையாக்கினர். ஒன்ப தடி முதல் பன்னிரண்டடி வரை யமைந்தனவற்றை நற்றிணையென ஒரு தொகைப்படுத்தினர். பதின்மூன்றடி முதல் முப்பத்தோரடி வரை யமைந்த நீண்ட செய்யுட்களை நெடுந்தொகையாகிய அக நானூறு என ஒரு தொகையாக்கினர்.

குறுந்தொகையென்னும் இத்தொகை நூல் இப்போது கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூற்றொரு செய்யுட்களைப் பெற்றுள்ளது. "நெடுந்தொகை நானூறும் குறுந் தொகை நானூறும் நற்றிணை நானூறும்" என இறையனார் களவியலுரை யாசிரியர் குறிப்பிடுத லால் இந்நூல் தொகுக்கப்பெற்ற காலத்து நானூறு செய்யுட்களை யுடையதென்பதே தொல்லாசிரியர் துணிபாம். "இத்தொகை முடித்தான் பூரிக்கோ, இத்தொகைபாடிய கவிகள் இருநூற்றைவர், இத்தொகை நாலடிச் சிற்றெல்லையாகவும் எட்டடிப் பேரெல்லை யாகவும் தொகுக்கப்பட்டது" என்னுங் குறிப்பு இத்தொகையி னிறுதியிற் காணப்படுதலின் இதனைத் தொகுத்துதவினார் பூரிக்கோ என்னும் புலவர்பெருமானென்பதும், கடவுள் வாழ்த்து நீங்கலாக இந்நூலிற் றொகுக்கப்பெற்ற நானூறு செய்யுட்களையும் பாடிய புலவர் இருநூற்றைவர் என்பதும், நாலடி முதல் எட்டடி வரை யமைந்த அகவற்பாக்களே இதன்கண் தொகுக்கப்பெற்றன என்பதும் தெளிவாம்.

நவிலுந்தோறும் சுவைமிகப்பயக்கும் இலக்கிய வளமார்ந்த இக்குறுந்தொகைக்குத் தொல்காப்பிய வுரையாசிரியருளொருவ ராகிய பேராசிரியரென்பார் தம்முடைய கல்வி வன்மையும் பெரும் புலமையும் விளங்க அரியதோர் விரிவுரை யியற்றினரெனவும், அவ் வாசிரியரால் உரை யெழுதி முடிக்கப்பெறாது எஞ்சிய இருபது செய்யுட்களுக்கு மட்டும் பின்வந்த ஆசிரியர் நச்சினார்க்கினியர் தெளிவுரை வரைந்து அவ்வுரையினை நிறைவு செய்தனரெனவும் நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப்பாயிரங் கூறுகின்றது. இங்ஙனம் முந்நூற்றெண்பது செய்யுட்களுக்குப் பேராசிரியருரையும்

எஞ்சிய இருபது செய்யுட்களுக்கு நச்சினார்க்கினியருரையும் அமைந்த குறுந்தொகையின் பழையவுரை இதுபோது கிடைக்கப் பெறாமை தமிழாது தவக்குறையேயாம்.

இக்குறுந்தொகையினை 1915ம் ஆண்டில் முதன்முதலாகப் பதிப்பித்து வெளிப்படுத்திய அறிஞர், திருக்கண்ணபுரத்தலத்தான் திருமாளிகைச் சௌரிப்பெருமாளரங்கனார் ஆவர். தமிழிற் சிறந்த புலமைமாண்பும் பேரன்புமுடைய இப்பெரியார், முன்னர் வெளிவாராத அரிய நூலாகிய இதனை வெளிப்படுத்துங்கால் இந்நூற் பொருளை யாவரும் உணர்ந்து மகிழும் வண்ணம் தாம் அரிதின் முயன்று எழுதிய புதிய வுரையுடன் வெளியிட்டுதவினார்கள். தமிழ் நூலாராய்ச்சிக்குப் போதுமான கருவிகளும் ஆதரவும் கிடைக்காத அக்காலத்தே இவர்கள் இயற்றிய குறுந்தொகையுரை தமிழ் மக்களாற் பெரிதும் பாராட்டப்பட்டது. எனினும், பழந்தமிழ் இயல் நூல்கள் சான்றோர் பலராலும் ஆராயப்பெற்று வெளியிடும் முயற்சி தெளிவடையவே, முன்னர் வெளியிடப்பெற்ற நூலுரைகளின் பிழைபாடுகளும் அவ்வப்போது அறிஞர்களுள்ளத்தே புலப்படுவனவாயின. அதன் பயனாகக் குறுந்தொகைச் செய்யுட்கள் திருந்திய வடிவில் வெளிவருவனவாயின.

பண்டைத் தமிழ்நூல்களை வெளியிடுந் திறத்தில் நிகரற்று விளங்கிய தமிழ்ப் பெரியார் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் தாம் பல ஆண்டுகளாக இக்குறுந்தொகையினை ஆராய்ந்து வந்ததன் பயனாக, சௌரிப்பெருமாளரங்கனார் பதிப்பிற் பிழையுற்றிருந்த செய்யுட்களைப் பிழையற்ற நிலையில் வெளிப்படுத்தி அத்தூய பாடத்திற்கேற்பத் தெளிவும் விளக்கமும் அமைந்த புதிய வுரையினையும் எழுதி, அதனைச் சென்னைப் பல்கலைக்கழகத்தாரது ஆதரவுடன் 1937ம் ஆண்டு வெளியிட்டார்கள். மூன்றாவது உரையாகிய இது, சங்கச் செய்யுட்கள் பிழையற்ற நிலையில் வெளிவந்த பின்னர் அமைவுடன் எழுதப்பெற்றதாதலின், முதலுரையைக் காட்டிலும் தூய்மையும் பொருட்டெளிவும் விளக்கமும் பெற்றுப் பயில்வோர்க்குப் பேராதரவாய் விளங்குகின்றது என்பதனைத் தமிழறிஞர் எளிதின் உணர்வர்.

தமிழ் நூல்களைப் பாடஞ்சொல்வாரும் பயிலும் மாணவர்களும் மிகுதியாக மிகுதியாக, அந்நூல்களின் பொருள்நலன்களும் நவிலுந்தொறும் சுவை மிக வளர்ந்து சிறத்தல் இயல்பேயாம். தம் வாழ்நாள் முழுதும் தமிழ் நூல்களைப் பயின்று அவற்றின் சுவை நலங்களை யுணர்ந்து மகிழ்தலையே பொழுதுபோக்காகக் கொண்டவரும், இன்றமிழ்ப்பனுவல்களை யாவரும் வேட்ப மொழியுஞ் சொல்வன்மையுடையவரும், விருந்தாய சொன்மாலை யியற்றித் தமிழன்னைக்கு அணிந்த பெரும்புலவரும் ஆகிய சேது சமத்தான அவைக்களப் புலவர் மகாவித்துவான் ரா. இராகவையங்காரவர்கள் நம் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பகுதியில் அலுவல் மேற்கொண்டிருந்த காலத்துத் தமிழ் மாணவர்கட்குச் சில மணி நேரங்களிற் பாடஞ் சொல்லவேண்டிய கடமையினையும் மேற்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் பயிற்ற எடுத்துக் கொண்ட நூல் இக்குறுந்தொகையாகும். தமிழிலக்கியச் சுவை நலங்களில் ஈடுபடுங்கால், தம்மையும் மறந்து அத்துறையில் ஆழ்ந்து விடு மியல்புடைய ஐயங்காரவர்கள் குறுந்தொகைப் பாடல்களுக்குச் சங்கவிலக்கியக் கண்கொண்டு பொருள் கூறுமிடத்து முன் வெளி வந்த இரண்டுரைகளினும் காணப்பெறாத புதிய விளக்கங்களும் செய்யுளின் திருத்தமான வடிவங்களும் புலப்படுதல் இயல்பே. அவற்றைக் கேட்டார் பலர் அவர்கள் கண்ட திருத்தங்களைத் தழுவிப் புதிய விளக்கவுரை யொன்று எழுதி யுதவ வேண்டுமென்க் கேட்டுக்கொண்டார்கள். அவ்வேண்டுகோளை நிறைவேற்றக் கருதிய மகாவித்துவான் ஐயங்காரவர்கள், மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் உரையைப் பயிற்சிக்குரிய அடிப்படை யுரையாகக் கொண்டு, அதன் விளக்கமாக, இகல்கருதாப் புலமையுணர்வுடன் குறுந்தொகைவிளக்கத்தினை இயற்றினார்கள். அவ்வுரையில் இப்பொழுது கிடைத்துள்ள ஒரு பகுதியாகிய நூற்றுப்பன்னிரண்டு பாடல்களின் உரை இதுபோது அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாக வெளிவருகின்றது.

குறுந்தொகையாகிய ஒரு நூலுக்கே ஒன்றன்பின் ஒன்றாக இம்மூன்றுரைகளும் வெளிவருதற்கு, முன்னைப் பதிப்பிற்கண்ட பிழைபாடுகளுங் கருத்துவேறுபாடுகளுமே காரணமாயின. எடுத்துக்காட்டாக முதல்வர் உரையிற் சிலவற்றை நோக்குவோமாக.

இத்தொகையின்கண் வந்த 'வில்லோன் காலன கழலே' எனத் தொடங்கும் ஏழாம்பாடல், உடன்போக்கின்கண் சென்ற தலைவன் தலைவி யிருவரையும் சுரத்திடைக்கண்டோர் கூறிய துறையின்பாற் படும். இப்பாடலின் மூன்றாமடியில் வந்த 'ஆரியர்' என்னுஞ் சொல்லுக்குப் பிறநாட்டவராகிய மிலேச்சர் என்பதுபொருளாகும். இப்பொருண்மரபினை யறிந்துகொள்ளாத முதலுரைகாரர், பிற் கால வைதீகர் கருத்தின்படி ஆரியர் என்பதற்கு இருமுதுகுரவர் எனப் பொருள் கூறியுள்ளார். இச்செய்யுளில் 'ஆரியர்' என்பது பின்னுள்ள 'கயிறாடு பறையின்' என்பதனோடு இயைந்து, ஆரியர் ஆடும் கூத்துடன் ஒலிக்கும் பறை நிகழ்ச்சியைக் குறிக்கின்றது. நடத்தற்கரிய பாலைநில வழியில் தலைவன் தலைவி இருவரையுங் கண் டவர்கள், அவ்விருவர் நிலைக்கும் வருந்தி அவ்விருவரும் அளிக்கத் தக்கார் எனக் கூறுவதல்லது அவர்தம் பெற்றோரை நினைந்து இரங் கினர் என்பதற்குரிய சொற்குறிப்பு இப்பாட்டின்கண் இல்லை. இதன்கண் 'வேய்பயில்'ழுவம் முன்னியோர்' என்பதனை முடிக்க வந்த 'அளியர்தாமே' என்னும் பயனிலை, தொடர்பில்லாத 'ஆரியர்' என்னுஞ் சொல்லை முடித்தல் கூடாது. 'கயிறாடு பறை யின்' என்புழிக் கயிற்றின்கண் ஏறி ஆடும் கூத்தராவார் இவரென இயைபு பெறக் கூறுதல் இன்றியமையாததாகலின், 'ஆரியர் கயிறாடு பறையின்' என இயைத் துரைப்பதே பொருத்தமுடையதாம். மேற்காட்டிய காரணங்களால், இச்செய்யுளிலுள்ள 'ஆரியர்' என்னுஞ் சொல்லிற்கு 'இருமுது குரவர்' எனப் பொருளுரைத்தல் பொருந்தாதென்பது புலப்படும். இப்பிழைபாட்டினை யுணர்ந்த ஐயரவர்களும் ஐயங்காரவர்களும் தம் உரையின்கண் இப்பிழையினை விலக்கியுள்ளார்கள்.

முதலுரையாசிரியர் 9-ஆம் பாடல் இரண்டாமடியினை 'மடை மாண் செப்பிற் றமியள் வைகிய' எனத் தவறாகக் கொண்ட மையால், பிழைபடச் சொன்முடிபு கூறி விளக்கமின்றி யுரை யெழுதியுள்ளார். 'மடைமாண் செப்பிற் றமிய வைகிய' எனப் பின்னவர் பாடங்கொண்டு கூறிய உரையும் விளக்கமுமே பிழை

யற்றன. இவ்வாறே இந்நூற் பத்தாம் பாடலிலும் முதலுரை யாசிரியர் துறையொடு பொருந்தாமலும் பொருள் விளக்கமின்றியும் உரை கூறியுள்ளார். இவர் தம் பதிப்பில் 110-ஆம் செய்யுளின் வரியமைப்பும் சொல்லுருவும் பிழைபட அமைந்துள்ளன.

'வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி நீர் நிலைப்பைம்
போதுளரிப் புதல்பிலி யொண்பொறிக் கருவிளை
நுண்மு ளீங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண்ணத் துய்ம்மல ருதிரத் தண்ணென்
றின்னா தெறிவரும் வாடையொ
டென்னாயினள் கொலென்னுதோரே' என முதற்

பதிப்பில் சிதைந்து காணப்படும் பாடம்,

'வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி நீர
நீலப் பைம்போ துளரிப் புதல
பீலி யொண்பொறிக் கருவிளை யாட்டி
நுண்முள் ளீங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண்ணத் துய்ம்மல ருதிரத் தண்ணென்
றின்னா தெறிவரும் வாடையொ
டென்னா யினள்கொ லென்னு தோரே' எனப் பின்

வந்த பதிப்பாளர்களால் திருத்திக்கொள்ளப்பட்டமை காண்க.

இருபத்துநான்காஞ் செய்யுளில் "ஆற்றயலெழுந்த வெண் கோட்டதவத், தெழுகளிறு மிதித்தவொரு பழம்போல" என இம் முதலுரையாசிரியர் கொண்ட பாடத்தைக் கீழ்க்குறிப்பாகக் காட்டிய ஐயரவர்கள் 'எழுகுளிறு மிதித்தவொரு பழம்போல' என்ற பாடமே சிறந்ததெனக்கொண்டு, குளிறு என்பதற்கு நண்டு எனப் பொருள் கூறிச்சென்றனர். குளிறு என்பது நண்டின் பெயர் அன்று எனவும், 'களவன் குளிர்ஞெண்டு' என உரிச்சொல் நிகண்டும், 'குளீர : கற்கடக :' என அமரகோசமும் கூறுதலால் 'எழு குளிர் மிதித்த' என்ற பாடமே பொருந்துமெனவும் விளக்கவுரை யாசிரியராகிய ஐயங்காரவர்கள் திருத்திக்கொண்டார்கள். அத்திப்

பழம் நன்கு முற்றி யளிந்ததாயினும் எழு நண்டுகள் ஏறி மிதித்த அளவே அப்பழம் உருவறக் குழைந்து சிதையுமென உறுதியாகக் கொள்ளுதல் இயலாது. என்னை? நண்டுகளின் கால்கள் மிதித்த அளவே அப்பழத்தினைக் குழைவித்தற்கேற்ற வன்மையுடையன அல்லவாதலின் என்க. எழு யானைகளால் அடுத்தடுத்து மிதித்தற் கேற்றவாறு வழியிற்கிடந்த அத்திப்பழம், அவ்யானைகளின் கால் களால் அடுத்தடுத்து மிதிக்கப்பெற்ற நிலையில் உருவின்றிக்குழைந்து சிதைதல்போலக் கொடியோருடைய நாவானது உருவறக்குழைந்து சிதைக என்பதே தலைவியின் கருத்தாகலின், முதலுரையாசியர் கொண்ட 'எழுகளிறு மிதித்த ஒரு பழம்போல' என்ற பாடமே பொருட் சிறப்புடையதாகும். இதனால், முதலுரை யாசிரியராகிய சௌரிப்பெருமாளரங்கனார் உரையும் ஆராய்ச்சியாளரால் உற்று நோக்குஞ் சிறப்புடையதென்பது பெறப்படும்.

சௌரிப்பெருமாளரங்கனாரது குறுந்தொகைப்பதிப்பு சிற்சில விடங்களிற் பொருள் விளக்கமின்றிப் பிழையுடன் காணப்படுதலால் அப்பிழைகளை நீக்கித் திருத்தமான பாடத்துடன் வேறொரு புதிய வுரையினை யியற்றி வெளியிடுதல் ஐயரவர்களின் நீங்காக் கடமை யாயிற்று.

இரண்டாம் உரையாகிய ஐயரவர்களின் உரைக்கும் ஐயங் காரவர்களின் விளக்கவுரையாகிய இம்மூன்றும் உரைக்கும் உள்ள வேற்றுமையினை யறிந்துகொள்ளுதல் நலமாகும். ஐயரவர்கள் தம் உரையில் எடுத்துக் காட்டிய மேற்கோட் குறிப்புக்களை ஐயங்காரவர் கள் பாடற் பொருளுடன் தொடர்பு பெற வைத்து விளக்கி யுள்ளார்கள். பொருள்கோள் பற்றிய கருத்துரை, சிறப்புரை, பாட வேறுபாடுகள் முதலிய பகுதிகளில் இவ்விரண்டுரைகட்கும் குறிப்பிடத் தக்க வேறுபாடுகள் சில உள. அவற்றுட் சிலவற்றை இங்கு நோக்குவோமாக.

தலைவி தன்னை இகழ்ந்துரைத்தாளெனக் கேட்ட காதற் பரத்தை, தலைவியின் பக்கத்திலுள்ளவர்கள் கேட்கும்படி கூறியதாக அமைந்தது எட்டாஞ் செய்யுளாகும். இதன்கண் கையுங் காலுந் தூக்கத் தூக்கும் கண்ணாடியின் நிழல் போலத் தலைவன் தன் மனைவி

விரும்பியதையே செய்தொழுகுகின்றான் எனத் தலைவனை யிகழ்ந்துரைக்கும் பரத்தை, தலைவியைப் 'புதல்வன் தாய்' எனக் குறிப்பிடுகின்றாள். இப்பகுதிக்குச் சிறப்புரை யெழுதிய ஐயரவர்கள் "பரத்தை தலைவியைத் தலைவனுக்கு மனைவி யென்று கூறப் பொருளாதலின் புதல்வன் தாய் என்றாள்" எனக் குறித்துள்ளார்கள். "புதல்வனைப் பேணுதற்குரிய ளன்றி, இன்பத்திற்கு உரியளல்லள் என்பது குறித்துத் தலைவியைத் தன் மகன் தாய் எனப் பரத்தை யிகழ்ந்தாள்" என ஐயங்காரவர்கள் கூறும் நயம் 'புதல்வன் தாய்' என்னும் சொற்பொருளைத் தழுவியதாக அமைந்துளது.

11-ஆம் பாடலில் 'குல்லைக் கண்ணி வடுகர் முனையது, பல வேற் கட்டி நன்னாட்டும்பர், மொழிபெயர் தேஎத்தராயினும்' என்ற தொடர் கொண்டு, "இதனால் கட்டியினுடைய நாடும் வடுகர் நாடும் வேற்று மொழியையுடையன வென்பது பெறப்படும்" என ஐயரவர்கள் குறிப்பிட்டார்கள். இவ்விளக்கவுரையாசிரியர் இத்தொடரைக் 'கட்டி நன்னாட்டும்பர் வடுகர் முனையது மொழி பெயர் தேஎத்தராயினும் என இயைத்துரைக்க' எனக் கூறி "இதனாற் கட்டி நன்னாடு வடுகர் முனைக்கு இப்பால் தமிழகத்துண்மை துணியப்படும். கட்டி, சோழன் படைத்தலைவருள் ஒருவனென்பது, 'கங்கன் கட்டி' (அகம்-44) எனவரும் அகப்பாட்டான் அறிந்தது" எனக் காட்டும் குறிப்பு இலக்கியச் சான்றுடன் ஏற்றுக் கோடற்கு உரியதாதல் காணலாம்.

## பாட பேதங்கள்

விளக்கவுரையாசிரியராகிய ஐயங்காரவர்கள் முன்னை யிரண்டுரைகளிலும் இல்லாத பாட பேதங்களைப் பொருள் நோக்கத்தால் உய்த்துணர்ந்து கண்டு வெளியிட்டுள்ளார்.

முன்னைய பதிப்புக்களில் 'திப்புத்தோளார்' எனவும் 'திட்புத்தோளார்' எனவும் காணப்படும் புலவர் பெயரை ஐயங்காரவர்கள் 'தீப்புத்தேளார்' எனத் திருத்தி வழங்கியுள்ளார்.

13ம் செய்யுளில், நாடன் நோய் தந்தனன் எனப் பிரித்தற் கேற்றவாறு 'நாடனோய் தந்தனனே' என முன்னைப்பதிப்புக்களிற் கண்ட பாடத்தை 'நாட னெய்தந்தனனே' எனக்கொண்டு, நாடன்

ஒய்தந்தனன் எனப்பிரித்து, "நாடன் (அருகினின்றும்) ஒழியத் தொடங்கினன்" எனப் பொருள் கூறியுள்ளார். (பக். 33.) இப் பகுதிக்கு "ஒய்யென—நெருங்காதொழியென' எனச் சிலப்பதி காரம் அடைக்கலக்காதை 48-ம் அடியில் அடியார்க்கு நல்லார் வரைந்த உரைக் குறிப்பை மேற்கோளாகக் காட்டியது இவ் வாசிரியரது நூலறிவைக் காட்டுவதொன்றாம்.

25-ம் செய்யுளில் "யாருமில்லைத் தானே கள்வன், தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ" என இதுகாறும் வழங்கிவரும் பாடம் பொருளுக்கு இயைபில்லாமை யுணர்ந்த மகாவித்துவான் ஐயங்காரவர்கள் இத்தொடரின்கண் உள்ள கள்வன் என்னுஞ் சொல்லின் உண்மைவடிவம் களவன் என்பதேயாம் எனவும், ஏடெழுதுவோர் மெய்யையும் உயிர்மெய்யையும் ஒரே நிலையில் எழுதுமியல்பினர் என்பதனை ஏடு படிப்போர் கூர்ந்துணராமையே இப்பிழை நிகழ்தற்குக்காரணமாயிற்றெனவும் குறிப்பிட்டுக், களவன் என்பது, செய்தி நிகழ்ந்த களத்துச் சான்றாயினானைக் குறிக்கு மென்பதற்கு இலக்கியச்சான்றுகாட்டிவிளக்கியுள்ளார்கள். கள்வன் பொய்த்தல் இயல்பாதலால் கள்வன் பொய்ப்பின் யானெவன் செய்கோ எனக் கவலுதல் பொருத்தமுடையதன்றாம். களவன் என்ற பண்டைய வழக்கு இக்காலத்திய 'களத்தான்' என்னும் வழக்குடன் ஒப்புநோக்கத் தகுவதாம். 'பல்லோர்க்கும் நடுநின்று சான்று பகரும் களவனான தலைவன் என்பாற் பொய்ப்பின் யான் யாதுசெய்வேனோ' எனத் தலைவி தோழிக்குக் கூறினாள் என ஐயங்காரவர்கள் கூறும் பொருள் அறிஞர்களால் வியந்து பாராட்டத்தகும் சிறப்புடையதாகும்.

செய்யுள் 28ல் 'முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்' என முன்னையிருவர்கொண்ட பாடத்தில் முட்டுதலும் தாக்குதலும் ஒரே கருத்தினவாய், உடம்பின் வினையே யாதலின் முட்டுவேன் என்பது பாடமன்றெனவும் 'மூட்டுவேன் கொல்' எனத் தாம் திருத்திக்கொண்ட பாடமே பொருத்தமுடைத் தெனவும் ஐயங்கா ரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். "மூட்டுதல்—நினைவுமூளச் செய் தல். தாக்குதல்—பாய்தல்; உடம்பால் விரையத்தீண்டுதல், கூவுதல்

—வாயால் ஆற்றுதல். இவற்றால் மனம் மெய் வாக்கு மூன்றானும் முயலத் தொடங்கியவாறு கூறினாள்" என இவ்வாசிரியர் கூறும் விளக்கம் நோக்கத் தக்கது.

செய்யுள் 34ல் 'குட்டுவன்மாந்தை' என முன்பதிப்பாளர்கள் கொண்ட பாடம் பிழையென்பதும், மாந்தை என்பதே சரியான பாடமென்பதும், முத்தொள்ளாயிரத்தில் 'மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் கோதைக்கு' என வெண்பா வடியின் வருதலால் துணியப்படும் என ஐயங்காரவர்கள் தெளிவித்துள்ளார். இங்ஙனம் பொருள்நுட்பங் கருதிச் செய்யுளின் உண்மை வடிவினைத் தேர்ந்து துணியும் தெளிவுடைமை இவர்தம் இயல்பென்பதனை இவ்விளக்கவுரை யினிதுபுலப்படுத்தும்.

## பொருள்நயம்

'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி' எனத்தொடங்கும் இரண்டாஞ் செய்யுளுக்கு ஐயங்காரவர்கள் கூறும் பொருள் பெரிதும் சுவைபயப்பதொன்றாகும். (இந்நூல் பக். 9—12)

தலைவன் சிறைப்புறமாக வந்து நிற்பதறிந்த தோழி, தலைவியை விரைந்து மணந்துகொள்ளவேண்டுமெனத் தலைவனைத் தூண்டுங் குறிப்பினளாய் அவனது இயல்பினைப் பழித்துரைக்கின்றாள். அது கேட்ட தலைவி அப்பழியைக் கேட்டற்கு மனமில்லாதவளாய்த் தன் உயிர்த் தலைவனோடு தனக்குள்ள நண்பின் கெழுதகைமையினைப் போற்றி யுரைப்பதாக அமைந்தது குறுந்தொகை மூன்றாஞ் செய்யுளாகும். 'நாடனொடு என்பால் நிலைபெற்ற நட்பானது சொல்லப்புகின் நிலத்தை விட அகலத்தாற் பெரிது. நினையப்புகின் வானை விட ஒக்கத்தால் உயர்ந்தது. உள்புக்கு எல்லை காணப்புகின் கடலை விட ஆழத்தால் அரிய அளவினது' என்பது இதன் பொருளாகும். "பெரிது, உயர்ந்தது, ஆரளவினது என முத்திறப்படுத்தது உரை, உள்ளம், மெய் என்ற மூன்றானும் அளக்கலாகாமை குறித்து" என ஐயங்காரவர்கள் விளக்கியுள்ளார்கள்.

தலைமகனும் தலைமகளும் ஊழ்வழியே ஒரு பொழிலிடத்து எதிர்ப்பட்டு ஒருவரையொருவர் இன்றியமையாதவராய் உள்ளங் கலந்து அன்புமீதூரப் பெறுகின்றனர். இந்நிலையில் தன் உயிர்த்

துணைவனாகிய தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து செல்லுதல் நேருமோ என உளங் கவல்கின்றாள் தலைவி. அவளது குறிப்பு வேறுபாட்டினை யறிந்த தலைவன், தலைவியைத் தேற்றும் பகுதியாக அமைந்தது 40-ஆம் செய்யுளாகும். "என் தாயும் நின் தாயும் என்ன உறவினர்? என் தந்தையும் நின் தந்தையும் எம் முறைமை யுடைய சுற்றத்தார்? யானும் நீயும் எந்தக் குடிவழி யென்று அறியோம். செந்நிலத்துப் பெய்யும் மழைநீரைப்போல நம்மிரு வருடைய அன்புமீதூரப் பெற்ற நெஞ்சங்கள் தாமாகவே கலந்து ஒன்றாயின" என்பது இப்பாடற் பொருளாகும். இதன்கண் 'செம்புலப் பெயனீர்போல அன்புடை நெஞ்சந் தாம் கலந்தன' என்பது "பெயல் மேலே வானத்தும் செம்புலம் கீழே தரையினும் வேறு வேறிடங்களில் வேறு வேறாக உளவேனும் இவை தாமாக இயைந்து ஒரே செந்நீர் ஆயினாற்போல, வேறு வேறிடத்து ஒருவர்க் கொருவர் உறவில்லாது வேறுபட்டிருந்தும் நம் நெஞ்சங்கள் தாமாகக் கலந்து அன்பால் ஒன்றாயின என்றதாம்" என இவ் வாசிரியர் கூறும் விளக்கம் தெளிவுடையதாதல் காண்க.

110-ஆம் பாடலில் "நீர நீலப்பைம்போது உளரிப், புதல பீலியொண் பொறிக் கருவிளை ஆட்டி, நுண்முள் ஈங்கைச் செவ் வரும்பு ஊழ்த்த வண்ணத்துய் மலர் உதிரத் தண்ணென்று இன்னாது எறிவரும் வாடை" எனத் தலைவி வாடைக் காற்றின் கொடுமை நினைந்து வருந்துகின்றாள். நீரிலுள்ள நீலத்தின் பசிய போதுகளை அசைத்துப், புதர்களிற் படர்ந்த மயிற்பீலியின் தெள்ளிய பொறி களையுடைய கருவிளை மலரை அலைத்து, நுண்ணிய முட்களையுடைய ஈங்கையின் பஞ்சுபோலுந் துய்யினையுடைய மலர்கள் உதிரும்படி குளிர்ந்து வீசி, இவற்றின்கண் எல்லாம் மலர்களளவில் அசைத்தும் ஆட்டியும் உதிர்த்தும் தண்ணென்று வீசிவந்த இவ்வாடைக் காற்று என்பால் மட்டும் இன்னாது எறிவரும் தன்மையை யுடையதாயிற்று என்பது, முற்கூறிய அடிகளுக்கு ஐயங்காரவர்கள் கூறும் பொரு ளாகும். நீரிலுள்ள நீலமும் புதரிலுள்ள கருவிளையும் நுண்முட் களையுடைய ஈங்கையும் ஆதலால் அங்கு அவற்றிற்குப் பற்றுக் கோடும் பாதுகாவலும் உள்ளமை கண்டு அவற்றை அழியாது,

உளரி, ஆட்டி, உதிரத் தண்ணென்று, அவ்வாறு பற்றுக்கோடும் பாதுகாவலும் இல்லாத எனது எளிய நிலைகண்டு இவ்வாடைக் காற்று என்னை இன்னுது எறிவதாயிற்று எனத் தலைவி வாடை செய்யுந் துயர்மிகுதியைக் குறிப்பிட்டு இரங்கியதாக இவ்வுரை யாசிரியர் கூறிய சொற்பொருள்நயம், 'நவில்தொறும் நூல்நயம்' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு ஓர் இலக்கியமாதல் காண்க. இவ்வாறே 91-ஆம் செய்யுளுக்கு வரையப்பட்டுள்ள உள்ளுறை விளக்கம் கண்டு மகிழ்தற்குரியது. (இந்நூல்-பக். 148—149.)

பரணராற் பாடப்பெற்ற 73-ம் பாடலில், "நன்னன் நறுமா கொன்று நாட்டிற் போக்கிய, ஒன்று மொழிக்கோசர் போல, வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே" எனத் தோழி தலைமகளை நோக்கிக் கூறும் பகுதியில் எடுத்துக் காட்டிய கோசரது வன்கட் சூழ்ச்சி இதுவென இதுகாறும் பிறரால் விளக்கப்பட வில்லை. இப்பகுதிபற்றி ஐயங்காரவர்கள் உய்த்துணர்ந்தெழுதிய குறிப்பு ஆராய்ச்சியாளர் கூர்ந்து நோக்குதற்குரியதாம். இங்ஙனமாக நுட்பமுடைய கருத்துக்களைச் செய்யுட் பொருளொடு பொருந்த விளக்கிச் செல்லுந்திறம் இவ்விளக்க வுரையுள் பலவிடத்துங் காணப்படும்.

## பொருந்தாதவை

எனினும், இவ்வுரையகத்தே சில விடங்களிற் பொருத்த மில்லாதனவும் உள. அவை ஆசிரியரால் விரும்பியவாறு வலிதிற் புகுத்தப்பெற்றனவாகத் தோன்றுகின்றன. இந்நூற் கடவுள் வாழ்த்தாகிய பெருந்தேவனார் பாடலில், 'நெடுவேற் சேவலங் கொடியோன் காப்ப' என்ற தொடரால் முருகன் ஒரு கையில் வேலும் மற்றொரு கையில் கோழிக் கொடியும் கொண்டமை கூறுமுகத்தால் அப்பெருமானது இருகையுடைய சாத்துவிகத் திருமேனியே இப்பாடலிற் குறிப்பிடப்பட்டதென விளக்கவந்த ஐயங்காரவர்கள், இவ்வடிவு வடமொழியிற் குமார தந்திரத்துட் கூறப்பட்டதென்றும், இவ்வடிவமைத்து வழிபடுதல் நன்றெனக் குமாரதந்திரநூல் கூறுதற்கேற்பவே பெருந்தேவனாரும் முருகன் வேலுங் கோழிக்கொடியும் உடைமை குறித்தார் என்றும்

கூறுகின்றார்கள். குறிஞ்சிக் கடவுளாகிய முருகவேள்வழிபாடு தமிழ்நாட்டில் வழங்கும் மற்றைத் தெய்வ வழிபாடுகளைவிடத் தொன்மையும் சிறப்பும் வாய்ந்ததொன்றாம். இவ்வழிபாடு தென்னாட்டிலன்றி வடநாட்டில் வடமொழியாளரால் தொன்றுதொட்டு மேற்கொள்ளப்படாத இயல்பினதாம். அன்றியும், வடமொழியில் தந்திரங்கள் தோன்றியது கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிந்திய தென ஆராய்ச்சியாளர் துணிந்து கூறுகின்றனர்.*

பெருந்தேவனார் பாடலிற் குறித்தபடி வேற் படையும் கோழிக் கொடியும் முருகனுக்கு உரியனவென்பது 'வேல்கெழுதடக்கைச் சால்பெருஞ்செல்வ' (திருமுருகு. 265) எனவும் 'கோழியோங்கிய வென்றடுவிறற்கொடி' (திருமுருகு. 38) எனவும் வரும் சங்கநூற் குறிப்புக்களாற் புலனாகும். ஒரு முகமும் இருகையுமுடைய முருகன் திருவுரு கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே தமிழ் நூல்களிற் குறிப்பிடப்பெற்றதென்பது தமிழ் நூலாராய்ச்சியால் இனிது புலனாகின்றது. முருகப்பெருமான், தன்னை அன்பினால் வழிபடும் அடியார்களின் முன் தோன்றியருளுங்கால் அவர்கள் அச்சமின்றிக் கண்டு வழிபடுதற் கேற்றவாறு தன் தெய்வத் தன்மையை யுள்ளடக்கிக்கொண்டு மக்கள் வடிவில் இளையோனாக வந்து அருள்புரியு மியல்பினையும் உடையான் என்பதனை

"அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி"

(திருமுருகு. 289, 290)

என்ற தொடரால் நக்கீரனார் குறிப்பாக அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வியல்பினை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின்கண் சிறிது வெளிப்பட விளக்கிய திறம் இவண் கருதத்தகுவதாம்.

---

* வடமொழிப் பேராசிரியர் சர். மானியர் வில்லியம்ஸ் எழுதிய "இந்திய அறிவுமேன்மை" என்ற புத்தகம் (4ம் பதிப்பு) பக். 524 காண்க.

களவொழுக்கத்தில் இரவுக்குறியில் அடிக்கடி வந்து செல்கின்ருன் தலைமகன். அவனை நோக்கித் தோழி கூறுவதாக அமைந்தது,

"கடம்பு சூடி யுடம்பிடி* யேந்தி
மடந்தை பொருட்டால் வருவதிவ்வூர்
அறுமுக மில்லை அணிமயி லில்லை
குறமக ளில்லை செறிதோ ளில்லை
கடம்பூண் டெய்வமாக நேரார்
மடவர் மன்றவிச் சிறுகுடி யோரே"

எனவரும் குன்றக்குரவைப் பகுதி. "தலைவ, நீ தலைவியைப் பெறுதல் கருதிக் கடப்பமலர் மாலையை யணிந்து கையில் வேற்படையைத் தாங்கிக்கொண்டு இரவில் இவ்வூர்க்கண் அடிக்கடி வந்து செல்வது, கண்டார் நின்னை முருகனெனக் கருதி ஆராயாது விடுவர் என்னுங் கருத்தினுலென அறிகின்றேன். கடவுளாகிய முருகன் நின்னைப்போன்று ஒரு முகமும் இரு கையும் உடைய தனது பழைய திருமேனியாகிய இளைய வடிவுடனும் வருதல் கூடும் என்னும் உண்மையினை யறிந்துகொள்ளமாட்டாது, ஆறுமுகமும் பன்னிரண்டுகைகளுங் கொண்ட வடிவுடனன்றி முருகன் இத்தகைய மக்கள் வடிவில் வருதலியலாது எனக்கருதும் அறியாமையுடையோர் இச்சிறுகுடியோராதலின், நீ இங்ஙனம் வருங்கால் உனக்கு ஆறு முகங்கள் இல்லையென்றும், அழகிய மயிலாகிய ஊர்தியில்லை யென்றும், பக்கத்தில் குறமகளாகிய வள்ளி நாச்சியார் இல்லையென்றும், பன்னிரண்டு தோள்கள் இல்லையென்றும் கூறி இவ்வூரார் வழிபாட்டினை யேற்றுக்கொள்ள வந்த முருகனுக நின்னை உடன்படமாட்டார்கள்," எனத் தோழி தலைவனுக்கு அறிவுறுத்து முகத்தால் இக்களவொழுக்கத்தினை விட்டுத் தலைவியை மணந்து கொள்ளத் தூண்டினுள் என்பது மேலெடுத்துக் காட்டிய அடிகளின் பொருளாகும். இவ்வாறு தலைமகன் முருகனுக்குரிய கடப்ப மலர்மாலையை யணிந்து கையில் வேற்படையினை யேந்தி வருதற்குக் காரணம் தன்னைக் கண்டார் மணங்கமழ் தெய்வத்து

* உடம்பிடி—வேல்.

இளையோனாகிய முருகனென்று எண்ணி, விலக்காதிருப்பர் என்பது கருதியே என்பதனை, "தலைமகன் கடம்பு சூடி உடம்பிடியேந்தித் தன்னைக் குமரனென்று பிறர் கருதவந்த காரணம் 'பண்டைத் தன் மணங்கமழ் தெய்வத்திள நலங்காட்டி' யென்றாராதலால்" என்ற உரைக் குறிப்பால் அரும்பதவுரையாசிரியர் இனிது விளக்கியுள்ளார். அன்றியும் அறுமுகமுடைய வடிவமொன்றே அக்காலத்து முருகனுக்குரிய வடிவமாயிருந்திருப்பின் அவ்வடிவமில்லாமை கருதித் தலைவனை முருகனென உடன்படாத சிறுகுடியோரை 'மடவர் மன்ற இச்சிறு குடியோரே' எனத் தோழி இகழ்ந்துரைத்ததாக இளங்கோவடிகள் கூறியதற்கு ஒரு சிறிதும் இயைபில்லாமையறிக. ஒரு முகமும் இருகையுமுடைய முருகன் திருவுருவமே சங்க காலத்திற்கு முன்னுள்ள பழைய வடிவமென்றும், இளங்கோவடிகள் காலத்து அப்பழைய வடிவம் மக்களால் மறக்கப்படும்படி பிற்றை நாளிற் புராணங்களிற் சொல்லப் பெற்ற ஆறுமுகத் திருமேனியே பொதுமக்கள் வழிபாட்டில் இடம் பெறத் தொடங்கியதென்றும் மேற்காட்டிய சிலப்பதிகாரத் தொடராலும் அதற்கு அரும்பதவுரையாசிரியர் எழுதிய உரைக் குறிப்பாலும் இனிது புலப்படுத்தப் படுதல் காண்க. இங்ஙனம், இளங்கோவடிகளும் நக்கீரனாரும் முருகனது பழைய திருமேனியெனக் குறிப்பிட்டு விளக்கிய ஒரு முகமும் இருகையும் உடைய முருகன் வடிவம் தமிழ்நாட்டுத் தொன்மை வடிவமே யெனவும், வடமொழியிற் பிற்காலத் தெழுந்த குமாரதந்திரமும் ஸ்ரீதத்துவநிதியும் பண்டைத் தமிழ்நூற் கொள்கைக்கு மூலமாவது போல் ஐயங்காரவர்கள் எழுதியது ஒரு சிறிதும் பொருந்தாதெனவும் கொள்ளுதலே ஆராய்ச்சி யுணர்விற்குப் பொருந்தியதாகும்.

குறுந்தொகை 17-ஆம் செய்யுளைப் பாடிய புலவர் பெயர் பேரெயின் முறுவலார் என முன்னைப் பதிப்பாசிரியர் அனைவருங் கொண்டனர். இத்தொடரைப் 'பேரே இன்முறுவலார்' என ஐயங்காரவர்கள் பிரித்திருப்பது பொருந்துவதாகத் தோன்றவில்லை. "அருங்குறும்புடுத்த கானப்பேரெயில்" (புறம். 21) என வருதலால் பேரெயில் என்பதை ஊர்ப் பெயராகவும், முறுவலார் என்பதை இயற்பெயராகவுங் கொள்ளலாம்,

21-ஆம் செய்யுளில் 'கானங்காரெனக் கூறினும்' என்ற தொடர்கொண்டு, "ஓதாதகானம் காரெனக் கூறினும் என்ற இச்சிறப்பால் இது பாடியவர் ஓதலாந்தையார் எனப்பட்டனரோ என நினைத்தலுமாம்" என்று ஐயங்காரவர்கள் உய்த்துணர்ந் துரைத்தல் இயைபுடையதாகத் தோன்றவில்லை.

தலைவியின் ஊடலைத் தணித்தற்குத் தலைவன் பாணனைத் தூதாக அனுப்புகின்றான். அங்ஙனம் தூது வந்த பாணனது சொல்வன்மையால் ஊடல் தணிந்து வாயில் நேரும் தலைவி, பாணன் கேட்கத் தோழியை நோக்கிக் கூறுங் கூற்றாக அமைந்தது குறுந் தொகை 33-ஆம் செய்யுளாகும். இப்பாடலின் ஈற்றடியாகிய 'விருந்தினூரும் பெருஞ் செம்மலனே' என்பதற்குப் 'புதிதாகப் பெறும் விருந்தின் பொருட்டுச் செல்லும் பெரிய தலைமையை யுடையான்' என ஐயரவர்கள் பொருள் கூறினார்கள். பாணனது செல்லுதற்றொழிலை ஊர்தல் எனக் கூறுதல் பொருந்தாதெனக் கண்ட ஐயங்காரவர்கள் 'விருந்தின் ஊரும் பெருஞ்செம்மலன்' என்ற அத்தொடர்க்குப் பலர் அழைத்து இடும் விருந்திேனாடு யானை பரி தேர் இவற்றின் ஊர்ந்து செல்லும் தலைமையை யுடையவனே யாவன், எனப் பொருள் கூறினார்கள். இவர் கூறும் உரையும் 'பெருஞ்செம்மலன்' எனப்பாராட்டப்பட்ட பாணனது உயர்வினைத் தெளிவாகப் புலப்படுத்தவில்லை. நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் மாணவர் சிலருடன் அளவளாவிக்கொண்டிருந்தபொழுது இச்செய்யுளுக்கு ஒரு நாள் கூறியதாகச் சொல்லப்படும் உரை இவண் கருதத் தக்கது. அவ்வுரை :—"தோழீ, இப்பாணன் சொல்வன்மையிற் சிறந்த இள மாணக்கருள் ஒருவன்போலத் தோன்றுகின்றான். பிறரிடம் இரந்துபெறும் உணவினால் முற்ற வளராது வாடிய உடம்பொடு நின்றவனாயினும், இப்புதிய ஊரின்கண்ணும் தன் பெரிய தலைமைப் பாட்டிற் குறையாது திகழ்கின்றான். இவன், தன்னுடைய ஊர் மன்றத்தே எத்தகைய சொல்வன்மை பெற்று விளங்குவானோ!" என்பதாம்.

இப்பாடலில் வந்த 'தன்னூர் மன்றத்து என்னன் கொல்லோ' என்னுஞ் சொல்லாற்றலால் 'விருந்தினூரும்' என்பதற்குப் 'புதுவதாகிய ஊரின்கண்ணும்' எனப் பொருள் கூறுதலே பொருந்துவதாகும். விருந்து என்னுஞ் சொல் புதுமை என்னும் பொருளில் வழங்குதலை 'விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' (தொல். செய். 231) எனவருந் தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம். விருந்தின் ஊர் என்புழி இன் சாரியை. விருந்தினூரும் என்ற உம்மை சிறப்புணர நின்றது. பாணன் தங்கும் ஊர், தலைவன் வாழும் ஊரினும் சிறிது தொலைவுடையதென்பது இதனாற் புலனும். இராந்தூண் நிரம்பாமேனி இவனுக்குப் புதிய ஊரின்கண் தளர்ச்சி தருவதாயினும், அதனால் ஒருசிறிதுந் தளர்வின்றித் தலைமையுடன் காணப்படுகின்றான் என்பாள், 'இராந்தூண் நிரம்பா மேனியொடு விருந்தினூரும் பெருஞ் செம்மலனே' என்றாள். தன்சொல் செல்லுதற் குரியதல்லாத இப்புதிய ஊரின்கண்ணேயே இத்துணைத் திறம்படப் பேசும் ஆற்றல்பெற்ற இப்பாணன், தன்னூரில் தான் தங்கும் மன்றத்தே எத்துணைச் சொல்வன்மையுடையனாய்த் திகழ்வானோ எனத் தலைவி பாணனது சொல்வன்மையை வியந்து பாராட்டுமுகத்தால் தான் தலைவனொடு கொண்ட ஊடல் தீர்ந்து வாயில் நேர்வாளாயினாள் என்பது இப்பாடலாற் பெறப்படுதல் காணலாம்.

இவ்விளக்கவுரையாசிரியர் இந்நூலிற் சில விடங்களில் முழுச் சொற்களைச் சிதைத்துப் பொருள் கூறியுள்ளார். உதாரணமாக, 41-ஆம் செய்யுளில் 'அலப்பென் தோழி அவர் அகன்ற ஞான்றே,' என்புழி 'அலப்பென்' என்பது வருந்துவேன் என்னும் பொருள்பட வந்த ஒருமொழியாக இருப்பவும், இதனை அலப்பு + என் எனப்பிரித்து, 'அலத்தற்குக் காரணம் யாது' எனப் பொருள் கூறுவர். இப்பாடலில் வந்த 'புகல்வேன்' என்னும் ஒருமொழியையும் புகல்வு + என் எனப் பிரித்து 'விருப்பம் என்' எனப் பொருளுரையாதிருப்பவும், ஒன்றை மாத்திரம் சிதைத்துப் பொருள்கோடல் சங்கவிலக்கிய மரபொடு பொருந்தாமையறிக,

77-ஆம் பாடலில் தவறே இலவே எனப் பொருள்படுந் தொடரைத் 'தவறு ஓவில' எனவும், 91-ஆம் பாடலில் 'பெண் டினையாயின்' என்புழிப் பெண்டினை என்பதனை ஒரு சொல்லாகக் கொள்ளாது பெண்டு + இன்னையாயின் எனவும் பிரித்துரைத் திருப்பது ஐயங்காரவர்கள் பிறர் செல்லும் பொது நெறியே செல்லாது, தாம் ஒரு நெறி புதுவதாகக் கண்டு தெரிவிக்கவேண்டும் என்ற விழைவுடையார் என்பதனைப் புலப்படுத்தும். இவ்விருப்பத் தால், இத்தொகையிலுள்ள செய்யுட்களுக்கு வைப்புமுறை யியைபு சொல்லத் தொடங்கி, முதலிரண்டு செய்யுட்களுக்கும் 6-7-ஆம் செய்யுட்களுக்கும் கூறிப் பிற செய்யுட்களுக்குச் சொல்லமாட்டாது இடர்ப்பட்டமை யறிக.

## உரைச் சிறப்பு

இவ்விளக்கவுரையாசிரியராகிய ஐயங்காரவர்கள் குறுந்தொகை முதற்பாடலுக்கு எழுதிய விரிவுரை பொருட் செறிவுடையது. அதனைக் காண்க.

26-ஆம் பாடலில் 'தகாஅன் போலத்தான்றீது மொழியினும்' என்ற தொடருக்கு முன்னையுரையாசிரியர் இருவரும், தீது மொழி தற்கு வினைமுதலாகிய 'தான்' என்பதற்கு முறையே தலைவன் என்றும், கட்டுவிச்சி யென்றும் பொருள் கூறினர். இப்பாடலில் 'தான்' என்றது தலைவியை எனவும், அவள் கூறுந்தீதாவது தான் உயிர் விடுவதாகிய இன்னாமை மொழிதல் எனவும் ஐயங்காரவர்கள் உரை கூறுவர். இப்பகுதி தொல்காப்பியம் களவியல் 21-ஆம் சூத்திரவுரையில் இப்பாட்டிற்கு நச்சினார்க்கினியர் கூறும் பொருட் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு உய்த்துணர்ந்தெழுதிய சிறப்புடையதாகும்.

இடைச்சுரத்துச் செவிலித்தாய் செயலற்றுச் சொல்லியதாக அமைந்தது 44-ஆம் பாடலாகும். "வெள்ளி வீதியைப் போல நன்றுஞ், செலவயர்ந்திசினால் யானே" (அகம்-147) எனக் காதலற்

பிரிந்த ஆதிமந்தியார் கூறியவாறு, தன் காதலனைக் காணாது தேடிச் சென்ற வெள்ளிவீதியார் என்னும் பெண்புலவராற் பாடப்பெற்ற தாகலின், அகப்பொருள் பற்றிய இப்பாடலை அவர்தம் வாழ்க்கை யொடு தொடர்புடைய புறப்பொருட் பகுதியாகக் கொண்டு அதற் கேற்பவும் ஐயங்காரவர்கள் பொருள் கூறுகின்றார்கள். அப்பகுதி காணத் தக்கது. (பக். 79—80)

54-ஆம் பாடலில் வந்த 'மீனெறி தூண்டிலின்' என்பதற்கு முன்னையுரையாசிரியரிருவரும், 'மீனை யெறியும் தூண்டிலைப் போல' எனவும், 'மீனைக் கவர்ந்துகொண்ட தூண்டிலைப் போல' எனவும் முறையே உரை கூறிச் சென்றனர். மீனெறி தூண்டிலின் நிவக்கும் என்பதற்கு, 'மீன் கோத்த இரையை எறிந்த தூண்டிற் கோல் போல ஓங்கும்' என ஐயங்காரவர்கள் பொருள் கூறுவர். எறிதல், உயிருடையதாகிய மீனின் வினையாவதல்லது உயிரில்லாத தாகிய தூண்டிலின் வினையாகாது என விளக்கிய திறம் உணர்தற் குரியதாம்.

58-ஆம் பாடலில் 'இடிக்குங் கேளிர், நுங்குறையாக நிறுக்க லாற்றினோ நன்று' என்பதன்கண் ஆக என்றும், நிறுக்கலாற்றினோ என்றும் முன்னையோர் பிரித்தமைபோலல்லாமல், ஐயங்காரவர்கள் ஆகம் என்றும் நிறுக்கலாற்றினோ என்றும், பிரித்து அதற்கேற்பப் பொருள் கூறுதல் நோக்கத் தக்கது. (பக். 99)

61-ஆம் செய்யுளில் 'பொய்கையூரன் கேண்மை செய்தின் புற்றனம்' என முன்னிருவர்கொண்ட பாடத்தை மாற்றிப் பொய்கையூரற் கேண்மை செய்தின் புற்றனம்' எனப் பாடங் கொண்டு, "ஊரனுக்கு அருமைசெய்து பாத்தையர்போல உற்றின் புறேமாயினும் வையம் ஈர்த்தின்புறும் இளையோர்போல அவற்கு எண்மைசெய்து இன்புற்றனம்; அதனால் வளை நழுவாது செறிந்தன" எனக்கூறும் பொருளும், "எண்மை செய்தல் — உணவிடுதல், வாய்பூச நீர் பெய்தல் முதலியன ஆம்" என்றெழுதிய குறிப்பும் உலகியலுடன் பெரிதும் இயைபுடையனவாகும்.

65-ஆம் செய்யுளில் "வாராதுறையுநர்வரல்நசைஇ வருந்தி நொந்துறைய இருந்திரோ எனத் தான் வந்தன்றே தளிதரு தண் கார்" என்னும் பகுதிக்கு ஐயங்காரவர்கள் கூறும் பொருளும், 'தன் கற்பால் இட்ட வழக்காயிருக்கும்கார், இவ்வாறு இருந்திரோ எனக் கேட்குமாறு, தலைவர் குறித்த பருவந்தப்பியும் உயிர்வாழ்தலை நொந்துரைத்தவாறு" எனக் கூறிய நயமும் சிறப்புடையவாதல் காண்க. (பக். 109) தான் பெய்க என்று சொன்ன அளவில் அவ் ஏவல் வழிநின்று ஒழுகவேண்டிய தாழ்வுடைய மேகம், தன்னை நோக்கி 'இவ்வாறு உயிர் வைத்திருந்தீரோ' என வினவக்கூடிய அளவு ஆதரவற்ற தாழ்ந்த நிலைக்குத் தலைவி பெரிதும் வருந்தினள் எனக் குறித்த நயம் வியக்கத்தக்கதே.

இவ்வாறு, திணை, கைகோள், கூற்று, கேட்போர் முதலியசூழ் நிலைக்கேற்பத் திரு. ரா. இராகவ ஐயங்காரவர்கள் குறுந்தொகைப் பாடல்களுக்கு எழுதியுள்ள உரையும் விளக்கமும் அறிஞரனைவரும் படித்து இன்புறுதற்குரிய சிறப்புடையனவாம். குறுந்தொகையின் பொருட் செறிவினையும், மகாவித்துவான் ஐயங்காரவர்களது புலமை நலத்தினையும் இப்பதிப்பினால் தமிழகம் உணர்ந்து மகிழும் என்னுந் துணிபுடையேன்.

இவ்வுரை வெளிவருவதிற் பதிப்பாசிரியர்க்கு உதவியாக இருந்தவர் திரு. E. S. வரதராச ஐயரவர்கள். இஃது அச்சேறுங் கால், ஒப்புநோக்குதல் செய்துதவிய திரு. வரதராச ஐயர்க்கும், திரு. க. வெள்ளைவாரணனார்க்கும் பல்கலைக்கழகச் சார்பில் நன்றி செலுத்துகின்றேன்.

இந்நூல்போன்ற அருமையான தமிழ் நூல்கள் வெளிவருவதற்கு வாய்ப்புச் செய்து தமிழை வளர்த்து வரும் "முத்தமிழ் வள்ளல்" செட்டிநாட்டரசர் இராஜா சர். மு. அண்ணாமலைச் செட்டியாரவர்கட்கும், தமிழிற்கு ஆவன செய்து உதவிவரும் துணைவேந்தர் திரு. M. இரத்தினசாமி (எம். ஏ., சி. ஐ. இ.) அவர்கட்கும் தமிழகம் நன்றி செலுத்துங் கடமை உடையது.

அ. சிதம்பரநாதன்
15—12—46

# குறுந்தொகை விளக்கம்

## கடவுள் வாழ்த்து

பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியது

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றி
னெஞ்சுபக வெறிந்த செஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
வேம வைக லெய்தின்றா லுலகே

என்பது கடவுள் வாழ்த்து.

(விளக்கம்)—இஃது உலகிற்குப் பயன்பட முருகக்கடவுளை வாழ்த்தியது.

"யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
றாவிறு ணிழற் றவிர்ந்தன்றா லுலகே"
(அகம். கடவுள் வாழ்த்து)

என்பது உலகிற்குப் பயன்பட வாழ்த்தியதாகப் பேராசிரியர் கருதியது கொண்டு இதனையும் அவ்வாறுணர்க. (தொல். செய். வாழ்த்தியல் வகையே).

தாமரை புரையுங் காமர்சேவடி—தாமரை மலரை ஒக்கும் எல்லார்க்கும் விருப்பஞ்செய்யும் செய்ய அடிகள். கடவுளொண்பூ, (பெரும்பாண். 290.) ஆதலானும், மங்கலமாதலானும், முருகக் கடவுள் தோற்றமுடைமையானும் தாமரையை முதற்கட் கூறினர்.

"நின்னீன்ற நிரையிதழ்த் தாமரை" (8)

"நளினத்துப்பிறவியை" (5)

என்பன பரிபாடல். செம்மை, மென்மை, நறுமை முதலி யனவேயன்றி அந்தணர் விரும்பிச் சூடும் பொதுமையும் உண்மை தெரியக் காமர் சேவடி என்றார்..."நின்னிற் சிறந்த நின்றாளிணை யவை" (பரிபாடல். 4) என்பதுபற்றிச் சேவடியை முற்பட நினைந்தார். காமர் சேவடியையும், பவழத்தன்ன மேனிக்கட்டிக ழொளியையும், குன்றியேய்க்கும் உடுக்கையினையும், குன்றின் நெஞ்சு பிளவுபட எறிந்த செஞ்சுடர் நெடுவேலினையும் உடைய சேவற்கொடியோன் காத்தலான் உலகம் இன்பமுள்ள வாழ்நாளை எய்தியது. எ.று.

உலகம் 'இன்னாவைகல்' (புறம். 363) எய்தாது ஏமவைக லெய்தியது சேவலங்கொடியோன் காத்தலான் என்றுணர்த்தி அந்நன்றியை மறவாது உயிர்கள் தொழுக என்று குறிப்பெச்சத் தாற் கொள்ளவைத்தார். காமர் சேவடி, காமர் கழலடி (கலித். 30) என்பது போல வந்தது. ஏமம் - இன்பம். காப்ப ஏமவைக லெய்தின்று என இறந்தது காட்டிக்காப்ப ஏமவைகலெய்தும் என் பது குறிக்கொளவைத்தார். நல்லழிசியாரும்,

> "யாமுமெஞ்சுற்றமும் பரவுதும்
> ஏம வைகல் பெறுகம்யா மெனவே" (பரிபா. 17)

எனப் பாடுதல் காண்க.

மருதத்துத் தாமரையையும், நெய்தலிற் பவழத்தையும், முல் லையிற் குன்றியையும், குறிஞ்சிக்குன்றியினையும் எடுத்தாண்டது ஏமவைகலெய்தற்குரிய உலகு நானிலமாகப் பகுக்கப்பட்டது கருதி யென்க. குன்றி - குறுநறுங் கண்ணியென்ப. "திருவளர்தாமரை" என்னுந் திருச்சிற்றம்பலக் கோவையுரையிற் பேராசிரியர் பூவால் நிலமுணர்த்தியவாறு கோடலால் இவ்வியைபு உணரப்படும். செஞ் சுடரைக் கூறி அதனைக் கடவுளாகவுடைய பாலையை நினைப்பித் தார் என்பதும் ஆம். இவ்வாறு ஐவகை நிலனும் நினைப்பித்தல் சிலப்பதிகாரப் புறஞ்சேரியிறுத்த காதைக்கண் "கடுங்கதிர்...... நாடென" (அடி. 3-9) என்புழிக் "கானமென்பதனால் முல்லையும், சூர், கரடி யென்பவற்றாற் குறிஞ்சியும், வேங்கை என்பதனாற் பாலையும், உருமு என்பதனால் மருதமும், முதலை என்பதனால் நெய்தலும் பெறுதும்" என அடியார்க்கு நல்லார் கூறிய உரை நோக்கியறிக. தான் மேஎயமைவரை.

உலகமாகிய தன்னிலனும் தீயபகையசுரர்க்கு அரணுயபோது எறியப்பட்ட இதிகாசங்காட்டியவாற்ருல், இந்நால்வகை நிலனும் ஆண்டுள்ள நல்லோர் காரணமாகக் காக்கப்படுதல் குறித்தார்.

"கொன்றுண லஞ்சாக் கொடுவினைக் கொஃறகை,
மாய வவுணர்த் தபுத்தவேல்"

(பரிபா. 5)

என்பதனுன் இஃதறிக.

இத்தொகைநூல் உறுதிப்பொருணன்கனுள் இன்பம்பற்றிய தாதலின் அதற்கியைய முருகக் கடவுள் காப்ப இன்பவைகலெய்தியது என்று கருதினரெனினு நன்கமையும். இவ்வின்பத் தொடு படாதவைகலே,

"எல்லா மெவனே பதடி வைகல்"

(குறுந். 323)

என இகழ்தல் காண்க. இவ்வின்பத்திற்கும் முருகக்கடவுள் பரவப்படுதல்,

"கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை
எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே"

(பிரிந்தகேளிர் வந்து புணர்ந்து பின் நீங்காமைப்பொருட்டு மகளிர் யாழை யெழுவி நின்னைப் பாடுகின்ற பாட்டை விரும்பினேய்)

(பரிபா. 14)

என வருதலான் அறியப்படும்.

"குறமக ளவளெம குலமக ளவளொடு
மறுமுக வொருவனின் னடியிணை தொழுதேம்
துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமண மெனவே"

(சிலப். 24 குன்றக்குரவை)

என வருதல் கண்டுகொள்க. ஈண்டுப்பிழைமணம் என்றது அயல் மணத்தைத் தந்தை தாயர் நினைத்தற்காகிய களவு மணத்தை இத்தொகை நூல் களவுங் கற்புமாகிய இருவகைக் கைகோளினையும் பற்றிவருதலான் அவ்விருவகைமையினையும் உலகிற்கு ஒழுகிக் காட்டிய முருகக் கடவுளை வாழ்த்துதல் ஏற்புடைத்தாதலும்

னைக. செவ்வேள் தெய்வ யானை யாரைக் கரணத்தொடு வேட்டதும், வள்ளி நாய்ச்சியாரைக் களவிற்றழீஇயதும் பரிபாடலான் (9) நன்குணர்க. ஆண்டுப் பரிமேலழகர் "இக்களவிற்புணர்ச்சியுடைமையான் வள்ளி சிறந்தவாறும், அத்தமிழை ஆய்ந்தமையான் முருகன் சிறந்தவாறும் கூறுகின்றார்." என உரைத்து விளக்குதல் காண்க. திருவுருவை நினைவார்க்குமடிதற்று முந்துற எய்தியருளும் சிறப்பான் உடுக்கையோடு சேவடியையும், நினையாத ஆசுரவியல்பினரை அழித்தற் சிறப்பான் வேலினையும், உலகு வைகறையே துயிலெழுந்து தொழ விளித்தற் சிறப்பான் சேவலினையுங் கூறினார்.

"ஒண்பொறிச் சேவலெடுப்ப வேற்றெழுந்து"
(புறம். 383)

எனவும்,

"குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியலும்" (குறுந். 234)

எனவும்,

"சேவல்
ஏம வின்றுயி லெடுப்பி யோயே" (குறுந். 107)

எனவும் வருவன கொண்டுணர்க.

சேயோன் என்ற பெயர்க்கியைய அடியும், மேனியும், உடுக்கையும், வேலும் செய்யவாகக் கூறிக்காட்டலான், ஈண்டுச் சேவல் செம்மையே தன்கணில்லாத "மாயிருந்தூவிமயில்" (தொல். மரபியல். 48) எனல் சிறந்ததன்று. மயிலை "நீலப் பறவை" என்பர் இளங்கோவடிகள் (குன்றக்குரவை)

"குவியிணர்த் தோன்றி யொண்பூ வன்ன,
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்"
(குறுந். 107)

எனவும்,

"அழலகைந் தன்ன காமர் துதைமயிர்,
மனையுறை கோழி மறனுடைச் சேவல்"
(அகம். 277)

எனவும் கோழிச்சேவல் கூறப்படுதல் காண்க.

"கோழிச் சேவற் கொடியோன் கோயிலும்"

என்பது சிலப்பதிகாரம் (ஊர்காண். 10)

"மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடி"

(பரிபா. 17, 48)

என்புழிப் பரிமேலழகர் "மணிநிறமஞ்ஞையினையும், உயர்ந்த கோழிக் கொடியினையும்" எனப் பொருள் கூறுதலுங் காண்க. பரிபாடலில் "அல்லலி லனலன் றன்மெய்யிற் பிரித்துச் செல்வ வாரணங் கொடுத்தோன்" (5 அடி 57 - 58) என்றதனால் இச் சேவல் செந்தீக்கடவுள் மெய்யாதலும் நன்குணரப்படும். "படையும் பவழக் கொடிநிறங் கொள்ளும்." (பரிபா. 19)

என்பதனாற் செஞ்சுடர் நெடுவேல் என்ற பாடமே கொள்ளப்பட்டது. "விசுவகர்மா ஆகியவன் சூரியன் பல் சுடருள் ஒரு பகுதியை எடுத்துச் சத்தியாயுதத்தை நிருமித்து முருகக் கடவுட்கு நல்கினன்" என்று மார்க்கண்டேய புராணங் கூறுதலானும் இயைபு உணரப்படும்.

எல்லா உயிரும் நிலனையும் பொழுதையும் பெற்று இன்பந் துய்க்க வேண்டுதலின் "ஏம வைக லெய்தின்றா லுலகே" என்றார். ஆசிரியர் தொல்காப்பியனாரும் "முதலெனப் படுவது நிலம் பொழு திரண்டி னியல்பு" (தொல். அகத். 4)

என்பதனால் இவ்விரண்டினையுமே முதல் என ஆளுதல் காண்க.

"தெய்வ முணாவே.........கருவென மொழிப"

(தொல். அகத். 18)

என்பதனாற் சேவலங்கொடியோன் கருப்பொருளாதல் அறியலாம். ஒழுக்கமாகிய புணர்தல் முதலிய உரிப்பொருளைந்தும் இன்பப் பகுதியேயாதலான் அவற்றை ஏமம் என்பதனால் வெளிப்படுத்தினார். இங்ஙனம் அகத்திணைக்குச் சிறந்த முதல், கரு, உரி என்ற மூன்றும் கூறினராதல் காணலாம்.

முருகக் கடவுள் வடிவங்களுள் இரு கையுடைய வடிவே சாத்துவிகவடிவென்றும் அவ்வடிவில் வலக்கையின்கட் சத்தியும் இடக்கையிற் குக்குடமும் அமைத்து வழிபடுதல் நன்றென்றும் **குமார தந்திரம்** என்னும் நூல் கூறுமென்பவாதலான் அதற்கேற்பவே வேலுங் கோழியு முடைமை குறித்தார். "க்ரௌஞ்ச

பேத்தா" என்னுந் திருவுருவத்தினை இவ்வின்பப் பாடற் றொகைக்கு நினைந்தது அவ்வடிவம் காமனுக்குரிய கருப்பு வில்லையும், மலர்க்கணையையும் ஏந்து மியல்பினதாதல் பற்றியென்று உய்த்துணரலாம். இவ்வுண்மை ஸ்ரீ தத்துவநிதியிற் காணலாம்.

---

## தீப்புத்தேளார்

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

என்பது தோழிகையுறை மறுத்தது.

(வி) கோறல் அம்பின் வினையாகவும் தேய்த்தல் யானையின் வினையாகவுங் கொள்க. எய்து கொன்ற அம்பு கடவுட்டன்மையான் மீண்டுகையினடைதலான் செங்கோலம்புடைமை கூறினாள். அவுணரைத் தேய்த்தற்குக் குத்திவீழ்த்தலான் யானைக்குச் செங்கோடு கூறினாள். அவுணரிற்றலையாயினாரைத் தன் யானையாற் றேய்த்துப் போர்நிலங் குருதியால் நனைந்து செங்களம்படப் பொருதவாறு காட்டினாள்.

கழறொடி - தோளிலிட்டு உழலும் வீரவலையம். அம்பெய்தும் யானையைக் கடாவியும் உள்ள திருக்கையில் அவ்வீரந்தோன்ற இட்டதொடி. எ - று. "அங்குசங்கடாவவொருகை" என்பது முருகாற்றுப்படை. இப்பாட்டின் எல்லாஞ் செய்யவாகக் கூறற்கேற்பத் தொடியும் மாணிக்க வலையமெனின் நன்கியையும். அவுணரைக் கொன்று தேய்த்தபடியே படையொடும் யானையொடும் போந்து சுரருக்கு அருளிய நிலையிற்றிருக்கையின் வீரவலையத்தைப் படைவென்றிக்கும் கொடை வென்றிக்கும் இயைய நினைந்தனள்: "செறுநர்த்தேய்த்த செல்லுறழ் தடக்கை" (முருகு. 99) என்றதுகொண்டு இஃதுணர்க. இவற்றாற்றெறலும் அருளுங்கருதினாள்.

செங்களம்பட என்றாரேனும் களம் செம்மைபட என்பது கருத்தாகக் கொள்க. இது தாரகாசுரவதத்தில் நிகழ்ந்ததென்ப.

கம்ப நாடரும் " தாருகன் குருதியன்ன குருதியின் " (பாசப். 21) என உவமித்தலானுணர்க. தாரகாரி என்பது முருகக் கடவுள் திருப்பெயர்.

யானைச்சேஎய் என்றது குமாரக் கடவுள் ஈசவாகன மூர்த்தியும் ஆதல் பற்றியென்றுணர்க. "கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு" என்பது பதிற்றுப்பத்து (2-1) சேஎய் குன்றம் சேஎய் காந்தட்டு என்க. குமாரக் கடவுள் மலை குமாரக் கடவுளுடைய அடையாளப் பூவாகிய காந்தளையுடைத்து எ. று. "கடவுட் காந்தள்" என்பது அகப்பாட்டு (152)

"அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்"
(முருகு. 43, 44)

என இக்கடவுள் கூறப்படுதல் காண்க. இது தெய்வஞ் சூடுவதென்று கூறித் தோழிகையுறை மறுத்ததாகக் கொள்ளலாம்.

இனி நற்றிணையுள்,

"கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த,
பறியாக் குவளை பலவொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி யின்னியத் தாடு நாடன்" (34)

என வருதல்பற்றித் தெய்வத்தொடு தெய்வமகட்குரிய தென்றுங் கூறி மறுத்தாள் என்பதுமாம். கடவுட்குன்றத்துக் கடவுட்குரிய இக்குருதிப் பூங்காந்தள் இவட்குத் தந்தவர் யார் என்று வினவப்படும் என்று மறுத்தாளாகக் கொள்க.

இனி, "வெறியாட் டயர்ந்த காந்தளும்" (தொல். புறத். 5) என்பதுபற்றி வேலனும் வெறியாடற்கணன்றிப் பறியாத காந் தளை யார் பறித்துதவினர் என்று வினவப்படுமென்க.

கையுறை மறுத்தது என்று துறையிற் கூறல் கூற்றெச்சத் தாயது என்பது பேராசிரியர் கருத்தாம்; அவர் இவற்றால் யாம் குறையுடையே மல்லேம் என்று தோழி தலைவற்குச் சொல்லி

மறுத்தாள் எனக் கொள்ளலான் அறியலாம். (தொல். செய். 206) மிகுதிபற்றிச் சூடாததனை இவள் சூடின், சூடியது பூப்பற்றியன்றென்றும் சிறந்தான் ஒருவன் கொணர்ந்து தந்த சிறப்புப் பற்றி என்றும் ,அயலாரால் உய்த்துணரப்படும் என மறுத்தாள் ஆகக்கொள்க. இவ்வாறு மிகுதிபற்றி மறுத்தல்,

"நொதுமலாளர் கொள்ளா ரிவையே
எம்மொடு வந்து கடலாடு மகளிரும்
நெய்தலம் பகைத்தழை பாவை புனையார்
உடலகங் கொள்வோ ரின்மையின்
தொடலைக் குற்ற சில்பூ வினரே"

என ஐங்குறுநூற்றில் (187) வந்ததனானும் ஆண்டுத் "தோழிகையுறை மறுத்தது" எனத்துறை கூறியதனானும் உணர்க. இனிக் "குன்றம் குருதிப்பூவின் குலைக்காந்தட்டு" என்புழிக் குன்றத்துக் காந்தளைச் செந்நிறத்தாற் சிறப்பித்துக் குருதிப்பூவுடையதாகக் கூறியதனால் நீ கொணர்ந்த காந்தட்கையுறை நின்கைப்பட்டு நின் மெய்வெப்பத்தாற் கரிந்து காட்டுவது குறித்து இக்கரிந்தது நின் மெய்வெப்பங் கூறுதலின் இதனைத் தலைவி காணின் ஆற்றாளாமெனக் கொள்ளவைத்துத் தோழி மறுத்தாளென்பது மொன்று: இது பேராசிரியர் நின்னேபோலு நின்றழையே.........மயல் கூர்மாதர்க்குத் துயர் மருந்தாயினு, நோய் செய்தன்றாற்றானே, நீ தொடக்கரிதலினேரிடத்தானே" என்பதைக் கையுறைமறுத்ததாகக் காட்டிப் பாராட்டெடுத்த லென்னு மெய்ப்பாட்டியற் சூத்திரத் (16) துரைக்கட் கூறிய நல்லுரையாலுணரப்படும்.

"சேஎய் குன்றம் குருதிப்பூவின் குலைக்காந்தட்டு"

என்று தோழி கூறித் தலைவியைக் குறியிடத்துய்த்து அது காண்பாயாகிற்காண் எனக் குறிப்பெச்சத்தாற் கொள்ளவைத்தாள் எனவும் ஆண்டே கொள்வர். இப்பிறகருத்து நச்சினார்க்கினியர்க்கும் உடம்பாடாம். (தொல். செய். 206). இறையனார் களவியலுரைகாரர்க்கும் இஃதே உடம்பாடாயினும் யான் செங்காந்தட் பூக் கொய்துகொடு வருவல் ஆண்டுத் தெய்வமுடைத்து நின்னால் வரப்படாது இப்பொழிலிடத்தே நில் என்னுங் கருத்தாற் றோழி கூறியதாக அவர் துணிவர். (18)

சேஎய் என்பது செய்யோன் என்பதன் சிதைவு என்பர் நச்சி ஞர்க்கினியர் (முருகு. 61) "காய் கடவுட் சேய்" (பரிபா. 5) என் றதுபற்றிக் கடவுள் மகன் எனினுமமையும். குமாரஸம்பவம் என்று காளிதாஸரும் பெயரிட்டாளுதல் காண்க. "கவர்கணை" (புறப். வெண். பாதீடு)யின் வேறு தெரியக் கோலம்பு என்றதாம். கோல்-திரட்சி என்பதுமுண்டு. குருதிப்பூ என்றது குருதியொத்த பூ (எ - று.)

"குருதி யொப்பின் கமழ்பூங் காந்தள்"
(நற்றிணை. 399)

என்ப. இது பாடியவர் தீப்புத்தேளார். தீப்புத்தேள் - அங்கி யங் கடவுள். திட்புத்தோளர் என்பது பாடமெனின், திண்மை யையுடைய தோளினர் என்க. சேஎய்குன்றம் என்றது இம்மலை யும் அக்கடவுட்கே உரியது எ - று. செங்களம் முதலாகக் கூறிய பலவற்றிற்கும் இயையக் குன்றமுஞ் செவ்வரை யெனத்தகும். செவ்வேளை வாழ்த்திய பாடற்பின்னே செவ்வேளைச் சிறப்பித்து அக்கடவுள் குன்றத்தை அவனடையாளப் பூவாற் புகழ்ந்த பாட்டை வைத்தாரெனவறிக.

---

## இறையனார்

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே.

எ-து இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபெட்டு நின்ற தலைமகன் தலைமகளை நாணின் நீக்குதற்பொருட்டு மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவள்மாட்டு நிகழ்த்திக்கூடித் தனது அன்புதோற்ற நலம் பாராட்டியது.

(வி) ஊன்றேர் வாழ்க்கைப் புள்ளினத்தின் வேறாய்க் கொங்குதேர் வாழ்க்கையைச் சிறப்பாகவுடைய தும்பி என

விளித்தான். "படுமுடை நசைஇய வாழ்க்கைச் செஞ்செவி எருவைச் சேவல்" (அகம். 161) என்பதனால் ஊன்றேர் வாழ்க் கைப் புள்ளினம் உணர்க. ஊன்றேர் வாழ்க்கையையுடைய அப் பலவும் புறஞ்சிறையுடையவாக நீ மட்டும் அகஞ்சிறையையுடை யையென்று அவற்றின் வேறு தெரியவைத்து அஞ்சிறைத்தும்பி என்றான். சிறையைக் கூறியது எங்கும் பறந்து செல்லற்குக் கருவியாதல் பற்றியாம். உயிர்க்கு ஊறுசெய்யாத வாழ்க்கையி னுஞ் சிறந்து நறுமணந்தேரும் வாழ்க்கையுடைமையாற் 'சாரக்கி ராகி' என வண்டினைக் கூறுதல் வடநூல் வழக்கு. 'வண்டனார்' (சிந். 1632) எனப் பெரியோர் வழங்கப்படுதலுங் காண்க. நாற்ற வுணவினோர் (புறம். 62) ஆகிய தேவசாதிபோலக் கொங்குதேர் வாழ்க்கையைச் சிறப்பாகக் கருதிக் கூறினான். சுரும்பு முதலியன தும்பியின் கிளையென்ப. இவற்றுள் நல்ல மணத்தே செல்லற்குரி யன சிலவே என்ப (சிந். 892 நச். உரை). இவற்றுள் உயர்ந்த தையே ஈண்டு விளித்துக் கூறியதாகக் கொள்க. "நறியவும் உளவே" என வினவுவேனுக்குச் செப்புதற்குரியை நீ என்பது தெரியப் பல்லிடத்துச் சென்று தேர்தற்குத் துணையாகிய சிறையை அகத்தேயுடைமையால் எங்குஞ் சென்று கொங்கின் இயல்பு நன்கறிவையாகிய நீ காமஞ் செப்பாது—என் வினவிற்கு எனக்கின்பமாவதொன்றை விடையாகக் கூறாது. தான்றுய்த் தறிந்த இன்பமாதலான் அதனைக் காமமென்றான் : காமம் இன்ப மாதல் காமவல்லியை இன்பக் கொடியென வழங்கலானறியலாம்; கற்பகங் கந்துக்கட னொத்தான், இணைவே லுண்க ணந்தையு மின்பக் கோடி யொத்தாள் (சிந். 365) என்ப. "இன்பமும் பொருளு மறனுமென்றாங், கன்பொடு புணர்ந்த வைந்திணை" (கள. 1) எனத் தொல்காப்பியனாரும் வழங்குதல் காண்க. உளவோ என வினவுகின்றானாதலாற் செப்பாது என்றான் "வினவுஞ் செப்பே" என ஆசிரியர் வழங்குதலா னிதனுண்மை யுணர்க. கண்டது - நீ அறிந்தது. நீ அறியும் பூவே என்பதனாலறிக. மொழிமோ - கூறுவாயாக. பயிலியது கெழீஇய நட்பின் - பயின் றது உரியதாகிய நட்பினையும்; என்றது முப்பிறப்பிற் பயின்றது இப்பிறப்பின் உரியதாகிய நட்பு எ. று. மயிலியல் - மயிலின் இய லாகிய சாயலினையும் மயிலன்னமென்சாயலார்" (395) என்பது புறப்பாட்டு. இயல் - நடையுமாம். செறிஎயிறு - நிரையாய்ச்

செறிந்த பற்களையும் உடைய அரிவை என்க. நாடிநட்டலே வேண்டுவதாகவும் அங்ஙனமாகாது நோக்கெதிர்நோக்கிய அளவிலே மெய்தொட்டுப் பயிறல் உண்டாயதுபற்றிப் பயிலியது கெழீஇய நட்பின் என்றான்: உள்ளப் புணர்ச்சியின் வழியது மெய்யுறு புணர்ச்சியாதலின் முற்பட இருவயினொத்த நட்பினையே பாராட்டினான்.

தான்கண்ட நிலங்குறிஞ்சியாதலின் ஆண்டுள்ளதோர் மயிலோ என்று ஐயுற நின்ற நிலையே நினைந்து மயிலியல் என்றான்: அவன். பொழிலிடை உலாவியபோது கண்ட நடை நினைந்து மயிலியல் என்றானெனினுமமையும். அவள் முறுவற் குறிப்பால் உள்ளம் ஒத்தலறிந்தானாதலால் அது புரிந்த செறியெயிற்றைப் பாராட்டினான்: இத்தனையும் உடையாளோர் தெய்வமல்லள் மகள்தான் எனத் தெளிந்ததுபற்றி அரிவை என்றான். அரிவை கூந்தலின் - அரிவையினுடைய கூந்தலைப்போல: ஊற்றுணர்ச்சியுடைய பிற வுறுப்புக்களின் வேறாய கூந்தலினறியவுமுளவோ என்று வினாவிய முகத்தால் பிறவுறுப்புக்களின் உயர்பு தோன்ற வைத்தான். கூந்தலே கூறியது அதுவே பாயலாகத்தான் கிடந்ததுபற்றி என்க.

தான் அவன் மெய்தொட்டு பயிறற்குக் காரணமாய்ப் பல்கால் தான் துரப்பவும் அக்கூந்தலின் இயல்பாகிய நறுமணத்தால் விடாது நீ அமர்ந்து ஆர்ந்தது அறிவேனாதலால் நின்னை வினவுவேன் என்று குறித்தான்: இதனால் நீயறியுங் கூந்தலைப்போல நீ யறியும் பூக்களுள் நறியவும் உளவோ என்றான். கொங்குதேர் வாழ்க்கையால் இவ்விரண்டினியல்பும் நன்கறிவை, அதனாற் கண்டது மொழிமோ என்றான். மொழிமோ என்றது சினக்குநபோல அஃறிணை மருங்கினறைந்ததாகும். "சுரும்பு முதலியன கூறும் பாஷையைச் சீவகனுணர்ந்திருத்தலின் அதனாலவற்றை அழைத்தான்". (சிந். 892 - 893) என நச்சினார்க்கினியருரைப்பர்.

"கொடுங்குழை கூந்தலுட்
டிவளும் வாழிய செம்பொறி வண்டுகாள்
இவள கூரெயி றீனுந் தகையவோ
தவள மெல்லிணர்த் தண்கொடி முல்லையே"

(சிந். 1331)

என்பது இப்பாட்டின்கருத்தைத்தழீஇவந்ததாகும். உளவோ மொழிமோ என்ருன் உளவென்று மொழிவையாயின் அவை கொணர்ந்து இவள் கூந்தலிற்புனேவேன் என்பது குறித்து. பிற ஒவ்வாமலர் புனேயின் இவள் கூந்தலினறுமணத்தை அவை கொள்வனவன்றி இக்கூந்தலுக்கு ஒரு மணஞ்செய்யாவாம் என்பது கருத்து. உளவோ எனப் பன்மையாற் கூறியது பல பூக்கள் கூடியும் இந் நறுமணஞ் செய்யா என்பது நினேந்து. நீ அறியும் பூக்களுள்ளே நறியவும் உளவோ என்க. செழீஇய நட்பினுல் அவள் கூந்தல் தனக்குரியதாகிய சிறப்பான் அதனேயே முற்கூறினுன்; "இவள் ஒலிமென்கூந்தலுரியவா நினக்கே" (குறுந். 225) என வருதல் காண்க.

இனி மயிலியல் என்பது மயில் நடை என்றே கொண்டு கூந்தலினறியவுமுளவோ என்பது இறுதியாக அடி முதல் முடி வரைத் தன் உள்ளம் பிணித்த அவள் இயற்கை யழகு நினேந்து கூறினுன் எனின் நன்கு பொருந்தும். செழீஇய நட்பு - வளர்ந்தோங்கிய நட்பு என்பதுமாம்: "உரவுத்திரை செழீஇய பூமலி பெருந்துறை" (நற்றிணே 159) என்பது காண்க. செறியெயிறு "நிரைத்த செறிமுறை பாராட்டினுய் மற்றெம்பல்லின்" (பாலேக்கலி. 21) என்புழிக் காண்க.

இறையனுர் - சிவபிரானுர்: 'இது சிவபிரான் ஓர் புலவனுய்ச் சங்கமேறித் தருமி என்னும் அந்தணன் பொருட்டுப் பாடப்பட்டதென்பது தொன்றுதொட்டு வந்த வழக்கு.' "நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினேன் காண்" என்பது ஆளுடையவரசர் திருப்புத்தூர்த் திருப்பாட்டு.

---

### தேவகுலத்தார்

(3) "நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனெடு நட்பே."

எ-து தலைமகன் சிறைப்புறமாக அவன் வரைந்துகொள்வது வேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகளியற்பட மொழிந்தது.

(விளக்கம்) நாடனொடு நட்பு - நாடனொடு ஒத்து நட்ட நட்பானது, சொல்லப்புகின் நிலத்தைக் காட்டினும் அகலத்தாற் பெரிது ; நினையப்புகின் வானைக்காட்டினும் ஒக்கத்தாலுயர்ந்தது ; உள்புக்கு எல்லைகாணப்புகின் நீரைக்காட்டினும் ஆழத்தால் அரிய அளவினது என்க.

பெரிது, உயர்ந்தது, ஆரளவினது என முத்திறப்படுத்தது உரை, உள்ளம், மெய் என்ற மூன்றானும் அளக்கலாகாமை குறித்து. நிலம், வான், நீர் மூன்று அளக்கரிய பொருள்களாதலின் எடுத்துக் காட்டப்பட்டன.

நீர் - கடல், "இனிதினியைந்த நண்பு" (அகம். 328) ஆதலின் உயிர்கட்கு இனியது செய்யும் நிலத்தினும், வானினும், நீரினும், ஒருகாலே பெருகிற்றென அந்நண்பினை மிகுத்துக் கூறினாள். இம்மூன்றும் கூடிய வழியல்லது தனியே நின்று பயன் படாமையானே அவற்றினும் மிக்கதென்று கூறி இவை சேர்ந்து செய்யும் பயன் இந்நட்பின் உள்ளதென்று சிறப்பித்தவாறும். நிலம் நீரின்றிப் பயன்படாமையும், வான் மேல்நின்ற மட்டிற் பயன்படாமையும் நீராகிய கடல்சூழ நின்றும் தனியே பயன் படாமையும் நோக்கிக்கொள்க. வான் கடலை உண்டு நிலத்திற் பொழிதலால் உயிர்களின்புறுதல் காண்க. மூன்றன் சேர்க்கை இன்றியமையாமைபற்றிக் கூறினாள். நீர் பூதமாகாது கடலாதல் போல வானும் மேகமாயிற்று. "வானோக்கி வாழும் உலகம்" (குறள். 542) என்பதனான் அறிக.

கடலின் நீர் வானால் நிலத்திற் பெய்யப்பட்டு நிலனும் நீரும் இயைந்து பயன்படுவதுபோன்றது இந்நட்பு என்றவாறு.

இங்ஙனம் கூறாது நட்பின் அளவுப் பெருக்கமே கருதி நில முதல் மூன்றையும் கூறினாள் என்னின் பெருக்கத்திற்கு ஒன்றே யமையுமென்க. 'நிலத்தொடு நீரியைந்தன்னார் (குறள். 1323) என்றலும் நினைக.

சிலப்பதிகார நாடுகாண்காதையில் "கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும், விரிகதிர் வெள்ளி தென்புலம் படரி

னும்" (அடி. 102—102) என்புழி அடியார்க்கு நல்லார் மழை தொழிமாற இவற்றில் ஒன்றே யமையுமாகவும், இவை எல்லாம் சேரினும் கடல் வளனெதிரக் கயவாய் நெரிக்குங் காவிரி என உரைத்தது கொண்டு இஃதுணர்க. போஷகமாகிய உணவு நல்கும் நிலத்தினையும், தாரகமாகிய நீர் உதவும் வானையும், போக்கியமாகிய மணிபவளம் முதலியன உதவும் கடலையும் எடுத்துக்காட்டி அம்மூன்றும், இந்நட்பொன்றே நல்கற்சிறப்பான் மேம்படுதல் காட்டினன். பெருங் கடற்கெல்லை தோன்றினும் (குறுங். 373) என்பதனால் கடலெல்லை காணவரிதாதல் உணர்க.

கருங்கோற் குறிஞ்சிப்பூ - கரிய கொம்பினையுடைய குறிஞ்சிப்பூ. நிறையப் பூத்தற்கேற்ற வலியுடைமை கருதிக் கருங் கொம்பு கூறினள். பன்னீராண்டு வளர்ந்து பூக்குமியல்பான் அது தலைவியாகிய தன்னைக் குறிப்பானுணர்த்திற்று. பூமகளிர் நலமென்பது "நறுமலர் வள்ளிப்பூ நயந்தோயே" (பரிபாடல் 14) என்னும் பரிபாட்டடியான் உணர்க. பூவினன்ன நலம் புதிதுண்டு (நற். 15) என வரும். "கவினென்னுங் காமர் மலர்" (2797) என்பது சிந்தாமணி.

பூக்கொண்டு - பூக்களைக்கொண்டு சாரல் பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பு - மலைப்பக்கத்துப் பெரிய தேனைத் தொகுக்கும் நாட்டையுடையவனோடு இழைத்த நட்பு. நெடுவரைப் பெருந்தேன் (குறுங். 60). பறவையிழைத்த பல்கணிறாஅ, றேனுடைநெடுவரை (நற். 185) இதனால் மலையில் வண்டு தேனிறால் இழைத்தலறிக. "திணிநெடுங்குன்றந் தேன்சொரியும்மே" (புறம். 104) பால்வரை தெய்வம் இழைத்த நட்புவண்டு பெருந்தேனிழைத்தது போலு மென்று விசேஷித்தாள். பால்வரை தெய்வம்போல ஈண்டு வண்டும் தோன்றாது நின்றது.

இப்பாட்டில் தலைவனும் தலைவியும் குறிஞ்சி நிலத்தவராகவே கொள்க. சாரற்குறிஞ்சிப்பூ என இயைப்பாருமுளர். பூவிற்றேன் தனியே பயன்படாது நின்றது சாரலில் வண்டால் இழைக்கப்பட்டுப் பயன்படல்போலத் தலைவியும், தலைவனும் பால்வரை தெய்வத்தால் இணைக்கப்பட்டுப் பயன்படல் கருத்து.

நிலம் பயவாதுபோம், வான் பெய்யாது போம், நீர்தன்னீர்மைகுன்றினும் குன்றும். நட்பு அங்ஙனமாகாமல் எக்காலும் பயன்பட்டுப் பின்னும் துன்னத்தகும் சிறப்பாற் கூறினள்.

(1) நாடனொடு நட்பு தலைவன் அயன்மையால் பயன்படுத லின்றி நாள் கழிவது கருதித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்படமொழிந்ததாகக் கொள்க.

இது தேவகுலத்தார் பாடியது என்ப; தேவகுலம் - தேவர் தளி. "அரசரெடுத்த தேவகுலம்" (சிந். 348 நச்.)

(2) நிலமும், வானும், நீரும் பருவத்திலியைந்து பயன்படு தல்போல நட்பும் வரைதற்குரிய நன்னாளிலியைந்து பயன்படுதல் குறித்தது எனினும் அமையும்.

---

## காமஞ்சேர் குளத்தார்

(4) "நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுத னோமென் னெஞ்சே"

எ-து. பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

(வி) இமைதீய்ப்பன்ன கண்ணீர் - கண்ணுக்குக் காவலாகிய இமைகளைச் சுடுதலொத்த கண்ணீரினை. தாங்கி - தம்கையாற் றடுத்து. அமைதற்கு அமைந்த-நாம் உயிர் தாங்குதற்பொருட்டுத் தங்கிய. நம் காதலர் - நம்கட்காதலுடைய தலைவர் அமைவிலர் ஆகுதல் - இப்போது நம்மிடத்துத் தங்குதலிலர் என்று நின்னாற் சொல்லலாகுதற்கு. என் நெஞ்சு முக்காலும் நோகும் எ.று.

தலைவி ஆற்றாளெனக் கவன்று, தோழி தலைவர் நின்கண்ணே அமைவிலரென்றாரென்றும், நின் சொல்லால் அமைவிலராதற்கு என்னெஞ்சு நோம் என்று தலைவி கூறினாள் என்றும் கொள்க. அமைவிலராதலென்றது தோழி சொல்லியதைத் தான் கொண்டு சொல்லியது: அமைவிலரல்லர் என்பது தலைவி கருத்து. "பாடு பெறு தியோ நெஞ்சே கொடியார்க்கென், வாடுதோட் பூச லுரைத்து" (குறள். 1237) என்புழிக் கொடியார்க்கென்பதனை கொடியாரென்கின்றவர்க்கு எனக்கொண்டு கொடியார்க்கென்பது

கொடியரல்லர் என்பது தோன்ற நின்ற குறிப்புச் சொல் எனக் கூறுதல் கண்டு இவ்வழக்குணர்க.

"நோவலவரைக் கொடியரெனக் கூறனெஞ்சு" (குறள் 1234) என்புழிப் பரிமேலழகர் யான் ஆற்றேனாகின்றது அவர் வாராததற்கு அன்று நீ கூறுகின்றதற்கு என்றவாறு என உரைத்தது காண்க.

காதலர் நெஞ்சத்தவராதலை என்னெஞ்சு அறிந்து ஆற்றியிருக்கவும், அவர் அமைவிலரென்று கேட்பதாதற்கு அந்நெஞ்சு தானே நோம் என்று கூறினாள் என்க. இதுவே ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலைவி கூறிய கூற்றும் என்க.

காதலர் புணர்ந்துள்ளபோது நின்னைப்பிரியேனென்ன, ஆண்டுப் பிரிவென்பது ஒன்றுண்டு போலுமெனக் கவன்று அது நினைந்து ஆற்றாது உள்ளேவெதும்பி இமை தீப்பன்ன கண்ணீர் வடித்த அளவிலே அவர் ஆண்டுத் தாங்கியதை ஈண்டுக் கூறியதாகக் கொள்க.

நம் காதலர் என்றாள் நீயும் அங்ஙனம் நினைத்தற்குரியை என்பது தோன்ற.

களவொழுக்கத்தான் வந்த துன்பத்தைப் பிறர்க்குப் புலனாகாமல் நிறுத்தலென (தொல். களவு 20) இளம்பூரணர் இச்செய்யுளைக் கொள்ளலால் அதற் கேற்பக் கூறினாம்.

ஈண்டுப் பிரிவிடை என்பதை வரைபொருட் பிரிவிடை என இளம்பூரணர் கருதினாராவர். இவ்வாறே வந்த கடலங்கானல் (குறுந். 245) என்னும் பாட்டில் மெல்லம் புலம்பன் கொடுமை பல்லோரறியப் பரந்து வெளிப்படினே என்னலமிழந்ததனினும் நனியின்னாதே எனக் கிழத்தி கூறுதலும் ஒப்புநோக்குக. இதே துறையின் வைத்த அடுத்த பாட்டை வரைவிடை வைத்துப் பிரிந்த வழிகூறியதாக நச்சினார்க்கினியர் கொள்ளுதலுங் காண்க.

அள்ளூர் நன்முல்லையார் பாடிய குறுந்தொகை 202ஆம் பாடல் வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் வாயின் மறுத்தது. ஆதலின் ஆண்டுத் தலைவன் பரத்தமையை முனிந்து "இனிய செய்த நம்காதலர் இன்னா செய்தல் நோமென்னெஞ்சே" என்று

கூறியதனோடு இதற்கு வேற்றுமை கண்டுகொள்க. அதுவும் இதுவும் ஒத்துள்ள இடத்தும் துறைவேறு கூறுதலான் துறைக்கு இயையப் பொருள் கூற வேண்டிற்றென்க. ஈண்டு அமைவிலராகுதல் என்றாற்போல ஆண்டு ஆக்கச்சொல் இல்லாமை நோக்கிக்கொள்க. காமஞ்சேர் குளத்தார், பிரிந்தாரைக் காமத்திற் சேர்க்கும் குளமுண்டென்பது புகாரிலுள்ள "இரு காமத்திணையேரி" (பட்டின. 39) வரலாற்றான் அறியப்படுவது, அக்குளக்கரையில் வதிந்தவர் இவராவர்.

---

## நரிவெரூஉத்தலையார்

(5) அதுகொ றோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிழற் புன்னை
உடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லித ழுண்கண் பாடொல் லாவே.

எ - து. பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

(வி) மெல்லம்புலம்பன் - மெல்லம்புலம்பாகிய நெய்தல் நிலத்தினையுடையவன். "மென்புலம் - மருதமும் நெய்தலும்" (புறம். 42) எனப் புறப்பாட்டுரைகாரர் கூறுதலான் நெய்தல் மெல்லம்புலம்பெனப்பட்டது என்றுய்த்துணரலாம். புறம் - புறம்பு ஆவதுபோல; புலம் - புலம்பாயிற்று. கடனிலத்தை மென்பாலெனவுங் கூறுதலான் இஃதுணரப்படும்; "தண்கடற்படப்பை மென்பாலனவும்" (பதிற்று. 30) எனவரும். மென்பால் நிலம் குழிக்குமண் குறைவதென்ப.

பிரிந்தென - பிரிந்தானென்று; என்றது கண்களில் பிரியாதுள்ளானாகவும், பிரிந்ததாக நினைந்து எ - று. "பூம்போது சிதையவீழ்ந்தென" (புறம். 28) என்புழிப் பழைய வுரைகாரர் வீழ்ந்ததாக எனப்பொருள் கூறுதல் காண்க. "வயிரியருண்டெனத் தவாஅக் கள்ளின்" (பதிற். 43) என்பதுங் காண்க. பல்லிதழ் உண்கண்பாடொல்லா - பல பூக்களையும் போலும் கண்கள் துயி

றலைப் பொருந்தாவாம். "துறைவன், நெஞ்சத்துண்மை யறிந் தும் என்செயப் பசக்குந் தோழியென் கண்ணே" (ஐங். 169) என்பது காண்க. "கண்ணுள்ளார் காதலவராக" (குறள். 1127) அஃதறியாது பிரிந்தாற்போல நினைந்து கண்கள் பாடொல்லா; அதுகொல் காம நோயே என்று வினவியதாகக் கொள்க. கண் ணுள்ளார் காதலவராக என்புழிப் பரிமேலழகர் "யானிடையீடின் றிக் காண்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறென்னை" என் உரைத்தது கண்டுகொள்க.

வெளியிற் பொருள்களைக் கண்டு காட்டவல்ல கண்கள் தம்மி டத்துள்ள தலைவனைக் காணமாட்டாது பிரிந்தெனப் பாடொல்லா; அக்குருட்டுத் தன்மை காம நோய்கொல் என்றதாகக்கொள்க.

வதிகுருகு - மருதத்தினின்று வந்து, துணையின்றி வதியும் குருகு. மீனுண்டு தன்னிலத்தையும் மறந்து உறங்குதற்குக் காரணமான இனிய நிழலையுடைய புன்னை.

உடைதிரைத்திவலையரும்புந்தீநீர் மெல்லம்புலம்பன்-கரையை உடைக்கும் அலைத்திவலையால் புன்னை முகிழ்க்கும் தீவிய நீரை யுடைய மெல்லம் புலம்பன் என்க. திவலை, உடைக்கும் அலையி னுண்டாதல் தெளிக. "ஓங்குதிரை வெண்மண லுடைக்குந் துறைவற்கு" (ஐங். 113) என்பது காண்க. தீநீர்மெல்லம்புலம் பென்றது உலகம் தீநீர் உண்டற்குக் காரணமாதல்பற்றி. "இன் னீர்த் தடங்கடல் வாயிலுண்டு.........காரெதிர்ந்தன்றால்" (நற். 115) என்பதனால் உண்மை உணர்க. கடல் சார்ந்து மின்னீர் பிறக்கும் (நாலடி. 245) என்பதுபற்றிக் கூறினார் என்றலும் ஒன்று.

குருகும் நாரையும் வேறு வேறென்பதும் மருதத்திற்குரியன வென்பதும் "தடஞ்சிறை யன்னங் குருகொடு நாரைப் பார்ப்பின மோம்புதண் மருதம்" (சிந். 2102) எனச் சிந்தாமணியுள் வருத லானறிக. "தடந்தாள் நாரையிரிய...........வெண்கை மகளிர் வெண்குரு கோப்பும்" (பதிற். 29) என்பதும் காண்க.

வதிகுரு குறங்கும்........... மெல்லம் புலம்பன் என்றது அயல்நாட்டவரும் வந்து துய்த்துறங்கும் பெருமையுடையான் என்றும், அம்மனை கடல் தருஞ் செல்வத்தால் வளம்பலபடைத்து

வளரும் என்றும் குறித்துத் தான் ஆண்டுச் சென்றுறங்கப் பெரு மைக்கு வருந்துவாள் என்னும் குறிப்பிற்று. நம் கண்பாடொல்லா வாகத் தான் கடலன்ன செல்லத்தால் பொலிவுபெறும் மனைக் கண்ணே வரையாதினி துறங்குகின்றான் என்புதுமாம். 'பொதும் பர்த் தனிக்குரு குறங்குந் துறைவற்கு' (ஐங். 144) என்புழிப் போல வரைந்துகொண்டு ஒன்றுபட்டொழுக நினையாது தனித் துறங்குவான் எனினும் அமையும்.

இனி "நன்மலை நாடன் பிரிந்தெனை ஒண்ணுதல் பசப்ப தெவன்கொ லன்னாய்" (ஐங். 219) என்புழிப்போல, பிரிந் தணிமை குறித்துப் பிரிந்தென என ஈண்டு வந்ததெனினுமாம். இது வரைவிடைவைத்துப் பிரிந்தவழிக் கூறிய தென்பர் (தொல். களவு. 21).

"ஐயோவெனயாம் பையெனக் கூறிற் கேட்குவர்கொல்லோ" (தொல். களவியல். 21 நச். மேற்கோள்) என்பது பிரிந்த அணி மையிற் கூறியதாதல் காண்க.

---

## பதுமனார்

(6) நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கண் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

எ - து. வரைவிடை வைத்துப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழியை நெருங்கிச் சொல்லியது.

(வி) யாமம் நள்ளென்றன்று - இரவு நள்ளென்ற அநுகர ணத்தையுடையதாயிற்று. இவ்வோசை யான் கேட்பது மாக்கள் முனிவின்று சொல்லவிந்தடங்கினராதலால் என்பதுபட வந்தது. என் உண்மையான வருத்தமறியமாட்டாமல் ஐயறிவேயுடைய தாயர் என்னை முனிதலில்லையாகிச் சொல்லொழிந்து எனக்கினி தாக நினைவடங்கினர்; அவர் சொல்லெல்லாம் தன்னை வைதலே யாதலால் முனிவின்று சொல்லவிந் தடங்கினர் என்றாள். இனிது

என்றது அம்மட்டில் தனக்கினிதாதல் கருதி. நனந்தலை யுலக மும் துஞ்சும் - அகலத்தையுடைய உலகினுள்ள உயிர்களும் துயி லும். மன்ற ஓர்யான் துஞ்சாதேனே - தேற்றமாக யான் ஒருத் தியே துயிலாதேன். எ - று.

மாக்களடங்கினரென்றதனால் தன் பகை துயிறலையும், உலக மும் துஞ்சும் என்றதனால் அயல் துயிறலையும் வெளிப்படையாகச் சொல்லி ஓர்யான் மன்ற துஞ்சாதேனே என்றதனால் தன்னட் பாகிய தோழி துயிறலைக் குறிப்பாற் கொள்ளவைத்தவாறும். இது நாகரிகமாகத் தோழியை நெருங்கியது.

மாக்கள் அடங்கினர் அஃதினிதென்று கூறி உலகமும் துஞ் சும் அது தனக்கு நன்றுமன்று தீதுமன்று என்று கொண்டு துயிலாதேற்கு உறாத்துணையாகிய நீயும் துயின்றது தீதேயாம் என்று கொள்ளவைத்தவாறு காண்க. பகை நொதுமல் நட்பென் னும் மூன்றும், குறித்த நயம் தெரிக.

ஓர்யான் என்ற கணக்கீடும் துஞ்சுவாரைக் கணக்கிட்டுக் கழித் துணர்ந்ததாதல் காணலாம். துஞ்சாதாரைக் கணக்கிட்டு நனந் தலையுலகத்து யானொருத்தியே துயிலாதேன் என்றது காண்க. யாமம் நள்ளென்றன்றே அஃதோர்கின்றேன்யானே மன்ற துஞ்சா தேன் எனக் கூறினும் அமையும். ஓர்யான் ஈண்டு வினைத்தொகை.

இப்பாடலை அவன்வயிற் பரத்தைமைக்கு உதாரணம் காட்டு வர் இளம்பூரணர் (தொல். களவு. 20). ஈண்டுப் பரத்தைமை என்பது அயன்மை என்பர் நச்சினார்க்கினியர். துஞ்சாதேற்கு உறுதுணையாகத் தலைவர் வந்திலர் தன் அயன்மையால் என்பது அவர்க்குக் கருத்தாகக் கொள்க.

இங்ஙனமன்றிப் பரத்தைமை தலைவற்குக் களவிற் கூறுதல் புலத்துறையன்மை யுணர்க.

## பெரும்பதுமனார்

(7) வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலன சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே.

எ-து. செலவின்கண் இடைச் சுரத்துக் கண்டோர் கூறியது.

(வி) வில்லோன்—கையில் வில்லுடையவன். காலன கழலே—காலிலணிந்தன கழல்களேயாம். தலைவன் முன்னர் நெறிகாட்டிச் சேறலான் முற்கூறினார் வில்லோன் காத்துச்சேறல் குறித்து. "கழற்கால் மின்னொளிர் நெடுவேல் இளையோன் முன்னுறப் பன்மலை யருஞ்சுரம் போகிய தனக்கு" (அகம். 203) என்றார்.

தொடியோள் - கையில் வளையலுடையவள்; உடன் செல்லுதலான் வளைகழலாமை குறித்தது. மெல்லடி மேலன சிலம்பே—மெல்லியவடிகளின் மேலுள்ளன சிலம்புகளேயாம். தலைவி காலினை மெல்லடி என்றதனாற் றலைவன் கால்வலிய என்பது குறித்தார். வில்லுக்கும், தொடிக்கும் ஏற்ப உறுப்புக்கள் கொள்ளப்பட்டன. கழல்கள் வீரக்குடிபற்றியும் வென்றிபற்றியும் அணிந்தன. பகைவரை வென்று அவர் தலைவடிவு பதித்தகழல் இடக்காலினும், தங்குடிக்குரியகழல் வலக்காலினும் அணிவர். இவ்வழக்கினை "வீரதண்டை சேமத் தலைவிளங்கு மிடதாளினான்" எனத் தமிழ் மறவர் தலைவராகிய சேதுவேந்தர் விருதுகளில் வழங்குதல் காணலாம். இக்கருத்திற்கியையவே புறப்பாட்டுரைகாரர் "காலன புனைகழல்" (புறம். 100) என்புழி வீரத்திற்கும், வென்றிக்கும் கட்டின என்பர் காண்க. பாலையில் நடத்தலாற்றாவடி என்பது கருதி மெல்லடி என்றார். இருவரும் நடத்தற்கு உரியரல்லாது தேரூர்ந்து சேறற்குத் தக்கவர் என்பது கருதிக் கூறினாரென்பதுமாம். "கடுங்கட் காளையொடு நெடுந்தே ரேறி.........வேறுபல் லருஞ்சுர மிறந்தன ளவளென" (ஐங். 385) என வருதலானிஃதுணர்க.

நல்லோர்—குடியினும், வாழ்க்கையினும் நன்மை நிரம்பினோர். யார்கொல்—எவ்வினை மேற்கொண்டவரோ; தொடியோள் கால்களிற் சிலம்பு கழித்தன இன்மையால் மணமகனும் மணமகளும் ஆகத்துணியப்படாமைபற்றி என்ன உறவினராவரோ என்றாரெனினுமமையும். நல்லோர் யார்கொல் என்புழி—யார் வினா வினைக்குறிப்புச் சொல்லாதலான் இங்ஙனம் கூறப்பட்டது. இவர் அழுவம்முன்னிய நல்லோர் ஆதலான் நம் அளிக்கு உரியர் என்றார்.

ஆரியர்—ஆரியநாட்டிற் கூத்தர். கயிறாடு பறையின்—கயிற்றில் ஆடுதற்குக் காரணமாக ஒலிக்கும் பறையைப்போல; வாகை வெண்ணெற்றுக் கால்பொரக் கலங்கி ஒலிக்கும் அழுவம். கால்பொர-காற்றுமோத. கலங்கி ஒலிக்கும் அழுவம்—நிலை பெயர்ந்து ஒலிக்கும் பரப்பு. இடருற்றார் கூவியழைப்பினுங் கேளாதபடி வெண்ணெற்றொலிக்கும் பரப்பு எ-று. வேய்பயிலழுவம்—புகுதற்கும் நடத்தற்கும் இடையீடாகிய முள்ளுடை மூங்கிற் றூறுகள் செறிந்த பரப்பு. அழுவம் முன்னியோர்—பரப்பிற் செல்ல நினைத்தவர். வேய்பயிலழுவம்—தம்முள் உரிஞித் தீப்பற்றுதற்குக் காரணமாக வேய்செறிந்த பரப்பு என இதுவும் அதன் கொடுமை குறித்தது என்பது பொருந்தும். "அலங்குகழை நரலத்தாக்கி விலங்கெழுந்து, கடவளியுருத்திய கொடிவிடு கூரெரி" (அகம். 47) என்பதும் காண்க. அழுவம்—பரப்பு. 'பெருநீரழுவத்து' (அகம். 20) 'முள்ளுடை மூங்கில்' (ஐந்திணை-36-70) என்ப.

காலனகழல், மேலன சிலம்பு, முன்னியோர் நல்லோர் யார்கொல் அளியர் என்க. வில்லோன் காலிற் கழலும், தொடியோள் அடியிற் சிலம்பும் ஒலிப்பச் செல்கின்றார். அவ்வொலி கேளாமல் வாகை வெண்ணெற்றொலிக்கும் அழுவம் எனச் செவிலிக்குக் குறிப்பாற்கண்டோர் உணர்த்தினரென்க. வில்லோன் தொடியோள் எனத் தனித்தனி கூறியவர் நல்லோர் என இருவரையுஞ் சேரக் கூறியதனால் இருவருந்தாமுன்செய்த நன்மையாற் சேர்ந்து செல்லுதல் கருதினார் என்பதும் ஆம். யார்கொல்—நினக்கு என்ன உறவினர் எனச் செவிலியை வினாவியதாகவுங் கொள்க. வாகை வெண்ணெற் றொலிக்கும் அழுவம் இனிதாக

முன்னியோர் யார்கொல் என்று கொண்டு ஊரில் அயலார் அலர் ஒலிக்க இருப்பது வெறுத்தவரோ எனக் கருதினரென்பதுமாம்.

அழுவத்துக் காலிற் கழலும், சிலம்பும் ஒலிக்கப் புகும் இந் நல்லோரைக் கண்டு கலங்கி அறிவில்லாத வாகை வெண்ணெற் றும் ஒலித்தல் சாடுவாற் கொள்ளவைத்தது, கண்டோர் இரக்கம் புலப்பட என்க.

இது பெரும்பதுமனர் பாடலாதலிற் பதுமனர் பாட்டிற்கு மேல் வைத்தார் போலும்.

---

## ஆலங்குடி வங்கனர்

(8) கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே.

எ-து. கிழத்தி, தன்னைப் புறனுரைத்தாளெனக் கேட்ட காதற் பரத்தை அவட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

(வி) கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்—வயல் வரப்பி னுள்ள மாமரத்து விளைந்து தானே உகும் தீம்பழத்தை. பழன வாளை கதூஉம் ஊரன்—பக்கத்துப் பொதுவாகிய நீர்நிலைச்செறு வின் வாளை மீன் பற்றும் ஊரன்; என்றதனல் மாமரம் வைத்து வளர்த்துப் போற்றுவார்க்கல்லாது ஒரு முயற்சியுமின்றிப் பக்கத் துப் பொதுவாகிய பழனத்துள்ள வாளைக்கும் வருந்தாமல் எளி திற் பயன் துய்க்க வாயினற் போல, தலைவன் தன்னைப்பேணும் தலைவிக்கல்லாமல் பரத்தைக்கும் வருந்தாமல் நலன் துய்க்கவாயி னன் என்பது குறித்ததாம். ஊரன்—மருத நிலத்தூர் உடைய தலைவன். மாஅத்துத்தீம்பழம் கூறியதனல் மருதத்து முது வேனில் வந்ததாகக் கொள்வர்.

எம் இல் பெருமொழிகூறி—எம்மனையில் எம்மைப் பெருமைப்படுத்தும் மொழிகளைச் சொல்லிவிட்டு. பெருமொழி—சிறு சொற்கெதிராய புகழ்ச்சியுமாகும். எம் இல் என்றாள் தலைவன் எத்தனைப் பெருமொழி கூறினும் பரத்தையர் மனை அவனதாகாது தம் மனையே ஆதல் கருதி. 'மைவிழியார் மனையகல்' ஆத்திசூடி. தம்மில் எனமேல் வருதலால் இவ்வுண்மை புலப்படும். தம் இல்—தம்மனைக்கண்; தலைவி இல்லாளாதலின் அவளையும் உளப்படுத்திக் கூறினாள்.

தன் புதல்வன் தாய்க்கே ஆடிப்பாவை போல மேவனசெய்யும்—தனக்கு மகனைப்பெற்று அவற்குத் தாயாயினாளுக்கே கண்ணாடியின் நிழற் பாவைபோல அவள் விரும்பியன செய்வான். புதல்வனைப் பேணுதற்குரியளன்றி, இன்பத்திற்குரியளல்லள் என்பது குறித்துத் தலைவியைத் தன் மகன் தாய் என்றாள்.

தூக்கத் தூக்கும் ஆடிப்பாவைபோல—உணர்ச்சியில்லாது தலைவி ஏவிய தொழில் செய்வான் என இகழ்ந்தாளாம்.

காமக் கிழத்தியர் தலைவனை இகழ்ந்தது என இப்பாட்டை இளம்பூரணர் கொள்ளுதல் காண்க (தொல். கற்பு. 10).

இனி எம்மனைக்கண் தனக்கின்பஞ்செய்தற்குரிய எம்மைத் தொழில் கொள்ளல் வேண்டித் தன் பெருமொழிகளைச் சொல்லிவிட்டுத் தம் மனைக்கண் தனக்கின்பந்துய்த்தற்குதவாத புதல்வன் தாய்க்கு அவளிட்டதொழிலை உணர்ச்சியின்றிச் செய்வன் என இகழ்ந்தாளெனினும் அமையும்.

கையுங் காலும் கூறினாள் இருந்தும் நடந்தும் செய்யுந் தொழிலெல்லாம் குறித்து. தன் புதல்வன் என்றது இம்மனைக்கண் தான் பெறும்மகவு அவன் மகவெனப் படாமை குறித்தது. இவ்வுண்மை நற்றிணையில் தலைவி "யாண ரூரநின் மாணிழை மகளிரை, யெம்மனைத் தந்துநீ தழீஇயினு மவர்தம், புன்மனத் துண்மையோ வரிதே யவரும், பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து, நன்றி சான்ற கற்போ, டெம்பா டாத லதனினு மரிதே" (நற். 330) எனக் கூறுதலான் அறியப்படும்.

பழனவாளை கதூஉம் என்றதனால் கழனிக்கும் பழனத்திற்குமிடையே மாமர முண்மை உணரலாம். விளைந்துகுதீம்பழம்

பழனவாளை கதூஉம் ஊரன் என்று தலைவியர்க்குரிய தலைவரைக் கிடைத்தபோது துய்ப்பது பரத்தையர் இயல்பென்று குறித்தாளாம்.

---

## கயமனார்

9. யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு னாணிக் கரப்பா டும்மே.

எ-து. தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

(வி) யாயாகியள்—என் தாய் ஆயினள், குற்றம் பொறுத்துரையாடும் சிறப்பால் யாய் ஆயினள் என்றாள். இது தோழி கூற்றெனத் துறைகூறுதலின் என் தாய் என்பது செவிலியை எனக்கொள்க. மாயோள் இளையளாயினும் அறிந்தொழுகும் வன்மையால் தன்னைவளர்த்த என்தாயாயினள் என்றாள். "தோழி தானே செவிலிமகளே" (தொல். களவு. 34) என்பது காண்க.

தலைவியையாய் என்றது புலத்தற்குக் காரணமாயின தலைவன்கண் உளவாகவும், அவை மனங்கொள்ளாத சிறப்பை நோக்கி என ஐங்குறு நூற்றுரைகாரர் கூறுவர் (ஐங். 1.) "தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார், இகழினும் கேள்வரை யேத்தியிறைஞ்சுவார்" (பரிபா. 20) என வரும் பரிபாடலடிகளான் இவ்வியல்புணர்க.

மாயோள் இளமைக்கு இயல்பாகிய மாமை நிறமுடையள். இவ்விளையள் முதுநிலையில் உள்ள யாய் ஆயினள் எ-று.

மடைமாண் செப்பின்—பொருத்துவாய் மாண்ட செப்பின்கண். தமியவைகிய—தனித்தனவாய் நாட்கழிந்த. பெய்யாப்

பூவின்— ஒருவர் சூடாத மலர்களைப்போல. மெய்சாயினள்— உடல்வாடினள்.

தமிய என்றது கொடியினுமின்றிச் சூடுவார் குழலினுமின்றி மூடிய செப்பிற்றனித்தனவாதல்பற்றி.

ஒவ்வாக் கானத்துயர்மரம் பூத்த பூவும் ஒருவர் சூடாமற் கழியுமாதலான் அவற்றை விலக்கற்குச் சூடவேண்டிப் பறிக்கப் பட்டு மணம் காற்றுக்கொண்டொழியாது மடைமாண் செப்பிற் பாதுகாக்கப்பெற்றபூ என்றாள். பூ மகளிர் நலத்திற்குவமையாதல், 'வள்ளிப்பூநயந்தோயே' எனவரும் (14) பரிபாடலானுணர்க.

பாசடை—பசியஇலை. நிவந்த—உயர்ந்த. கணைக்கால்— திரட்சியையுடைய தண்டு. நெய்தல்—நீலமலர்.

இனமீன்களையுடைய பெரியகழியின்கண் வெள்ளம் பெருகு தோறும், கயமூழ்கு மகளிரின் கண்களின் வேறாய், இவையுங் கண் கள் என்ன ஒக்கும் தண்ணந்துறைவன் என்க.

பேராசிரியர் 'அவை தாமன்ன' என்னும் (தொல். உவ. 11) உவமவியற் சூத்திரவுரைக்கண் இவ்வடியை எடுத்தோதி ஈண்டு "இன் வேற்றுமையும் உவம உருபோடு வந்தது" எனக்கூறுதலான் இங்ஙனம் உரைக்கப்பட்டது.

'தீயினன்னவொண் செங்காந்தள்' (மலைபடு. 145) என்புழி நச்சினார்க்கினியர் கொண்டாற்போல இன்சாரியை என அவர் கொள்ளாமை காண்க.

பேராசிரியர் "அன்ன, ஆங்கு, மான—வினைப்பாலுவமம்" (தொல். உவ. 12) என்பதற்கு இதனை எடுத்துக்காட்டலான் கய மூழ்கு மகளிர் கண்கள் மூழ்கும்போது இதழ் குவிந்து எழும் போது விழித்தல்போல ஓதம் மல்குதொறும் இதழ் குவிந்து ஓதம் வற்று தொறும் மலர்ந்து அவர் கண்ணெனக் காட்டும். எ-று.

மல்குதொறும் என்றதனால் வற்றுதலும் உடன் கூறினாராத லுணர்க. தண்ணந்துறைவன் கண்களல்லாத நெய்தல்களை இவை யும் கண்கள் என்று வேறுசொல்ல ஒக்கும் துறையையுடையவன் ஆதலால் தன் கண்ணாகிய தலைவியல்லாத பரத்தையைக் கண்டார் இவற்கு இவளும் கண்ணாவாள் எனப் பேணி ஒழுகுபவன் என்று

அவன் தலைவியைப் பேணுதொழுகுதலைக் குறித்தாள். கொடுமை-தன்னைப்பேணுமையேயன்றிப் பரத்தையைக் கண்ணுகப் பேணும் கொடுமை.

நம்முன் நாணி—வாயிலாகப் புக்க நம்முன்னர்க் காட்டற்கு நாணுற்று. கரப்பு ஆடும்—அவன் கொடுமை கரத்தலுடன் உரையாடுவாள். இது பொறுத்து வாயில் நேர்தலால் மாயோள் யாய் ஆயினள் எ-று.

இது வாயிலாகப் புக்காருட் பாடினிபாணற்கு உரைத்தது என்று கருதுவர் (தொல். செய். 201, பேர்) (நச். 199). அங்ஙனமாயின் மாயோள் இளமையிலே அறிவு முதிர்ந்து தாயின் தன்மையை எய்தினள் என்க.

இனி நெய்தலும் இன மீனும், கண்ணின் மானும் என்றலும் இழுக்காது. நெய்தலுள்ளுழி மீனுமிருத்தல் "நெய்தலிருங்கழி நெய்தனீக்கி மீனுண்குருகு" (ஐங். 184) என வருதலால் அறிக. ஈண்டு மீன்கண்ணிற்குவமையாதல் "குளித்துப் பொரு கயலிற் கண்பனிமல்க" (அகம். 313) என்புழிக் காண்க. ஓதம் மல்குதல் கூறியதனால் மாலைப்போதென்றும் அப்போது நெய்தல் மலருமென்றும் அம்மல்கிய நீரால் மீனினம் நெய்தல் மருங்கு அடையும் என்றும் கொள்க. "இனமீ னார்ந்த வெண்குருகு மிதித்த, அறுநீர் நெய்தல்" (நற்றிணை. 183) என்பதுங் காண்க.

---

## ஓரம்போகியார்

10. யாயா கியளே விழவுமுத லாட்டி
பயறுபோ லிணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னாணிய வருமே.

எ-து. தலைமகற்குத் தோழி வாயில்நேர்ந்தது.

(வி) விழவு முதலாட்டி—தலைவன் விழவிற்கு முதன்மையை ஆளும் இயல்பினள். பயறுபோலிணர பைந்தாது படீஇ

யர்-பயற்றங்காய்போன்ற பூங்கொத்துக்களிலுள்ள பசிய தாதுக்கள் படும்படி : தம்மேனியினும் உழுபகட்டினும் உழுநிலத்தினும் படுமாறு. உழவர் வாங்கிய—உழுபவர் வளைத்த. கமழ்பூ மென் சினைக்காஞ்சியூரன்-மணக்கின்ற மலர்களையுடைய மென்கொம்புகளுள்ள காஞ்சிமரங்களையுடைய மருதநிலத்தூர்த் தலைவன். "கோதை தொடுத்த நாட்சினைக்குறுங்காற்காஞ்சி" (சிறுபாண் 178) என்புழி நச்சினார்க்கினியர் மாலை கட்டினாற்போல இடையறாமற் றொடுத்த நறிய பூக்களுடைமை இதற்குக் கூறுதல் காண்க. வயல் வரப்புகளிலுள்ள காஞ்சி மரங்களை உழுபவர் வளைத்து விட்ட அளவிலே அவை தம் மேனியிலும் உழுபகட்டிலும் உழுநிலத்திலும் கமழ்தாதுதிர்த்து இன்பஞ்செய்தல் குறித்ததாம். இம்மரத்தைப் பல்லிடத்தும் குறுங்காற்காஞ்சி என்றலால் இஃது எளிதிலெட்டி வளைத்தற்காவதும் நினைக. "காஞ்சித் தாதுக் கன்ன தாதெருமன்றத்து" (முல்லைக்கலி. 8) என்பதன்கண் தாதெருவிற்கு உவமிக்கப்பட்டதனால் இதன் தாதுக்கள் சிறந்த எருவாதற்பொருட்டு வளைத்துவிட்டனர் என்பதும் பொருந்தும். வயல் வரப்புக்களில் இவற்றை வைத்துப் போற்றுதலும் இது கருதியாகும். உழவர் தம் மேனியிலும் தம் உழுபகட்டினும் தாது படிந்து தாம் உழுநிலத்துக் காஞ்சிமரங்களை வளைத்த செயல் தோன்ற வந்தாற்போலத் தலைவனும் அவன்றன்பாணனும் பரத்தையரை வளைத்துச் சேரியினிகழ்த்தியன மனையிற்றலைவி காண வந்துநின்றது கருதிற்று. உழவன்றலைவனாகவும், உழுபகடு பாணனாகவும், உழுநிலஞ்சேரியாகவும் காஞ்சிமரங்கள் பரத்தையராகவுங் கொள்க. ஊரன்கொடுமை என்பது விழவுமுதலாட்டிதானாகவும் அவளை மகிழ்வித்து மகிழாது அவளுள்ளம் வருந்தத் தனி வைத்துப் பரத்தையரை வளைத்து வளைத்து மகிழ்ந்து ஆண்டுச் செய்தனகாண விழவுடன் மனைக்கண் வருந்தன்மை. நீ செய்யுங் கொடுமையை நீகாண வெளிக்காட்டாது தன்னுள்ளத்தே ஒளித்தனளாதலுடன் நீ நாணியவருவாள் என்றாள். ஊரன் தன் கொடுமைக்குத் தான் நாணுமாறு விரைந்து எதிர்கொண்டு வருவாள் எ-று. முன்னைப் பாட்டோடு இயைபு காண்க. "பந்தொடு பெயரும் பரிவிலாட்டி" (நற்றிணை. 140) என்புழிப்பரிவின்மையை ஆளுபவள் என்பதுபோல முதலாட்டி முதன்மையை ஆள்பவள் என வந்தது. "குடமலையாட்டி" (சிலப். வேட்டுவவரி) என்புழிக் காண்க.

---

## மாமூலனார்

11. கோடீ ரிலங்குவளை ஞெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
யீங்கிவ ணுறைதலு முய்குவ மாங்கே
யெழுவினி வாழியென் னெஞ்சே முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசி னவருடை நாட்டே.

எ-து. தலைமகள் தன்னெஞ்சிற்குச் சொல்லுவாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது.

(வி) கோடு ஈர்வளை—சங்கினை யீர்ந்தவளையல். இலங்கு வளை—முன்கையின் விளங்கும் வளையல். ஞெகிழ—கையி னின்று நெகிழாநிற்க. நாள்தொறும்—வரைவிடை வைக்கும் ஒவ்வொரு தினமும். பாடில கலிழுங் கண்ணொடு—துயிறல் இல் லனவாய் அழுநீர் ஒழுகுங் கண்களுடன். புலம்பி—தனிமையின் வருந்தி. ஈங்கு இவண் உறைதலும்—இவ்விடத்து இப்படித் தங்குதலையும். உய்குவம்—தப்புவேம். என் நெஞ்சே—என் மனமே. வாழி-வாழ்வாயாக. இனி அவருடை நாட்டே முனாஅது எழு—இப்போது அவருடைய நாட்டிற்கே முற்பட எழுந்து செல்வாயாக. குல்லைக் கண்ணி வடுகர் முனையது—கஞ்சங் குல்லையைத் தலையிற் சூடுங் கண்ணியாகவுடைய வடுகர்க்குரிய பகைப்புலத்ததாய. பல்வேற்கட்டி நன்னாட்டும்பர்—பலவேற் படையையுடைய கட்டி என்பானுடைய நல்ல நாட்டிற்கு அப் பால். மொழிபெயர் தேஎத்தராயினும்—அவர் நம்மொழி மாறிய தேயத்துள்ளவராயினும். ஆங்கே வழிபடல் சூழ்ந்திசின்—அவ் விடத்திற்கே நின்னைப் பின்னைப்பற்றி வருதலைத் துணிந்துள் ளேன். எ-று. நெஞ்சே முனாஅதெழு வழிபடல் சூழ்ந்திசின் என்க. வழிபடல்—பின்பற்றல் 'வழிபடுதல் வல்லுதலல்லால்' (நாலடி. 309).

இப்பாட்டை இளம்பூரணர் களவென்னுங் கைகோளிற் கொண்டு "காமக்கிழவ னுள்வழிப்படுதற்கு" (தொல். கள. 22)

உதாரணங் காட்டுநலான் இது தலைவர் வரைவிடை வைத்துப் பிரிந்தவழி அவர் யாண்டுளராயினுமாக அவருள்வழிப்படுவல் நீ முனைஅநெழு என்று தன்னெஞ்சிற்குக் கூறியதாக வுரைக்கப் பட்டது ; மொழிபெயர்தேஎத்தராயினும் என்றது தலைவர் அத் தேயத்தரல்லாமை தோற்றி நின்றது. யாண்டுளராயினும் வழிப்படுவல் என்று தன் ஆதரந்தோன்றக் கூறியதாம். பகைப் புலமும் மொழிபெயர்தேயமும் தான் செல்லற்குரியன அல்லாமை காட்டிநின்றன : கட்டி நன்னாட்டும்பர் வடுகர் முனையது மொழி பெயர்தேஎத்தராயினும் என இயைத்துரைக்க. இதனாற்கட்டி நன்னாடு வடுகர் முனைக்கு இப்பாற்றமிழகத் துண்மை துணியப் படும். கட்டி, சேரன் படைத்தலைவருளொருவனென்பது 'கங்கன் கட்டி' (44) எனவரும் அகப்பாட்டானறிந்தது : இவன் பாணன் என்பவனைத் துணைக்கொண்டு உறையூரிற்றித்தனொடு பொரவந்து அவன் நாளவையிற் கிணைப்பறை யொலிகேட்டஞ்சிப் பொரா தோடினன் என்பது, (226) அகப்பாட்டிற் கண்டது. இவன் கங்கர் குடியினனாகிய கங்கனின் வேறுதல் 'கங்கன் கட்டி' என் பதனானும்'பங்களர்கங்கர் கட்டியர்' எனச் சிலப்பதிகாரக் காட்சிக் காதையிற் கூறுதலானும் துணியலாம்.

ஈங்கிவணுறைதலும் உய்குவம் என்பது வளைநெகிழ்தலும் கண் கலிழ்தலுங்கண்டு அன்னை இடித்துரைக்கவும் ஊரலர்தூற் றவும் நெஞ்சே நீயும் யானும் இங்கு இப்படி வருந்திவதிவதும் தப்புவேம் என்றதாம். இவண்—இவ்வாறு. கட்டி நன்னாடேன் றது—பகைப்புலமாகாமையும் மொழிபெயராமையும் பற்றியென்று கொள்க. கட்டியைப்பாடியவர் இம்மாமூலனாரும் பரணரும் (அகம். 226) குடவாயிற் கீரத்தனாரும் (அகம். 44) ஆவர் : இரா சத்தானத்துக் கட்டிஎனப் பெயரிய பெருங்குதிரைவீரர் பண்டு தொட்டு இன்று முள்ளனர் : வடுகர் முனையது மொழிபெயர்தே எத்தராயினும் என்றது தலைவியது ஆண்மையும் உணர்வும் குறித்து நின்றதெனின் நன்கு பொருந்தும் : தலைவற்குந் தலை விக்குங்கூறிய ஒப்பின் வகையுள் ஆண்மையும் உணர்வும் உண்மை கண்டுகொள்க. 'கலிழுமங்கண்' என்பதூஉம் பாடம்.

## ஓதலாந்தையார்

12\. எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்கும்
கவலைத் தென்பவவர் சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கழறுமிவ் வழுங்க லூரே.

எ-து. ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

(வி) எறும்பி அளையின்—ஆண்டுள்ள எறும்பின் புற்றை யொத்த. குறும்பல் சுனையபாறை—குறிய பலவாகிய சுனைகளை யுடைய பாறை. அளை—புற்று. 'அளையுறை பாம்பும்' என்பது ஆசாரக்கோவை (84). "நுண்பல் லெறும்பு கொண்டளைச் செறித்த, வித்தா வல்சி வீங்குசிலை மறவர்" (அகம். 377) என்பதனால் இவருணவு ஆண்டு எறும்புகள் அளைச்செறித்த புல்லரிசியே யாதல்பற்றிக் கூறினர். இனி எறும்பி அளையினையுடைய குறும்பின்கண் அல்சுனைய பாறையேறி எயினர் பகழி மாய்க்குங் கவலைத்து என்பதுமாம். அல்சுனை என்பது சுனையல்லாத சுனை எ—று; வறுஞ்சுனை என்பது கருத்து. வழியல்லாத வழியை அல்வழி என்பது போலக்கொள்க. வறுஞ்சுனையுடைமையால் உலைக்கல் அன்னபாறை என்பது கருத்தாதல் காண்க. நீருள்ள சுனைய பாறையை வெம்மைபற்றி உலைக்கல்லோடு உவமிப்பது சிறந்ததன்று. சுனையபாறை எனவும், உலைக்கலன்ன பாறை எனவுங் கொள்க. குறும்பு—சிற்றரண்; "கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்" (அகம். 87) என்பது காண்க. கல்கெழு குறும்பாதலாற் குறும்பின்கட்பாறையேறி என்றார். கொடுவில் எயினர்—கொடிய வில்வேடர். கொடுமை வளைவுமாம். உலைக்கல்—உலையின் அடைகல்; "கொல்லன், விசைத்தெறி கூடமொடு பொரூஉம், உலைக்கலன்ன வல்லாளன்னே" (புறம். 170) என்புழிக் காண்க. பாறையேறிப் பகழிமாய்க்குங் கவலைத்து—பாறையிலேறிச் சேய்மைக்கண் வழிவருவாரைத் தெரிந்து அவரைக் கொல்லற்குக் கொடுவில்லெயினர் தம் அம்புகளைத் தேய்த்துக் கூர்மையாக்குதற்குக் காரணமான கவர்த்தவழிகளை

யுடைத்து, அவர் சென்ற ஆறு என்ப என்க. மாய்த்தல்—தேய்த்துத் தீட்டுதல்—" கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென, மருங்குனுணுகிய பேஎமுதிர் நடுகல்" (அகம். 297) என்பது காண்க. மற்று அது அவலங் கொள்ளாது—என்போல அது பற்றி வருத்தங் கொள்ளாது. இவ்வழுங்கலூர்—என் வருத்தத்தைத்தவிர்த்தல் செய்யும் இவ்வூர். நொதுமற்கழறும்—என்னை அயன்மையின்வைத் திடித்துரைக்கும் எ—று. ஊர்—ஈண்டுத்தோழி. இவள் என்னோடொருபடியாயுள்ளவள் என்போல அவர் சென்ற ஆறு கவலைத்தென்று அவலங்கொள்ளாது என்னின் வேறாய் என்னை அயன்மையில் வைத்துக் கழறுவாள் என்றாளென்க. அது—ஆற்றின் கொடுமை என்பதுமாம். ஆறு கவலைத்தென்ப என்றதனால், தான் கேட்ட ஆற்றின் கொடுமை தோழியும் அறிந்ததேயாம், அது தெரிந்தும் அவலங் கொள்ளாது கழறுவாள் எ—று. அவர் பிரிவினும் அவர் சென்ற ஆற்றின் கொடுமை பற்றி அவலங்கொள்வல் என்பது கருத்து. அழுங்கல்—தவிர்த்தல் 'செலவழுங்குதல்' என்பதனானுணர்க. அவர் சென்ற ஆற்றில் உணவளிப்பது எறும்பியளை, நீர் தருவது அறுநீர்ச்சுனை, உறைவிடம் உலைக்கலன்ன பாறை, வாழ்வோர் பகழிமாய்க்குங் கொடுவில் எயினர் என அவர் சென்ற ஆற்றின் இடையூறெல்லாந் தெரியக் கூறினாளாகக் கொள்க.

கவலைத் தென்ப என்றது "கானுயர் மருங்கியற் கவலையல்லது, வானம் வேண்டா வில்லே ருழவர்" (அகம். 193) என்பது கொண்டு. "அஞ்சுவரு மரபின் வெஞ்சுர மிறந்தோர், நோயிலர் பெயர்த லறியின், ஆழல மன்னே தோழியென் கண்ணே" (அகம். 375) என்பதனாற் றலைவர் அருஞ்சுரத்து நோயிலராகப் பெயர்தல் தலைவிகருத்தாதல் அறியலாம்.

---

## கபிலர்

13\. மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகற்
பைத லொருதலைச் சேக்கு நாட
னெய்தந் தனனே தோழி
பயலை யார்ந்தன குவளையங் கண்ணே.

எ-து. தலைவன் தோழியிற் கூட்டங்கூடி ஆற்றும் வகையான் ஆற்றுவித்துப் பிரிய வேறுபட்டகிழத்தி தோழிக்குரைத்தது.

(வி) மாசறக் கழீஇய யானை போல—அழுக்கறக் கழுவிய யானையைப்போல. பெயலுழந்த துறுகல்லின் குளிர்ச்சியையுடைய ஒருபக்கத்து என்னுடன் தங்கும் நாடன், அருகினின்றொழியத் தொடங்கினன், தோழி என் குவளையங்கண்கள் உடனே பயலையார்ந்தன எ-று.

பைதல் குளிர்ச்சிக்காதல் "பனிப்படு பைதல் விதலைப் பருவத்து" (11 அடி. 75) எனவரும் பரிபாட்டடியிற் பரிமேழலகர் கூறியதனான் அறிக. துறுகல் மனைவியுள்ள மனைப்படப்பையிற் சிறுபாறை; "துறுகனண்ணிய கறியிவர் படப்பைக் குறியிறைக் குரம்பை நம்மனை" (அகம். 272) என்பதனான் இஃதறிக. இதன் பக்கத்துக் குளிர்ச்சியையுடைய ஓரிடத்துத் தோழியிற் கூட்டங் கூடிப்பிரிய வேறுபட்ட கிழத்தி என்க. களவில் இங்ஙனம் பாறைப்பக்கத்துத் தலைவன்வந்து தலைவியைத் தழுவிப் பிரிதல் உண்டென்பது,

"மழை பொழிந்த பாறை மருங்கிற்
சிரல்வா யுற்ற தளவிற் பாலவற்
கான்கெழு நாடற் படர்ந்தோர்க்குக்
கண்ணும் படுமோ" (நற். 61)

எனவும், "துறுக னண்ணிய கறியிவர் படப்பை..................
...........நம் மனைவயிற் புகுதரு, மெய்ம்மலி யுவகையன்"
(அகம். 272)

எனவும் வருவன கண்டுணர்க. பெரும்பெயல் உழந்ததனாற் பைதல் ஒருதலை என்றார். சேக்கும் நாடன் ஒய்தந்தனன்—உடன் தங்கும் தலைவன் என்னினின்று ஒழியத் தலைப்பட்டனன். ஒய்தருதல்-நெருங்காது ஒழிதல். அடியார்க்கு நல்லார் "ஒய்யென—நெருங்காதொழியென" (சிலப். அடைக்கல-48) எனக்கூறுதலான் உணர்க. ஒய்தருதல் கண்ணிற்றப்புதல் என்பதும் பொருந்தும். பரிபாடலில் "ஒய்யப்போவாள்" (20. அடி 41) என்பதற்குப் பரிமேலழகர் காணுமற்றப்பப் போகின்ற பரத்தையை என உரை கூறி

யதனுன் உணர்க. அவன் கண்ணிற்றப்பிய அளவே கண்பசந்தன வாக அவன் வருமளவும் யாங்ஙனம் ஆற்றுவல் என்று சிறிதும் பிரிவாற்றமாட்டாத தன் மென்மை புலப்படுத்தியவாறு. இஃது "உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென், மேனி பசப்பூர் வது" (குறள்-1185) என்பது போன்றது. இக்குறளிற் போலப் பிரிந்த இட அணிமையும் கால அணிமையுந் தோன்றச் சேக்கும் நாடன் ஒய்தந்தனன் என்றாள் என்க. இனி, ஒருதலைச் சேக்கு நாடன் என்னைச் செல்லச் செலுத்தினன், அந்நிலையிலே கண்கள் பயலை யார்ந்தன என்பதுமாம். ஒய்தல்—செலுத்துதல், "ஒய்யு நீர்வழிக்கரும்பினும்" (பதிற். 87) எனவும், "கிளையுளொய் வலோ" (புறம். 253) எனவும் வருவனவற்றான் உணர்க. தனியே நாடன் எனத்தலைவனைக் கூறுதல் "நாடன், தான்குறி வாயாத் தப்பற்கு" (குறுந். 121) எனவும், "அறிதற் கமையா நாடனொடு" (குறுந். 377) எனவும் வருமிடங்களிற் கண்டுகொள்க. பயலை என்ற வழக்கு "செயலையந் தளிரேய்க்கும் எழினல மந்நலம், பயலையா லுணப்பட்டு" (பாலைக்கலி. 14) என்பதனாலறிக. பைதல் ஒருதலை என்பதற்கு எதுகையாக ஒய்தந்தனனே என வந்ததனு லும் இதுவே பாடமாகப் படிக்கவேண்டுவது உணரலாம். பயலை என்பதற்கு ஈற்றடியிற் குவளையென்பது இனவெதுகையாக வந் தது. சேக்குநாடனைப் பார்த்து மகிழ்ந்தன ஆதலாற் குவளையங் கண் என்றார். பார்வையிற்றப்பவும் பயலை யார்ந்தன என்றாள். இதுவே பிரிய வேறுபட்டவாறு கூறியதாதல் காண்க. இது "சிறிதுநீ, தணக்குங்காற் கலுழ்பானுக் கண்" (பாலைக்கலி. 24) என்பதுபோல வந்தது. நான் மறப்பினும் என் கண்கள் களவு புலப்படும் வண்ணம் பயலையார்ந்தன என்றாள். நோய்தந்தனனே என்று பாடங்கொண்டாரும் உண்டு.

"துயங்குபட ரகல முயங்கித் தோண்மணந்
தின்சொ லளிஇப் பெயர்ந்தனன் றோழி
யின்றெவன் கொல்லோ கண்டிகு மற்றவன்
அல்கா மையி னம்ப லாகி
யொருங்குவந் துலக்கும் பண்பி
னிருஞ்சூ ழோதி யொண்ணுதற் பசப்பே" (அகம். 102)

என்பதனோடு ஒப்புநோக்கி உண்மையுணர்க.

## தோல்கபிலர்

14\. அமிழ்துபொதி செந்நா வஞ்ச நிவந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி
[யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே பெற்றாங்
கறிகதில் லம்மவிவ் வூரே மறுகி
னல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயா நாணுகஞ் சிறிதே.

எ-து. "மடன்மா கூறு மிடனுமா ருண்டே" (தொல். களவி. 11) என்பதனால் தோழி குறைமறுத்துழித் தலைமகன் மடலேறுவல் என்பதுபடச் சொல்லியது.

(வி) செந்நா அஞ்சுதற்குக் காரணம் இப்போது நிவந்த வையெயிறு எ-று. நிவந்த—எழுந்த. அமிழ்து பொதிவையெயிறு எனவும், அமிழ்து பொதி சின்மொழி எனவும் கூட்டுக. முதனிலை விளக்கு. தன் வாய்க்கும் காதிற்கும் இன்பஞ்செய்தல் காட்டியவாறு.

"முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக்
கள்ளினும் மகிழ்செயு மெனவுரைத்து மமையார்"
(கலித். 4)

எனவும், "அமிழ்தத் தன்ன வந்தீங் கிளவி" (குறுந். 206) எனவும் வருவனவற்றானுணர்க. "சில்சொற் பெருந்தோண் மகளிரும்......காப்பிகழ லாகாப் பொருள்" (திரிகடு. 47) எனக் குலமகளிர்க்குச் சிறப்பாகக் கூறுதலாற் சின்மொழியரிவையை என்றாள். தோழி இவ்விடத்துக் காவலர் கடியரெனச் சேட்படுத்தலாற்றலைவன் இது கூறுகின்றானாதலான் காப்பிகழாமைக்குக் காரணமும் உடன்கூறியவாறாம். யானே பெற்றாங்குப் பெறுகதில்—யானே களவில் இயற்கைப் புணர்ச்சியிற் பெற்றபடி பலரறிய மடன்மா ஏறுதலாற் பெறுவேனாக விரும்புவல். யானே என்றான் இயற்கைப் புணர்ச்சியுட்போலத் தோழி துணையின்றித் தானே பெறுதல்கருதி. இங்கே தோழியை விலக்குவது அவள் தன் குறைமறுத்துத் தன்னைச் சேட்படுத்ததனால் என்றுணர்க.

அச்சேட்படையான் மடலேறுவல் எனக் கூறுமிடனும் உண்டு. நச்சினார்க்கினியர் "தோழி நீக்கலினாகிய நிலைமையு நோக்கி மடன்மா கூறுமிடனுமா ருண்டே" (தொல். களவி. 11) என்புழி விளக்கியவாற்றான் இஃதறிக. பெற்றாங்கு இவ்வூரே யறிகதில் — யான் இயற்கைப் புணர்ச்சியிற்பெற்றபடி இதுகாறும் அறியாத இந்த ஊரே நல்லோள் கணவனிவனென அறிவதாக விரும்புவல். இவ்வாறு (நெய்தற்கலி. 24) மடன்மாமேல் மன்றம் படர்வித்த வள் என்றது காண்க. மறுகிற் பல்லோர் கூற—தெருவிற் பலர் கூறாநிற்க. யாம் சிறிது நாணுகம்—அந்நல்லோளும்யானும் சிறிது பொழுதைக்கு நாணுவோம். எ-று.

எல்லோரும் கூற என்னாது பல்லோர் கூற என்றது தோழி முன்னரே யறிந்ததுபற்றி என்க. இவனை மடன்மாமேல் ஏற்று வித்த நல்லோள் இவள் என்று "அவள்பழி நுவலு மிவ்வூர்" (குறுந். 173) என்பதனாற்றலைவியும் "வெள்ளென்பணிந்துபிற ரெள்ளத் தோன்றி" (குறுந். 182) என்பதனாற்றானும் நாணுதல் கருதிற்று. நாண்பெரிதேனும் அது சிறிது பொழுதைக்குத்தான் உள்ளதென்று சிறிதே என்றான். "பெருநாணீக்கி" (குறுந். 182) என வருதலான் நாணுதல் சிறிதாகாதென்க. மடன் மாவூர்ந்தவுடனே அவளை இவற்களித்தலான் நாணியிருக்கும் பொழுதே சிறிதாதல் துணிக. நல்லோள் கணவன் என்புழி நல் லோள் தலைவன் கையிலுள்ள கிழியில் ஓவிய வடிவில் அமைந் தவள் என்ப. இவன் நல்லோள் வடிவைக் கையிற் பிடித்தூரு மிவன். அறிகதில்லம்ம இவ்வூரே என்றதனால் இக்களவொழுக்கம் நல்லோள் கணவன் இவனென முன் அம்பலினும் அலரினும் மறைத்து மொழிந்த இவ்வூரே அறிக என்றும், இவ்வூர்ப்பல் லோரும் மறைத்து மொழிதற்குப் பெரும்போது நாணியிருந்த நாம், இப்போது மறுகிற் பல்லோர் வெளிப்படையாகக் கூறச் சிறிது போது நாணுவேம் என்றும் கூறினான் என்க. சிறு போது கூறியது மடலேறினால் விரைந்து மணநிகழ்தல் குறித்த தாம். நல்லோள் - இகழ்ச்சிக் குறிப்பு.

---

## ஔவையார்

15. பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
செயலை வெள்வேல் விடலையொடு
தொடுவளை முன்கை மடந்தை நட்பே.

*எ-து. உடன் போயின பின்றைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள்; நிற்பச் செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.*

(வி) மூதாலத்துத் தொல் பொதியில் என்க; பழைய ஆலமரத்துப் பழம் பொதியில் எ-று. நாம் அமைத்து வந்து தோன்றுவம் என்று சொற்றது பிழையாது இவ்வம்பலத்து மோகூர் மன்னற்குத் துணையாய் வந்து தோன்றிய நாலூரினராகிய கோசர் என்னும் ஒருவகை வீரருடைய பிழையாத நற்சொற்போல் விடலையொடு நம்மடந்தை நட்பு வாயாகின்று. விடலை—மறவன்; பாலை நிலத்துக்குரியவன். வாயாகின்று—வாய்மையாயினது. வாயாயினது எங்ஙனம் அறியலாயிற்றெனின் பறை ஒலிக்கவும் சங்கங்கள் ஆர்க்கவும் மடந்தை விடலையொடு ஒரு மனையில் இறைகொள்ளுதலான் என்பாள் பறைபடப் பணில மார்ப்ப இறை கொள்பு வாயாகின்று என்றாள். விடலையொடு மடந்தை பறைபடப் பணில மார்ப்ப இறை கொள்பு நட்புவாயாகின்றே என்க. இளம்பூரணர் "விடலையொடு மடந்தை நட்புப் பறைபடப் பணில மார்ப்ப இறைகொண்டு நாலூர்க் கோசர் நன்மொழிபோல வாயாயிற்றெனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும்" (தொல். கற்பி. 2) எனக் கூறுதலான், இறை கொள்பு தோன்றிய கோசர் என இயைப்பது அவர்க்குக் கருத்தன்மை உணரலாம். அன்றியும் தோன்றி இறை கொள்வதல்லது இறை கொண்டு தோன்றுதல் இல்லாமை யுணர்க. பொருட் சிறப்பில்லாமையுந் தெரிந்துகொள்க. ஈண்டுக்குறித்த கோசர்செய்தி மோகூர் மோரியர் படைக்குப் பணியாமைக்குக் காரணமாக, அம்மோகூர் மன்னற் குதவியாய் அவன் மோகூரையடுத்துள்ள ஆலம்பலத்து அவர் சொற்றபடி வந்து தோன்றியதாகும்.

(அகம். 251) மோகூரையடுத்து ஆலம்பலமும் கோசப்பாடியும் இன்றைக்கும் கள்ளக்குறிச்சிப் புறத்திருத்தல் காணலாம். செவிலியும், நற்றாயும் தோழியுந் தலைவியும் போல்வாராதலாற் றோழி என விளித்தாள்; இது களவிற்கூடிய தலைவன் தலைவியை உடன் கொண்டுபோய்த் தன்னகத்துக் கொடுப்போரின்றிக் கரணத்தொடு புணர்ந்ததாகும். காலில் ஆய்ந்து கட்டிய கழலையும் மார்பிற் செயலை மாலையையும் கையில் வேலையும் உடைய விடலை என்க. கோசர் வாய்மொழியாற் சிறந்த ஒரு வகை வீரர். 'ஒன்றுமொழிக் கோசர்'' (அகம். 196) என்ப. தொடிவளை—செறிக்கும்வளை. "இடுபுணர்வளையொடு தொடிதோள் வளையர்'' (பரிபாடல் 12. அடி 23) என்புழிப் பரிமேலழகர் செறிக்குந் தோள்வளையராய் என உரைத்தது காண்க. தொடி என்பது மட என்பதனோடு எதுகைத் தொடையினிருத்தலான் இதுவே பாடமென்க. விடலையொடு இறை கொண்டதனாற் செறிந்த வளை கூறுதலிற் பொருத்தமுங் காண்க. செறிவளை—இறுகிய வளை (ஐங்குறு. 199). செயலை வெள்வேல் விடலை என்பதே பாடம். செயலை அணிந்த வெள்ளியவேல் விடலை: 'செயலை வெள்வேல்' (221) என்றார் அகத்தினும். நற்றிணையுள்ளும் "செயலைத் தோன்று நற்றார் மார்பற்கு'' (376) என வருதல் காண்க. செயலை—அசோகு.

---

### பாலை பாடிய பெருங்கடுங்கோ

16. உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

எ-து. பொருள்வயிற் பிரிந்த இடத்துத் தலைமகள் ஆற்றாமை கண்டு தோழி கூறியது.

(வி) கள்வர்—ஆறலைகள்வர். பொன் புனைபகழி—இரும்பைத் தலையிற் புனைந்த அம்பின். செப்பங் கொண்மார்—எய்த

பொருளில் உருவக்குத்துஞ் செம்மையைக் காணும்பொருட்டு. உகிர்நுதி புரட்டும் ஓசைபோல—நகத்தினுல் அவ்வம்பின் நுதியை (முனையை) நெருடும் ஒலிபோல. "உகிர்நெரியோசையிற் பொங்குவன" (அகம். 267) என்ப.

செவ்விய கால்களையுடைய ஆண் பல்லி தனக்குத் துணையாகிய பெண் பல்லியை அழைக்கும் அழகிய பொழுதில் நம்மை உள்ளார் கொல்லோ கள்ளியங் காடிறந்தோர் என்க. தோழி கள்ளியங் காடிறந்தோர் கள்வர் தம் பகழி செப்பங் கொண்மார் உகிரால் நுதியைப் புரட்டும் ஓசைபோலப் பல்லி துணைபயிரும் அங்கால் உள்ளார் கொல்லோ என்ருள் என்க. அங்கால்—அழகிய போது. கால்போதாதல் "எக்கால் வருவதென்றி, அக்கால் வருவர்" (குறுந். 277) என்புழிக் காண்க. அழகியபோது என்ருர் தாமே உள்ளாரேனும் அவருள்ளுதற்குரிய செவ்வியை யுண்டாக்கியது கருதி. கள்ளியங்காடு என்ருர் அப்பல்லிகள் கள்ளிமுள்ளிற் பொருந்தியிருத்தல் பற்றி (அகம். 151). பல்லி பொருந்திய விடத்தைவிட்டு நீங்குதலில்லை யென்பது "பொருந்தலாற் பல்லி போன்றும்" (சிந்தா. 1895) என்னுஞ் சிந்தாமணியிற் கண்டது; பொருந்திய இல்லத்தை யகன்று போயவர் காதலராதல் நினைக. கள்ளியங்காடு—செல்வார் ஒருபயனுங் கொள்ளல் இல்லாது எங்குங் கள்ளியாயுள்ள காடு எ-று. கள்ளியங்காட்ட (அகம். 53). கள்ளியங்கடத்து (ஐங்குறு. 323) என்புழிக் கள்ளிக்கு அடையேயின்றி வந்ததுபோல ஈண்டுங்கொள்க. கள்ளியங் காட்டிற் கள்வர் உகிர்நுதி புரட்டும் ஓசையைக் கேட்டுத் தம் வீரத்தாற் கடக்கும்போது உள்ளாராயினும், பல்லி தன் துணைபயிரும் அழகிய போது உள்ளார் கொல்லோ என்ருளாம். பல்லி துணைபயிரும் ஓசையைப் பல்கால் நம் மனைக்கண்ணே கேட்டறிந்தவராதலான் உள்ளுவர் என்பது கருத்தாகக் கொள்க.

இனி, கள்ளியங் காடிறந்தோர் பயிரும் அங்கு நம்மை உள்ளார் கொல்லோ எனக்கொண்டு ஆல் என்பது அசையெனினும் நன்கு அமையும். கள்வர்தம் என்னும் சீர்க்குக் கானவர் என்பதுமுண்டு. "கள்வர் திரிதருங்கானம்" என்பது கைந்நிலை (22). ௨

## பேரெயின் முறுவலார்

17. மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ் கொளினே.

எ-து. தோழியிற் கூட்டம் வேண்டிப் பின்னின்ற தலைமகன், தோழி குறை மறுமாற் கூறியது.

(வி) ஊரும் குதிரையென ஊராத பனைமடலையும் ஊர்வர். சூடும் பூவெனச் சூடாத எருக்கின் குவிந்த முகிழாலாகிய கண்ணியினையும் சூடுவர். இவை ஊரும் மாவும், சூடும் பூவுமாகாமை என என்பதனாற் குறித்தன. இவற்றாற் றெருவிற் பலரால் ஆரவாரிக்கவும் உட்படுவர். சாதலிடத்தும் ஆவர் எ-று. காமங் காழ்கொளின் - காமமாகிய நோய் மரத்தினிடத்து முற்றிய பரலாகிய விதையைத் தம்முட்கொள்ளின் எ-று. ஈண்டுக் காமம் எட்டிமரமென்றுங் கொள்ளலாம். பிறிது—மேற்கூறியன அல்லாத சாதற்குரிய செயல். மறுகிற் பல்லோர் சுட்டிக்கூறலால் ஆர்க்கவும்படுப. "மறுகிற் பல்லோர் கூறயாம் நாணுகம்" (குறுந். 14) என்றது காண்க. "களிக்கயன் மழைக்கணார் காமங் காழ்கொளீஇ" (சிந்தா. 1941) என்புழிக் காமங் காழ் கொளீஇ என்பதற்குக் காமத்தேவயிரங்கொண்டு என நச்சினார்க்கினியர் கூறுதலான் யாமும் காமத்தே காழ்கொளின் என்றாம். ஊராத மடலை ஊரும் மாவாகவும், மக்கள் சூடாத எருக்கங் கண்ணியைச் சூடும் பூவாகவும் கொள்ளும் வண்ணம் அறிவுகலங்கச்செய்து பிறர் இகழ்ந்து ஆர்த்தபோதும் உணர்வு வாராது சாதலையும் அடைவித்தலால் ஈண்டுக்காழ் அவற்றிற்கேற்ப விதையாகத் துணியப்பட்டது. காமத்தை நோய் மரமோடு உவமஞ் செய்தல்,

"திண்ணிலை வரைப்பிற் சினைதொறுஞ் செறிந்து
கண்ணவை யுறாஉங் கனிபல கண்டவை
நயவரு நஞ்செனப் பெயர்தெரி வின்மையின்...
அமரர் காட்டிய வமுதுநமக் கிவையெனப்
பசிநோய் தீர வயிறலிற் கதுமெனத்
தசைபோழ்ந்து கழற்றித் தபுத்திசி னாங்கு...
காமத் தியற்கையுங் காணுங் காலை" (இலா. 20.)

எனவரும் பெருங்கதையடிகளானறிக. பேராசிரியர் மெய்ப்பாட்டியலுள் (22) இதனைத் தலைமகன் பெரிதுங் கலங்கிய கலக்கத்திற்கு உதாரணங் காட்டுதலான் இக்காழ் மனத்தைக் கலங்கச் செய்யும் பரலாதல் நன்கு துணியலாம். ஊமத்தம் பித்துநோய் செய்யும் செடியாதல் கண்டது ; இதுபோன்றதென்க.

தலைவன், காமம் என்னும் நோய் மரத்திற் காழினைக் கொண்டுள்ளேன், இதற்கு மருந்து நின் தோழி தோள் நலம் உண்டலே என்றும் அம் மருந்து கிடையாதாயின் சாதல் செய்வேன் என்றும் குறிப்பிற் கொள்ளவைத்தான் என்க. தலைவன் காமநோய் முற்றியது என்பதைப் புலமைத் திறத்தான் இங்ஙனங் குறித்துக் காட்டிய இப்பாடலைப் பயிலுந்தோறும் ஒருவன் தன்னையறியாமே இன்முறுவல் தோன்றுதலால், இது பாடிய நல்லிசைச் சான்றோர் பேரே இன்முறுவலார் எனலாயிற்றோ என உய்த்துணரலாகும்.

ஈண்டு " அறிவுகாழ்க் கொள்ளுமளவை " (குறுந். 379) என்புழிப் போலக் காம முதிர்ந்து வயிரங்கொள்ளின் என்னலாமேனும் தலைவன் கலக்கத்திற்கு இதுபோற் காரணமாகாமை நோக்கி உண்மையுணர்க. இனிக் " காமத்துக்காழில் கனி " (குறள். 1191) என்பது பற்றிக் காமமாகிய அப்படியே முழுதும் விழுங்குதற்குத் தடையாகிய பரலைக்கொண்டால் எனக் கூறினும், இக்கலங்கிய் செயல்கட்குக் காரணமாதலின்மையாற் பொருந்தாதென்க.

காமமாகிய ஊமத்தத்தினிடத்தே முதிர் நிலையாகிய பரலை உட்கொள்ளின் அவர் ஊர்ப...ஆகுப என்றான் எனினும் அமையும். " ஊமத்தந் தின்றார்போல வுன்மத்தன் உருமுத்தின்பான் " (கம்பரா. அதிகாய. 215) என வருதலானிஃதறிக. இங்குக் காமங் காழ்கொளின் ஊர்ப, சூடுப, மறுகிற்படுப, ஆர்க்கவும் படுப, பிறிதுமாகுப என்று கொண்டு காமன் கணையினிகழும் ஐவகை அவத்தையுங் கருதிவைத்தனன் என்பதுமாம். ஊர்தல் சுப்பிரயோகம், சூடுதல் விப்பிரயோகம், மறுகிற்படுதல் சோகம், ஆர்க்கப்படுதல் மோகம், பிறிதுமாதல் மரணம் என அமைத்துக்கொள்க. குவிமுகிழ் எருக்கம் என்றது மலர்தலே யில்லாது குவிந்துள்ள முகிழையுடையது குறித்தது. காமங் கொளின், காழ் கொளின் என்க.

## கபிலர்

18\. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

எ-து. இரவுக்குறிவந்து நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவுகடாயது.

(வி) வேரல்வேலி—மூங்கிலை வேலியாக உடைய. வேர்க் கோட்பலவின்—வேரிற்குலைகளையுடைய பலா மரத்தினுடைய. சாரல் நாட—மலைப்பக்கத்து நாட்டினனே. பலவின்சாரல்—பலாச் சாரல்; இன்-சாரியை, பலாவால் இனிய சாரல் எனினும் அமையும். செவ்வியை ஆகுமதி—துய்த்தற்குரிய செவ்விக்கு இயைபுடையை யாகுக. யாரஃதறிந்திசினோர்—நின்னை யன்றிச் செவ்வியை அறிந்தவர் வேறியாருளர்; என்றது இவள் நலத்தைச் செவ்வி யறிந்து இயற்கைப் புணர்ச்சியிற்றுய்த்ததனால் நீயே செவ்வியறி வாயும் அறிந்து துய்ப்பாயுமாவை எ-று. நின் சாரற் கண்ணே பலா வின் சிறு கொம்பிற் பெருங்கனி ஏந்தும் பற்றுக்கோடின்றித் தானே நான்று பருப்பது போல, இவள் உயிராகிய கொம்பு மிகவும் மெல்லிதாக இவள்கட் பழுத்த காமக்கனியோ நாளும் தவப்பெரி தாவது. இன்னும் முதிரவிட்டாற் பழம் அச்சிறு கொம்பை ஒடித்துக் கீழே பயன்படாது வீழ்ந்தொழிவதுபோல இவள் காமம் இவளுயிரைக் கெடுத்தொழியும் என்று குறித்து வரைவு கடாயி னாளாம். களவினுண்ட நலம் பிறர் வேலியகத்துள்ள வேர்க் கோட்பலவுண்டது என்பதும், கற்பின் உண்பது தம் மனைக்கண் முற் றத்துப்பலாவின் சிறு கோட்டுப் பெரும்பழத்தைச் செவ்வியிற் கொண்டு விருந்தோடருந்துவது என்பதும் அவன் குறிக்கொண்டு ஒழுக உணர்த்தியவாறும்.

"மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்" (குறள். 1289)

என்பதனாற் காமச் செவ்வியின் அருமை உணரப்படும். வேர்க் கோளாயிற் றரை தாங்கும் என்று காட்டிச் சிறுகோட்டுப் பெரும்

பழம் என்றதனால் அதைத் தாங்கி அதன் செவ்வியறிந்து துய்த்தல் நினக்கே யுரியதென்று உணர்த்தினாள். சிறு கோடு என்பதனால் தலைவியினது இளமையும் மென்மையுந் தெரிய வைத்தாள். 'உயிர்தவச்சிறிது காமமோ பெரிது' என்றதனானும் சிறுகோட்டுப் பெரும் பழம் என்ற உவமையானும் காதல் உயிரின்கண் உண்டாகி வளர்வது என்று காட்டினாள். உயிர்தவச்சிறிது என்பதனால் உயிரை அணுவென்று கருதினர்போலும்.

---

## பரணர்

19. எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவ னாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே.

எ-து. உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.

(வி) எவ்வியிழந்த - எவ்வியை இழந்ததன் காரணமாக, வறுமை யாழ்ப்பாணர்-யாழ்க்கல்வி வறுமையாய பாண் சாதியினர். அதன் அருமை யறியுமவன் இல்லாமையால் அக்கலை அதற்குரிய சாதியில் வறுமை யெய்தியவாறு குறித்தார். பூவில் வறுந்தலை மேற்கூறுதலான் அருமையறிந்து பொற்பூச் சூட்டுமவனின்றிப் பொருளான் வறுமைப்படுதல் குறித்தல் காண்க. இதனால் ஈண்டு யாழ்க்கல்வி வறுமையே கொள்க. இக்கருத்திற்கியையவே (எவ்வியிழந்த செருவிற் பாணர் தாங்கைதொழுது போற்றுமியல் புடைய யாழை முறித்தனர்) என்று 115-ஆம் அகப்பாட்டாற் கேட்கப்படுவது காண்க. இவ்வாறே,

"புலவர் நாவிற் சென்றுவீழ்ந் தன்றவ
னருநிறத் தியங்கிய வேலே" (புறம். 235)

என ஔவையார் அதிகன் இறந்துழிப்பாடுதலுங் காண்க. பூவில் வறுந்தலைபோலப் புல்லெனக் காணப்பட்டு அகம் வருந்துவாயாக.

யாழின் உயர்வுதோன்ற அதன் வறுமையை வறுந்தலையாற் குறித்த பொருள்வறுமைக்கு முற்படவைத்தார். புல்லென்றிணைமதி என்றது வறுந்தலைபோல உடம்பு பொலிவிழந்து உள்ளம் வருந்துக எ-று. இஃது உணர்ப்புவயின்வாரா வூடலாதலான் இவன் ஊடல் உணர்த்தற்கு உரைத்தன எல்லாம் பயன்படாமைதெரிதல் பற்றி அவள் உரைக்கு வேறு கூறிற்றிலன். மனைமரத்து எல்லுறு மௌவல்—மனைக்கணுள்ள மரத்திற் படர்ந்த இரவுற்ற முல்லைமலர் போல. நாறும் பல்லிருங் கூந்தல்—கமழ்கின்ற ஐவகையாகிய கரிய கூந்தலையுடையாள். யாரளோ நமக்கு—நமக்கு என்ன உறவினளோ எ-று. எல்—இரவாதல்,

> "எல்லை யெம்மொடு கழிப்பி யெல்லுற
> நற்றேர் பூட்டலு முரியீர் (அகம். 200)

என்புழிக் காண்க. மனைமரத்து இரவிலுற்ற முல்லைமலர்கள் ஒருவருஞ் சூடாமலே மணம் நாறுதல்போல இவள் கூந்தலும் நாம் அணையாமலே நாறும் என்பது குறிப்பு. நமக்கு என்றது நெஞ்சையும் உளப்படுத்தியேயாம். எவ்வி-மிழலை நாட்டை ஆண்ட வேள். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டான் (புறம். 24).

---

## கோப்பெருஞ் சோழன்

20. அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்
உரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே.

எ-து. செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தியுரைத்தது.

(வி) துணை துறந்து—தாம் எனக்குத் துணையாந்தன்மை விட்டதனால், தன் துயர் கண்டும் இரங்காமையால் அருளும். தம்மையே காப்பாகவுடைய என்னைக்காவாது காதலின்றிப் போதலால் அன்பும் நீக்கி என்றாள். தொடர்பிலார் துயர்கண்டு உண்டாகும் அருளும் தொடர்புடையார் பக்கலுண்டாகும் அன்பும் நீக்கி எ-று. தொடர்பிலளாக வைத்துப் பிரிவராயின், துயர் கண்டும்

பிரிதலால் அருளிலர் என்றும், தொடர்பினளாக வைத்துப் பிரிவ ராயின், தன் வருத்தத்திற்கு வருந்தாது போதலின் அன்பிலர் என்றும் கருதினாள். அவ்வுலகிற்கு இன்றியமையாத அருளும் இவ்வுலகிற்கு இன்றியமையாத அன்பும் நீக்கி அவ்வுலகிற்கு உத வாததும் இவ்வுலகினிலேயாததுமாகிய பொருள்வயிற் பிரிவோர் அறிவுடையராயின்; ஆயின் என்பது ஆகாமை குறித்து நின்றது. "தீதொரீஇ, நன்றின்பா லுய்ப்ப தறிவு" (குறள். 422). ஆதலின் அங்ஙனம் நன்றின்பாலுய்ப்பதாகாமை நினைந்தாள். உரவோர் உரவோராக—அங்ஙனம் பிரியும் வலியுடையோர் நம்மைப் பிரியும் அறிவுடையாராக. மடந்தை—மடந்தாய். நாமே மடவமாக—அவ ரைப் பிரியமாட்டாமல் அறிவிலேமாக. அருளுமன்பு நீக்கித் துணை துறந்து பொருள் மேற்பிரியும் அறிவினும், அருளுமன்பும் நீங்கவும் துணை துறக்கவும் இயையாத மடமை உயர்ந்தது என்பது கருத் தாகக் கொள்க.

இனிப்பிரிவோர் உரவோராயின் அப்பிரிவு வருத்தம் உணர் தற்கு உரவோர் மடவமாக என்றும் அப்பிரிவு வருத்தம் உணரா மைக்கு நாமே உரவோராக என்றும் கூறினாள் எனினுமமையும்.

"அருளிலார்க்கவ்வுலகமில்லை" (குறள். 247) என்பதனால் அருள் அவ்வுலகிற் கின்றியமையாமையும். "அன்புற் றமர்ந்த வழக் கென்ப வையகத், தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு" (குறள். 75) என் பதனால் அன்பு இவ்வுலகிற் கின்றியமையாமையுங் காண்க.

---

## ஓதலாந்தையார்

21. வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றை
கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேனவர் பொய்வழங் கலரே.

எ-து. பருவம் வருந்துணையும் ஆற்றுவித்த தோழி அவர் வரக் குறித்த பருவ வரவின்கண் இனி ஆற்றுவிக்குமாறு எவ் வாறு என்று தன்னுள்ளே கவன்றாட்கு, அவளது குறிப்பறிந்த

தலைமகள், "கானம் அவர் வருங்காலத்தைக் காட்டிற்றாயினும் யான் இது கார்காலமென்று தேறேன்; எற்றுக்கு அவர் பொய்கூறுநராகலின்" எனத் தான் ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

(வி) புதுப்பூங்கொன்றை—புதிய மலரையுடைய கொன்றைகள். வண்டுபட—வண்டுகள் ஒலிக்க. (குறுந். 15).'பறைபட' என்றது காண்க. ததைந்த கொடியிணர்—நெரிந்த கொடியாய பூங்கொத்துக்களை. ததைதல் — நெருங்கலுமாம். இடையிடுபு — இடையிடையே இட்டுவைத்து; பொன்செய் புனையிழை கட்டிய மகளிர் கதுப்பிற்றோன்றும்—பொன்னாற் புனைந்து செய்த அணிகளைச் சுற்றிக்கட்டிய மகளிர் கூந்தலைப்போலத் தோற்றஞ்செய்யும். கொன்றை தோன்றுமென்க. ஈண்டுப் பொன்னிழை பொற்காசு மாலை. "பொலஞ்செய் கிண்கிணிக், காசி னன்ன போதீன் கொன்றை" (குறுந். 148) என்பது காண்க. கொன்றை தோன்றுவதன் மேல், கானம் காரெனக் கூறினும்—முல்லைக்காடு காரென்று தானே வாய்திறந்து ஓதினாலும்; அவர் சொற்றேறிய யானோ தெளியேன். என்ன காரணமெனின் அவர் பொய்வழங்கலர் ஆதலான் என்றாள் என்க. கானம் காரெனக் கூறுதல் "சொல்லுப வன்ன முல்லைமென் முகையே" (குறுந். 358) என்புழிக் காண்க. இது கிளக்குநபோல அஃறிணை மருங்கின் அறைந்தது. அவர் பொய்வழங்கலர் ஆதலாற் கூறாதகானம் காரெனக்கொன்றை கதுப்பிற் றோன்றுதல் காட்டி ஓதினும் யானோ தேறேன் என்றாள். ஓதாதகானம் காரெனக் கூறினும் என்ற இச்சிறப்பால் இது பாடியவர்ஓதல் ஆந்தையார் எனப்பட்டனரோ என நினைத்தலுமாம். யானோ தேறேன்—என் போல் அவர் சொற்கேட்கும் பாக்கியம் இல்லாதனவும் பேதைமையவும் ஆகிய புதுப்பூங் கொன்றைகள் மகளிர் கதுப்பிற்றோன்றுதலால் கானம் காரெனத் தேறுவ என்றாளாம். யானோ என்புழி ஓகாரம் பிரிநிலையென்று (தொல். உயிர்மயங். 88) இளம்பூரணர் கூறுதலான் கதுப்பிற்றோன்றும் புதுப்பூங்கொன்றை, கானம் காரெனக் கூறினும் யானோ தேறேன் என்பதே பாடமென்று நன்கு துணிக. கொன்றை தேறாது தோன்றும் யானோ தேறேன் என்பது கருத்து. ததைந்த கொடியிணர் கொன்றைகளினுடையன என்பதும் அவைமடவ ஆதலிற் கானம் காரென்று கூறும்படிப் புதுப்பூவிட்டு மகளிர் இழைகட்டிய கதுப்பிற்றோன்றும் என்

பதும் குறித்தவாறு. "மடவமன்ற தடவுநிலைக் கொன்றை...நெறி தரக், கொம்புசேர் கொடியிணரூழ்த்த, வம்பமாரியைக் காரென மதித்தே" (குறுந். 66) என்புழிக் காண்க. கொடியிணர் தாராகிய இணர்கள் என்பர் பரிமேலழகர் "கொன்றை கொடியிணரூழ்ப்ப" (பரிபா. 8, 24).

---

## சேரமானெந்தை

22. நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரே சாரற்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனி லஞ்சினை கமழும்
தேஎமூ ரொண்ணுத னின்னொடுஞ் செலவே.

எ-து. செலவுக் குறிப்பறிந்து ஆற்ருளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

(வி) இவணொழிய—இவண் நீங்கிய அளவில், நீ நீர் வார் கண்ணை—நீ நீர் இடையருறது ஒழுகுங் கண்களையுடையை. நின்னொடுஞ்செலவு-நின்னொடு செல்லுஞ்செலவின்கண். தேஎமூர் ஒண்ணுதல்—வண்டுகள் ஊருதற்குக் காரணமான, நின் ஒள்ளிய நுதலானது. சாரற் சிலம்பணி கொண்ட—தாள்வரையை உள்ள மலைப்பக்கம் அழகுகொள்ளுதற்குக் காரணமான. வலஞ்சுரிமராத்து—வலப்புறமாக இதழ் சுரிந்த கடம்பினது. வேனில் அஞ்சினை கமழும்—வேனிற்காலத்து அழகிய கொம்புகள் போல மணக்கும். இவ்விரண்டினையும் தெரிந்தால் யாரோ பிரிகிற்பவர்—யாரோ பிரியவல்லுநர் எ-று. ஒழிய நீர்வார்கண்ணை உடன் செலவின்கண் நுதல் வேனில் அஞ்சினை கமழும், இங்ஙனமாக யாரோ பிரிகிற்பவர் என்க. சாரற்சிலம்பு—தாள்வரையையுடைய சிலம்பு. "மலிநீ ரதர்பல கெழுவு **தாள்வரை**" (பரிபா. 6) என்புழிப் பரிமேலழகர் மிக்க நீர்வரும்வழிகள் பல பொருந்தின சாரல் எனப் பொருள்கூறிக் காட்டியதனல் அறிக. தாள்வரை—பாதசைலம் எனப்படும். இதுவே பேர் என்பது 'தாள்வரை' என முடித்துத் "தாள் பரப்பிமண்தாவிய ஈசனை" (திருவாய். 3, 3, 10, 11

எனச் சடகோபமுனிவர் பாடுதலாற்றுணியப்படும். கண்ணிற்கு அயலதாய நுதல் உடன் செலவிற் கமழும் என்றதனால், கண் கள் மிகக் களித்தல் குறித்தாள். நுதல் வேனில் அஞ்சினை கம ழும் என்று நின்னெடுஞ் செலவின்கண் அவ்வெய்ய பாலையும் இனிதாதல் காட்டினாள். காணுதொழியிற் கண்கள் நீர்வாரும், கண்டு செல்லின் அக்கண்ணிற்கு அயலதாகிய நுதலும் கமழும், இந்நிலையறிந்தார் தனித்துச் செல்லார் என்பது கருத்து.

“கோட்சுரும் பரற்று நாட்சுரத் தமன்ற
நெடுங்கான் மராஅத்துக் குறுஞ்சினை பற்றி
வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு நின்ற
மள்ள னுள்ளம் மகிழ்கூர்ந் தன்றே
பஞ்சாய்ப் பாவைக்குந் தனக்கும்
அஞ்சாய் கூந்த லாய்வது கண்டே”

(ஐங்குறு. 383)

என்பதுபற்றி நின்னெடுஞ் செலற்கண் மராஅத்துச்சினைப்பூ அளகத்திற் சூடநேர்தலால் நுதல் கமழும் என்றாள் என்க. நீர் வார் கண்ணையாய் ஒழிய என்பாரும் உளர்.

## ஔவையார்

23. அகவன் மகளே யகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.

எ-து கட்டுக்காணிய நின்றவிடத்துத் தோழி அறத்தொடு நின்றது.

(வி) அகவல்—அழைத்தல். தெய்வங்களையும் குலத்தோரை யும் அழைத்தலையுடைய பெண்டே. இவள்தான் வழிபடுந் தெய் வங்களையும் கிட்டிக் கேட்பார் இருமரபினரையும் அழைத்துப்பாடு தலால் அவர் நன்னெடுங்குன்றம் பாடிய பாட்டே இன்னும் பாடுக என்றாள். மனவுக்கோப்பன்ன—சங்குமணிக்கோவை போன்ற. நன்னெடுங் கூந்தல் அகவன் மகளே—வெள்ளிய நல்ல நெடுங்கூந்

தலையுடைய அகவன் மகளே. ஈண்டுக்கூந்தற்கு நன்மையாவது மனவுக்கோப்பன்ன வெள்ளிய நிலைகண்டு முதுமையாற் பலரும் போற்றற்குரிய சிறப்பு. 'மூத்தோரன்னவெண்டலை' (அகம். 90) என்பது காண்க. நெடுமையும் நீண்டகால வளர்த்தியைக் குறிக்கும். பாட்டே பாடுக என்றாள் அவர் பாடல் கேட்கும் இனிமை ஒன்றே குறித்து. பாட்டே என்றதனால் அதன் பொருள் பொய்ப்பது என்பது குறிப்பு. தெளித்தபடி வரைய வராமை கருதியதாம். இடையிடை உரையாடுதல் வேண்டாம் எனினும் அமையும். அவள் பாடிய பாட்டினுள்ளே குலத்தவரை அழைத்துப் பாடியபோது தலைவருடைய குன்றம் பாடிய பாட்டைக் கேட்டு அதையே இன்னும் பாடுக என்றாள் என்க. பாட்டே பாடுக என்றும் அவர் குன்றம் பாடியபாட்டே இன்னும் பாடுக என்றும் தோழி கூறி இவளைப் பசப்பித்த தலைவர் அவர் என்று குறிப்பிற் கொள்ளவைத்து அறத்தொடு நின்றவாறாம். இதனால் இப்பாட்டிற்றலைவன் தலைவியின் தாய்மரபினனென்பது உய்த்துணரலாகும். இங்ஙனங் கொள்ளாது கட்டுவிச்சியே அவரை அறிந்து கூறி அவர் நன்னெடுங் குன்றத்தைப் பாடினாள் என்னின் தோழி அறத்தொடு நிற்றல்வேண்டாதாகும் என்க. அவள் குலம் பாடும்போது இருமரபும் பாடப் புக்கநிலையில் தன்னடைவே தலைவர் மரபிற்குரிய குன்றம் பாடப்பட்டது கேட்டு, அதனையே பல்காற்பாடுக என்று கூறித் தோழி அறத்தொடு நின்றாள் என்பதே பொருந்திற்றாம் என்க. அகவர் குலத்தோரெல்லோரையும் அழைத்துப் புகழ்வர் என்பர் நச்சினார்க்கினியர் (மதுரைக் காஞ்சி. அடி 223). தான் கருதிய தலைவர் குன்றம் அவள் வாயில் தன்னடைவே வருதற் சிறப்பைக் குறித்து முக்காற் கட்டுவிச்சியை அழைத்தனள் என்பது பொருந்தும்.

பரணர்

24\. கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிர் மிதித்த வொருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதல ரகலக் கல்லென் றவ்வே.

எ-து. பருவங்கண்டு ஆற்றாளாகிய கிழத்தி உரைத்தது.

(வி) கருங்கால் வேம்பின் ஒண்பூ—வேம்பின் கரியகாம்பி னுள்ள ஒள்ளிய மலர்கள். யாணர் என்னை யின்றியும்—புதுவருவா யிற்புக்க, என் தலைவர் இல்லாமலும். கழிவது கொல்லோ-சூடாது கழிவதோ. பாண்டியரும் அவர் படையுஞ் சூடிய சிறப்பால் ஒண்பூ என்றாள். "போந்தை வேம்பே யாரென வரூஉம், மாபெருந் தானையர் மலைந்த பூவும்" (தொல். புறத். 5) எனவும், "வேம் பினமலைவான்பூச், சுரியாருளை த்தலைபொலியச்சூடி" (குறுந். 281) எனவும் வருவன கண்டு உணர்க. வேம்பு பூக்கும் இளவேனிற் பருவம் அவர் வருவம் என்று சொற்ற போதாதலால் அவரின்றி யுஞ் சூடாது கழிவதுகொல் என்றாள். சூடாது என்றாள் தலை வரைப் பிரிந்து தான் சூடற்காகாமைபற்றி. பூக்கழிவது என்பது பூப்பருவம் போய்க் காய்ப்பருவம் ஆவது. "அவரோ வாரார் தான் வந் தன்றே, வேம்பி னொண்பூ வுறைப்பத், தேம்படு கிளவியவர் தெளிக்கும்பொழுதே" (ஐங்குறு. 350) என்ப. ஆற்றயலெழுந்த வெண்கோட்டதவத்து—யாற்றினருகில் ஓங்கிய வெள்ளிய கொம்புகளையுடைய அத்தியினது. எழுகுளிர் மிதித்த ஒரு பழம் போல—ஏழு நண்டுகள்பற்றிக் குழைத்த ஓர் பழத்தை ஒப்ப. குழைய—யான் குழையாநிற்கவும். அதன்மேலும் வருத்துவதாகக் கொடியோர் நாவே கல்லென்ற—அவர் திறத்துக் கொடுமையுரைப் போர் நாக்கள் தாம் குழைவின்றிக் கல்லெனவாயின. நாக்கள் துாற்றலிற் குழையாது கற்போன்றன என்பது கருத்தாம். கல் லென்ற — ஆரவாரித்தன என்பதுமாம். பல நண்டுகள்பற்றி மொய்த்தற்கு இயைபுடையதாக யாற்றயலெழுந்த அதவத்து என் றாள். குளிர்—நண்டு என்பது,

“களவன் குளிர்ஞெண்டு கற்கடக மட்டை
செளுகங் கறையான் சிதல்”

(உரிச்சொனிகண்டு. விலங்கு. 26)

குளீர : கற்கடக : என்பது அமரகோசம். இவற்றால் குளிறு என்பது நண்டின் பெயரன்மை உணரலாம். மிதித்தல் குழைத்தல் பிசைதல் என்பது “உலைவாங்கு மிதி தோல்” (குறுந். 172) என்புழிக் காண்க. ஈண்டுக் கொடியோர் என்றது தோழியரையும் ஏவலாட்டியரையும். காதலர் அகல—என் காதலர் அகன்ற அளவில்; காதலர் குறித்த பருவத்தினின்று அகன்றிருத்தலால் என்பது. காதலர் வேம்பின் ஒண்பூப்பருவத்து வாராமையால் அவரைக் கொடியோர் என்று தோழி முதலாயோர் கூற, அவரைக் கொடியோர் என்பவர்தாம் கொடியர் என்றும் அவர் நாவே பல்காற் றூற்றலால் குழையாத கல்லாயின என்றும் கூறினாள் எனக. வேம்பின் ஒண்பூ என்னையின்றியும் கழியுங்கொல் என்றதனால் தலைவர் குறித்த பருவத்திற்குள் வருவரென்று தலைவி கூறினாள் எனக் கொள்க. பழம் போலக் குழைய என்றது ஞெண்டு கனியைப் பற்றும்போது அதன் அழகு சிதைய வாங்கும் என்பதுபற்றி. “உதிர்த்த கனி கவின் சிதைய வாங்கிக்கொண்டு.........வீழ்துணைக்கிடூஉ மலவன்” (அகம். 380) என்றது காண்க. ‘பெறுநாள் யாணருள்ளி’ (அகம். 57) என்புழிப்போல யாணர் வளன் என்பதுமாம். கல்-எறிகல்லுமாம்.

---

## கபிலர்

25. யாரு மில்லைத் தானே களவன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே.

எ-து. வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(வி) யாருமில்லை—நான் கலந்தநாளில் வேறெவருமில்லை. தானே களவன்—தலைவன்தானே செய்தி நிகழ்ந்த களத்திருந்த சான்றுவான். தான் அது பொய்ப்பின்—அவன் தான் கூறிய அச்சூள் பொய்ப்பானாயின், யான் எவன் செய்கோ—யான் யாது செய்வேனோ. ஒழுகுகின்ற நீரில்வரும் ஆரல் மீனைப் பார்த்திருக்கும் சிறு பசுங்கால குருகு முண்டு. தினையின் தாள் குருகின் சிறு பசுங்கால்கட்குவமை.

இன்ன பொழுது வரைவல் என்று சூளுரைத்துப்பின் நீட்டித்தலால் அது பொய்ப்பின் என்றாள். களவன் செய்தி நிகழ்ந்த களத்துச் சான்றாயினான். "நெஞ்சுகளனாக நீயலென் யானென......மற்றவன் மணந்த ஞான்றை" (குறுந். 36) என இந்நூலுள் வருதல் கொண்டு இச்சொல்லின் உண்மை யுணர்க. "கதிர்மூக் காரல் களவனாக" (அகம். 246) என வருதலானும் உணர்க. தினைத்தாளை உவமித்தது பெயராது அவ்விடத்தே இருந்ததுபற்றி எனின் ஈண்டைக்கியையும். ஆரல் மீன் பார்த்தலால் எம்மைப் பார்த்ததென்று சொல்லேன். யாரும் பார்த்தல் உண்டோ என யான் பார்த்தபோது குருகுண்மையை யான் கண்டேன். அக்களத்துண்டு என்பதே ஈண்டுப் பொருளாதல் காண்க. குருகு பாராததாயினும் அக்களத்தின் அவன் சூளுரைத்தது கேட்டதேயாம் என்று 'குருகுமுண்டு தான் மணந்த ஞான்றே' என்றாள். தானது பொய்ப்பின் என்றதனால் குருகு சூள் கேட்டதற்குச் சான்றாதல் காண்க. களவன் நடுச்சொல்வோன் என்பது திவாகரத்தினுங் காணலாம். கள்வன் பொய்ப்பின் யானெவன் செய்கோ என்பது இயைபுடைத்தன்று கள்வன் பொய்த்தல் இயல்பாதலால். பல்லோர்க்கு நடுச்சொல்லும் களவனைன தலைவன் என்பாற் பொய்ப்பின் யானெவன் செய்கோ என்பதே இயல்புடையதாதல் நன்கு நோக்கிக்|கொள்க. குருகு பேச வல்லதாயின் தான் கேட்ட சூளுண்மை கூறும் என்பது குறிப்பெச்சம். அடுத்த பாட்டில் தன் கண் கண்டது பொய்க்குவதன்றே என்று கூறிக் கண்டது பொய்க்காது நடுநின்று சொல்பவனைக் களவன் எனக் கொள்ளவைத்த இயைபுங் காண்க. யான் எவன் செய்கோ —உயிர் துறப்பதல்லது வேறு யாது செய்கோ எ-று. குருகும் உண்டு என்ற உம்மை அவன் நெஞ்சுமுண்டு வாயுமுண்டு என்பன தழுவிவந்தது.

## கோல்லனழிசி

26. அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
தகாஅன் போலத் தான்றீது மொழியினும்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே.

எ-து. நற்றாயும் செவிலித்தாயும் தலைமகளது வேறுபாடு கண்டு இஃது எற்றினானாயிற் றென்று கட்டுவிச்சியை வினவிக் கட்டுக் காண்கின்ற காலத்துத் தலைமகளது வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வமென்று கூறக்கேட்டுத் தோழி அறத்தொடு நின்றது.

(வி) அரும்பு அறமலர்ந்த—அரும்புகள் முற்றவும் மலர்ந்த "தன்னுயிர் தானறப் பெற்றானை" (குறள். 268) என்புழிப் போல வந்தது. 'அரும்பற அவிழ்ந்த' (புறம். 246) என்புழி முகையில்லையாக மலர்ந்த என்றார் பழைய வுரைகாரர். கருங்கால் வேங்கை—வலிய தாளினையுடைய வேங்கையினது. மேக்கெழு பெருஞ்சினையிருந்ததோகை—மேலே ஓங்கிய பெருங் கொம்பிலிருந்த மயில்கள். பூக்கொய் மகளிரிற்றோன்று நாடன்—பூப்பறிக்கும் இளமகளிரைப் போலக் காணப்படுங் குறிஞ்சிநிலத் தலைவன்; மகளிர் போறற்றோன்றி உண்மையில் மயிலாதல் போல நாடனும் தகான் போலத் தோன்றித்தக்கானே ஆவன் என்பது குறிப்பு; தகான்போல—மறந்தானும், துறந்தானும் ஆவனென்று தகான் போல நினைந்து. தான் தீது மொழியினும்—தான் உயிர் விடுவதாகிய இன்னாதது தலைவி கூறினும் எ-று. அவனோ மறந்து துறந்தான், மனையிலோ கட்டுக் காண்கின்றார் இங்கு இந்நிலையிற்றன் கற்புக் காத்தற்கு உயிர்துறத்தலே நன்றென்று தலைவி தீது மொழிந்தாள். அது கேட்ட தோழி இவளிறக்கும் அளவிற்றான துன்பத்தை விளைத்த அக்கொடியோனை மாமரத்தின் மேலிருந்து தேன் பொருந்திய கனியை அருந்திய குட்டிக்குத் தந்தையாகிய ஆண் குரங்கும் அறியும். அது தன் கண் கண்டு பொய்க்குவதன்று

என்று செவிலிக்கும் நற்றாய்க்கும் தோழி அறத்தொடு நின்றாளெனக் கொள்க. தேக்கொக்கு—தேன்றன்மையையுடைய மாங்கனி; "தேன்தேர் சுவைய மாஅத்துத்தீங்கனி" (அகம். 348) என்பது காண்க. முள்ளெயிற்றுத் துவர்வாய் வன்பறழ், தாயில்லா மற் றனிமே வரையின்கண் விளையாடுதலால் வன்பறழ் என்றாள். பறழ்-குட்டி. பறழ் கனியுண்டிருந்ததனானும் வரையாடுதலானும் அறியாது அதன் தந்தை ஆகிய கடுவனும் அறியும். உம்மையாற் றானறிந்தது கொள்ளவைத்தாள். கட்டுக்காணும்வரை வரையாது வாளாவிருந்த கொடுமையையுடையானை என்க. "செறிதொடியுற்ற செல்லலும் பிறிதெனக் கான்கெழு நாடன் கேட்பின் யானுயிர்வாழ்தல்தனினுமரிதே" (அகம். 98) என்பன முதலியவற்றால், தலைவி கட்டுக்கேனும் வெறியாடற்கேனும் இணங்காது உயிர்துறப்பேன் என மொழிதல் கண்டுகொள்க. மேற்பாட்டிலும் 'யானெவன் செய்கோ' என்றதுங் காண்க. இவ்வாறு கோடலே நச்சினார்க்கினியர் கருத்தென்பது அவர் "தலைவனைத் துறந்தான் போலவும், மறந்தான் போலவும் கருதித் தான் தீது மொழியினும்" (தொல். களவியல் 21) என்பது முதலாகக் கூறியவற்றானுணரப்படும். இப்பாட்டின் துறைவிளக்கத்திற்கும் இதுவே ஏற்பதாதல் நோக்கி யுணர்க.

இனி நாடன் தகான் போல—நாடன் இவள்கண் இவ்வேறுபாடு செய்யத்தகாதான் போல. தான் தீது மொழியினும்—கட்டுவிச்சி தெய்வம் அணங்கிற்றென்று ஒரு தீது மொழியினும் எனப் பொருள் கூறனுமாம். இப்பொருட்கு இவ்வேறுபாடு செய்த அக்கொடியோனைக் கடுவனும் அறியும்; ஒரு விலங்கும் அறியா நிற்க அதனைத் தெய்வமேறினள் அறிகின்றிலள் தீது மொழியும் என்று இகழ்ந்து தோழி அறத்தொடு நின்றாளென்க. இவ்விலங்கு பொய்க்குவதன்று என்று கட்டுவிச்சி பொய்த்தது குறிப்பிற் கொள்ளவைத்தாள். "முதுவாய்ப் பொய்வல் பெண்டிர்" அகம். 98) என்பது காண்க.

---

## வெள்ளி வீதியார்

27. கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇயர் வேண்டும்
திதலை யல்குலென் மாமைக் கவினே.

எ-து. பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

(வி) கன்று முண்ணாது—கன்றுண்டற்கே யுண்டாகிய பாலாதலான் அதனை முற்கூறினாள். கன்றுண்டெஞ்சியதையே கலத்திற் கொள்ளுதல் முறையாதலால் அதனைப் பிற்கூறினாள்; “கறவை கன்றார்த்திக் கலநிறை பொழியும்” (12, 93) என்பது மணிமேகலை; நல்லான் என்றாள் அருளாற் சுரத்தலான். “அருள் சுரந்தூட்டு மிதனொடு” (13, 54) என்பது மணிமேகலை. உணவாதலுடன் நாவிற்கு இனிதாதல் அறியத் தீம்பால் என்றாள். நிலத்துக்காங்கு-மண்ணிற் பயனின்றிச் சிந்தியொழிந்தாற்போல. கவின்—என் தாய் என் பொருட்டு ஓம்பிய மெய்க்கவின். என்க்கு மாகாது—எனக்கு முதவாது. என்னைக்கு முதவாது—என் தலைவற்கும் உதவாது. பசலையுண்ண வேண்டுவெதாகும் எ-று. ‘தாயோம்பாய் நலம்’ (அகம். 146) ஆதலால் நல்லான் தீம்பாலுடன் கவினை உவமித்தார். இந்நலம் பூவினை ஒத்துத் தானும் நுகர்ந்து தலைவனும் நுகர்தற்கு ஆதலின் பாலோடு உவமித்தாள். கன்றுண்ணாமையைத் தனக்காகாமைக்கும் கலத்தினும் படாமையைத் தன் தலைவற்கு ஆகாமைக்கும் உவமித்தாள். “மிகநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று” (குறள். 1007) என்புழிக் கொடுப்பாரும் கொழுநனுமேயன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரி என்று பரிமேலழகர் கூறியதனால் கவின் தனக்கும் தன் கொழுநற்கும் பயன்படாமற் கழிவதுபற்றிக் கூறினாள். கலத்திற்படுவது கன்றோடொத்த உயிரோம்பற் பொருட்டு ஆகும். அங்ஙனம் உதவாமையால் தன்னோடொத்த தலைவற்குமாகாது என்றாள். மண்ணிற் சிந்திக்கெடுதல் பசலையுண்டு தொலைதலுக்கு உவமையாயிற்று. என் மாமைக் கவின்—என் மணி நிற அழகு. என் கவின் என்று பாலோடுவமித்துப் பாலினை நல்லான் தந்ததுபோல அக்

கவின் தாய் தந்தது என்பது தெரிய ஆன்றீம்பால் என உவமித்தாள். பொருள் கொடுப்பாருடைய தாதல் போல இவள் கவினும் அதனைத் தந்துபோற்றும் தாயுடையதாக உபசரிக்கப்பட்டது. இது வெள்ளி வீதியார் என்னும் நல்லிசைப் புலமை மெல்லியலார் தம் தலைவன் பிரிவிடை ஆற்றுது சொல்லியது என்பது (தொல். அகத். 54) நச்சினர்க்கினியர் உரையால் அறியப்படுவது. இப் பாடலைக் கூறிய பின்னர்ப் பிரிவு பொருது தம் காதலர் உள்ள ஊர்க்குச் செல்லத் தலைப்பட்டனர் என்பது,

"நெறிபடு கவலைய நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
செலவயர்ந் திசினல் யானே" (அகம். 147)

என ஔவையார் பாடியதனல் அறியப்படுவது. திதலை—தேமல்.

---

## ஔவையார்

28. மூட்டு வேன்கொ றுக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்
டாஅ வொல்லெனக் கூவு வேன்கொல்
அலமர லசைவளி யலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சு மூர்க்கே.

எ - து. வரைவிடை யாற்றுளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

(வி) மூட்டுவேன்கொல்—என் நிலை தெரியவேண்டி அவர்க்கு மூளச் செய்தறிவிப்பேனே. தாக்குவேன்கொல்—தீண்டுவேனே. ஓர் பெற்றி மேலிட்டு—தேளேறுண்டேனென்றுற்போல ஒரு பாயத்தை எறிட்டுக்கொண்டு; ஆஅ ஒல்லெனக் கூவுவேன் கொல்—ஆ என்று விரைந்து கூப்பிடுவேனே. அலமரல் அசைவளி—சுழற்சியுடன் அசைகின்ற காற்றனது. என் உயவு நோயறியாது அலைப்ப—என் உயவுக்குக் காரணமாகிய காமநோயை அறியாமல் அலையாநிற்க. அங்ஙனம் அலைப்பதறியாது கண்டுயிலும் ஊர்க்கு மூட்டுவேன்கொல் என்றுள் என்க. மூட்டுதல்—

நினைவு மூளச்செய்தல். தாக்குதல்—பாய்தல். உடம்பால் விரையத்தீண்டுதல். கூவல்—வாயாலரற்றல். இவற்றால் மனம் மெய் வாக்கு மூன்றானும் முயலத்தொடங்கியவாறு கூறினாள். முட்டுதலும் தாக்குதலும் ஒன்றாய் உடம்பின் வினையே யாதலின் முட்டுவேன் என்பது பாடமின்மையறிக. தாக்குதல் தீண்டுதல் ஆதல் தாக்கணங்கு என்னும் பெயரானுணர்க. வல்லின எதுகைத் தொடையுங் காண்க. யானும் ஓரேன்—இந்நோயையுடைய யானேயுந் தெரிகிலேன். அறியாது அலைப்ப, அறியாது துஞ்சும் ஊர்க்கு என இரண்டிடத்தும் கூட்டுக; இடைநிலைவிளக்கு. அறியாது துஞ்சும் ஊர்க்கு அறிவிக்க என் எண்ணத்தை மூள்விப்பேனோ என் மெய்யாற்றீண்டுவேனோ என் உரையாற் கூவுவேனோ என்றாளாகக்கொள்க. அறியாது துஞ்சும் என்றதனால் இம்மூன்றும் அறிவித்தலே பயனாதல் தெளிக. அறிந்தால் விரையத் தலைவன் வருதற்கு உடன்படுவர் என்பது கருத்து. வளிதன்னை யலைப்ப என்றதனால் அவ்வளியே மெய் வருடத் துஞ்சும் ஊர் என்று குறித்தாளாம். ஊர் என்பது செவிலி, தாய் முதலாயோர்.

---

## ஔவையார்

29\. நல்லுரை யிகந்து புல்லுரை தாஅய்ப்
பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதா லம்மநின் பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

எ - து. இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைமகன், இவர் எம்மை மறுத்தாரென்று வரைந்துகொள்ள நினையாது பின்னுங் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக் கூறியது.

(வி) நல்லுரை—நற்சொல், புகழ். இகந்து—ஒழிந்து. புல்லுரை—புன்சொல், பழி. தாஅய்—பரக்கப்பட்டு. பெயனீர்க்

கேற்ற பசுங்கலம்போல—வானின்று பெய்தலான் உண்டாகிய நீர்க்கு எதிர்ந்துள்ள பசிய மட்கலம்போல. உள்ளந்தாங்கா—நெஞ்சத்தைத்தாங்கி; என்றது பெயல் நீர்த்துளிக்கு எதிர்ந்த பசுமட்கலத்தைக் கரையாமற்றாங்க முயன்றாற்போலச் சிறு துன்பத்துக்கும் கரைகின்ற உள்ளத்தைக் கரையாமற்றாங்கி எ - று. வெள்ளம் நீந்தி—அக்கரையும் பசுங்கலத்தைக்கொண்டு வெள்ளம் நீந்துதல் போல, இக்கரையும் உள்ளத்தைக்கொண்டு துன்ப வெள்ளத்தை நீந்த நினைத்தலால், அரிதவாவுற்றனை என்றான்; செய்தற்கரிய தொன்றைச் செய்ய விரும்பினை எ - று. இது நல்லுரை இகத்தற்கும் புல்லுரை பரத்தற்கும் ஆகும் என்று தெளித்தவாறும். இகந்து தாஅய் அரிது அவாவுற்றனை என்க. தாஅய் என்பது "மலரிதழ்தாஅய் மீனாரம் பூத்த வியன்கங்கை" (பரி. 16. 35, 36) என்புழிப்போலப் பரக்கப்பட்டு என்னும் பொருளில் வந்தது. பெயல் நீர்க்கேற்ற பசுமட்கலத்தைத் தாங்குதல்போலச் சிறு துன்பத்திற்கும் கரையும் உள்ளந்தாங்கிப் புகழ் நீங்கிப் பழி பரக்கப்பட்டு ஒரு வெள்ளத்தை நீந்தி அரிது செய்ய அவாவுற்றனை என்றானும். "பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங் கருமமே கட்டளைக் கல்" (குறள். 505) ஆதலான் இச்செயல் பெருமையைத்தரும் நல்லுரை இகத்தற்கும் சிறுமையைத் தரும் புல்லுரை பரத்தற்கும் காரணமாதல் ஒருதலை என்று கூறினான். நெஞ்சே இவ்வாறு அரிதவாவுற்றனையாதலான், நின் பூசல் நன்றும் பெரிதால்—நீ செய்யும் ஆரவாரம் பெரிதும் நன்றால் என மாற்றிக் கொள்க. நன்றாதல் யாங்ஙனமெனின் அகனுறத்தழீஇக் கேட்குநர்ப்பெறின் என்க. மகவு ஏற இயலாமல் உயர்ந்த மரக்கொம்பில் ஏறும்போது தன்னைத் தழுவிய மகவைத் தான் தழுவியணைத்து ஏறும் மந்திபோல உள்ளுறத்தழுவி நின்பூசல் கேட்போரைப் பெற்றால் எ-று. "மகமுயங்கு மந்தி வரைவரை பாய" (பரி. 15. 38) எனவும் "கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி" (மலைபடு. 311) எனவும் வருவனவற்றால் தன்னைத் தழுவிய மகவைத் தாய்மந்தி கையாற்றழுவி உயர் வரைகளிற்றிரிதல் தெரியலாம். "கைத்தல மந்திகொண்ட கைமகப் போன்று" (சிந்தா. 2571) என்புழி நச்சினார்க்கினியர் மந்தியைக் கையாலே தழுவிக்கொண்ட ஒழுக்கத்தையுடைய மகப்போல என உரைப்பது காண்க. உயர்கோடு—உயர்ந்த மலைச் சிகரமும் ஆம். விரைவில் வரைந்துகொண்டு கூடுவதே நல்லுரைக்குரிய செயல் என்றும் வரைந்துகொள்ள நினையாது

பின்னுங் களவிற்கூடுதல் புல்லுரைக்குரியது என்றும் கருதிய வாறும்.

"கழியக் காதல ராயினுஞ் சான்றோர்
பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்
வரையி னெவனோ வான்றோய் வெற்ப"

(அகம். 112)

என்பதனால் இக்களவில் நீளக்கூடுதல் பழியொடு வருவதாதல் காட்டி வரைவுகடாதல் காண்க. அரிதவாவுதலாவது இரவில் ஊறுபலவும் காப்பு மிகுதியும் அலர் பரத்தலும் உளவாகவும் பேயு மறியா மறையமை புணர்ச்சியைப் பின்னும் புரிய விரும்புதல் என்க. "பசுங்கலம், பெருமழைப் பெயற்கேற் றாங்கு" (நற். 308) என்றதனால் பசுங்கலம் தளர்ந்து நீரோடொன்றுதல் உணரலாம்.

---

## கச்சிப்பேட்டு நன்னாகையார்

30. கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுறன் மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கன மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே.

எ - து. அவர் நின்னை வரைந்து கோடற் காரணத்தாற் பிரியவும் நீ ஆற்றாயாகின்றதென்? என வினாய தோழிக்குத் தலைமகள் "யான் ஆற்றியுளேனாகவும் கனவு வந்து என்னை இங்ஙன் நலிந்தது" எனக் கூறியது.

(வி) கேட்டி—கேட்பாய். சின் : அசை. "காப்பும் பூண்டிசின்" (அகம். 7) என்புழிக் காண்க. அல்கல்—இரவு : அல்கிய அல்லில் என்பதுமாம் இராப்போதில் பின் யாமம் எ - று இன்னநாளில் வரைய வருவல் என்றபடி வாராது நீட்டித்தலாற் பொய்வல்லாளன் என்றாள். பொய்வல்லாளன்—பொய்யை மெய் போலச் சொல்லும் வன்மையை ஆள்பவன். மேல் கனவினும் பொய்செய்பவன் என்று காட்டுகின்றாள். மெய்யுறல் மரீஇய—

உடம்பின் ஊற்றின்பம் மருவற்கு வாய்த்தகை—வாய்மைத் தகை யாக என்றபடி. பொய்க்கனு மருட்ட—பொய்யாகிய கனவானது மருள் விக்க. ஏற்றெழுந்து—மயக்கம் நீங்கித் துயிலெழுந்து. அமளி தைவந்தனன்—கையாற் சேக்கையில் அவனைத் தடவி னேன். வண்டுபடு குவளை மலரிற் சாஅய்—வண்டுகள் உழக்கிய குவளை மலரைப்போல் நிலைகுலைந்து. யானே தமியேன்—அவ னைக் காணாது யானே தமித்தலை யுடையேனானேன். மன்ற அளியேன்—தேற்றமாக இரங்கற் குரியேன். தோழி கேட்டி எ-று. மரீஇய—மருவற்கு "ஒரீஇக் கூறலு மரீஇய பண்பே" (தொல். உவம 33) என்புழிப் போல வந்தது : பொய்க்கனுவாய்த் தகை மருட்ட ஏற்றெழுந்து என்றது,

"வறுங்கை காட்டிய வாயல் கனவின்
ஏற்றேக் கற்ற வுலமரல்" (அகம். 39)

என்றாற்போல நின்றது. ஏற்று—துயிலேற்று. துயிலேற்றலா வது துயில் மயக்கம் நீங்கல். இதனை "ஏற்றெழுவேனாயின்—மயக்கம் நீங்கி எழுந்திருப்பேனாயின்" (கலி. 37) என நச்சினார்க் கினியர் உரைத்ததனானுணர்க. மேலே காட்டிய அகநானூற்றிற் கும் பழைய வுரைகாரர் கனவிடத்துத் துயிலேற்றுக் காணாது எக் கற்ற துயரம் என்றல் காண்க. துயிலேற்றெழுந்து தலை வனைத் தைவந்தேன் அந்நிலையில் அமளி தைவந்தேனாயினேன் இதனாற் சாஅய் தமியேன் ஆதலால் யானே மன்ற அளியேன் என்றாள் என்க. இவள் சாய்ந்ததும் அக்கனவு மிழந்து அமளி யிற் றமியளாயினமைபற்றி என்றுகொள்க. இதன் துறைக் கருத்துள் கனவுவந்து இங்ஙனம் நலிந்தது என்றதனாற் கனவு மெய்யாக வந்து நனவிற் பொய்யாகப் போம்படி வருத்தியது என்பது கருத்தாகக்கொள்க. "கனவிற் காணு மிவளே, நனவிற் காணாணின் மார்பு" (ஐங்குறு. 234) என்புழிப்போலத் தலைவி தோழியாற்றலைவனை வரைவு முடுக்குதல் பயனாகக்கொள்க. இனி, பொய்க்கனு மருட்டலால் அவர் மெய்யுறல் மரீஇய வாய்த் தகையால் ஏற்றெழுந்தமளி தைவந்தேன் என்பதுமாம்.

---

## ஆதிமந்தியார்

31\. மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே.

எ-து. நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகளறத் தொடு நின்றது.

(வி) மள்ளர் குழீஇய விழவினானும் - வீரர் திரண்ட வில்லேர் விழவினிடத்தும். இது வீரர் வில்லார் விழவெனப்படும்; "வில்லார் விழவினும்" என்பது திணைமாலை நூற்றைம்பது (62) மகளிர் தழீஇய துணங்கை யானும் - மகளிர் அவரவர்க்குரிய மள்ளரைத்தழுவியாடுந் துணங்கைக் கூத்திடத்தும். யாண்டும் - இவையல்லாத பிறவிடத்தும். மாண்டக்கோனைக் காணேன் - மாண்பினாற்றக்க தலைவனைக் காணக் கிடைக்கிலேன். மகளிர் தம் ஆடவரைத் தழுவியாடு இடமாதலால் மாண்டக்கோனை ஆண்டுந் தேடியது கூறினார். "மள்ளரன்ன மரவந்தழீஇ, மகளிரன்ன வாடுகொடி நுடங்கும்" (ஐங். 400) என உவமித்தலான் இவ்வுண்மையுணர்க. ஈண்டுத் துணங்கை பரத்தையராடுந் துணங்கையாம். இது தலைவி தானில்லாத மகளிர்துணங்கையிற் புக்குத் தேடியதனால் உணரப்படும். "முழவிமிழ் துணங்கை தூங்கும் விழவின், யானவண் வாரா மாறே வரினே, சுடரொடு திரிதரு நெருஞ்சி போல, வென்னொடு திரியா னாயின்" (அகம். 336) என்பது நயப்புப்பரத்தை கூற்றாதலான் இஃதுணரலாம். கணவனுள்வழிப் படுதல் வேண்டிப் பரத்தையராடுங்களனெல்லாம் புக்கு அலைதலான் கற்புடையாட்டியாகிய யான் ஓர் ஆடுகள மகளாயினேன் என்றிரங்கினாரென்க.

ஆடுகளமகள் தான் இல்லிறந்து மறுகிற்போய்ப் பல்லிடத்துந் திரிதற்குரியளென்பதும் அங்ஙனஞ் செய்வது கற்புடைப் பெண்டிர்க்கு ஆகாதென்பதும் "நீயே கான லொழிய யானே, வெறிகொள் பாவையிற் பொலிந்தவெ னணிதுறந், தாடுமகள் போலப்

பெயர்த லாற்றேன்" (அகம். 370) என வருதலானறியலாம். காதலற் கெடுத்துத் தேடப்புக்குக் கடைகழி மகளாயினேனன்றி அவனை யாண்டுங் கண்டிலேன் என்றிரங்கியவாறும். என்னோற் பரத்தையர் துணங்கையிற் றேடப்பட்டு அவனும் ஆடுகளமகனாயினனன்றி அவனைக் காணேன் எ-று. 'நாடகமகளிராடுகளத்து' (பெரும்பாண். 55) என்பதுங் காண்க.

யான் ஆடுகளமகளாம்படி என் கோடீரிலங்குவளை நெகிழ்த்த பீடுகெழுகுரிசிலும் என்னொத்த குடியின் யாண்டக்கோனாகியும் என்னோற்றுணங்கையிற்றேடப்பட்டு ஆடுகள மகனாகிய கூத்தனாயினன் எ-று. ஆடுகள மகள் விறலி எனினுமமையும். பீடு கெழு குரிசில் என்பதனால் அவன் அரசனாதல் புலப்படுத்தினார். அவனை "வஞ்சிக்கோன்" (சிலப். 21, 11) என்பர் இளங்கோவடிகள். 'வலம்படுகுரிசில்' (புறம்.50) என அரசரைக் கூறுதல் காண்க. இது பாடிய ஆதிமந்தியார் மன்னன் கரிகால் வளவன் மகளாதல் சிலப்பதிகாரத்தான் அறியப்பட்டது (சிலப். 21, 11). இப்பிரிவினால் என்னையுமிழிந்தான் தன்னையுமிழித்தான் என இரங்கியவாறும். இது புறமேனும் அகத்திணையிற் றொகுத்ததற்கேற்ப வேறு துறை கூறிற்றென்க. இவ்வுண்மை நச்சினார்க்கினியர் இது காதலற் கெடுத்த ஆதிமந்தி பாட்டு இவை தத்தம் பெயர் கூறிற் புறமாம் என்றஞ்சி வாளாது கூறினார் (தொல். அகத். 54) எனவும் "யாண்டுங் காணேன் என 'அவனுள்வழிப்பட்டுக் கூறினமையாற் கற்பின் பால்......நன்கு மதித்தவாறு காண்க" (தொல்களவு 22) எனவும் கூறியது கொண்டுணர்க. அங்குங் காணேன், இங்குங் காணேன், எங்குங் காணேன் என்பதே பொருத்தமாதலின் யாண்டுங் காணேன் என்ற பாடமே கொள்க. கோடீரிலங்குவளை மேலே கூறிற்று (குறுங். 11). மள்ளர் குழீஇய விழவிற்கும் கற்புடை மகளிர்புகுதற் குரியரல்லர் என்பது "எல்வளை மகளிர், துணங்கை நாளும்வந்தன வவ்வரைக், கண்பொர......மண்கொளற் கிவரு மள்ளர் போரே" (குறுங். 364) என்னும் பரத்தை கூற்றானுணர்க.

வெள்ளிவீதியாராகிய கற்பரசாட்டியார் தங்காதலனுள்வழிப் படுதல் குறித்து "யானே காதலற் கெடுத்த சிறுமையொடு நோய் கூர்ந், தாதி மந்தி போலப் பேதுற், றலந்தனெனுழல்வென் கொல்லோ" (அகம். 45) எனத் தஞ்செயற்கு எடுத்துக்காட்டாக இவ்வாதி மந்தியார் செய்கையைக் கூறுதலானும், வஞ்சின மாலையுள்

கண்ணகியார் தெய்வக் கற்புடையாட்டியர் வரிசையின் வைத்து இவரைச் சிறப்பித்தலானும் இவர் பத்தினிப் பெண்டிரே யாதல் நன்குணர்ந்துகொள்க.

இவர் காதலற் கெடுத்து அறிவு பிறிதாகிப் பேதுற்றுப் பன்னாட்டினும் பல்லூரினுந் தேடினாராதலின் யாண்டுங் காணேன் என்றார். "ஆட்டனத்தியைக் காணீரோவென, நாட்டினாட்டினூரினூரிற் கடல்கொண்டன்றெனப் புனலொளித் தன்றெனக், கலுழ்ந்த கண்ணள் காதலற்கெடுத்த வாதி மந்திபோல" என்பதனால் இஃதறிக (அகம். 236).

---

## அள்ளூர் நன்முல்லையார்

32. காலையும் பகலுங் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்
மாவென மடலொடு மறுகிற் றோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

எ - து. பின்னின்றான் கூறியது.

(வி) கையறுமாலை - செயலற்ற மாலைப்போது. கையறு மாலை என்றதனாற் செயலறாத காலையும், பகலும் என்று கொள்க. ஊர் துஞ்சியாமம் என்றதனால் விடியலைத் துஞ்சா விடியலும் என்று கொள்க. திரிசந்தி என்னும் வழக்கால் இரவிற்கு முன்னாகிய நாட்பாதியை மூன்றாக்கினான். இப்பொழுது இடைதெரியின்—இவ்வைம்பொழுதுகளின் செவ்வி தெரியப்படுமாயின்; இடை தெரிதல்-செவ்வியறிதல். 'இடை தெரிந்து...சொல்லுக'. (குறள். 712) என்புழிக் காண்க. இடை - இடம் எனக்கொண்டு பொழுதும் இடமும் தெரியிற் காமம் பொய்யே என்பதும் பொருந்தும்.

பிரிவுதலைவரின் - இக்காமக் கூட்டத்திற்கு இப்பொழுதானும், இடத்தானும் பிரிதல் தலைப்படின். மா என - இஃதொரு

குதிரை என்று கண்டாரிகழ. மடலொடு - மடலூர்தலான். மறுகிற்றோன்றி - தெருக்களிற்றோற்றஞ் செய்து. தெற்றென - தெளிய. தூற்றலும் - குறையெடுத்துரைத்தலும். பழியே - அவட்குப் பழிதருவதாகும். அங்ஙனம் ஊர்ந்து தூற்றாது வாழ்தலும், இப்பொழுதுகளையுடைய இவ்வுலகில் உயிர் வாழ்தலும் எனக்குப் பழிதருவனவாகும் எ - று.

ஊர்துஞ்சியாமம் என்று தான் துஞ்சுதலில்லாமை குறித்தான். கையறுமாலை என்று ஒரு பொழுதைப் பார்த்துத் தெரியான் என்று வைத்துத் தனக்கெப்போதும் கையறவுண்மை புலப்படுத்தினன். இடம் தெரியேன் ஆதலால் மடலொடு மறுகிற்றோன்றுவேனென்றும், அங்ஙனம் அன்றேற் காலங் கருதாமையால் நெடுநாள் வாழ நினையேன் என்றும் கூறிப் பின்னின்றான்.

மடலூர்ந்தால் உயிர் வாழ்வேனென்றும், மடலூரேனேல் உயிர் வாழேனென்றும் தெளியக் காட்டியவாறு. தெற்றெனவென்பதை ஈரிடத்துங் கூட்டுக. மெய்ப்பிரிவு தலைவன் தலைவியருள்ளத் தானில்லாமல் காலமும் இடனும்பற்றியே யுண்டாதலான் அவற்றையே பிரிவுக்குக் காரணமாக்கினும். தோழி தலைவியைச் சேட்படுத்துப் பொழுதுபற்றியும், இடம்பற்றியும், ஆகாமை காட்டித் தலைவற்கு மறுத்தலான் அவ்விரண்டும் பற்றிப் பிரிவு தலைவரின் என்றான். தானவளைத் தூற்றற்கு முன்னர் மடலொடு மறுகிற்றோன்றி என்றதனாற் றூற்றப்படுதலும் குறித்தான். 'மறுகினார்க் கவும்படுப' (குறுந். 17) என்றது காண்க. பொழுதிடை தெரியாத உண்மைக் காமம் உடையார் இவை செய்ப எ - று. தூற்றல் பழி என்ற தோழிக்குத் தூற்றலும் வாழ்தலும் பழி என்றானென்பதும் ஆம்.

## படுமரத்து மோசிகீரனுர்

33. அன்னா யிவனே ரிளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே.

எ - து. வாயிலாகப் புக்க பாணன் கேட்பத் தோழியை நோக்கித் தலைமகள் வாயில் நேர்வாள் கூறியது.

(வி) அன்னாய் - எனக்குத் தாயன்பு செய்தற்குரிய தோழியே; தலைவி தோழியை அன்னை என்றல் 'அன்னையென்னை யென்றலுமுளவே" (தொல்-பொருளி. 52) என்பதனான் அமைந்தது. இவன் - இப்பாண் மகன். ஓரிள மாணாக்கன் - பல் மாணாக்கருள்ளும் கல்வியைத் தொடங்கி ஓர்கின்ற வயதினிளைய கற்றுச் சொல்லி. தன்னூர் மன்றத்து - தான் பிறந்தவூரிலுள்ள அவைக்கண் ஏறிய காலத்து; என்னன் கொல்லோ - எத்தகையனாவனோ. இரந்தூண் நிரம்பா மேனியொடு இவன் - இரந்தும் உண்ணும் ஊண் நிரம்பாத உடம்போடு உள்ள இவன். விருந்தினூரும் பெருஞ்செம்மலனே-அம்முது காலத்துப் பலரழைத்து இடும் விருந்திறேடு யானை, பரி, தேர் இவற்றினூர்ந்து செல்லும் தலைமையையுடையவனேயாவன் எ-று.

இரந்தூண் நிரம்பா மேனியென்றும் இளமாணாக்கன் என்றும் சொல்லி, இப்போதுள்ள தாழ்ந்த நிலையும், விருந்தினூரும் பெருஞ் செம்மலனே என்றும், தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ என்றும் சொல்லி, வருங்காலத்துயர்ந்த நிலையும் புலப் படுத்தினாளென்க. இளமாணாக்கன் - இன்னும் ஊர் மன்றம் ஏறாது மையோலை பிடிக்குங் கற்றுச் சொல்லி எ - று. பாணன் சொல்வலிமைக்குத் தோற்று வாயில் நேர்ந்தாள் (தொல்-கற்பு-6-நச்.) ஆதலான் அவன் மழபுலமை கொண்டு, முதுபுலமை அளக்கின்றாள் என்பதே பொருந்திற்றாகும். தன்னூர் என்றதனால் தலைவன் நயந்த பரத்தையூர் வேற்றூராதலுணரலாம். பரிபாடலின் "மையாட லாடல் மழ புலவர்" (11-88) என்புழிப் பரிமேலழகர் கல்வி தொடங்கின அளவாதலின் மழபுலவர் என்றார் எனக் கூறுதலான் இளமாணாக்கன் என்பதன் பொருள் உணரலாம்.

"களிறு மன்றே மாவு மன்றே, ஒளிறுபடைப் புரவிய தேரு மன்றே பாணர் பாடுநர் பரிசிலராங்கவர் தமதென" (புறம். 135) என்பதனால் இவர்களிறு முதலியன ஊரும் செம்மல் என்பதுணரலாம். இளமாணாக்கன் நிலையிலே இவன் சொல்லிய விரகுடை இன்சொற் கேட்டு இவனெய்தும் முதுபுலமை நிலையை வியந்தனளாதலால் வாயில் நேர்ந்தாள் ஆதல் உணர்க.

படுமாத்தூர் என்பது சேது நாட்டுச் சிவகங்கையைச் சார்ந்துள்ள ஊர். படுமா - பெருமா மரம். படுசினை - பெரிய கொம்புகள். (அகம். 11) என்பது காண்க.

---

## கொல்லிக் கண்ணனார்

34. ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்றாய்
இனிய து கேட்டின் புறுகவிவ் வூரே
முனாஅ தியானையங் குருகின் கானலம் பெருந்தோ
டட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉம்
குட்டுவன் மாந்தை யன்னவெம்
குழல்விளங் காய்நுதற் கிழவனு மவனே.

எ-து. வரைவு மலிந்தமை ஊர்மேல் வைத்துத் தோழி கிழத்திக்குச் சொல்லியது.

(வி) ஓவலர் ஒறுப்ப—விட்டு நீங்காததாயர் வைது ஒறுக்கா நிற்கவும். நீங்காதாராய் ஒறுப்ப என்பதுமாம். தேறலர்- களவிற் கூடியது தேறுதவராய். மறுப்ப-தலைவர்க்கு மணமறுக்கா நிற்கவும். தமியருறங்குங் கவ்வை-தலைவரைக் கூடப் பெறுது தமித்துள்ள தலைவியர் உறங்குதற்குக் காரணமாகச் சொல்லுங் கடுஞ்சொற்கள். இன்றாய்-இனி இல்லையாகி. இவ்வூர்-இவ்வூரினுள்ளவர். இனியது கேட்டின்புறுக-இனியதாகிய மணமங்கல விசைகேட்டு இன்பம் அடைவாராக. களவிற் பின்னுங் கூடப் பெறுமைக்குத் தாயர் நீங்காது வைவதே தடையென்பதறிய ஓவலர் ஒறுப்ப என்றும், கற்பிற் கூடாமைக்குத் தேறலராய்த் தலைவர்க்கு மணமறுத்தலே தடையென்பதறியத்

தேறலர் மறுப்ப என்றுங் கூறினுள். இவ்விருபடியானும் தலைவரைக் கூடப் பெறுதுள்ள நிலைதெரியத் தமியர் என்ருள்: தமியராய நிலையில் உறக்கம் வராமை தெரிய உறங்கும் கவ்வை என்ருள். இவ்வூர் இதுகாறும் தமியரைத் துயிலும் பொருட்டுத் தாயர் செய்யும் கவ்வை கேட்டுத் துன்புற்றது. இனி மங்கல இசை கேட்டின்புறுவதாக என்ருளாம். இனியது—இல்லறத்துப் புகழ் விளைத்து வாழ்வது எனினும் பொருந்தும். இனியது கேட்டின்புறுக என்றதனுல் இதுகாறும் கவ்வை கேட்டுத் துன்புற்றது புலப்படுத்தினுள். உறங்குங் கவ்வை — துயிலுந் தாலாட்டு என்பது போல வந்தது.

முனுஅது—தாயர் மறுத்தற்கும் வரைவுடன் படுதற்கும் முற்ருேட்டே. ஆய் நுதற் கிழவனுமவனே—நுணுகிய நுதலையுடையாட்குரிய கிழவனும் அத்தலைவனேயாம். முனுஅது கிழவனுமவனே என்றதனுற் பினுஅதும் அவனே கிழவனுக வரைவு மலிந்தமை குறித்தாள். கானலிலுள்ள, யானையங் குருகின் பெருந்தோடு - யானை பிளிறுதல் போலக் குரல்செய்யும் ஒரு வகைக் குருகுகளின் பெருந்தொகுதி என்க. அட்டமள்ளர்—வென்ற வீரருடைய, ஆர்ப்பிசை வெரூஉம்—ஆர்ப் பொலிக்கு அஞ்சுதற்குக் காரணமான. குட்டுவன் மாந்தையன்ன—குட்டநாடுடையவனது மாந்தையை யொத்த. எம் குழல் விளங்கு ஆய் நுதல்—குழலையடுத்து விளங்கும் நுணுகிய நுதலையுடைய எந் தலைவிக்கு. முனுஅது அவனே கிழவன் - முன்ருேட்டு அவனே கிழவன். இங்ஙனம் முன்ருேட்டுள்ளவன் கிழவனுகானேல் இவ்வூர் இனியது கேளாது துன்புறுவதாகும் என்று தலைவியது உயிர்விடுந் துணிவு புலப்படுத்தினுளுமாவள் "நின்ருேன்போலு மென்றுமென் மகட்கே" (அகம். 110) என்புழி என்றும் என்பதனுல் முனுஅதும் பினுஅதும் அவனே கிழவன் எனக்கொள்ளுதலே சிறந்ததாதலுணர்க.

முத்தொள்ளாயிரத்து "மல்லனீர் மாந்தையார் மாக் கடுங்கோக் கோதைக்கு" என வெண்பாவடியின் வருதலால் இவ்வூர்ப்பெயர் மரந்தை யாகாமை நன்கு துணியப்படும். மேற்றிசை யாத்திரிகரால் இவ்வூர் பின்னுளில் மாதையென வழங்கப் பட்டது. ஆஅய்வேட் குரிய பொதியிற் புறத்துக் கடலில்லாத அகநாட்டில் மரந்தை, முரந்தை எனப் பெயரிய தோரூருண்மை

தாலமி பூகோள நூலிற் கண்டதாம். அது கடற்றுறையூரில்லாமை யால் இம்மாந்தை அதனின் வேருய கடற்றுறைப் பட்டினமாதல் நன்குணரலாகும். மாந்தைவருமிடங்களிற் கடல் கூறப்படுதல் நோக்கியறிக. மள்ளர்—களங்கொள் வீரர். “களங்கொண் மள்ளரின் முழங்கும்” (அகம். 227) என்பது காண்க. சேரற்குரிய கொல்லி மலேயிற் கண்ணனர் ஆதலால் அவற்குரிய மாந்தைத் துறையையுங் கூறினர்.

---

## கழார்க் கீரனெயிற்றியார்

35. நாணில மன்றவெங் கண்ணே நாணேர்பு
சினைப்பசும் பாம்பின் சூன்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி யவிழ
நுண்ணுறை யழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே.

எ - து. பிரிவிடை மெலிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

(வி) நாள் நேர்பு—வாடைப் போதிற்கு முன்வருவமென்று அவர் பிரிந்துறையக் குறித்த நாள்களைத் தாம் உடம்பட்டு; என்றது பிரியும் நாள் இவ்வளவென்று கூறிப் பிரியும்போது அவர் காண அழுது அவரைத் தடுக்காதுடம்பட்டமை குறித்தாள். வாடையும் பிரிந்திசினோர்க்கு—வாடைப் போதினும் பிரிந்து உறைவார் பொருட்டு. அழலே—அவர் காணுமைனின்று அழற்கு. என் கண்ணே நாணில—என் கண்கள் நாணில எ-று. மன்ற—தேற்றமாக. அவர் பிரியவிட்டுப் பின் அழுதல் செய்யாமையே வேண்டுவது. பின் அழுகை வருமாயின் அதற்கு நாணவேண்டுவ தென்பது குறிப்பு. அவர் ஒருவர் காண அழாது இங்குப் பலர் காண அவர்க்கழுதற்கு நாணில என்ருள். பசும்பாம்பின் சினைச் சூன் முதிர்ப்பன்ன கனைத்தகரும்பின் என்க. கூம்புபொதி—கூம்பிய பூப்பொதி. நுண்ணுறையும் அழிதுளியும் பெய்து என்க. நுண் உறை—சிறு தூவல். அழிதுளி—பெருந்துளி; “பெரும் பெயலழிதுளி பொழிதல் ஆனது” (அகம். 214) எனவும், “ஆலி

யொடு, பரூஉப் பெயலழிதுளிதலைஇ" (அகம். 304) எனவும் வருத லானறிக. கனைத்த—பருத்த "கனைத்த நெய்தல்" (அகம். 150) பிரிகின்றுழி அழாது பிரிந்த பின்னர் அழுதலான் ஒரே வினையை இடனறிந்து செய்து பயன் கொள்ள அறியாது இடனில் இடத்துச் செய்து நீராறுதற்கு இக்கண்கள் நாணில எ-று.

---

பரணர்

36. துறுகல லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவருங் குன்ற நாடன்
நெஞ்சுகள னாக நீயலென் யானென
நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்
தாவா வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே.

எ-து. வரைவிடை வைத்துப் பிரிய, ஆற்றாளெனக் கவன்று வேறுபட்ட தோழியைத் தலைமகள் ஆற்றுவித்தது.

(வி) மாணை மாக்கொடி, நிலத்த துறுகல் அயலதாகவும் அதன்மீது படர்ந்து பற்றுக் கோடௗதாகாது துறுகற் போலத் தோன்றிய துஞ்சுகளிற்றின் மீது படர்ந்தேறும் குன்ற நாடன் எ-று. துஞ்சுமளவின் அதன்மீது கொடி இவர்தல் கூறுதலான் இக்கொடி விரைந்து நீளுமியல்பின தென்று துணியப்படும் "துறுகல் யானையிற் றோன்றும்" (குறுந். 279) என்பதனுல் துறுகல், யானை போறல் காண்க. இதனுல் துறுகற்கும் யானைக்கும் வேற்றுமை தெரியாது, துறுகல்லிற் படரவேண்டுவது யானை மேற்படர்ந்தது என்பதாம். பெயராத பற்றுக்கோடு என நினைந்து பெயருங்களிறு போல்வானைப் பற்றித் தழீஇயது குறித்தாள். கொடி தனித்து அலமரக் களிறு பெயர்தல் நினைக. நெஞ்சுகளனாக—தன் நெஞ்சமே அறியும் அவைக்களனாக. நீயலென் யானென—நின்னையான் பிரியேன் என்று. நற்றோள் மணந்த ஞான்றை—என் நல்ல தோள்களைக் கலந்துள்ள போது. நற்றோள் என்றாள் மணத்தற்குமுன் நல்லனவாய் இப்போது மெலிதல் குறித்து. தாவாவஞ்சினம் உரைத்தது—கெடாத சூளுரைத்தது. உரைத்தது என்றது உரைத்ததுமட்டுமே; செய்திலன்

எ-று. நோயோ நின்வயினனே சொற்படி செய்யாத அவனுக்கு நோயாகும். அது கேட்டு மகிழ்ந்த எனக்கு நோயாகும், நின் கண் நோயாவதோ எ-று. பெயருங் களிற்றின்மேற் கொடியிவர்ந் ததுபோலப் பெயருங்களிறு போல்வானைப் பெயராப் பற்றுக் கோடாகக் கருதித் தழீஇயதும் அவன் வஞ்சினத்தை நம்பியதும் என் தீவினையென்று யானிருக்கவும் என்பாற் கேட்ட நின்கண் நோயாகுமோ அங்ஙனம் நோயாயின் வஞ்சினம் பொய்க்காது அவனை விரைந்து வரைவொடு வரச்செய்க என்பது குறிப்பாம். "அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற் றேறியார்க் குண்டோ தவறு" (குறள் 1154) என்புழிப் பரிமேலழகர் அவர்க் கன்றி அவர் தெளிவித்த சொல்லை மெய்யெனக் கொண்டார்க்குக் குற்றம் உண்டோ எனக் கூறிச் சொல்லும் செயலும் ஒவ்வாமைக் குற்றம் அவர்க்கெய்தும், அது எய்தாவகை அழுங்குவி என்பது கருத்து, என்றாற்போல அவர் வஞ்சினம் உரைத்தது பொய்யா காவாறு விரைந்து வரைவொடு வரச்செய்க என்றதாகக் கொள்க. நெஞ்சுகளனாக உரைத்தது பொய்ப்பின் தன்னெஞ்சே தன்னைச் சுடும் ஆதலால் அவற்கு நோயாதல் தெள்ளிது ; அவன் நோய் என் நோயாய் என் நோய் நின் நோயாய் ஆயினதோ என்றாள் எனினும் அமையும். களன்—அவைக்களம் "களனஞ்சி" (குறள். 730) என்பதனால் உணர்க. தன்னெஞ்சு அறிவதாதலின் தன் நெஞ்சே இது செய்த அவைக்களனாக என்க.

---

## பாலைபாடிய பெருங்கடுங்கோ

37. நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே.

எ-து. தோழி, கடிது வருவாரென்று ஆற்றுவித்தது.

(வி) முன்னரே நசையுடையர் சென்ற ஆறுகள் பிடி பசி களைதற் பொருட்டுப் பெருங்கை வேழம் யாஅம் பொளிக்கும் அன்பின ஆதலால் அது கண்டு நசை பெரிதுடையராய் நல்கலும் நல்குவர் எ-று. மென்சினை யாஅம் என்றார் வேழம் தன்

கொம்பால் அன்றித் தன் பெருங்கையாலே பொளித்தற்குரியது பற்றி. பொளித்தல்—உரித்தல். பிடி பசிகளைதற்கு வேழம் பொளிக்கும் அன்பின என்றதனாற் களிறு தன்பசி களைய நினையாது தன் பிடிபசி நீங்க வினைசெய்து உதவலே பயனாக நினையும் அன்புதெரிந்து நசைபெரிதுடையர் ஆவர் எ-று. ஒரு விலங்கு செய்யும் அன்பு கண்டு தாம் இங்ஙனம் ஆவர் என்பது "சிறுகட் பெருநிரை யுறுபசி தீர்க்கும், தடமருப் பியானை" (குறுந். 255) என்புழிப் பெருநிரை யுறுபசிதீர்க்கும் யானை என்றதன்றித் தன்பசி தீரும் யானை யெனக் கூறாத நயம் நோக்கியுணர்க. ஆறு அன்பின—வழிகள் அன்புள்ள இடமாயின. ஆறுகளில் வேழங்கள் அன்பின எனினுமமையும். உடனுறையும்போது நசையுடையர் பிரிந்து சென்றவழி அன்பின கண்டு நசை பெரிதுடையராய் நல்குவர் எ-று. நல்கலும் நல்குவர் என்புழிப் பிரிந்து நல்காமையைச் செய்தலைத் தழீஇயிற்று. மென்சினையாஅம்—வறுமையுற்ற கொம்பினையுடைய யாஅமரம் "மெல்லியர் செலினுங்கடவன்பாரி கைவண்மையே" (புறம். 106) என்புழி மென்மை இப்பொருட்டாதல் காண்க. பொளிக்கும்—பட்டை உரிக்கும். "பெரும்பொளி வெண்ணார்" (அகம். 83) என்றது காண்க. சினைவறிதாதலாற் பொளிக்கும் என்றவாறும். "மூளிசினை மராஅத்துப் பொளிபிளந் தூட்ட" (அகம். 335) என்றது காண்க. ஆறுகள் அன்பின என்றது மேற்கூறியவாறு உணவால் வறிய அவ்வழிகளும் அன்பு பெருகின என்று காட்டியதாம்.

---

## கபிலர்

38. கான மஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்
குன்ற நாடன் கேண்மை யென்றும்
நன்றுமன் வாழி தோழி யுண்கண்
நீரொ டொராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே.

எ-து. வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்குக் கூறியது.

(வி) மஞ்ஞை கான அறை ஈன் முட்டை - மயில் காடு செறிந்த பாறையில் ஈன்ற முட்டையை. முசுவின் ஆடு குருளை - கருங்குரங்கின் விளையாடுங் குட்டி. வெயிலில் உருட்டும்: குன்ற நாடன் என்க. முட்டை கான நிழலிற் பாறையிற் கிடந்து உள்ளே உள்ள குஞ்சு வாளாசாம்பாது, நினையாமல் அது வளரும் படி வெயிலில் உருட்டும் நாடன் என்று விலங்கிற் சிறிதும் தானறியாமலே விளையாட்டினும் நன்று புரியும் நாடன் என்றதாகக் கொள்க. ஆடுகுருளை - "வரையாடுவன்பறழ்" (குறுந். 26) என்றாற்போல வந்தது. வெயிலிலுருட்டும் என்றதனால் மயில் நிழலில் ஈன்றதென்பது பெற்றாம். குருளை யுருட்டும் என்றதனால் அடைகாத்தற்கு மயில் ஆண்டில்லாமை உணரலாம். நாடன் கேண்மை என்றும் நன்றுமன் - தலைவன் நட்புப் பிரிந்தநாளினும் நன்மையுடைத்துமிக. யார்க்கெனின், உண்கணீரொடு ஓராங்குத்தணப்ப- அவன் தணந்தவுடன் தம் உண்கணீரும் ஒரேபடியாகத் தணப்ப. உள்ளாது — அவனை மனத்தால் நினையாமல். ஆற்றல் வல்லுவோர்க்கே – உயிராற்றுதலை வல்லுதல் செய்வோர்க்கே. எ - று. அவனை உள்ளுதலால் ஒருவாறுயிராற்றலாம் ஆதலான் உள்ளுதல் செய்யாது உயிராற்றுதல் செய்தல் அரியதோர் வன்மை என்பாள் வல்லுவோர் என்றாள். வல்லுதல் - வினை. அது முக்காலத்தும் வல்லியோர், வல்லுநர், வல்லுவோர் என வருதல் காண்க. எதிர்மறையிலும் வல்லார் எனவரும். அவனை உள்ளுதலாற்றலவியுளளாவள். "மற்றியானென்னுளேன் மன்னோ வவரொடியானுற்ற நாளுள்ளவுளேன்" (குறள் 1206) என்ப. அறையீன் முட்டையை அறையாடு குருளையுருட்டுமென்க. துறுகல்லிற் குரங்குகள் உகளல் "துறுகற் கல்லா மந்தி கடுவனொடுகளும்" (ஐங்குறு. 277) என்பதனால் அறிக. முட்டை குருளையுருட்டும் நாடன் ஆகியும் பிள்ளைப் பேறெய்தவரைந்துதவாது தாழ்ப்பவன் என்று கருதியதாம். குருளை விளையாட்டில் முட்டையுட் குஞ்சுக்கு இடர் செய்வதுபோலத் தன் விநோதத்து நீளுதலான் வரையாது நம்மை இடர் செய்பவன் என்பதாம் எனினும் நன்கு பொருந்தும்.

---

## ஔவையார்

39. வெந்திறற் கடுவளி பொங்காப் போந்தென
நெற்றுவிளை யுழிஞ்சில் வற்ற லார்க்கும்
மலையுடை யருஞ்சுர மென்பநம்
முலையிடை முனிநர் சென்ற வாறே.

எ-து. பிரிவிடை ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்கு 'யாங்ஙனம் ஆற்றுவேன்' எனத் தனது ஆற்றாமை மிகுதி தோன்றத் தலைமகள் கூறியது.

(வி) வெந்திறற் கடுவளி பொங்காப் போந்தென: வெங்கடுவளி எனவும் திறற்கடுவளி எனவுங் கொள்க. வேந்தெறல் எனவும் காணப்படும். வேம்—வேகும். "உள்ளம் வேமே" (குறுந். 102) பொங்காப் போந்தென—பொங்கி வந்ததாக. உழிஞ்சில் நெற்று விளைவற்றல் ஆர்க்கும்—வாகையின் நெற்றாய் விளைந்தவற்றல்கள் ஆரவாரிக்கும். மலையுடையருஞ்சுரம் என்ப—குன்றுகளும் உடைகின்ற அரியபாலை என்பர். ஆர்க்கும் அலையுடை அருஞ்சுரம் என்றும் ஆம். அலை—கள்வர் அலைத்தல். சுரத்தின் இயல்பானும் மக்களானும் கேடுதருதல் குறித்தது. மலையுடையருஞ்சுரம்—'வரைபிளந்துக்க ஆரிடை' (கலித். 2) என்றது காண்க. பொங்கர்ப்போந்தென என்பது பாடம் எனின் கடுவளி பொங்கரிற் போந்தாற் போன்று வற்றல் ஒலிக்கும் என்று உவமையிற் கொண்டு பொருள் கூறுக. முலையிடை முனிநர்—முலையிடைக் கிடந்தும் பிரிவர் என்ற குறிப்பால் நம்மால் ஊடி முனியப்படுவர் சென்ற ஆறு அருஞ் சுரமென்க. "முலையிடை வாங்கி முயங்கினனீத்த கொலைவனை" (நெய்தற்கலி. 30) என்புழிப்போல முயங்கிநீத்தலால் முனிநர் என்றாள் எனினுமமையும். முலையிடைக்கிடந்து அவர் அதை முனிந்து பிரிதல் ஓர் அரிய செயல் எ-று. முலையிடைத்தட்பத்தை முனிந்து அருஞ்சுர வெப்பத்தை விரும்பினர் என்பதாம். உடம்பு முலையிடைக் கிடக்கும்போதே பொருள்மேற் பிரிதலை நினைந்து அம்முலைகளை உள்ளத்தால் முனிந்தவர் என்றதுமாம். மலையுடைதல் கண்டு அறிவில்லாத வற்றலும் ஆர்க்கும் என்பது தோன்றவைத்தவாறு. இனி ஆர்க்கும் அலையுடை அருஞ்சுரம் என்றதற்கேற்ப வற்றல் ஆர்த்தலால் வழிச்செல்வார் துயருற்றழுதா

லும் பிறர் கேளாமையும் கேட்டால் ஆண்டுள்ள கள்வர் அலைத்த லும் உடைய அருஞ்சுரமென்றதாகக்கொள்க.

---

## செம்புலப் பெயனீரார்

40. யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

எ-து. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர், பிரிவ ரெனக் கருதி அஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு தலை மகன் கூறியது.

(வி) யாயும் ஞாயும் - என் தாயும் நின் தாயும். யார்-என்ன உறவினர். 'யாஅரென்னது' (அகம். 50) என்புழிக் காண்க. எந்தையும் நுந்தையும் எனவும், யானுநீயுமெனவுங் கூறலான் அவற் றிற் கேற்ப யாயும் ஞாயும் என்பன என் தாயும் நின் தாயுமாதல் நன்குணரலாகும். என் தந்தையும் நின் தந்தையும் எம்முறைமை யுடைய உறவினர். இருவர்க்குமுள்ள இருமரபுங் கூறினான், எவ்வழியறிதும் - எக்குடிவழி என்று அறிதும்; எவ்விடத்தினர் என்று அறிதும் என்பதுமாம். செம்புலப் பெயனீர் போல - செந் நிலத்துப் பெய்யும் மழை நீரைப்போல. உடை நெஞ்சம்தாம் - நம்முடைய உள்ளம் தாமாக. அன்பு கலந்தன எ-று. பெயல்மேலே வானத்தும் செம்புலம் கீழே தரையினும் வேறு வேறிடங்களில் வேறு வேறாகவுளவேனும் இவை தாமாக இயைந்து ஒரே செந்நீர் ஆயினாற்போல வேறு வேறிடத்து ஒரு வர்க் கொருவர் உறவில்லாது வேறுபட்டிருந்தும் நம் நெஞ்சங்கள் தாமாகக் கலந்து அன்பால் ஒன்றாயின என்றதாம். செந்நீர் என் றது செம்மண் அணுக்களும் நீரும் உடையதாய் ஒன்றானாற்போல வேறுவேறாயும் கலந்து, ஒன்றாயினோம் எ-று. செம்புலப் பெயல் - செம்புலத்தொடுகூடிய பெருமழை. செம்புலத்தின் மழை பெய் தற்கு அச்செம்புலம் ஒரு முயற்சியும் செய்யாதாகவும் அது தெய்

வத்தாஞதல்போல இக்கலப்பும் தெய்வத்தாஞயது என்பது கருத்து. 'கடவுண் மழை' என்ருர் ஆளுடையடிகளும் (திருக்கோ. கொளு. 279). அன்புடை நெஞ்சம் என்றதற் கேற்ப நெகிழும் இயல்புடைய செந்நிலமும் கலத்தல் குறித்தாளும். இங்ஙனம் அருமையான உவமைகூறிய சிறப்பால் இப்பாடலுடையார் செம் புலப்பெயனீரார் எனப்பட்டவராவர்.

---

## அணிலாடு முன்றிலார்

41\. காதல ருழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற
அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்
மக்கள் போகிய வணிலாடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்
றலப்பென் ரோழியவ ரகன்ற ஞான்றே.

என்-து. பிரிவிடை வேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

(வி) காதலர் உழையராக - காதலர் நம்பக்கலில் உள்ளவராக. அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர் பெரிதுவந்து - காட்டிடத்து நான் நண்ணியுள்ள அழகிய குடிகளையுடைய சிறிய ஊரினைப் பெரிதாக மகிழ்ந்து. சாறு கொளூரிற் புகல்வேன் - விழாக் கொண்ட பேரூர் போல விரும்புவேஞகிய யான். அவர் அகன்ற ஞான்றே - அவர் பிரிந்து சென்ற அந்நாளே. மக்கள் போகிய - மக்கள் இரியல் போகியதஞல். அணிலாடு முன்றில் - அணில்கள் விளையாடும் முற்றத்தையுடைய. புலம்பு இல்போல - தனி மனை போல. புல்லென்று அலப்பு என்-புல்லென்னப்பட்டு அலத்தற்குக் காரணம் யாது. காதலர் உழையராகத் தன் சீறூர் உவந்து சாறு கொள்பெரிதாகிய ஊர்போல விரும்பப்படுதலும் அவர் அகன்ற ஞான்றே மக்கள் போகிய புலப்பில் போல அலப்பும் என் என்ருளாம். அலப்பு - மிடியுமாம். அலந்தவர் - மிடித்தவர் என்பது (நெய்தற்கலி. 16, 6) என்பதஞல் அறியலாம். தன்னூர் அத்தம் நண்ணிய சீறூராகியும் அது சாறு கொள் ஊராதலும் அது புலப்பில் ஆதலும் காதலர் உழையிருப்பதாளும் அகறலாளும் நேர்தல்

காட்டினுள். சீறூர் பெரிதாதற்குச் சாறுகொள் ஊரும் அஃது ஊரேயாகாதென்றற்கு மக்கள் போகிய பாழ்மனையும் எடுத்துக் காட்டினுள். அத்தம் நண்ணிய சீறூர் என்றதனுல் தலைவனும் தலைவியும் பாலை நிலமக்களாதல் துணியலாம். 15-ஆம் பாட்டில் விடலை என்ற பெயர் பற்றிப் பாலைநிலத் தலைவன் என்றது காண்க (தொல். கற்பி. 2 இளம்.) இதன்கண் மக்கள்போகிய புலப்பில் லாக நினைதல் காட்டியதனுல் தானிருந்தும் இல்லாதவளாதலை உடன் கூறினுள் என்பதாம். அவரில்லாதது உறைபதி அன்று என்று கூறினுள் எனினுமமையும். அவர் அகன்ற ஞான்றே துயருறுதல் என்னென்று வினவி அவர் அகன்ற நாள்முதல் இன்று வரைப்பாழ்மனையில் அவர்வரல் நசைஇ ஆற்றியிருத்தல் காட்டிப் பின்னும் ஆற்றுவல் என்று குறித்தவாறும். நச்சினுர்க்கினியர் "ஆற்றுவல் என்பதுபடக் கூறியது" (தொல். கற்பி. 6) என இதை உரைத்தது காண்க. தன் வேறுபாடு கண்ட தோழிக்கு அவர் அகன்ற ஞான்றே ஊர் வேறுபாடு கண்டு உள்ளம் துயருழப் பது என்றும் அதனுல் உடம்பு வேறுபாடு உண்டாயிற்றென்றும் கருதிக் கூறினுள். மக்கள் போகியதனுல் பிள்ளைகளாடு முன்றிலா காமை அணிலாடு முன்றில் என்பதனுற் குறித்தாள். 'இன்னு தன்றே யவரில்லூரே' (நற். 216) என்பது காண்க.

---

## கபிலர்

42\. காம மொழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென வருவி
விடாகத் தியம்பு நாடவெம்
தொடர்புந் தேயுமோ நின்வயி னுனே.

எ-து. இரவுக்குறி வேண்டிய கிழவற்குத் தோழி நேர்ந்த வாய்பாட்டான் மறுத்தது.

(வி) காமம் - நீ மெய்யுற்றுத்துய்க்கும் இன்பம். இரவுக் குறிவாயாமையால்: ஒருகால் ஒழிவதாயினும். நாடநின் வயின் எம் தொடர்பும் தேயுமோ - நாடனே நின்னிடனுண்டாகிய எம் தொடர் நட்பும் குறையுமோ எ-று. தேயுமோ என்பதனுற் றேயாது வளரும் என்று குறித்தாளாம். ஒழிவதாயினும் என்றத

ஞல் இரவுக் குறியும் அரிதென்று குறித்தாள். தொடர்பு தேயாது என்றதஞல் அம்மெய்யுறு புணர்ச்சியை வரைவிற் பெறுக என்ருளாம். யாமத்துக் கருவிமாமழை வீழ்ந்தென - இரவில் தொகுதியையுடைய கரிய மழை பெய்தது என்று. விடரகத்தருவி இயம்பும் நாட - முழைஞ்சுகளிடத் தொழுகும் அருவி தெரிய ஒலிக்கும் நாட என்க. என்றது இரவில் மக்கள் அறியாது சேய்மைக்கண் மலையில் மழை பெய்தது என்பதைக் காலையில் விடரகத்தருவி வழியளவையான் அறியச் சொல்லுதல்போல மறைவிற் புணர்ந்தாலும், இவள் மெய்வேறுபாட்டான் அநுமானிக்கப்பட்டுப் பிறரால் அலர் தூற்றப்பட்ட நட்பு என்பது குறித்தாள். இதஞல் விரைவில் வரைதல் பயனென்க.

யாமத்து மழை வீழ்ந்ததென அருவி இயம்பும் என்றது வழியளவைக் கெடுத்துக் காட்டாதல் காண்க. இது காரியத்தாற் காரணத்தை அறிந்தவாரும். இது வழியளவைகளின் பொது, எச்சம், முதல் என்னும் வகைமை மூன்றனுள் எச்சத்தின்பாற்படும் என்பது, "வெள்ள ஏதுவிஞல் நிச்சயித்தத் தலைமழை நிகழ்வுரைத்தல்" (சமயக். 33, 34) என மணிமேகலையுட் சாத்தஞர் கூறுதலான் அறிக.

இவள் மெய்வேறுபாடும், பல்கால் நின் வரவும் ஆகிய காரியங்களால் இத்தொடர்பு பலரறிய இயம்பப்பட்டு ஓங்குவது என்று உய்த்துணர்ந்து கொள்ளவைத்தவாரும்.

காமம் உடம்புபற்றியது. அது காலம்பற்றியும் இடம்பற்றியும் இடையீடுபட்டுக் கிடையா தொழிவதாயினும், உயிரோடுள்ள இத்தொடர்புந் தேயுமோ என்பதாம். இம்மையினும் மறுமையினுந் தேயுமோ என்பதும் ஒன்று. "பிரியினும் பிரிவதன்றே நின்னொடு மேயமடந்தை நட்பே" (ஐங். 297) என்பது காண்க. வீழ்ந்ததென என்பது வீழ்ந்தென என மரீஇயிற்று.

## ஔவையார்

43\. செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தனனே
ஒல்வா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
ஆயிடை, இருபே ராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்கென்
அல்ல னெஞ்ச மலமலக் குறுமே.

எ-து. பிரிவிடை மெலிந்த கிழத்தி சொல்லியது.

(வி) அவர் நசைபெரிதுடையராதலால் என்னைப் பிரிவாற் ருர் ஆதனுற் செல்வாரல்லர் என்று அவர் செலவு தடுப்பது யான் இகழ்ந்தனன். பிரிவு அறியாத இவள்பால் பிரிவுரைத் தால் அதற்குப் பொருந்தாளென்று, அவரே செலவுரைத்தலை இகழ்ந்தனர். "ஒல்லேம் என்றதப்பற் சொல்லா தகறல் வல்லு வோரே" (குறுந். 79) என்றது பார்க்க. இருபேர் வீரியஞ் செய்த பூசல் நிகழும் அவ்விடையில் ஒரு பேரை நல்லபாம்பு தீண் டினற்போல என் நெஞ்சத்தை அல்லல் ஆனது அலமலக்குறச் செய்யும் என்க. அல்லல் - பிரிவுத் துன்பம். முதற்கண் அறியப் படாமல், விடம் தலைக்கேறிய அளவில் இது நல்லராத் தீண்டிய தனுல் ஆயதென்று அநுமானிக்கப்படுவதுபோல இவ்வலமலக்குறற் குக் காரணம் பிரிவு அல்லல் என்று உணரப்படுவது எ-று. நல் அரா—பொல்லாங்குக்கு நல்லதானபாம்பு. இங்ஙனமே நன் குரங்கு (சிந். 1997) என்புழி நச்சினர்க்கினியர் பொல்லாங்குக்கு நன்முன குரங்கு என்றது காண்க. பேர்—பெயர் "பசப்பெனப் பேர் பெறுதனன்றே" (குறள் 1190) என்ப.

பேராசிரியர் வேறுபடவந்த வுவமத்தோற்றம் (தொல் உவ. 33) என்புழிப் "பெயர் என்பது பொருள் உணர்த்துதலின் அதனை உருவின்பாற் படுத்துணர்க" எனக் கூறியதனுல் இவ் வழக்குண்மை உணர்க. அகநானூற்றுப் பழையவுரைகார் "கடுஞ் சொற்சொல்லுகிற பேரும் இன்சொற் சொல்லி வரைவுடம்படு வர்" (அகம். 72) என்றது காண்க.

## வெள்ளி வீதியார்

44. காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

எ-து. இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது.

(வி) காலே பரிதப்பின-இருகால்களும்நடந்து நடந்துசெலவு தடுமாறின. கருமேந்திரியத்தை முற்படக்கூறினர் செலவு அயர்தற்குரியர் அல்லாத கற்புடையாட்டியாராகிய தம்மைத் தெருவிற் புறப்படச் செய்தல்பற்றி: "தோள்நலம் உண்டானைக் கெடுத்தாள்போல் தெருவிற்பட்டு" (நெய்தற்கலி. 30) என்பது முதலாக வருமிடங்களான் உணர்க. கண்ணே நோக்கி நோக்கி வாள் இழந்தன—என் இரு கண்களும் தேடிப் பார்த்துப் பார்த்துத் தமக்குரிய புலமாகிய ஒளியை இழந்தன. ஈண்டு நோக்கி நோக்கி என்பதற்கேற்ப கால்கள் நடந்து நடந்து எனக்கூறலாயிற்று. என் கண்ணொளி போன்ற காதலரைக் காணாமையினால் அல்லாதாரையும் பார்த்தற்கியலாது ஒளியிழந்தன எ-று. வினை செய்யும் பொறியினும், அறிவுறும் பொறியினும் சிறந்தன விரண்டேகூறி எல்லாப்பொறியும் ஓய்தல் குறித்தார். நீளிடைக் கூர்ந்து நோக்கி நோக்கி வாளற்றன எனினுமமையும். 'நீளிடையத்தநோக்கி வாளற்றுக் கண்ணுங் காட்சி தவ்வின' (நற். 397) எனவருதல் காண்க.

அகன்ற பெருவிசும்பின் மீனினும் பலர் இவ்வுலகத்துப் பிறர் ஆடவர் உள்ளனர் என்றது அம்மீன் நடுவண் விளங்கும் உவாமதியனையாரைக் காணேன் என்று குறித்ததாம். மீன் போன்றார் பிறர் அம்மீனினும் பலராவர்; மதிபோன்றார் ஒருவரைத்தாம் காணேன் எ-று.

இது "வெள்ளி வீதியைப்போல நன்றுஞ், செலவயர்ந்திசினால் யானே" (அகம். 147) என்றபடி இவர் செலவயர்ந்துழிக் கூறியபாட்டாகும். இது புறமேனும் அகத்திணைக்கே துறை கூறிற்று. துறைக்கேற்றவாறு செவிலி கூற்றாகக் கொள்ளு

மிடத்து, செவிலி உடன் போக்கில் தலைவன் தலைவி இரு வரையுந் தேடிக் கால் தப்பின, கண்கள் நோக்கி நோக்கி ஒளி யிழந்தன, மீனினும் பலர் இவ்வுலகத்துள்ளனர். ஞாயிறு மதி யும் அனைய இருவரையுந்தாம் காணேன் என்று இரங்கியதாகக் கூறுக. தலைவன் தலைவியர் இருசுடராக வுவமிக்கப்படுதல் திணைமாலை நூற்றைம்பதில் "இருசுடரும் போந்தன என்றார்" (71) எனக் கூறியதனால் அறிக. பிற எல்லாம் மேற் கூறியவாறே கொள்க. 'சந்திரனே தாயாக' என்பது சினேந்திரமாலை. நச் சினார்க்கினியர் 'வள்ளி' (தொல். புறத். 33) என்புழித் தண்கதிர் மதியம் எனக்கொண்டு திங்கள் நீரின் தன்மையும் பெண்டன்மை யும் உடைமையான் என்றது கண்டு தலைவியை மதியாகக் கூறுதல் வழக்கெனவுணர்க

---

## ஆலங்குடி வங்கனார்

45\. காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்ல லூர னெல்லினன் பெரிதேன்
மறுவருஞ் சிறுவன் றாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.

எ-து. தலைமகற்குப் பாங்காயினார் வாயில் வேண்டியவழித் தோழி வாயில் நேர்ந்தது..

(வி) கடுந்தேர் பண்ணி - விரையச் செல்லற்குரிய தேரினை அலங்கரித்தேறி. வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற மல்லல் ஊரன் - தூய அணிகலங்களையுடைய பரத்தையரைத் தழுவப் போயின வளனுடைய ஊர்த்தலைவன்; கடுந்தேர் வேண்டியது அவரைத் தழுவும் விழைவு விதுப்பால் என அறிக. வாலிழை என்றாள் இழை தூயதன்றி அவர் தூயரல்லர் என்பது குறித்து. "யாணரூர தூயர் நறியர் நின்பெண்டிர்" (ஐங். 70) என்று தலைவி பரத்தையரை இகழ்ச்சிக் குறிப்பால் கூறுதல் கண்டு உணர்க. அவர் மயக்குவது இழையாலன்றி இயற்கையழகால் அன்று என் பதுமாம். அவர் பலர் என்பது தோன்ற மகளிர் என்றாள். தழீஇய

சென்ற என்றது இவன் தழுவுதலல்லது அவர் உள்ளத்தோடு தழுவாமை குறித்தது. சென்ற வூரன் - தான் இருந்த இல்லிலே யான் தனியா இருக்கச் சென்றவன் என்பதாம். மல்லல்—அப் பொருட் பெண்டிர்க்கு இறைக்கும் செல்வமிகுதியுடையவன் என் பதாம்.

கடுந்தேர் பண்ணித் தழீஇய சென்ற வூரன் ஆண்டுத் தங்கி; காலை யெழுந்து - அப்பரத்தையர் சேக்கை விட்டு விடியலிற்றுயி லெழுந்து; இரவெல்லாம் ஆண்டே இவன் கிடந்தபடி குறித்தது.

எல்லினன் பெரிதேல் - பெரிது விளங்கினனேல்; என்றது அம்மகளிரைத் துய்த்த சின்னங்களால் பெரிதும் விளங்கித் தோன்றுவனுயின்: சிறுவன் தாய் மறுவரும் - அவன் சிறுவனுக் குத் தாயாகிய தலைவி உளம் சுழல்வாள். சிறுவன் தாய் என்ருள் அவன் தன் பெண்டு என நினைந்துள்ளனுயின் இவளோடே இன் பந் துய்க்கானு என்பது தோன்ற. இதனுல் இத்திணைப் பிறத் தல் தெறுவது - இவ்வுயர்குடிப் பிறத்தல் இவ்வாறெல்லாம் இட ருறத் தக்கதுபோலும். அம்ம—கேட்பித்தற்கண் வந்தது.

சிறுவன் தாய் என்றது பரத்தையர் அங்ஙனமாகாமை குறித் தது. "சிறுவர்ப் பயந்து நன்றி சான்ற கற்போ, டெம்பா டாதல் தனினும் அரிதே" (நற். 330) என்பது காண்க.

இங்ஙனம் உயர்திணைப் பிறத்தலைத் தலைவிக்குக் கூறி அவன் விரும்பிய பரத்தையரின் இழிபிறப்புணர வைத்தாளாம் தோழி. இதனுல் பரத்தையர் துய்த்த சின்னம் தோன்ற வாராமை வேண்டி வாயில் நேர்ந்தாளாம். பிரிவுத் துன்பத்தினும் அவன் தலைமகள் முன்னர் எல்லினன் தோன்றல் மிகவும் துன்பம் விளைக்குமாத லால் எல்லாது வரவேண்டினுள். 'நகச்சின்னங் கண்டு என் னுள்ளத்தேயெரிகையால்' என்பது நினைக. "வேண்டேம் பெருமநின் பரத்தை யாண்டுச்செய் குறியோ டீண்டுநீ வரலே" (ஐங். 48) என்பது காண்க. கடுந்தேர் பண்ணி மகளிர்த் தழீஇய சென்றவூரன் காலை யெழுந்து பெரிதெல்லினனேல் சிறுவன் தாய் மறுவரும் என்க. இப்பாட்டுத் தலைவியை உயர்த்துக் கூறியது என நச்சினுர்க்கினியர் கூறியதும் காண்க. (தொல். பொருள். 46.)

தேர்பண்ணி என்றதனால் 'தானும் புதுவதின் இயன்ற அணியன்' (அகம். 66) ஆதல் நினையலாம். தெறுவதென்றது உயர் குடிப்பிறப்பு இழிவினைப் பொருதென்பது பற்றி.

---

## மாமலாடனார்

46. ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றி லுணங்கல் மாந்தி மன்ற
தெருவினுண் டாது குடைவன வாடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொ றோழியவர் சென்ற நாட்டே.

எ-து. பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி, ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.

(வி) பூவின் சாம்பல் - பூவின் வாடல். பூவின் வாடலொத்த கூம்பிய சிறகுகளையுடைய மனையினுறையுங் குருவிகள், முன்றில் உணங்கல் மாந்தி - முற்றத்தில் உலர்த்திய புழுங்கலையுண்டு. மன்ற - தேற்றமாக. தெருவின் நுண்ணிய பூழியைச் சிறகராற் குடைவனவாய் விளையாடி. ஆடுதல்—நீராடுதல் போலப் புழுதி யாடுதலுமாம். மன்ற என்றது தனக்கு ஒருநாளும் உண்டாகாதென்று தெளிதலைக் கருதிற்று. இல்லிறைப்பள்ளி—இல்லில் இறப்பின்கட் சேக்கையில்; தம் குஞ்சுகளோடு தங்குதற்குக் காரணமான புன்கண்மையையுடைய மாலையும் இன்று கொல், புலம்பும் இன்று கொல் அவர் சென்ற நாட்டில் என்க. இன்று கொல் என்பதனைத் தனித்தனி கூட்டுக. புன்கண்—ஒளியிழத்தல் என்பர் பரிமேலழகர் (குறள். 1222) ஒளியிழத்தல் மாலைக்கும் தலைவிக்கும் ஒப்பக்கொள்க. புலம்பு—தனிநிலையினுண்டாம் துயர்.

காலமும் இடனும் யாண்டும் ஒருபடியாயில்லாமல் வேறுபடும் என்று நினைந்து இங்ஙனங் கூறினாள். இவ்வாறு ஐயுற்றது அவர் தன்பாலுள்ளுழி மாலையின் புன்கண்மையும், புலம்பும் கண்டறியாமையால் அவருள்ளுழி யெல்லாம் அவ்வாறாகும்போலும்

என்னுங் கருத்தால் அவர் சென்ற நாட்டே இன்று கொல் என்றாளென்க. "இன்னும் வருமேதோழி வாரா வன்களைரோ டியைந்த புன்கண் மாலையும் புலம்புமுந் துறுத்தே" (நற்றிணை.89) என்புழிப் புன்கண் மாலையும், புலம்பும் வாராத தலைவரான் உள வாதல் கூறுதலான் இஃதுணரப்படும். "மாலையும்......அணிதே ரான் றன்போத வாராத நாளே வரும்" என்பது திணைமாலை நூற்றைம்பது (101) இன்று கொல் எனத் தோழியை ஐயத்தின் வினையினாள் அங்ஙனம் இன்றென்று செப்புவையாயின் யாமும் அவருள்வழிப்பட்டு இவற்றின் துயர்தீரலாம் என்னுங் கருத்தால். அவ்வாறு இல்லிறந்து புறப்படுதல் கற்புடைய மகளிர்க்கு ஆகாமை யின் புன்கண் மாலையும் புலம்பும் வருத்த இருத்தலே தலைவிதி யென்று குறித்தவாறும். இன்று கொல், இருந்தால் அவர்க்கும் என் போலவே மாலையும் புலம்பும் வருத்தலான் இவண்மீள விரை குவர் என்பது இவள் நினைவாம். மன்ற மாந்தி எனக்கொண்டு நாளும் உணங்கல் முன்றிலில் மாந்தக் கிடைப்பது குறித்தாள் எனினும் அமையும். இதனால் மனையின் வளமிகுதி குறித்தாள். பறவைகள் பூழிகுடையும் விருப்பின என்பது "எறிகிளர் கேழல் கிளைத்திட்ட பூழி, பொறிகிளர் மஞ்ஞை புகன்று குடையும்" (கைந்நிலை. 11) என்பதனான் உணர்க. இனி இன்று கொல் என்ற ஒருமைபற்றி வதியும் மாலைக்கண்ணும் தனிமைக்கண்ணும் புன் கண் இன்று கொல் என்றாளெனின் நன்குபொருந்தும். "மனை யுறைகுரீ இப்பிள்ளையொடு வதியும் புன்கண் மாலை" என்றது இம் மாலையிற்றானும் தலைவனும் பிள்ளைகளோடு மனையுறைதற் கில் லாமல் பிரிந்திருத்தலை நினைப்பிப்பது.

---

## நெடுவெண்ணிலவினார்

47. கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.

எ-து. இரா வந்தொழுகுங்காலை முன்னிலைப் புறமொழி யாக நிலாவிற்கு உரைப்பாளாகத் தோழி உரைத்தது.

(வி) கருங்கால் வேங்கைவீ - வலியதாளையுடைய வேங்கை மரத்தின்பூ. உகுதுறுகல்-உக்கபாறை; துறுகல்-கற்செறிவு. இரும்புலிக் குருளையிற் ரேன்றுங் காட்டிடை - பெரிய புலியின் குட்டிபோலக் காணப்படும் காட்டினடுவில். வேங்கை புலிவரி போலப் பூக்கும் என்பது "வேங்கையும் புலியீன்றன" (நற்றிணை. 389) எனவும் "வேங்கையலங்கலந் தொடலை யன்ன குருளை" (ஷை-383) எனவும் வருவன கண்டுணர்க; புலியன்றிப் புலியல்லாதனவும் புலிபோலத்தோன்றி அச்சஞ்செய்தல் குறித்தாள்; குருளையிற்றேன்றும் என்று அதன் தாயுந் தந்தையும் அக்காட்டிடையுலாவுதல் கருதவைத்து அச்சமிகுத்தாள். இவ்வாறு பல ஏதமும் அஞ்சாது இரவின்கண் வருபவர் களவொழுக்கத்திற்கு, நெடுவெண்ணிலவே நல்லையல்லை என்க. நல்லையல்லை—நன்மை செய்வாயல்லை; தீமையே செய்வாயாவை எ-று.

களவிற்கு நல்லையல்லை என்று திங்களை நோக்கிக் கூறியதாற் கற்பிற்கு நல்லதென்று தலைவன்கொள்ளவைத்தாள். கரணத்து மணந்தார் நிலவில் இன்பந்துய்த்தல் "நிரைநிலை மாடத்தரமிய மேறி" (சிலப். மனையறம். 27) என்பதனுனறிக. காட்டிடையும் வேங்கைவீ யுகுதுறுகல்லைப் புலிக்குருளையாகப் பொய்யே காட்டுவை. மனைப்புறத்துக் குறிசெய்த இடத்தும் இருவரையும் மெய்யே காட்டுவை ஆதலால் நல்லையல்லை என்றாளாம். நெடுநிலவு—நெடும்போதுள்ள நிலவு; மதி நெடியோனுதல் குறித்தாளென்பதுமாம். வெள்ளென் நிலவில் நிழல் நன்கு தெரிதலியல்பு; இது களவிற்காகாது. எல்லி வருநர்—இரவென்று வருபவர்; இரவும் தாய்துஞ்சுதலும் நல்லனவாக நிலவே நீ மட்டும் நல்லையல்லை என்றாளாம், நீயுமறைந்தால் நல்லையாவை என்பதாம். "நிலவுமறைந்தன் றிருளும் பட்டன்று...அன்னையுந் துஞ்சினள்" (நற். 182) என்பதனுலிக்கருத்துணரப்படும். நெடும்போது கழித்து மறையும் நிலவே இப்போதே மறைந்தாயாயின் நல்லை என்பது கருதினுளெனினுமமையும். வெண்ணிலவு என்பது மேகத்தால் ஒளி மழுங்காதுண்மை குறித்தது. எல்லிவருநர் என்றதனுல் அவர் இரவிற் குறியிடைவந்து நின்றார் என்றும் நிலவு வெளிப்பாட்டால் அவரைச்சென்று எதிர்ப்படமாட்டாமல் தலைவி வருந்தாநின்றமையால் தோழி மதியொடு புலந்து கூறினுள் என்றும் இதனைத் துணியலாம் (திருக்கோ. 171) பார்க்க.

---

### பூங்கணுத்திரையார்

48. தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றோம்பென
ஓரை யாயங் கூறக் கேட்டும்
இன்ன பண்பி னினைபெரி துழக்கும்
நன்னுதல் பசலை நீங்க வன்ன
நசையாகு பண்பி னொருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே.

எ-து. பகற்குறிக்கட் காணும்பொழுதினும், காணாப் பொழுது பெரிதாகலின், வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது.

(வி) தாது—பூந்தாது: அதனாற் செய்த விளையாட்டுப் பாவை. தண்பனிப் பாவை—தண்பனியிற் றுயிலவிட்ட பாவை. காலை வருந்துங் கையாறு ஓம்பென—காலை வெயிலிற் கிடந்து வருந்துதற்குக் காரணமான செயலற்றிருப்பதைப் பரிகரியென்று. ஓரையாயங் கூறக்கேட்டும்—தன்னுடன் விளையாடற்குரிய மகளிர் கூட்டம் சொல்லக்கேட்டும்; அங்ஙனஞ் செய்யாது. இன்ன பண்பின் இனைபெரிது உழக்கும்—இன்ன தன்மையிற் பெரிதும் துன்பத்து வருந்தும். நன்னுதல் பசலை—நல்ல நுதலையுடையவளது நிறவேறு பாடாகிய பசலைதான். காதலர் தமக்கே—காதல் செய்த தலைவர் தமக்கே; நீங்க—அவர் புணர்ந்து நீங்கும் அளவில்; அன்ன நசையாகு பண்பின் ஒரு சொல்—நமக்கு விருப்பமாகிய இயல்பினை யுடைய அத்தகைய ஒரு வார்த்தையை; அஃதாவது வரைக என்ற ஒரு சொல்லை. இசையாது கொல்லோ—கூறாது கொல்லோ எ-று. வரைதல் நீக்கற்கு மாகலான் அதனை விலக்கற்கு நசையாகு பண்பினன்ன ஒரு சொல் என்றாள். பசலை நீங்க இசையாது கொல்லோ-பசலைதான் நீங்கவேண்டி இசையாது கொல்லோ எனினுமமையும். பிறர் எல்லார்க்கும் அறியச்சொல்லும் பசலை தான், காதலர் தமக்கே ஒருசொல் இசையாதோ என்றாளென்க; "பல்லோரறியப் பசந்தன்று நுதலே" (ஐங். 55) என்றது காண்க.

தானே நினைந்து செய்யவேண்டுவதை ஆயங்கூறக் கேட்டும் செய்யாமை காட்டிப் பாவையுடன் விளையாடல் மறந்தவாறு கூறி

ளுள். உணவும் அருந்தாது மறந்து பாவை விளையாட்டினை விரும்புமவள் அதனை ஆயஞ் சொல்லக்கேட்டுஞ் செய்யாமை எற்றினாயிற்றென்று ஆராயப்படும்போது அவ்வாயத்திற்கு இதனா னாயிற்றே என்று ஐயுறும் வண்ணம் அறிவியாநிற்கும் இந்நன்னுத லுடையாளது பசலைதான் இசையாது கொல்லோ என்றாளென்க. நன்னுதல் என்றாள் மறைக்கப்படாத அவ்வுறுப்பினுண்டாய பசலை என்பது தெரிய. அவர் நீங்கிய அளவிலே உண்டாகிய நிறவேறுபாடான பசலை அவர் திரும்பிப் பார்த்த அளவிலே அவர்க்கு ஒரு சொல் இசையாதோ என்க.

பசலைதான் நீங்க இசையாது கொல்-பசலைதான் நீங்க வேண்டலான் இசையாதோ என்றாளெனினும் அமையும்.

---

## அம்மூவனார்

49. அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாணீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே.

எ-து. தலைமகன் பரத்தைமாட்டுப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள், அவனைக் கண்டவழி அவ்வாற்றாமை நீங்குமன்றே; நீங்கியவழிப் புள்ளியிடத்தானாகிய தலைமகற்குச் சொல்லியது.

(வி) முண்டகம் - முள்ளி, அதன் முள்ளிற்கு அணிற்பல் உவமை. "கூர்முண் முண்டகம்" (குறுந். 51) முண்டகத்து மணிக்கேழ் அன்னம் மாண் நீர்ச்சேர்ப்ப - முண்டகமலர்களில் மணிநிறமுள்ள காரன்னங்கள் மாட்சிமைப்படுகின்ற நீர்க்கடற் சேர்ப்ப; காரன்னங்கள் கொங்குமுதிர் முண்டகத்து மாண்டவாறு பரத்தையர் நின்னை யெய்தி மாண்புற்றனர் என்று குறித்தாள். துறையுள் தலைமகன் பரத்தை மாட்டுப் பிரிந்தவழி ஆற்றாளாய் அவனைக் கண்டுழிக் கூறியது ஆதலின் அதற்கேற்பக் கொள்ளப்

பட்டது. கொங்கு—தாது, முண்டகத்தின் தாதுக்களால் காரன் னங்கள் நிறம் பொலிவுபெற்று மாண்புபடுதல் காட்டினாள். முண்டகத்து மணிக்கேழால் அன்னங்கள் மாணும் என்பதுமாம். "மணிமருண் மலரமுள்ளி" (அகம். 236) என்ப.

இம்மை மாறி மறுமையாயினும்—இப்பிறப்பு மாறி மறுபிறப்பு உண்டாயினும்; மறுமை—மறுமை உலகமுமாம் (அகம். 66). நீ என் கணவன்; ஆகியர்—ஆகுக. நின் நெஞ்சு நேர்பவள் யான் ஆகியர் - நின் மனமொத்தவள் யானாகுக; என்றது தலைவன் பரத்தைமையில்லாது தனக்கே உரியனாதல் கருதினாள். தன்னெஞ்சு நேர்தல் தானறிதலாற் கூறாது விடுத்தாள். பிறன் கற்புடையாட்டி வாயினாலும் சொல்லத்தகாததல் காண்க. முண்டகத்துடன் மணிக்கேழன்ன மாநீரையுமுடைய சேர்ப்ப என்பாருமுளர். மணிக்கேழ்—மணிநிறம். காரன்னம் கடலாடிப் புலவு நாறியது கொங்கு முதிர் முண்டகத்து மாணுமென்பதனாற் பரத்தையரதிழிவான இயல்பும் அவர் தலைவனால் மாணுதலுந் தலைவனை அடையாத நிலையில் மாணாமையுங் குறித்தாள். நெஞ்சு நேர்பவள்—உள்ளம் பொருந்துபவள் என்பதுமாம். "எந் நெஞ்சமர்ந் தோளே" (குறுந். 56). இம்மை மாறி மறுமையாயினும் நீயாகியரென்கணவனை என்றது இம்மையிலும் நீ பரத்தையர்க்குக் கணவன் ஆகாய் என்பதும், அவர் நினக்கு மனைவியர் ஆகார் என்பதும் குறித்ததாம். "எங்கணவ னெங்கணவ னென்பாரிகல்வாட" (புறப். வெ. மா. தும்பை. 24) என்ற ஐயனாரிதனார் பாடல் கண்டுணர்க.

---

## குன்றியனார்

50\. ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்றவ ரூரே யிறையிறந்
திலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே.

எ-து. கிழவற்குப் பாங்காயின வாயில்கட்குக் கிழத்தி சொல்லியது.

(வி) ஐயவி—வெண்சிறு கடுகு. சிறுவீ ஞாழல்—ஞாழற் சிறுவீ, என்பது பின் முன்னாகத் தொக்கது. ஞாழற் சிறுவீ மருதின் செவ்வீச் செம்மலொடுதாஅய் என்க. செவ்வீச் செம்மல்—சிவந்த பூவாடல். தாஅய்—பரந்து. அவரூர்த்துறை யணிந்தது என்றது துறையில் நீர் தோற்றாது மருதின் செம்மலோடு ஞாழல்வீயே பரந்து தோற்ற நின்றது எ-று. அதுபோல என் தோள்களும் எனக்கியல்பாகிய எழில் தோற்றாது வளை நெகிழ மெலிந்து புலம்பே தோற்ற நின்றன என்பது கருத்து. இஃது எடுத்துக் காட்டுவமை. தலைவி துறையின் நீர் கொள்ளும்போது அத்துறை நீர் கொள்ளும் பலர் கண்கொளப் பூண்டதனாற்றுறையுந் தோளையும் உவமித்தார். ஞாழல் வீ தாஅய்த்துறையணிந்தது என்றது தலைவி தலைவரைப்பிரிதலால் ஞாழலிணர் சூடப் பெறாது துறைவீழ்ந்து பரந்ததைக் குறித்ததெனினு மமையும். மகளிர் ஞாழலிணர் சூடுதல் "கொழுநிழன் ஞாழன் முதிரிணர்கொண்டு, கழும முடித்துக் கண்கூடு கூழை, சுவன் மிசைத்தா தொடு...... இங்கே வருவாளிவள் யார்" (குறிஞ்சிக்கலி. 20) என்பதனா னறிக. ஞாழல் ஆகுபெயராய் ஞாழற் செம்மலெனின் அமையும். ஞாழற் செம்மலணிந்தன்று, புலம்பணிந்தன்று என்பனவற்றில் அணிதல் கண்ட பிறர் கண்கொளப் பூணுதல்; இகழ்ச்சிக் குறிப்பெனினுமமையும்.

தலைவர் பரத்தையரோடு விளையாடிய போதின் உதிர்ந்த ஞாழலின் சிறுவீ மருதின் செம்மலோடு பரந்து அவராடிய துறைகளிற் கண்டார் கண்கொளப் பூண்டது என்பதுமாம். ஈண்டு அவரூரென்று பரத்தையர் சேரியைக் கூறுதலான் தலைவி வதியுமிடன் அவரூராகாமை குறித்தாள்.

---

## குன்றியனார்

51. கூன்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூலறு முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் வரிக்குந் துமணற் சேர்ப்பனை
யானுங் காதலென் யாயுநனி வெய்யள்
எந்தையுங் கொடீஇயர் வேண்டும்
அம்ப லூரு மவனொடு மொழிமே.

எ-து. வரைவு நீட்டித்தவிடத்து ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி வரைவுமலிவு கூறியது.

(வி) *அகப்பாட்டிற் (26) கூன்முள் முள்ளி என்பது மீன் முள்ளன்ன என்பதற்கு எதுகைத்தாகலிற் கூன்முள் என்பதே பாடமாம். கூன்முள்-வளைவினையுடைய முள். முண்டகத்தின் பனிக்காலக் கரியமலர்; கூர்ம்பனி-உடலைக் குன்றுக்கச் செய்யும் பனிக்காலம்; கூரும்பனி மரீஇயிற்று. இச்சொல் வழக்கினை 'மந்திகூர' (நெடுநல்வாடை. 9) 'கூரலங் குறுமுயல்' (அகம். 284) என்னுமிடங்களிற் கண்டுகொள்க. 'மணிமருண் மலர முள்ளி' (அகம். 236) என்பதனாற் கரியமலர் என்றும். நூலறு முத்தின்-கோத்த நூல் அற்ற முத்துக்களையொப்ப. காலொடு-காற்றால், முத்திற்பாறி என்க; வினையுவமம். வரிக்கும்-அலங்கரிக்கும். மாமலர் காலாற்பாறித் தூய மணலை அலங்கரித்தாற்போல நீயும் தெய்வத்தானுய்க்கப்பட்டுத் தலைவனை அலங்கரித்தனையாவை என்பது குறித்ததாம். வரைவு மலிதலால் இயற்கையிற் றுறைகளெல்லாம் தூமணல் பரப்பி மலர்களால் அலங்கரிக்கப்படுதல் குறித்தாளென்பது மொன்று. தூமணல்—காற்றுத் தூவிய மணலுமாம். சேர்ப்பனை யானுங்காதலென்-நின்னைக் களவிற்கூடிய சேர்ப்பனையானும் விருப்பம் உடையேன். யாயும் நனிவெய்யள்—நம்தாயும்மிக்க விருப்பமுடையள்: எந்தையும் கொடீஇயர்வேண்டும்—தந்தையும் நின்னைக் கொடுக்கச் சேர்ப்பனை வரைவொடு வரல் வேண்டுவான். ஊரும் அவனொடும் அம்பல் ஒழிமே—இவ்வூரும் வரைவொடுவரும் அவனோடும் நின்னைக் களவிற்கூட்டும் சிறு சொல்லும் ஒழியும் எ-று.

யானுஞ் சேர்ப்பனைக்காதலென் என்பது சாத்தன் தாயைக் காதலன் (தொல். சொல். வேற்றுமைமயங்கியல். 19-சேனாவரையருரை) என்பதுபோல வந்தது: அலரஞ்சிய தலைமகட்குத் தோழி வரைவுகடாயவிடத்து 'அலர்வாய் நீங்கவருளாய்' (அகம். 320) எனக் கூறுதலான் அம்பல் ஒழிதலே கருத்தாகக்கொள்ளப்பட்டது. அகப்பாட்டில் (282) 'அலர்வா யம்ப லூருமவனொடு மொழியும்' என்புழிப்போல இதனைக் கொள்ளலாமெனின் ஆண்டுத்துறை "இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியதும்" "தலைமகன் பிரிவின்கண் தோழி தலைமகட்குச் சொல்லியதும்" ஆகக்

கூறுதலானும் ஈண்டு "வரைந்துகோடல் மெய்யாயினமையின் வதுவை முடியுமளவும் ஆற்றும்படி தோழி தலைமகட்கு வற்புறுத்தியது" (தொல். களவு. 24) என நச்சினார்க்கினியர் கூறுதலானும் வேற்றுமை கண்டுகொள்க. ஒழியுமே என்பது ஒழிமே என விகாரப்பட்டது. சேர்ப்பனை நின்னுடன் வதுவையிற் காண யானுங் காதலென், யாயும் நனிவெய்யள் எந்தையுங் கொடீஇயர்வேண்டும் என்று வரைவுமலிவு கூறி அவன் வரைவோடுவரல் தான் வேண்டுவது என்று குறிப்பித்து வரைவோடு வரும் அவனோடு நின்னைக் களவிற்கூட்டிய ஊரார் அம்பலும் ஒழியும் என்று காட்டி அது காறும் ஆற்றியிருக்குமாறு தோழி வேண்டினாள் எனக் கொள்க.

---

## பனம்பாரனார்

52. ஆர்கலி மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே
நரந்த நாறுங் குவையிருங் கூந்தல்
நிரந்திலங்கு வெண்பன் மடந்தை
பரிந்தனெ னல்லெனோ விறையிறை யானே.

எ-து. வரைவு மலிவு கேட்ட தலைமகட்குத் தோழி முன்னாளின் அறத்தொடு நின்றமை காரணத்தான் இது விளைந்தது என்பதுபடக் கூறியது.

(வி) ஆர்கலி மிதித்த நீர்திகழ் சிலம்பில்—கடலை மிதித்தற்குக் காரணமான அருவிநீர் விளங்கு மலையில்; மலை நீர் கடலை மிதித்தலாவது கடலுவர் நீரை மலை அருவி நீர் நெடுந்தூரம் உள்ளே தள்ளி ஊர்வதாம். சிலம்பிற்சூர்-மலையிற்றெய்வம். நசைந்தனையையாய்—விரும்பப்பட்ட அத்தன்மையையுடையையாய், இது தாய் கருத்தாற்கூறியது. தலைவன் விரும்பியதனாலுண்டாகிய இத்தன்மையை யறியாத தாயால் சூர் விரும்பிய அத்தன்மையையுடையையாக நினைக்கப்பட்டு எ-று. நடுங்கல் கண்டு-வெறியாடினும் கட்டுக்காணினும் நம் கற்பிற்கு என்னாகுமென்று நீ நடுங்குதலைக் கண்டு. மடந்தை-மடந்தாய். யான் இறைஇறை பரிந்தனெ

னல்லெனே-யான் சிறிது சிறிது மறையைச் செல்லவிட்டனனல்லனே எ-று.

நரந்தம்பூ நாறுதற்குக் காரணமான திரட்சியாகிய கரிய கூந்தலையும், வரிசையின் இலங்குதற்குக் காரணமான வெண்பல்லினையுமுடைய மடந்தாய் என்க. தாய் வேறு நினைத்தலால் நீ நடுங்கல் கண்டு வரைவுமலிவில் நின் இருங்கூந்தல் நரந்தம் நாறவும் நின் வெண்பல் நிரந்திலங்கவும்வேண்டி இறைஇறை பரிந்தனெனல்லனே என்றாளாகக்கொள்க. நிரந்திலங்குதல் முறுவலித்தலைக்குறித்தது. ஆர்கலி இரவின் எழுந்து பரந்து ஊர்தலான் உண்டாகிய நீர் என்பதுமாம். இது கடலும் மலையும் அடுத்துள்ள நிலத்து நிகழுமென்க. ஆர்களிறு மிதித்த என்று பாடங்கொள்வாருமுளர். வரைவுமலிவு கேளாத முன்னெல்லாந் தலைமகள் நடுங்கி நின்று கூந்தலில் நரந்தம்பூச்சூடாது, முறுவல்மலராது வாடியது குறித்ததாம். நசைந்த அனையையாய் என்பது நசைந்தனையையாய் என மரீஇயிற்று. இதனைத் தலைவி கூற்றாகக்கொள்வர் இளம்பூரணர் (தொல். கள. 17). அவர் சிலம்பிற் சூர் நசைந்தனையையாய் என்பதற்கு மலையிற்றெய்வம் விரும்பியதாகக் கருதிய தாயையுடையையாய் என நினைப்பர்போலும். நாறுங் கூந்தலும் இலங்கும் வெண்பல்லும் வரைவு மலிவு கேட்ட தோழிக்கும் இயையும் என்க.

---

## கோப்பெருஞ்சோழன்

53\. எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வெண்பொரி சிதறி யன்ன
எக்கர் நண்ணிய வெம்மூர் வியன்றுறை
நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோ டுற்ற சூளே.

எ-து. வரைவு நீட்டித்தவழித் தோழி தலைமகற்குரைத்தது.

(வி) மகிழ்ந-மகிழ் செய்தற்குரியாய்; நீ மகிழ்ச்சிக்குரியையாகவும் நின்சூள்கள் எம்மணங்கின என்பதுபடக் கூறினாள். முன்றில்-வியன்றுறை முன்றிலாகக்கொள்க. புன்கின் நனைமுதிர் பூ என்க. பூத்தாழ் வெண்மணல் புனைந்த வெறியயர் களந்தோறும் வேலன் செந்நெல் வெண்பொரி சிதறியன்ன எக்கர் என்க. எம்மூர் எக்கர் நண்ணிய வியன்றுறை; எக்கர் தலைவனுடன் தலைவி மறைந்து விளையாடற் காயதுபற்றிக் கூறினாள். எக்கர்-மணற்குவியல். நேரிறை முன்கை-இறை நேரிய முன்கை. வியன்றுறைக்கண் எம் முன்கைபற்றி, வியன்றுறைச் சூரரமகளிரோடுற்ற சூள்கள் எம் மணங்கின எ-று. வியன்றுறைச் சூரரமகளிர்-அச்சத்தைச்செய்யும் கடல் கெழு செல்வியர்; சூர்-தெய்வத்தன்மையுமாம். விரைந்து வரைவல் எனக் கைபற்றி நீ கூறிய சூள்கள் வரைவு நீட்டித்தலான் நின்னையணங்குமென்று எம் மணங்கின எ-று.

உற்றசூள் என்றும் முன்கைபற்றி யுற்றசூள் என்றும் சூரரமகளிரோடுற்ற சூள் என்றும் அச்சூளும் ஒன்றல்ல பல வென்றும் தெளியக்காட்டினாள் என்க. எம் மணங்கினவாதலின் இதனை உள்ளவாறுணராத தாய் வெறியயர்தற்குப் புகுவள் என்பது தலைவன் நினைய அக்களத்தையே யுவமையாக்கிச் சூள் நிகழ்ந்த தன்னூர் வெண்மணல் எக்கர் வியன்றுறையை வருணித்தாள்.

உற்றசூள்-மிகுத்துரைத்த சூள்கள். சூள் கேட்ட எம்மை அணங்கின, சூளுரைத்த நின்னை அணங்கினவில்லை ஆதலால் வரைவு நீட்டித்து நின் விநோதத்து மகிழ்கின்றாய் எனக் குறிப்பிற்கொள்ள வைத்தாள். எம் மணங்கின என்பது நின்னை அணங்கினவில்லை என்பதாம். இதனைத் தலைவி கூறியதாகக் கொள்வர் நச்சினார்க்கினியர் (தொல். களவு. 10) அங்ஙனமாயிற் சூளுரைத்த நின்னையும் நீகைபற்றிய என்னையும் அச்சூள் அணங்குதல் தகும் என்வாய்க் கேட்ட என் தோழியையும் அணங்குதல் மருட்கைத்தாம் என்பது தெரிய எம் மணங்கின என்றாளாகக் கொள்க. என்னையும் என்வாய்க் கேட்ட தோழியையும் அணங்கின சூள்கள் நின்னை அணங்குதல் செய்யாமைபற்றிக் கூறினாளெனினுமமையும்.

## மீனெறி தூண்டிலார்

54\. யானே யீண்டை யேனே யென்னலனே
ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்கும்
கானக நாடனொ டாண்டொழிந் தன்றே.

எ-து. வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(வி) யானே ஈண்டையேன்-யான்மட்டும் இங்குள்ளேன்: என்னைப் பிரியாத நலன் கானக நாடனோடு ஆண்டு ஒழிந்தது எ-று. தலைவன் புணர்ந்தபோது என்கண் உளதாகிய நலன் அவன் நீங்கியபோது உடனீங்கியதென்பதாம். ஏனல் காவலர்-தினை காப்பவர். யானை கைவிடு பசுங்கழை-யானை வளைத்த கைவிட்ட பசிய மூங்கில், மீனெறி தூண்டிலின் நிவக்கும்-மீன் கோத்த இரையை எறிந்த தூண்டிற்கோல்போல ஓங்கும். தூண்டில் மீனை எறிதலே இல்லை என்க. தூண்டில் என்பது விழுங்கிய மீன் அகப்படும்படி செய்யப்பட்டு இரைகோத்த கொடுவாயிருப்புக்கருவி. இது நாணின் இறுதியிற் பிணிக்கப்பட்டு நாண் தலைப்புக் கழைக்கோல் நுதியின் மடுக்கப்படுவது. இத்தூண்டிலிரும்பின் இரையை மீன் விழுங்கியதன்கண் அகப்படுவதுமுண்டு. அகப்படாது இரையை எறிந்து மீன் தப்பிப்போவதுமுண்டு. இவ்வுண்மையைத் "தலைவலித்தியாத்த, நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇக், கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப், பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை" (284-287) எனவரும் பெரும்பாணாற்றடிகளானும் "தூண்டிற்பொன் மீன் விழுங்கியற்று" (931) என்னுங் குறட்டொடரானும் அறிக. இவற்றுள் இரை கதுவிய வாளை, எனவும் "மீன் விழுங்கியற்று" எனவும் வருவனகொண்டு எறிதல் மீனின் வினையாதலல்லது தூண்டிலின் வினையாகாமை காண்க. மீன் இரையை எறியாதவரை வளைந்த தூண்டிற் கழைக்கோல் எறிந்தவுடன் நிவத்தலையே ஈண்டுக் குறித்தாரென்க. அகப்பாட்டினும் "பருவாய் வராஅற் பல்வரி யிரும்போத்துக், கொடுவாயிரும்பின் கோளிரைதுற்றி" (36) என வருவது காண்க. "மீனெறி தூண்டிலி னிவக்கும்"

(278) என்பது கபிலர் ஐங்குறுநூற்றிலெடுத்தாண்ட உவமையாதலால் இப்பாட்டுடையார் அவர்க்கு முந்தியவராவர். அவனைக் கொள்ளற்கிருந்த என்னலம் அவனாற் கொள்ளப்பட்டொழிந்தது என்னும் நயமுந்தோன்ற நிற்றல்காண்க. கவணொலி வெருவல் அலரஞ்சுதலாகவும், யானைக் கை அன்பாகவுங்கொண்டு அன்புண்டாய் வளைந்து அன்பில்லாது நிமிர்ந்து அகன்றனன் என்று குறித்தவாறும். இஃது ஐந்தடியும் எதுகைவந்த பாட்டு. நலனெய்துதற்கு விரைய வரையச்செய்க என்று தோழிக்குக் குறிப்பித்ததாகக் கொள்க.

---

## நெய்தற் கார்க்கியர்

55\. மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்
பொங்குபிதிர்த் துவலையொடு மங்கு றைஇக்
கையற வந்த தைவர லூதையோ
டின்னா வுறையுட் டாகுஞ்
சின்னாட் டம்மவிச் சிறுநல் லூரே.

எ-து. வரைவொடு புகுதானேல் இவள் இறந்துபடுமெனத் தோழி தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

(வி) மாக்கழி—பெருங்கழி. மணிப்பூ—மணிநிறப்பூ; கருநெய்தல். திரையின்கட்பொங்கும் பிசிராகிய தூத்துவலையோடு என்க. மங்குல் தைஇ—மேகத்தையும் வீசி; "சேம்பினிலை பெருங்களிற்றுச் செவியின் மானத்தைஇ" (குறுந். 76) என்புழிச் சேம்பினிலை யானைச் செவிபோல அசைய வீசி எனப் பொருளாதலானுணர்க. கையற வந்த தைவர லூதையொடு—தலைவரைப் பிரிந்தார் செயலறும்படி அழையாது வந்த உடம்பு முழுதுந் தடவும் வாடையொடு. இன்னா உறையுட்டு ஆகும்—நெஞ்சிற்கும் இன்னாமை செய்யும் உறையுளை உடையதாகும். ஆதலான் இச்சிறு நல்லூர் உயிர் வாழ்க்கை சில நாளே உள்ளதாகும் எ-று.

சின்னாள் கூறியது தலைவன் வரைவொடு வரும் என்னும் நசையான் என்று கொள்க. அப்பால் இறந்துபடுதல் குறித்

தாள். இன்னுவுறையுள் சின்னுள் வாழ்க்கை யுடையதேயாம் என்னும் உலகியல்பும் உடனுணர்த்தியவாறு. சிறு நல்லூர்—அவனெடு களவிற் கூடுதற்குக் காரணமான சிறு நன்மையை உடையவூர்; வரைந்து கற்பிற் கூடுதல் பெரு நன்மை என்பது குறித்ததாம். மணிப்பூ முண்டகத்தின் வேருய் மணிமருள் நெய்தலை மணிப்பூ என வழங்கிக் காட்டியதனுல் இவர் நெய்தற் கார்க்கியர் எனப்பட்டனராவர். கர்க்கி முனிவர் வழியினர் கார்க்கியர்: கர்க்கி கோத்திர முண்மை உணர்க. இதனுலிவ ரந்தணராவர். அம்ம கேட்பித்தற்கண் வந்தது: தலைவன் சிறைப்புறத்தானுதலுணர்க.

---

## சிறைக்குடி ஆந்தையார்

56. வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சிற்
குளவி மொய்த்த வழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மோ டுணீஇயர்
வருகதில் லம்ம தானே
அளியளோ வளியளெந் நெஞ்சமர்ந் தோளே.

எ-து. தலைமகன் கொண்டுதலைப் பிரிதலை மறுத்துத் தானே போகின்றவழி இடைச்சுரத்தின் பொல்லாங்கு கண்டு கூறியது.

(வி) வேட்டச் செந்நாய்—மரை பன்றி முயல் முதலியவற்றை வேட்டம் ஆடுதலிற் செம்மை பெற்ற நாய்கள்; 'ஓட்டியல் பிழையா வயநாய்' (அகம். 182) என்பது காண்க. செந்நாய் ஞமலியிலொரு சாதி எனினுமமையும். கிளைத்து என்னும் வினையெச்சம் ஊண் என்னும் வினைப் பெயரில் உண் என்னும் வினை கொண்டது. குளவிகள் மொய்த்தலால் அழுகல் நாற்றத்தையுடைய சிறுநீர். குளவி—காட்டு மல்லிகையின் சருகுகள். நாய் நீர் வேட்கையாற் கிளைத்தது தெரிய வேட்டச் செந்நாய் என்ருன். ஒருவருண்ட மிச்சில் பருகலாகாதது அதனினும் நாயுண்டதென்றிகழ்ந்தவாறு, நீர் வேட்கையின் மிகுதியால் அவ்விகழ்ச்சி கருதாது பருகப்புகின் சருகு மொய்த்து வெயிலிற் கொதித்து

அழுகல் நாற்றத்தையுடைமையாற் பருகற்கு ஆகாமை காட்டி ஞன் : தாகத்தாலிறவாமற் பருகினும் தாகந் தணியப் பருகற்கில் லாமை தெரியச் சின்னீர் என்ருன்.

எம்மைத் தனிவிடாமல் எந்நெஞ்சமர்ந்து இப்பாலையினும் எம்முடனுள்ளவள் எம்மோடு அழுகற் சின்னீர் உண்ண வெளி வருக. அஃதெமக்கு விருப்பம் எ-று. அம்ம—அசை. விளை யுடைக்கை கூறியது குடித்தற்கு நீர் அள்ளும் உறுப்பாதல்பற்றி ; வருகதில் என்றது வந்தால் இதன் பொல்லாங்கு அவளும் காண் பள் எ-று. தானே அளியளோ அளியள்—அவள் தானே பிரிந்த நிலையினும் இரங்கத்தக்கவள் நெஞ்சமர்ந்த நிலையினும் இரங்கத் தக்கவள்.

இனி அழுகற் சின்னீர் தான் உண்ணப்புகுதலின், தன்னெஞ் சமர்ந்தோளும் அஃதுண்பாளாகக்கருதி எம்மோடு உணீஇயர் வருக என்ருனெனினுமமையும். இங்ஙனங் கொள்வதின் பொருத் தம் “நெஞ்சத்தார் காதலவராக வெய்துண்ட, லஞ்சுதும் வேபாக் கறிந்து” (குறள். 1128) என்பதனுனுணர்க, “செருவார் தோள நின்சிந்தை யுளேனெனின், மருவார் வெஞ்சர மெனையும் வவ்வு மால்” (கிட்கிந்தா காண்டம். அரசியல். 10) என்று தாரை கூற் றில் வைத்துக் கம்ப நாடர் பாடுதலானும் இஃதுணரப்படும்.

இது களவிற்றலைவன் தலைவியை உடன்கொண்டு போகத் துணிந்தது என இளம்பூரணரும் (தொல். அகத். 44) கற்பிற் றலைவன் தோழி கேட்பக் கூறியது என நச்சினர்க்கினியரும் (ஷை கற்பியல். 5) கொள்வர். அங்ஙனமாயின் சுரத்தின் பொல் லாங்கு தெரியத் தலைவன் போதற்கு முன்னே கூறியதாகக் கொள் ளப்படும்.

பசியுந்தாகமுந்தணியச் செந்நாய் கிளைத்தூண் மிச்சிலும் அழுகற்சின்னீரும் எம்மோடுணீஇயர் வருக எனக் கூறினும் நன்கு பொருந்தும். பசிதணிய மிச்சில் உண்டற்கு “நோய்பசிச் செந் நா யுயங்குமரை தொலைச்சி, யார்ந்தன வொழிந்த மிச்சில் சேய் நாட்டருஞ்சுரம் செல்வோர்க்கு, வல்சியாகும்” (நற்றிணை. 43) என்பது காட்டும். கிளைத்தல்—காலாற் கீறுதல். கிளைத்துண் மிச்சில் என்பதும் பாடம்.

சிறைக்குடி—மகளிரைச் சிறை காக்குங் காப்புடைய குடி. கோட்டை வேளாளர்பால் இவ்வழக்கம் இன்றும் காணலாம்: கழிசிறை என்ற வழக்கானும் இஃதுணரலாம். பிசிர்க்குடியாந் தையாரின் வேறு எனத் தெரியச் சிறைக்குடியாற் கூறினர்.

---

## சிறைக்குடியாந்தையார்

57. பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமோ
டுடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மையா முயற்கே.

எ-து. காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(வி) பூ இடைப் படினும்—தமக்கு இடையே ஒரு பூ வுண்டாயினும்; என்றது ஆண் பெண் இரண்டிற்கும் இடையே ஒரு பூ நின்று ஒன்றை யொன்று காணப்பெறாது மறைப்பினும் என்பதாம். அவ்வளவிலே, யாண்டு கழிந்தன்ன—ஓர் யாண்டு பிரிந்து கழிந்தாற் போன்றனவாய. நீருறை மகன்றிற் புணர்ச்சி போல—நீர்வாழ்கின்ற மகன்றில் மிதுனங்களின் சேர்க்கை போல. பிரிதலரிதாகிய துய்த்தமையாத காமத்துடன், கடனறிந்து—கடப்பாடறிந்து. உடனுயிர் போகுகதில்ல—காதலர் பிரிந்தவுடன் உயிர்போகுக இஃதென் விருப்பம். இருவேமாகிய வுலகத்து—ஒருயிர்க்கு ஈருடம்பினே மாகிய வுலகத்தில். ஒருவேமாகிய புன்மை—அவர் பிரிந்தபோதும் அவரின் வேறாய் ஒருயிருடையேமாகிய இழிந்த பழியினின்றும், உயற்கே—தப்புதற்கே; உடனுயிர் போகுகதில்ல என்றாள் என்க. "இருவ ராகத்துளோருயிர்" (திருக்கோவை. 71) என்பதனானும், "ஒருயிரொழித் திரண்டுடம்பு போவ போல்" (சிந். 2628) என்பதனானும் அறிக. "இரண்டுடற்குயிரொன்றாயினர்" (கம்ப.—மிதிலை).

காமமோடு என்றதன் மேலும் உடனுயிர் போகுக என்றது பற்றிப், பிரிந்தவுடன் என்னப்பட்டது. ஒருவேம் எனக் கருதுதல் ஆசிரியர் புன்மையெனக் கூறுதலான் அதற்கேற்ப அவரின் வேறாய ஒருவேம் எனக் கொள்ளப்பட்டது. இருவேம்—எப்போதும் இரட்டையேயாய்ச் சேர்ந்து நிகழ்வேம். ஒருவேம்—பிரிந்து வேறாய் நிற்கும் ஒருயிரேம்; நற்றிணையுள் "நினைக்கியா னுயிர்பகுத் தன்ன மாண்பினேன்" (128) என நட்பிற் கூறுதலும் இக்கருத்தையே வலியுறுத்தும். உயிர் பகுத்தல்—ஒருயிரை இரண்டாகப் பகுத்து ஈருடம்பின்வைத்தல்.

மகன்றில்—எப்போதும் ஆணும் பெண்ணும் இணை பிரியாதனவும், சிறிது பிரிந்தது போலக் காணப்படினும் துயராற்ற மாட்டாதனவும் ஆகிய நீர்வாழ் பறவைகள்; "இணைபிரிமகன்றில் விற் பேர்தலாற்றாள்" (பெருங் கதை. 1-53-96) எனவும் "துணை பிரிமகன்றி லொத்தாள்" (சிந். 302) எனவும் வருவன கண்டு கொள்க. காளிதாசரும் தாமரை யிலையிடைப்பட்ட சேவலைக் காணாது பெடை புலம்புவது கூறினார். (சாகுந்தலம், அங்கம் 4)

---

## வெள்ளி வீதியார்

58\. இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே.

எ-து. கழற்றெதிர்மறை.

(வி) இடிக்குங் கேளிர்—இடித்துரைக்குங் கேண்மையுடையீரே. நுங்குறை—நுமக்கு இன்றியமையாத காரியம். ஆகம் நிறுக்கல் ஆற்றினோ நன்று—என்னுடம்பு உருகுதற்குமுன்னர் நிறுத்தலைச் செய்யின் நன்மை தருவது. மற்று இல்ல—வேறெவையும் நன்மை தருவன இல்லை. பரிதி காய்தலினால் வெய்தாகிய பாறையின் ஒருபுறத்து வைத்த வெண்ணெ யுணங்கல் போல, ஆகம் நோன்று கொளற்கு அரிதே—உடம்பு பொறுத்

துக்கொள்ளுதற்கு அரியதேயாம்; என்னை காரணமெனின் இந் நோய் ஆகம் பரந்தன்று ஆதலான் என்க. வெண்ணெய் உணங்கல் போல ஆகம் உருகாது பொறுத்துக்கொள்ளற் கரிது எ-று. இங் ஙனம் கொள்ளாது உணங்கல் போல நோய் பரந்தன்று என்பது சிறிதும் பொருந்தாது. வெண்ணெய் உருகினால் அதனைச் சேர்த்து அள்ள நினைதல் போல, நோய் பரந்தாலதனைச் சேர்த்து அள்ள நினையாமையும் அதுவே வெண்ணெய் போற் கண்ணிற் காக்கும் பொருளாகாமையும் நோக்கி யுண்மையுணர்க. உடம்பு முழுதும் உருகுதற்கே பிறரும் "வெண்ணெய்ப் பாவை வெந்துடன் வெயி லுற்றுருங்கு" (சிந். 1532) எனக் கூறுதல் காண்க. வெண்ணெய் உணங்கல்—வெண்ணெய்த் திரளை வெயில் பரந்த நிலையிலுள் ளது. இது காமக்காய்ச்சல் பரந்த நிலையிலுள்ள உடம்பிற்கு உவமையாயிற்று; "காமவெயில் வெண்ணெய்ப் பாவை" (சிந். 682) என்பது காண்க. இவ்வுடம்பு உயிர்த்தோழனாகிய பாங் கனாற் காக்கப்படுதல் கருதிக் கையிலூமன் கண்ணிற் காக்கும் வெண்ணெயுணங்கலோடு உவமித்தான். அப்பாங்கன் கை தலைவி அணைக்குங் கை போல இன்பஞ் செய்யாமையிற் கையின்மை கூறினான். தலைவனைக் கண்டு இரங்குதலல்லது அவனியல்பு பிறர்க்குச் சொல்ல இயலாமையான் ஊமனோடுவமித்தான். கண் ணிற் காக்கும் வெண்ணெய்—கண்மட்டும் கொண்டு காக்கும் வெண் ணெய். கண்ணிற் காக்கும்—கண் போல காக்கும் என்னு நயமுந் தோன்ற நின்றது காடு. ஞாயிறு காயும் வெவ்வறை—பரிதி காயும் வெய்யபாறை. வெண்ணெய் உருகுதற்கு ஞாயிறுகாய் தலே அமைவதாக வெவ்வறை கூறியது விரைந்து உருகிப் பரப் பது கருதி; "மெய்யுருகிக் கண்ணுருகி நெஞ்சுருகிக் காமவெயில் வெண்ணெய்ப் பாவை போல் மெலிகின்றாரே" (சிந். 682) என் பதனாற் காமவெயிலில் மெய்யுருகுதல் உணரலாம்.

இனிப் "பொன்றுஞ் சாகத்துப் பூங்கண்கள் போழ்ந்தபுண்" (சிந். 1332) என்புழிப் போல ஆகம் நெஞ்செனக்கொண்டு அதனை நிறுக்கலாற்றினேன் நன்று என்றாலும் பொருந்தும்; "வெண்ணெய் வெங்கனன் மீமிசை வைத்ததொத், துண்ணையாவுருகா வுளளா யினான்" (சிந். 1309) என்பதனான் இஃதுணரப்படும். அவ்வழிக் கெல்லாம் நோயை வெண்ணெய்யோடுவமிப்பது பொருந்தாமை காட்டும்.

மேல் நோய் என்றதுபற்றி நுங்கு உறை ஆகம் நிறுக்கலாற்றினே நன்று எனக் கூறினனெனினும் பொருந்தும். நுங்கு உறை—விழுங்கு மருந்து, இடிக்குஞ் சொற்களை நோய்க்கு விழுங்கு மருந்தாகப் பாங்கன் நினைப்பது கருதிக் கூறினன். நுங்குதல்—விழுங்குதல்; அரவு நுங்குமதியின் (குறுந். 395) என்பது காண்க. உறை—மருந்து; "உறையொன்றின்றித் தண்டா நோய் மாதர் தலைத்தருதி" (சிலப். கானல் 30) கேளிர் எனப் பன்மையாற் கூறியது இப்பாங்கன் பார்ப்பானாதற் சிறப்புப்பற்றி என்க; ஈண்டுத் தலைவன் சொற்கேட்பவன் பார்ப்பான் என்பது பேராசிரியர் கூறியது; (தொல். செய். 196) ஆகம்பரந்தன்று இந்நோய் எனக் கூறுவதன் பொருத்தம் "மெய்பரந் தெவ்வங் கூர்ந்த வேமுறு துயரம் வெம்மையிற் றான்வருத் துறீஇ" (நற். 273) என்பதனானுணர்க.

---

## மோசிகீரனர்

59\. பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அரலைக் குன்றத் தகல்வாய்க் குண்டுசுனைக்
குவளையொடு பொதிந்த குளவி நாறுநின்
நறுநுதல் மறப்பரோ மற்றே முயலவும்
சுரம்பல விலங்கிய வரும்பொருள்
நிரம்பா வாகலி னீடலோ வின்றே.

எ-து. பிரிவிடை யழிந்த கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

(வி) பதலை—ஒருகட் கிணைப்பறை. பாணி—அதன்கண் ஒலிப்பிக்குந் தாள வரிசைகள். பாணிப் பரிசிலர்—தாள வரிசைகளின் தரத்திற்குத் தக்க பரிசில் பெறும் பாணர். பரிசிலர் கோமான்—பரிசிலரைப் புரந்தளிக்கும் வேந்தன். அரலைக்குன்றம்—சேலம் ஒசூர்ப்புறத்து 'அரலிகுண்டா' என்பது ஒன்றுண்டு; ஆண்டே நள்ளி யென்னும் பெருவள்ளலுடைய தோட்டி மலையாகிய அங்குச கிரியும் உண்டு. இவற்றால் இக்கோமான் நள்ளி என்பது பொருந்தும். குளவி—மலைப்பச்சை, 'குளவித் தண்

கயம்' என்பது நற்றிணை (232) குவளையொடு குளவி நாறு நறு நுதல் என்றது அரிதின் மலையேறிச் சுனையினிறங்கி நுகரு நறு மணம் இல்லத்தே எளிதினுகர்தற்காய சிறப்பைக் குறித்தது. சுரம்பல விலங்கிய அரும் பொருள்—அருவழிகள் பல குறுக்கிட்ட அரிய பொருள்: என்றது குறுக்கிட்டவற்றைக் கடந்தாலுங் கிடைக்கரியது குறித்தது. முயலவும் நிரம்பாவாகலின்—முயற்சி செய்யா நிற்கவுங் குறித்த பருவத்துள் நிறையா ஆதல் காரண மாக. நீடலோ இலர்—வருவம் எனக் குறித்த நாளினும் நீடுதலோ இல்லராவர் எ - று.

அரும் பொருளென்று அதன் இயல்புணர்ந்தவர் முயன்றும் நிரம்பாமை யுண்டென்றுணர்வராதலின் அது நிரம்பும்பொருட்டு நீடார்; அப்பொருளினும் அரிய நின்னுயிர் காத்தற்கு விரைந்து வருவர் என்று வற்புறுத்தினாள்; 'பெண் பெற்று னஞ்சானி ழவு' என்னும் பழமொழி நோக்குக. 'அரலைமரலாம்' (பிங்கலம்) என்பதனால் இது மரற் செடியின் வேறு மரமாதலுணரலாம்.

குன்றத் தகல்வாய்க் குண்டு சுனை கூறியது அதிற்குவளையும் குளவியும் கொள்ளற்கரியன என்பது தெரிய என்க. நின்நுதலின் அழகும் மணமும் நினைவரல்லது பொருள் நினையார் என்பது சாட்டினள். "முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது, பைந்தொடிப் பேதை நுதல்" (குறள். 1238) ஆதலின் அதனை மறப்பரோ என்றாளெனினும் நன்கு பொருந்தும். நுதல் நீவிப் பிரிந்தவரா தலின் அதனை மறப்பரோ என்றாள்; "கண்ணு நுதலு நீவி முன் னின்று பிரிதல் வல்லிரோ" (நற். 71) என்பதனானறிக. நுதல் பிரியும்பொழுதே பசப்பது "வாணுதல் பசப்பச் செலவயர்ந் தனையே" (ஐங். 423) என்பதனானுணர்க.

பரணர்

60\. குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட விருக்கை முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக்கீ ழிருந்து
சுட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் நயவா ராயினும்
பல்காற் காண்டலு முள்ளத்துக் கினிதே.

எ-து. பிரிவிடையாற்றாமையிற் றலைமகள் தோழிக்குரைத்தது.

(வி) கூதளி யாடிய நெடுவரை—கூதளங் கொடி காற்றாலாடிய நெடிய மலை; "கூதள மூதிலைக் கொடி" (அகம். 255) என வருதலான் கூதளி கொடியாதலறிக. இது வெண் கூதாளம் எனப்படும். நெடுவரைப் பெருந்தேன்—நெடிய மலையிற் றொடுத்த பெரிய தேன்கூடு. ஏற இயலாமை தெரிய நெடுவரை என்றாள். படர்ந்த கூதளங் கொடி பிடித் தேறலாமெனின் அதுவும் நிலையின்றிக் காற்றாலசைவது கூறினாள். அசையினும் வலியனாற் பற்றப்பட்டு ஏறலாமெனின் ஏறுதற்குரிய வலியின்மை தெரியக் குறுந்தாள் இருக்கை முடவன் என்றாள். தாளின் குறுமையால் எழுந்துநிற்க இயலாமல் இருத்தலையுடைய முடவன் என்க. முடவன் ஆசை மிகப் பெருந்தேன் என்றாள். கீழிருந்து—அத் தேன்கூட்டின் கீழே இருந்து. உட்கைச் சிறுகுடை கோலி—உள்ளங்கையைச் சிறிய வுண்கலமாகக் குழித்துக்கொண்டு. சுட்டுபு—கீழிருந்தபடியே அத்தேன்கூட்டை மற்றைக் கைவிரலாற் சுட்டுதல்செய்து. குடையாகக் கோலிய வறிதாகிய உள்ளங் கையை நாவால் நக்கினாற் போல. காதலர்—நங்காதற்குரியவர் அத்தேன் போலத் தம்மை நல்கார், நம்மை நயத்தலுஞ்செய்யார் எனினும் பல்போதும் அவரைக் கண்ணாற் கண்டிருத்தலும் உள்ளத்துக்கினிதாம் எ-று.

தேன் தன்னை முடவற்கு நல்காமையும் அவனை நயவாமையும் நினைக. முடவன் ஏறவியலாத உயர்நிலையிற் றேனைக் கண்ட மாத்திரையே அதன் கீழிருந்து அதனைக் கையினேந்தியது போலவும் அத்தேனையே நக்குவது போலவும் நினைந்து வறுங்கை சுவைத்தாலும் அவற்கின்பமாயினாற் போலத் தலைவரைக் கண்ட

மாத்திரையில் அவர் மெய்யுறும் இன்பம் என்னுள்ளத் துண்டாவ தென்றும் அதுவும் இப்பிரிவினுல் இல்லையாயினே னென்றும் தலைவி வருந்திக் கூறினளென்க. நல்கார் நயவார் என்றது தலைவர் ஈண்டுள்ளபோது தம் பரத்தமையால் தலைவிக்கு நல்காமையும் தலைவியை அன்புற்று நோக்காமையுங் குறித்தது. அங்ஙனமாயினும் அவரைப் பல்காற் காண்டல் மாத்திரையும் உள்ளத்துக்கினியதே என்று தன்னுயிரினுஞ் சிறந்த கற்பின் மகிழ்தலைப் புலப்படுத்தினள். நல்கார் என்பது உடம்பிற்கு இனியது உதவார் எ-று. இஃது உள்ளத்துக்கினிதே என்பதனுற் பெறப்படும். நல்கார் நயவார் என்றலாற் றலைவர் பரத்தமை தெரிய வைத்தாள். 'காவினுணயந்து விட்டார்களே' (சிந். 1905) என்பதனுல் நயத்தல் அன்புற்று நோக்குதலாதலறிக. கண்ட மாத்திரையும் தன் உள்ளத்துக்கினியதாதல் கூறித் தலைவர் விரும்பும் பரத்தையர்க்கு மெய்யுற்றுலும் உள்ளத்துக்கினியாத வஞ்சம் குறிப்பித்தாள்.

---

## தும்பிசேர்கீரனுர்

61\. தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புருஅ ராயினுங் கையின்
ஈர்த்தின் புறூஉ மிளையோர் போல
உற்றின் புறேஎ மாயினு நற்றேர்ப்
பொய்கை யூரற் கெண்மை
செய்தின் புற்றனெஞ் செறிந்தன வளையே.

எ - து. தோழி தலைமகன் வாயில்கட் குரைத்தது.

(வி) சிறுமாவையம் - குதிரையொடு செய்யப்பட்ட சிறுதேர்; இச்சிறு தேரின்ருெழிற்றிறந் தோன்றத் தச்சன் செய்த என்ருள்; தச்சச்சிருர் புனைந்ததன்று என்பது குறித்தவாருரும். மா - குதிரை. ஊர்தல் - ஏறிச் செலுத்துதல். இளையோர் - இளமகார். ஊரனுக்கு அருமை செய்து பரத்தையர்போல உற்றின் புறேமாயினும் வையம் ஈர்த்தின்புறும் இளையோர் போல அவற்கு எண்மை செய்து இன்புற்றனம்; அதனுல் வளைநழுவாது செறிந்தன எ - று.

இது களவுக்காலத்து அருமையாதலைச் செய்து உற்றின்புற்றயாம் இக்கற்புக் காலத்து எளிமையாதலைச் செய்து வையம் ஈர்த்தின்புறும் இளையோர்போல இன்புற்றனம் என்றதாம்.

இப்போது அருமையாயின செய்து உற்றின்புறுவார் பரத்தையர் என்றும் எளிமையாயின செய்து, அம்மட்டில் இன்புறுவேம் யாமென்றும் தோழி வாயில்களறியக் கூறினாள்; "அருமைக் காலத்துப் பெருமை காட்டிய, எண்மைக் காலத்திரக்கத்தானும்" (தொல். பொ. கற்பி. 9) என்பது தோழி கூற்றிற்கு இடனாதலுணர்க. எண்மை செய்தல் - உணவிடுதல், வாய்பூசநீர் பெய்தல் முதலியன ஆம். இவை இல்லுட் டொழுத்தையருஞ் செய்வாராதலின் எண்மை செய்து என்றாள். 'ஊரற்கெண்மை' என்பது ஊரன் கேண்மை எனப் படிக்கப்பட்டது. இதுவே பாடமெனின் ஊரனது நட்பையாஞ் செய்து இன்புற்றனமன்றி நந்நட்பை அவன் செய்தின்புற்றிலனென்று கூறினாள் என்க. களவினும் இவ்வாறு "நாடனொடு செய்து கொண்டதோர் சிறுநன் னட்பே" (குறுந். 377) எனக் கூறுதல் காண்க. இருவரும் ஒத்துத்துய்ப்பதே உற்றின்புறுவதாதலின் இங்ஙனங் கூறினாள். பரத்தையர்க்கு ஊர்ந்தின்புறும் பெருந்தேர்போல்பவன் எமக்கு ஈர்த்தின்புறுஞ் சிறுமாவையம் ஆவன் என்றிரங்கிக் கூறியவாறு. பரத்தையர்பாற்றான் செய்யுங் கேண்மையால் அவரைச் சுமத்தலுஞ் செய்வன், யாம் செய்யுங் கேண்மையால் ஈர்க்கப்படுவன் எனக் குறிப்பித்தாள்.

பொய்கையூரன் என்றது எல்லாருந் தோயுநீர்நிலைபோல வரையாது தோயப்படுவன் எனக் குறித்ததாம்.

கையினீர்த்து என உவமையிற் கூறியதனால் எண்மையைக் கையாற் செய்து என்று பொருளிற் கொள்க. யாம்செய்வது எண்மை என்பதனாற் பரத்தையர் செய்வது அருமையெனக் குறிப்பித்தாள். பரத்தையர் செய்வது அருமையாதல் "வேம்பின் பைங்காயென்றோழி தரினே, தேம்பூங்கட்டி யென்றனிர்" (குறுந். 196) என்பதனானும் தாம் செய்வது எண்மையாதல் "தண்ணிய தரினும் வெய்ய வுவர்க்குமென்றனிர்" (ஷை ஷை) என்பதனானும் அறிக.

## சிறைக்குடி யாந்தையார்

62. கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையொ டிடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோண் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கு மினிதே.

எ - து. தலைமகன் இடந்தலைப் பாட்டின்கட் கூடலுறு நெஞ்சிற்குச் சொல்லியது.

(வி) கோடல் - காந்தள் மலர். எதிர்முகையாகிய பசியமலர் முல்லை. இவற்றைக் குவளையோடு இடைப்பட விரவி என்க. விரவுதல் - கலந்து தொடுத்தல். இடைப்படவிரைஇ என்றது நெருக்கமில்லாமல் இடைவெளியுண்டாகக் கலந்து தொடுத்து எ-று. ஐதுதொடைமாண்ட கோதைபோல-வியப்பெய்தத் தொடுத்தல் மாட்சிமைப்பட்ட மாலைபோல. நறிய நல்லோள் - மூக்கிற்கு நறுமையும், கண்ணிற்கும் மனத்திற்கும் நன்மையுஞ் செய்பவள். மேனி காந்தளாகிய கைகளும் முல்லை எதிர்முகையாகிய பற்களும் குவளையாகிய கண்களும் விரவி இடையிட்டுத் தொடை மாண்ட கோதைபோல விளங்குதல் காட்டினன். குவளையொடு எனக் கூறியது கண்ணின் உயர்புதோன்ற நின்றது. இம்மேனி முறியினும் வாய்வது ஒவ்வோருறுப்பும் ஓரோர் மலராக இடையிட்டுத் தொடுத்ததுபோலுளதேனும் யாண்டும் ஊற்றின்பஞ் செய்தலான் முறியினுஞ் சிறப்புடையது எ - று. அம்முறிபோற்காண்டற்கினிதாதலன்றி அம்முறியினும் வாடிக்குழையாது முயங்கற்கும் இனிதாயது எ - று. முறிமுயங்கக் குழையுமென்பது "மெல்லிலை குழைய முயங்கலும்" (குறுந். 361) என்புழிக் கண்டுகொள்க. ஓரோருறுப்பே மலராதலும் யாண்டுஞ் சாயலான் முறியாதலுங் கொண்டு கூறியதாம்.

புணர்ச்சியின் அணிமையால் அணைத்த கைகளையும் அங்ஙனம் அணைத்தற்கு முன் குறித்துக்கொண்ட நகை முறுவலையும் அதற்கு முன் மதியுடன்பட்ட கண்ணோக்கினையும் முறையே நினைந்து அவற்றைக் கோடல் முல்லை எதிர்முகை, குவளையாக உருவகப் படுத்தி மேனி முழுதும் இன்பஞ்செய்ததறிதலால் அதனை முறி

யினுஞ் சிறப்பித்துத் தன் மகிழ்ச்சி புலப்படுத்தினன். நச்சினார்க்கினியர் (தொல். பொ. அகத். 14) புணர்ந்துழிமகிழ்ந்து கூறியது இஃதென்றதனுல் இப்பொருளுண்மை இனிதறிக.

கோதைபோல நறிய நல்லோள்மேனி வாய்வது இனிது எ - று. முயங்குகமினிதே என்பதும் பாடம்.

---

## உகாய்க்குடி கிழார்

63. ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ
எம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே.

எ - து. பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

(வி) அறம்பெற ஈதலும் இன்பம்பெறத் துய்த்தலுமாகிய காரியங்கள்; இல்லோர்க்கு இல்லென - அக்காரியங்கட்குக் காரணமாகிய பொருளில்லாதார்க்கு இல்லையாமென்று. செய்வினை - பொருள்செய்யும் வினையை. கைம்மிக எண்ணுதி - செய்வதின் மேலாக நினைத்தி. கை - செய்வதென்பது "கையறியாமை" (குறள். 925) என்பதனுனுணர்க. அவ்வினைக்கு - அவ்வினை செய்தற்கு. அம்மா அரிவையும்வருமோ - அழகிய மாமை நிறத்தினையுடைய பெண்டும் உடன் வருவளோ, அவளின்றி எம்மைத் தனியே செல்லவிடுப்பையோ, நெஞ்சே உரைத்திசின் - மனனே சொல்வாய்.

நெஞ்சே எண்ணுதி என்றது யானங்ஙனம் நினையேன் என்னுங்குறிப்பிற்று. "அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை" (குறள். 49) என்பதனுன் இதுவே அறனெனவும், ஈட்டிவரும் பொருளான் இன்பந்துய்த்தல் கருதி இப்போது இவளோடு துய்க்கும் இன்பம் விடேனெனவும், தான் துணிந்தது குறித்து இவ்விரண்டுங் கெடாமல் அம்மா அரிவையும் வருமோ எனவும் இவை இப்போதே கெட எம்மை உய்த்தியோ என்வும் வினவினன். அம்மா அரிவை என்றுன் அவளுடன்வரா தொழியின் அவள் மாமை சிதையுமென்பது கருதி. எம்மை உய்த்தியோ என்றுன் நின்னுல் வலித்துய்க்கப்பட்டாலன்றி யானே இயல்பாகச் செல்லேன் என்

பது தோன்ற. தலைவி மனையிறந்து வாராமை தானறிந்ததாதலின் அரிவையும் வருமோ அது நீ அறிவையாயின் உரைத்தி என்றான்.

---

## கருவூர்க் கதப்பிள்ளையார்

64\. பல்லா நெடுநெறிக் ககன்று வந்தெனப்
புன்றலை மன்ற நோக்கி மாலை
மடக்கட் குழவி யணவந் தன்ன
நோயே மாகுத லறிந்துஞ்
சேயர் தோழி சேய்நாட் டோரே.

எ - து. பிரிவிடை ஆற்றாமை கண்டு வருவர் எனச் சொல்லிய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

(வி) பல பசுக்கள் நெடிய நெறிக்கண் அகன்றுபோய் வந்தன என்று அவையில்லாத புல்லிய இடத்தையுடைய மன்றினைப் பார்த்து மாலைப்போதில் இளங்கட் குழக்கன்று பின்னும் வருவனவோ என்று தலையெடுத்து மேனோக்கினாற் போன்ற துன்புடையே மாதலை இங்குள்ள காலத்துக் கண்டறிந்தும் சேய்மைக் கணுள்ள நாட்டினராகிய தலைவர் வரக்குறித்த பருவத்தினுஞ் சேய்மையராயினர் எ - று.

தாயர் வந்தன என்று நோக்கிப் புன்றலை மன்றால் ஏமாறிப் பின்னும் வருவனவோ என்று மாலையிற் கன்றுகள் அணவந்த துன்பினை உவமையாக்கினாள். இங்ஙனம் பிரியாது ஊரிலுள்ள போதும் மாலையில் இல்லம் வாராராயின் வரும் வழியைத் தலையெடுத்து நோக்கியிருக்கும் தன் துன்பத்தைப் புகுநிலையிற் பல்காற் பார்த்தறிந்தும் காலத்தாற் சேயராயினர் என்பது நன்கறிய வேண்டி. மடக்கண் - தாயை இவ்வாறு நெடுநேரம் பிரிந்து பார்த்தறியாத இளங்கண். சேய்நாட்டோர் என இடச்சேய்மை கூறியதனால் சேயர் என்புழிச் சேய்மை காலம் பற்றியதாயிற்று, அகப்பாட்டிற் "சேய்நாட்டுப் பிரிந்து சேணுறைநர்" (59) என வந்தவிடத்துப் பழையவுரைகாரர் 'பிரிந்து தாழ்க்கவுறைகின்றவர்' என வுரைத்தது காண்க. ஈண்டுச் 'சேயர் தோழி செய்

நாட்டாரே' எனப் படித்தலுமாம்; அங்ஙனமாயின், பொருள் செய்யு நாட்டினரென்றும், தந்நாடல்லாத நாட்டைத் தம்மதாகச் செய்த நாட்டினரென்றுங் கூறுக.

பசுநிரை மிக்க ஆனிலைக் கருவூரினராதலாற்றும்பல்காற் பயின்றறிந்ததை உவமையாக்கினர். அணவந்தன்ன நேயேம் என் பதும் பாடம்; அணவந்தாற்போன்ற அன்புடையேம் என்பது பொருள்; நே - அன்பு, ஈரம். "நேநெஞ்சின்" (புறம். 3) என் புழிக்காண்க. கந்தப்பிள்ளை சாத்தனார் என்பதும் பாடம். வந்த என என்பது வந்தென எனத் திரிந்தது.

---

## கோவூர் கிழார்

65. வன்பரற் றெள்ளறல் பருகிய விரலைதன்
இன்புறு துணையொடு மறுவந் துகளத்
தான்வந் தன்றே தளிதரு தண்கார்
வாரா துறையுநர் வரனசைஇ
வருந்திநொந் துறைய விருந்திரோ வெனவே.

எ - து. பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத் தது.

(வி) தன் இன்புறு துணையொடு - தன் இன்பமிகுதற்குக் காரணமான துணையாகிய பிணையொடு, வன்பரற்றெள்ளறல் பருகிய இரலை - சேறே இல்லாது வலிய பரற்கற்களேயுடைமையாற் றெள்ளிய நீரைக் குடித்த கலைமான். மறுவந்து - மீளவந்து உகள - புணர்ச்சிக்குறியிற்றுள்ளி விளையாடா நிற்கவும், வாரா துறையுநர் - இன்னும் ஈண்டுவாராமல் ஆண்டுத் தங்குகின்றவர். வரல் நசைஇ - வருதலை விரும்பி. வருந்தி நொந்து உறைய - உள் ளம் வருந்தி உரையால் நொந்து உடம்புதங்க. இருந்திரோ என- உயிர்வைத்திருந்தனிரோ என இடித்து. தளிதருதண்கார் தான் வந்தன்று - துளியைப் பெய்யுந்தண்ணிய மேகந்தான் வந்தது எ - று. மறுவந்து - நீர் குடித்துச் சேக்குமிடத்து மீளவந்து. உகளுதல் - இப்பொருட்டாதல் "குறவர் முன்றின் மாதீண்டு துறு கற், கல்லாமந்தி கடுவனொடுகளும்" (ஐங். 77) என்புழிப் பழைய

வுரைகாரர் "குறவர் முன்றிலின் மாதீண்டு துறுகற்கண்ணே நாணுது மந்தி கடுவனோடுகளும்" எனவுரைத்தது கொண்டுணர்க. ஒரு விலங்கிற்குள்ள அன்பும் அவர்க்கில்லை எ - று.

இருந்திரோ என்றது கார் பருவந்தப்புதற்கண் இராள் என்று தன் கருத்தால் நினைதல் குறித்தது. தன் கற்பால் இட்ட வழக்காயிருக்கும் கார் இவ்வாறு இருந்திரோ எனக்கேட்குமாறு தலைவர் பருவந்தப்பியும் உயிர் வாழ்தலை நொந்துரைத்தவாறு. "அருமழைதரல் வேண்டிற்றருகிற்கும் பெருமையளே" (கலி. 39) என்பது காண்க. தெள்ளறல் பருகிய இரலைஉகள என்றது மழை பெய்தற்கு முன் வருவம் என்றவர் பெய்து பருகி இரலை உகளா நிற்கவும் வந்திலர் என்பது குறித்து வந்தது. வாரா துறையுநர் - வரமுயலாது தங்குபவர்.

---

## கோவத்தனுர்

66. மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிண ரூழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே.

எ - து. பருவங்கண்டு அழிந்த தலைமகளைத் தோழி பருவ மன்றென்று வற்புறீஇயது.

(வி) தடவுநிலைக் கொன்றை - உடலாற் பருமையுள்ள நிலையுடைய கொன்றை மரங்கள். மடவ - உள்ளத்தாற் பேதைமையுடையன. கல்பிறங்கு அத்தஞ் சென்றோர் என்றுள் செல்லும் வழியிலுள்ள இடையீடுகள் வருதற்கண்ணுமுண்மை தெரிய. கூறிய பருவம் வாரா அளவை என்றது அவர் பொய் வழங்கலர் என்னும் உறுதியைக் குறித்தது. கொடியிணரூழ்த்த கொடி மாலையாகப் பூங்கொத்துக்களை மலர்த்தின. வம்பமாரி - நிலைத்த பருவமழையின்றி நிலையில்லாமையையுடைய மழை. காரென மதித்தே - கார்ப்பருவ மழை யென்று தப்பக்கருதியே. காரென மதித்தே ஊழ்த்த.

மதித்தே என்றதனால் மரங்களும் உள்ளம் உடையன என்றும் மடவ என்றதனால் அறிவுப் பெருக்கந்தான் போதாதென்றும் குறித்தாள். குறித்த பருவந் தாழ்த்த தலைவனை மடவன் என்னாது தோழி கொன்றை, முல்லை, மஞ்ஞை முதலியவற்றை மடவ என்று குறித்து மொழிகிளவியாற் படைத்துக் கூறி ஆற்றுவித்தல் கவிமர பேயாமென்க. 'கொன்றை கொடியிணரூழ்ப்ப' (பரிபாடல் 8 அடி 24) என்புழிப் பரிமேலழகர் 'கொன்றைகள் தாராகிய இணர்களை மலர' எனவுரைப்பது காண்க.

---

## அள்ளூர் நன்முல்லையார்

67. உள்ளார் கொல்லோ தோழி கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப வொண்பழம்
புதுநா ணுழைப்பா னுதிமாண் வள்ளுகிர்ப்
பொலங்கல வொருகா சேய்க்கும்
நிலங்கரி கள்ளியங் காடிறந் தோரே.

எ - து. பிரிவிடை யாற்றாது தலைமகள் தோழிக் குரைத்தது.

(வி) உள்ளார்கொல் - நம்மை நினையார்கொல். கிள்ளைவளைவாய்க்கு மகளிர் வள்ளுகிர் உவமையாயிற்று. மகளிர் வள்ளுகிர் செம்மை யூட்டப்படுதல் நினைக: "குவிமுகை முருக்கின்... நகைமுக மகளிரூட்டுகிர் கடுக்கு முதிராப்பல்லிதழுதிர" (அகம். 317) என்பதனால் மகளிர் உகிர் செம்மை யூட்டப்படுதலும் அதுவே செம்முருக்கிதழ்க்கு உவமையாதலுங்கண்டுண்மை யுணர்க; பொருநராற்றுப் படையுள் பாடினிக்கு "கிளிவா யொப்பின் ஒளிவிடு வள்ளுகிர்" (34) கூறுதல் காண்க. பெருங்கதையுட் "சார்ந்தனளிருந்து வாங்குபுகொண்டு, **கிள்ளைவாயினன்ன வள்ளுகிர்**, நுதிவிரல் சிவப்பக்கதியறிந்தியக்கலின்" (4-7-41-43) என வருதலானும் இஃதுணர்க. புதுநாண் நுழைப்பான் - புதிய நூலை நுழைக்கும் பொருட்டு. நாண் - நூல்; "காப்பினாண், கழுத்தினாண்" (கம்பரா. அயோத்தி. கைகேசிசூழ்) என்பனபற்றியறிக: நுழைப்பான் நுதிமாண் வள்ளுகிர்ப் பொலங்காசு - நுழைக்கும் பொருட்டு விரல் நுதியில் மாணவைத்த கூரிய நகங்கட் கிடையிலுள்ள பொற்காசு. நுழைப்பான் மாண்ட உகிர்க்காசு என்க.

நுழைப்பான் என்பதை இங்ஙனம் எச்சமாகக்கொள்ளாது பெயராகக் கொள்ளின் ஆண்பாலாதலான் அவன் நகங்களைக் கிளிவாய்க்கு உவமையாக்குதல் வழக்காறன்றென்க. இவ்விடர்ப்பாடொன்றுமின்றி 'நுழைப்பாணுதிமாண்வள்ளுகிர்' என்பதே 'நுழைப்பானுதிமாண் வள்ளுகிர்' என எழுதினர் பிழைப்பாயிற்றெனின் ஈண்டைக்கு நன்கு பொருந்தும். பழநூல் பெருகின் கலங்களிற் புது நூல் நுழைப்பது மகளிர் செய்வது.

வேப்பம்பழங் காசேய்க்கும் இந்நிலையினும் காடிறந்தோர் உள்ளார்கொல் என்றாள்; வேம்பின் ஒண்பூ உதிர்தற்கு முன்னர் வருவம் என்று தலைவர் தெளிவித்துச் சென்றது நினைந்து. பூ நிலையில் வருவம் என்றவர் பழநிலையினும் நினையார் என்பது கருத்து; 'வேம்பினொண்பூ வுறைப்பத் தேம்படு கிளவியவர் தெளிக்கும்பொழுதே' (ஐங். 350) என்பதனான் இஃதறிக. "வேம்பினொண்பூயாண ரென்னையின்றியுங் கழிவது கொல்லோ" (குறுந். 24) என்றதும் இக்கருத்தேபற்றி வந்தது. நிலங்கரி காடு - எல்லாம் உண்டாதற்குக் காரணமான நிலம் வெம்மையாற் கரிந்த காடு. கள்ளியங்காடு - அக்காட்டிற் கள்ளிதானுண்டு பயமரம் எதுவுமில்லை என்பது குறிப்பு. வேப்பம்பழம் நிறத்தானும் வடிவானும் பொற்காசுபோலுமென்க.

இனிக் கொல்லும் ஓவும் அசையாகக்கொண்டு கள்ளியங்காடிறந்தோர் உள்ளார் எனத் துணிந்து அதற்கு வேப்பவொண்பழம் பொலங்கா சேய்க்கும் நிலங்கரி என்று சான்று காட்டினள் என்றலும் நன்கு பொருந்தும். வேம்பு பூக்கும் வேனிற் பருவம் அவர் வருவம் என்று குறித்ததாகும். அள்ளூர் பாண்டி நாட்டூர் என்பது "கொற்றச் செழியன் பிண்டநெல்லினள்ளூர்" (அகம். 46) என்பதனாலறிக.

---

## அள்ளூர் நன்முல்லையார்

68. பூழ்க்கா லன்ன செங்கா லுழுந்தின்
ஊழ்ப்படு முதுகா யுழையினங் கவரும்
அரும்பனி யச்சிரந் தீர்க்கு
மருந்து பிறிதில்லை மணந்த மார்பே.

எ - து. பிரிவிடைக் கிழத்தி மெலிந்து கூறியது.

(வி) பூழ்க்கால் - குறும்பூழின் அடி. செங்கால் - செவ்விய தாள். ஊழ்ப்படு - ஊழ்த்தல்பட்ட. உழையினம் - கலையும் பிணையும்; ஆணும் பெண்ணும் சேரநின்று கவர்தல் குறித்தார். "பழமாரினக்கலை" (குறுந். 385) எனவும் "இனந்தீர்களிற்றின்" (அகம். 32) எனவும் முசுவிற்கும் யானைக்கும் இனங்கூறுதலானுணர்க. இனமாகக் கவர்தல் தலைவிக்குக் காம ஏது ஆகும். இதனை வட நூலார் உத்தீபன ஏது என்பர். அரும்பனி நோயை அச்சிரக்காலத்துத் தீர்க்கும் மருந்து மணந்த மார்பே பிறிதில்லை எ - று.

மார்பை மருந்து என்றலாற் பனிநோயாயிற்று. பனி நோயும் உண்டு "வெற்பகங் கொங்கின் வீழ்பனி நோய்" என்பது திருத்தொண்டர் திருவந்தாதி. மணந்த மார்பு தணத்தலான் உள்ள நோயாதல் தெரியப்பிறிதில்லை என்றாள். பிறிது என்பது நோய் செய்ததினும் வேறு எ - று "தன்னோய்க்குத் தானே மருந்து" (குறள். 1102) என்பது போலக் கொள்க. மணந்த மார்பே மருந்தாதல் கூறி மணவாத மார்பு நோய் செய்வது குறித்தாள் என்பதுமாம்.

புலத்தின்கண் வித்திய உழுந்து பூத்தற்கு முன்னர் வருவமென்று தெளிவித்துப் போயவர் அது முதுகாய்விட்டு உழையினங்கவரும்போதும் வந்திலர் என்பது கருதிக் கூறினாள். மேற்பாட்டொடு பொருளியைபு காண்க. மணந்த மார்பென இறந்த காலத்தாற் கூறியதுதான் முன்னர் அச்சிரக்காலத்துத்துய்த்துப் பனியின் வருத்தமின்றி மகிழ்ந்தது நினைத்து. அரும்பனி - தடவு நெருப்பாற் போதற்கரிய பனி. இப்பருவந்தான் உழுந்து காய்ப்பதென்பது "இரும்பனிப் பருவத்த மயிர்க்கா யுழுந்தி, னகலிலை" (நற். 89) என வருதலானறிக.

## கடுந்தோட் காவீரனார்

69. கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சார னாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே.

எ - து. தோழி இரவுக்குறி மறுத்தது.

(வி) கருங்கண் - இருளாற் கரிய இடத்து. தாக்கலை - தாவுதல் உடைய தனக்குரிய ஆண் குரங்கு. பெரும்பிறிதுற் றென - சாவினை அடைந்ததாக. இருண்ட இடத்துத் தாவுதலாற் பிழைத்து இறந்தது குறித்தவாறு. கைம்மை உய்யா - கணவ னில்லா தொழுகுதலைச் செலுத்தமாட்டாத. காமர் மந்தி - கண வன் விருப்பமுடைய பெண் குரங்கு. கல்லா வன்பறழ் - தன் றொழிலை இனிக் கற்கவேண்டாத வலிய குட்டியை. கிளைமுதற் சேர்த்தி - சுற்றத்திடத்து வைத்து. ஓங்குவரையடுக்கத்து - தன் கணவன் வீழ்ந்துகிடக்கும் ஓங்கியவரைகளையுடைய மலைப்பக்கத்து. பாய்ந்துயிர் செகுக்குஞ் சாரல் என்க. இருண்ட இடங்களிற் றாவுதல் வல்ல கலையும் தப்புதல் குறித்து நள்ளிரவின் வருதலாற் றலைவற்கு வரும் ஏதங் காட்டினாள். தலைவன் நாட்டுச் சாரலின் விலங்கும் கைம்மை யுய்யாமை தெளிவித்துத் தலைவியின் இயல்பை நினைவித்தாள். வருந்துதும் என்றது நீ நள்ளிரவில் ஏதமின்றி வந்தவிடத்தும் ஏதங்களை நினைந்து வருந்துதும் எ - று. வன்பறழ் ஆதலின் அதன் றொழிலை இனித்தானிருந்து கற்பிக்க வேண்டாமை காட்டித் தன்னுயிர் செகுக்கும் என்றாள். இங் ஙனம் ஏதம் நினைந்து யாம் வருந்தாமல் விரைந்து வரைந்து வாழியோ என்றாள்: நின்னை வாரல் என்று சொல்லும்வண்ணம் இன்னும் வரையாது வருதற்கு வருந்துதும் என்றாளெனினும் அமையும்.

கடுந்தோட் காவீரன் - தோளின் கடுமையாலெத்தகைய காவையும் ஏந்த வல்ல வீரன்.

---

## ஓரம்போகியார்

70\. ஒடுங்கீ ரோதி யொண்ணுதற் குறுமகள்
நறுந்தண் ணீர ளாரணங் கினளே
இனைய ளென்றவட் புனையள வறியேன்
சிலமெல் லியவே கிளவி
அணைமெல் லியள்யான் முயங்குங் காலே.

எ - து. புணர்ந்து நீங்குந் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

(வி) ஒடுங்கு ஈரோதி - தலையின் இடத்தும் வலத்தும் ஒடுங்கிய ஈர்ந்த கூந்தல். இனித் தன்னைக்கூடி நீங்கி ஆயத்தி லொடுங்குதல் கருதி ஒடுங்கு குறுமகள் என்றானெனினுமமையும். ஸீமந்தரேகை படவகிர்ந்தது குறித்து ஈரோதி என்றான். ஒண்ணுதற் குறுமகளாகிய நறுந்தண்ணீரள் முயங்குங்கால் அணைமெல்லியள் அவள் கிளவி சில மெல்லிய முயங்காக்கால் ஆரணங்கினள் ஆதலான் அவளை இனையளென்று புனையும் அளவறியேன் என்றான். குறுமகள் - ஆண்டிற்குறிய மகள்; இளம் பெண் என்பது கருத்து. முயங்குங்கால் ஈரோதியாலும், ஒண்ணுதலாலும் மெய்யெங்கும் பரந்த இளமையாலும் கண்ணிற்கும், நறுமையால் மூக்கிற்கும், தண்ணிய நீரின் தன்மையளாதலான் வாய்க்கும், கிளவி சில மெல்லிய என்றலாற் செவிக்கும், அணைமெல்லியள் என்றதனுல் மெய்க்கும் இன்பஞ் செய்பவள் முயங்காக்கால் ஆரணங்கினளாதலறிந்து இனையளென்று புனையளவறியேன் என்றான். அவள் என்றான் தன்னைப் புணர்ந்து நீங்கி ஆயத்து ஒடுங்கித் தனக்குச் சேயளாதலான். முயங்குங்கால் மெல்லியள் என்றதனுல் முயங்காக்கால் ஆரணங்கினள் என்பது கொள்ளப்பட்டது. முயங்குமுன்னும் முயங்கிவிட்ட பின்னும் ஆரணங்கினளாம் அவள் முயங்குங்கால் இன்பஞ் செய்தலான் இனையளென்றொருபடியாகக் கூறலாகாமை தெளிவித்தான். ஆரணங்கு - அவளன்றி வேறெதனானும் நீங்கற்கரிய வருத்தம்: கிளவிக்குச் சின்மையும் மென்மையும் வேண்டுதல் காண்க. தண்ணீரள் என்புழி நீர் குளிர்ச்சிமிக்குத் தாகந்தணித்தலின் வாய்க்கினிமை குறித்தானவன்.

## கருவூர் ஓதஞானியர்

71\. மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
அரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப்
பெருந்தோ ணுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு மகளே.

எ - து. பொருள்கடைக் கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

(வி) பிரிந்துபோய்த் தேடிய பொருளான் அறஞ்செய்து அவ்வுலகிற்றுய்ப்பது மருந்தென்னின் மகளே மருந்து எனவும் அப்பொருளான் இவ்வுலகிற்றுய்ப்பது செல்வமென்னின் மகளே செல்வம் எனவுங் கூறி அரும்பிய சுணங்கும் அம்பகட்டிள முலையும் பெருந்தோளும் நுணுகிய நுசுப்பும் உடைமையால் மகளே அப்பொருளாற்றுய்ப்பதாகிய இன்பம் எனவும் கூறினான். இது பொருள்கடைக் கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியதாதலான் அதற்கேற்க வுரைக்கப்பட்டது. மருந்து அமிழ்தமாதல் "மருந்தாகுந் தீநீர் மலிதுறைமேய விருந்தையூரமர்ந்த செல்வ" என்னும் பரிபாடலான் உணர்க, "மருந்தின் சாயல்" (1033) எனச் சிந்தாமணியினும் வந்தது காண்க. பொருளான் அறனும் பொருளாற் பொருளும் பொருளான் இன்பமும் எய்தலாமென்ற நெஞ்சிற்கு அறப்பயனும் பொருட்பேறும் இன்பப் பெருக்கும் எனக்குக் கானவர் நல்குறு மகளே யாயினள் என்றானென்க.

இனிப் பிணி நீங்கவேண்டுவது மருந்தெனின் மகளே மருந்தாவள் வறுமை நீங்கவேண்டுவது செல்வமெனின் மகளே செல்வமாவள் என்றலுமாம். நோயும் வறுமையுமே நீங்கவேண்டுதல் "அடியார்க்கில்லை நோயும் வெறுமையுமே" (அழகரந்தாதி-18) என்பதனானுணரலாம். நோயும் வறுமையும் நீங்குதலேயன்றி இன்பமும் வேண்டுமெனின் அதுவும் மகளாலாதல் குறித்துக்கொண்டு சுணங்கு முலை தோள் நுசுப்பு இவற்றைச் சிறப்பித்தான் என்க. மகளே மருந்தும், வைப்புமாதல் உலகியலினுங் காண்பது. கொழுநன் பிணிக்கு மருந்தெனின் தன்னுடம்பையே அறுத்து உதவி மருந்தாகுங் குலமகளும் கொழுநன் தளர்நிலையிற் கூலிக் குழந்தும் அவனைக் காத்து வைப்பாம் கற்புடையாட்டியும் இந் நாவலந் தீவிலுண்மையானுணர்க.

மருந்தும் வைப்பும் இன்பமும் என்னு மூன்றும் சுணங்கையும் முலையையும் தோளையும் நுசுப்பையுங்கொண்டு எனக்குரிய மகளாக இயைந்திருக்க ஈண்டிருந்து துய்த்தல் விட்டுப் புறம் போவதெற்றுக்கென்று செலவழுங்கினான் என்க. நாகரிகரும் நல்குதற்கரிய இத்தகைய மகளைக் கல்கெழுகானவர் நல்குதல் வியப்பு என்று குறித்தான். கல்-மலை. 'வட பெருங்கல்' என்பது புறம். (17) மலையின் மருந்தும் பொன்னும் உண்டாதலாற் கூறினான் என்பதுமாம் "கன்ம ருங்கெழுந் தென்றுமோர் துளிவரக்காணு, நன்ம ருந்துபோ னலனற வுணங்கிய நங்கை" என்ப. (கம்ப. சுந்தர. காட்சி. 3)

அரும்பிய சுணங்கின் முலை எனினுமமையும். அம்பகட்டிள முலையும் பெருந்தோளும் தாங்கலாகாப் பொறையாதல்பற்றி நுணுகிய நுசுப்பு என இயைபுபடக்கூறியது காண்க. பிறமகளிர்க்கும் சுணங்குண்டு இங்ஙனம் அரும்புதல் காணேன், முலையுண்டு இவ்வம்பகட்டிளமை காணேன், தோளுண்டு இப்பெருமை காணேன், நுசுப்புண்டு இந்நுணுக்கங் காணேன் என்னுங் குறிப்பின் விசேடித்தான்.

பகடு—பெருமை. அரும்புதல்—பொன்போல் அரும்புதல்: "பொன் பொதிந்தன்ன சுணங்கின்" (நற். 26) என்ப.

ஓத ஞானியார்-வெள்ளம் போன்ற ஞானப் பெருக்கர் எ-று. இச்சிறப்புப் பெயர்க்கியைய இவர் பாடல் சிறத்தல் காண்க.

---

## மள்ளனார்

72. பூவொத் தலமருந் தகைய வேவொத்
தெல்லாரு மறிய நோய்செய் தனவே
தேமொழித் திரண்ட மென்றோண் மாமலைப்
பரீஇ வித்திய வேனற்
குரீஇ யோப்புவாள் பெருமழைக் கண்ணே.

எ-து. தலைமகன், தன் வேறுபாடு கண்டு வினாய பாங்கற்கு உரைத்தது.

(வி) பூ ஒத்து—தன்னை யான் காணுங்கால் வனப்பாற்றாமரைப் பூக்களை ஒத்து. ஏ ஒத்து—தான் என்னைக் காணும்போது கொல்லும் அம்பினை ஒத்து. எல்லாரும் அறிய—உற்றாரன்றிச் செற்றாரும் அயலாரும் அறிய. அலமருந்தகைய நோய் செய்தன—யான் சுழன்று தடுமாறும் தன்மையுள்ள பெரிய நோயைச் செய்தன; குருவி ஓப்புவாள் பெருமழைக் கண்கள் எ-று.

அலமருந்தகையால் எல்லாரும் அறிதற்காயிற்று. இதனாற் பாங்கனாகிய நீ என் வேறுபாடு கண்டு வினாவுவது வியப்பன்று என்பது குறிப்பு. பரீஇ வித்திய ஏனல்—நல்ல காலமறிந்து வித்திய தினை. இதுவே பொருளென்பது "பவர் முல்லை தோன்றி பரியாம லீன்ற" (புறப்பொருள்—பெருந்திணை) என்புழி நல்லுரைகாரர் சாமுண்டி தேவ நாயகர் "முல்லையுந் தோன்றியுங் காலமறியாமல் முகிழ்த்தன" எனத் தெளிவித்தது கொண்டுணர்க. பெருங்கதையுட் டினை விதைத்தற்கு முன்னர்ச் செய்யு முறைமைகளைக் கூறியவிடத்து "நாக நறுமர நவியத்திற் றுணித்து, வேகவெவ்வழல் விளியமாட்டி, மாணிணப் புழுக்கலொடு தேனெய் விதவையிற், பன்முறை பகர்ந்து தொன் முறை பிழையார், நன்னாட்கொண்டு துன்னியர் பரியப், பொன்னேர் சிறுதினை விளைந்த புலந்தொறும்" (2-12-111-116) என விளங்கக்கூறுதல் கண்டு இதனுண்மையுணர்க. இதன்கண் நாட்கொண்டு ஐயர்பரிய விளைந்தபுலம் என இயைதல் கண்டு கொள்க. தலைவற்குப் பகைவரும் உண்மை "செறுவர்க் குவகையாக......வருபவோ" (குறுந். 336) என்புழிக் காண்க. ஏவுண்டார் அலமருந்தகைய ஏ ஒத்து என்பதுமாம்.

ஏனற் குரீஇ—தினையிற் படியும் குருவிகள். மழைக் கண்—குளிர்ச்சியையுடைய கண்கள். பூ—தாமரை; "சேந்தொத்தலர்ந்த செழுந்தாமரை யன்ன வாட்கண்" (சிந். 8) என்ப. மழைக் கண் ஏ ஒத்து நோய் செய்தல் விபரீதம் என்பது குறிப்பு. மென்றோளையுடைய ஓப்புவாள் என்க. ஓப்புவாளுக்குத் தேமொழியும் மென்றோளுமே கூறினான் குரீஇ ஓப்பும்போது அவள் வாயாற் பாடியது கேட்டும் கையால் ஓச்சியது கண்டும் என்க.

மள்ளன்—வீரற்குப் பெயர்; இவர் வீரருமாவர் போலும்.

## பரணர்

73. மகிழ்நன் மார்பே வெய்யை யானீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே.

எ-து. பகற்குறி மறுத்து, இரவுக்குறி நேர்ந்து, அதுவுமறுத் தமைபடத் தலைமகட்குத் தோழி சொல்லியது:

(வி) மகிழ்நன்—நமக்கு மகிழ்செய்தற் குரியவனுடைய. மார்பே வெய்யை நீ—மார்பையே எப்போதும் அணையும் விருப் பினை. மார்பே என்றது தலைவி இரு முலையானும் அணையுஞ் சிறப்பு நோக்கி. எப்போதும் வெய்யை என்பது இது பகற்குறி யும் இரவுக்குறியு மறுத்ததாதலின் உய்த்துணரலாம். இடர்ப் பட்டு ஒரோரமயத்துக் குறிசெய்து கூடுதலை மறுத்து வரைந்து எப்போதும் அணைந்திருத்தலைக் குறித்தது. அங்ஙனம் எப்போ தும் அணையும்படிக்குத் தலைவர் வரைவொடு வருதற்பொருட்டுக் கோசர் போல வன்கட் சூழ்ச்சியுஞ் சிறிது புரியவேண்டும். ஊரும் நம் ஐயரும் இக்களவறிதல் காட்டிப் பகற்குறி மறுத்ததும் தாயுந் தமரும் அறிதல் காட்டியுங் காவல் மிகுதி காட்டியும் இர வுக்குறி மறுத்ததும் யான் புரிந்த சூழ்ச்சியாகும். இவ்வாறு பக லும் இரவும் வாராமல் மறுத்ததற்கு அழியல் இங்ஙனம் மறுத்தல் பற்றி விரைந்து வரைவொடு வருவன் ஆதலான் வாழி தோழி என் முள். தலைவிபாலுந் தலைவர்பாலும் இரக்கங் காட்டாது இப் போது மறுத்தது ஆதலானும் அது பிறிதொன்று கருதிச் செய் யப்பட்டதனானும் வன்கட் சூழ்ச்சியாயிற்று. சிறிதே வேண்டும்- சிறிது பொழுதைக்கே வேண்டும்; விரைந்து வரைவர் என் பது கருத்து. ஈண்டுவமையிற் காட்டிய கோசர் சூழ்ச்சி கொண் கானவேள் நன்னன் வளர்த்த நறு மாமரத்தைக் கொன்று நாட் டிற் போக்கற்கு அவர் சூழ்ந்தது ஆகும். நன்னன் உண்டார்க்கு நீடாயுள் தருவதென்று தான் கேட்ட துணிபினால் ஓர் நறுமா வைப் போற்றி வளர்த்து அது பழுப்பது பார்த்திருந்தான். அஃதொரு காய் காய்த்தது. அது முற்றிப் பெருங்காயாகிய நிலை யிற் காற்றால் அடியுண்டு பக்கலிலோடும் யாற்றில் வீழ்ந்தது. அவ்

வமயத்து யாற்றிற் குளித்த கோசர் குடிப் பெண்ணொருத்தி அதனை எடுத்துத் தின்றனள். காயைத் தன்பாற் கொடாது தின்றது தப்பென்று அவள் தமர் ஒன்பதிற்றொன்பது களிற்றோடு அவள் நிறையளவான பொற்பாவை கொடுப்பவுங் கொள்ளானாகி நன்னன் அவளைக் கொலைபுரிந்தனன். இக்கொடுமையைப் பொறாத கோசர் இத்தீங்கு விளைத்தற்குக் காரணமாயது நறுமா ஆயுளைப் போக்குவது என்று துணிந்து அதனை அழித்துத் தொலைக்க ஒரு சூழ்ச்சி தொடங்கினர். பாடல் வல்ல மகளிர்க்குப் பிடிப்பரிசில் மிகுத்து நல்கும் அவ்வூர் அகுதை தந்தையிடன் அகவன் மகளிர் பலரைப் புகுவித்து அவன்பால் அவர் பெற்ற பிடிகள் பலவற்றையும் நன்னன் ஊரிலில்லாத போழ்தில் அவன் நறுமாம் பொழிலிற் பிணிக்கச் செய்தனர். நன்னன் நறுமாவிற் பிணித்தபிடி தன் வழக்கப்படி அம்மாமரத்தின் அடி மண்ணை உதைத்து வாரியிறைத்து அதுவே வேரோடு யாற்றில் வீழும் வண்ணம் செய்தது. அதனைப் பலர் முறித்து நாட்டில் விறகாக் கொண்டுபோயினர்: இச்செய்தியே நன்னன் நறுமாகொன்று நாட்டிற் போக்கிய கோசர் வன்கட் சூழ்ச்சிச் செயலாக ஈண்டுக் கூறப்பட்டதாமென்க. யானைகள் நின்ற நிலத்தை அகழுமியல் புடையன என்பது "களிறுதைத்தாடிய கவிழ்கணிடூறு......... பழங்கண் முதுநெறி மறைக்கும்" (நற்றிணை-302) என்பதனா னறியலாம். இம்மரத்தினொரு காயைத் தின்ற தவற்றிற்கு ஒரு மகளைக் கொலைசெய்த நன்னன் இம்மரத்தையே தொலைத்த அகவன் மகளிர் பலரை இவன் என்செய்வன் காணலாமென்று கோசர் செய்த சூழ்ச்சியிஃதென்க: இவ்வுண்மை "சேரி சேர" (குறுந். 298) என்னும் பாட்டில் இது பாடிய பரணரென்னும் புலவர் பெருமானே "இன்கடுங் கள்ளி னகுதை தந்தை, வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர், மடப்பிடிப் பரிசின் மானப், பிறிதொன்று குறித்ததவ னெடும்புற நிலையே" எனப் பாடியதனாலறிந்து கொள்க: இப்பாட்டிற் பரிசில் பிறிதொன்று குறித்தது நாடறிந்ததாதலின் அதனை உவமையாக்கித் தலைவன் பிறிதொன்று குறித்ததைத் தெளிவித்தாள். நன்னன் பெண் கொலை புரிந்தசெய்தி "மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை" (குறுந் 292) என்புழிக் கண்டுகொள்க. ஒன்றுமொழிக் கோசர்—இரண்டு படாத ஒரு சொல்லேயுடைய கோசர் என்னும் வீரர்.

## விட்ட குதிரையார்

74. விட்ட குதிரை விசைப்பி னன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாந்தற் படர்ந்தமை யறியான் றானும்
வேனி லானே றுபோலச்
சாயின னென்பநம் மாணல நயந்தே.

எ-து. தோழி தலைமகன் குறை மறுத்வாற்றாற் கூறியது.

(வி) விட்ட குதிரை—நெடுநாட் பிணித்த கட்டினின்று விடப்பட்ட குதிரை. குதிரை விசைப்பினன்ன பசுங்கழை—குதிரையின் விசைப்பினை ஒத்த விசைப்பினையுடைய பசிய மூங்கில். விசைப்பு—துள்ளியெழுதல். விசும்புதோய் கழை—மேகத்தைத் தோயுங் கழை: 'விசும்பிற்றுளி' (குறள். 16) என்பதும் 'விசும்புதளி பொழிந்து' (அகம். 345) என்பதும் காண்க. மூங்கிலுள்ள நிலங் குன்றமாதலின் அது மேகத்தைத் தோய்தல் கூடும் என்க. "புள்ளு நிமிர்ந்தன்ன பொலம்படைக் கலிமா" (நற். 78) என்பதனாற் குதிரையின் துள்ளுதலை உவமித்தாள். இரவில் வளைந்து எட்டற்கு ஆகிப் பகலில் வளைத்தாற்றுள்ளி விசும்புதோயும் கழை என்றது இரவிற் குறியிடத்திற் கிடைத்தவன் பகலிற் கிடைக்கரியன் என்று களவின் இடர்ப்பாடு கருதிய குறிப்பிற்று. பசுங்கழை துள்ளியெழுந்து எட்டாது நிமிர்வது பகலிலேதான் என்பதுணர்க.

யாம் வேனிலான் போலத் தற்படர்ந்தமை யறியான் தானும் வேனில் ஏறுபோல நம்மாணலம் நயந்து சாயினனென்ப என்க. வேனில்—வயந்த காலம்; புணர்ச்சிக்குரியது; 'வேனில் வேள்' (திருவாசகம். அறிவுறுத்தல்-9) என்பது நினைக. பிணிக்கப்பட்ட பசு இக்காலத்து விடையை நினைந்து மெலிதலும் அப்பசுவை விரும்பி விடை மெலிதலும் உலகியல். இவ்வுவமையே களவிற் காவலிலிருந்து நினைந்து மெலியும் தலைவிக்கும் அவளை எய்தப்பெறாது விரும்பி மெலியுந் தலைவற்கும் பொருந்திற்றுதல் காண்க. இனி நின்றபடியே வைத்து ஆனேறு போல என்பதற்கு ஆனால் விரும்பபட்ட ஏறு போல எனவுரைப்பதும் ஈண்டைக்கு ஏற்கும்; "ஏறு உடனிலை வேட்கையின் மடநாகுதழீஇ" (அகம்.

64) என்புழி மடநாகிற்கும் ஏற்றிற்கும் உடனிலே வேட்கை கூறு தல் காண்க.

தலைமகன் குறை—தலைமகனுடைய குறையை. மருதவாற்றால்—தலைவி மருத முறையால். படர்தல்—நினைதல்.

கயிற்றின் நீளக்கொண்டு துள்ள விடுதலன்றிக் கைவிடாத குதிரையை விட்ட குதிரை என்ற தொடரான் இப்பெயர் பெற்றனராவர்: "விடுவிசைக் குதிரை விலங்குபரி முடுக" (அகம். 14) என்றது காண்க.

---

## படுமாத்து மோசி கீரனார்

75. நீகண் டனையோ கண்டார்க்கேட் டனையோ
ஒன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.

எ-து. தலைமகன் வரவுணர்த்திய பாணற்குத் தலைமகள் கூறியது.

(வி) நீ கண்டனையாயின் அவரைத் தனிவிட்டு இங்கு வருதல் செய்யாய் என்று கண்டார்க் கேட்டனையோ என்றாள். பாணர் பொய்ப்பது பல்கா லறிந்தவளாதலால் ஐயப்பாட்டால் இங்ஙனம் வினவினாள்; "ஒருநின் பாணன் பொய்யனாக" (குறுந். 127) என்பது காண்க. கண்டார்க் கேட்டனையோ என்றதன்மேல் யார் வாய்க் கேட்டனை என்றது அக்கண்டவரும் நினக்குரைத்தவரும் நின்னோடொத்த பாணரோ என்பது நினைந்து. ஒன்று—கண்டது, கேட்டது என்னும் இரண்டனுள் ஒன்று. தெளிய நசையினம்—தெளிய விரும்பினம். காதலர் வருதலையே விரும்பினேம்தெளிய ஒன்றுமொழிமோ என்பது நன்கியையும். பாணன் கண்டார்க் கேட்டனன் என விடை கூறியது கேட்டுத் தலைவி யார் வாய்க் கேட்டனை என்றாளாம்: நினக்குரைத்தவர் கண்டது வாய்மையாயின் எனக்குரைத்த நீயும் நினக்குரைத்த அவரும்

யானை சோணை யாற்றிற்படியும் பொன்மலிந்த பாடலி நகரத்தைப் பெறுக என்றாள். தலைவிக்குரைத்த பாணற்குக் காதலர் வரவு கண்டதாகக் கூறியவனும் ஒரு பாணன் என்பது ஈண்டைக்கு நன்கியையும். இருவரும் பொய்யர் என்று தான் துணிந்தது தெளியத் தன்னுலாகாத பெருங் கொடையை அவர் பெறுக என்றாளெனக் கொள்க. இங்ஙனம் கொள்ளாக்கால் சேய்மையில் வடக்கட் பெருமுடியரசர் தலைநகரை இவள் வழங்குதல் இயையாதென்க. போரினும் பெறற்கரியது தோன்ற யானைப் படையும்,பொன்மலிவும் பாடலிக்குக் கூறினாள் : சோணை படியும் என்பதனால் அது நீரரணுடைமை குறித்தாள். நாற்படையுட்டலையாயது கருதி யானையுடைய படை கருதினாள் : களிறே படைக்காதல் கருதி வெண்கோட்டி யானை என்றாள். 'பொன்னினாகும் பொருபடை' (சிந்தா. 1923) ஆதலான் பொன் மலிதல் கூறினாள். இது பாடிய புலவர் நாளிற் பாடலி உயர்ந்து சிறந்து விளங்குதல் இதனானறியலாம்.

---

## கிள்ளிமங்கலங்கிழார்

76. காந்தள் வேலி யோங்குமலை நன்னாட்டுச்
செல்ப வென்பவோ கல்வரை மார்பர்
சிலம்பிற் சேம்பி னலங்கல் வள்ளிலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தண்வரல் வாடை தூக்கும்
கடும்பனி யச்சிர நடுங்கஞ ருறவே.

எ-து. பிரிவுணர்த்தச் சென்ற தோழிக்கு அவர் பிரிவு முன்னர் உணர்ந்த தலைமகள் சொல்லியது.

(வி) காந்தள் வேலி-மலைநாட்டுக் காந்தள் சூழ்ந்து வேலியாயுள்ள, மலைநாட்டின்கண். செல்ப என்பவோ—சென்றார் என்னாது இனிச் செல்வார் என்று சொல்லுவரோ எ-று. வாடை தூக்கும் கடும்பனி அச்சிரக்காலை யான் நடுங்கும் வருத்தம் உறுதலான் தான் அவர் பிரிவு முன்னரே உணர்ந்திருத்தல் தெளியச் செல்ப என்பவோ என்றாள். அவருள்ளபொழுது வாடை வருத்

தாமை " செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின், ஓடுவை மன்னல் வாடை நீ யெமக்கே " (அகம். 125) என்பதனான் அறிக. வாடையும் பனியும் அச்சிரக் காலத்துக் குரியனவாதலிற் கூறிக் காட்டினாள். கல்வரை மார்பர் செல்ப என்பவோ என்புழிக் கல்வரை மார்பர் கல்வரையாகிய நெஞ்சினர் எ-று. மார்பு நெஞ்சத்திற் காதல் " மார்பமென்பதோர் கோயிலமைத்து மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி " (பெரியாழ்வார் திருமொழி ஆசைவாய். 3) என வருதலானறிக. பிரிதற்குரியதல்லாத அச்சிரக் காலையிற் பிரிதலான் இங்ஙனம் கூறினாள். இது " தண்பனியச்சிரந்தமியோர்க் கரிதெனக், கனவினும் பிரிவறியலனே " (அகம். 178) எனவும் " அச்சிரம் வந்தன் றமைந்தன் றிதுவென, எப்பொருள் பெறினும் பிரியன்மினோவெனச் செப்புவல் வாழியோ துணையுடையீர்க்கே " (ஷை. 217) எனவும் வருதலான் உணரப்படும். வாடை தானேயும் போதாது சேம்பினிலைகளைக் களிற்றுச் செவிகளைப் போல அசையச் செய்து பனிக்காற்றை மிகுத்தலால் தான் நடுங்குதல் கூறினாள். துறையுள் ' அவர் பிரிவுமுன்னர் உணர்ந்த தலைமகள் ' என்றிருத்தலான் வாடை தூக்கும் கடும்பனி யச்சிரத்துத் தான் நடுங்கஞர் உறுதலே தான் உணர்தற்கு ஏது எனத் தெளியவைத்து அச்சிரத்தில் யான் நடுங்கு அஞர் உறுதலாற் செல்ப என்பவோ சென்றாரென்னாரோ என்றாளென்பதே பொருந்திற்றாதல் காண்க.

---

## மதுரை மருதன் இளநாகனார்

77\. அம்ம வாழி தோழி யாவதுந்
தவறெனிற் றவறோ விலவே வெஞ்சுரத்
துலந்த வம்பல ருவலிடு பதுக்கை
நெடுநல் யானைக் கிடுநிழ லாகும்
அரிய கானஞ் சென்றோர்க்
கெளிய வாகிய தடமென் றோளே.

எ-து. பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்கு சொல்லியது.

(வி) தம்மையும் நம்மையும் துன்பத்தின் வைத்தலான் அரிய கானஞ் சென்றோர்க்கு யாவதுந் தவறெனின் அரிய கானஞ் சென்றோர்க்கு எளியவாகிய தடமென்றோள்களே தவறு ஓவில என்றாளென்க. சென்றோர்க்குத் தவறெனின் என்பது "இல்லை தவறவர்க்காயினும்" (குறள். 1321) என்புழிப் போல வேற்றுமை மயக்கம். சென்றோர்க்குத் தவறெனின்—சென்றோர் மாட்டுந் தவறெனின் எ-று. களவிற் சிறுபொழுதும் பிரிந்து சேறற்கு அரியவாகிய என்றோள்கள் கற்பிற் பெருங்காலம் அரிய கானஞ் சேறற்கு எளிய ஆதல் தவறென்று கருதிக் கூறினாள். இதனை, "சுரம்பல விறந்தோர், தாம்பழி யுடையரல்லர் நாளும், நயந் தோர்ப்பிணித்தறேற்றா வயங்குவினை, வாளேரெல்வளை நெகிழ்த்த தோளே தோழிதவறுடையவ்வே" (அகம். 267) என்பதுபோலக் கொள்க. தவறு ஓவில - தவறு நீங்கில. அரிய கானஞ்சென்றோர்க்கு எளியவாகிய என்புழி அரிய எளிய என்பன முரணின் வருதலான் இதுவே பொருளாமென்க. உலந்த வம்பலர் உவவிடு பதுக்கை - வழிச்செல்வோர் இறந்தாருடைய சருகிட்டு மூடிய கற்குவியல். உலந்தவம்பலர்-வம்பலராயுலந்தார். வம்பலர் - வழிச் செல்வோர். வழிச்செல்வோரைக் கொன்று கல்லிட்டு மூடுவது ஆறலை கள்வர் வழக்கம்: "வடிநவிலம்பினேவலாடவர், ஆளறித் துயர்த்தவஞ்சுவரு பதுக்கை" (அகம். 215) என வருதலானறிக. பிணத்தை மூடிய கற்குவியலன்றி வேறு நிழல்தருவன ஆண் டில்லை எ-று. அந்நிழலிற்றங்கலாமெனின் ஆண்டும் கொல்விலங் குண்மை காட்டி நெடுநல் யானைக் கிடுநிழலாகும் கானம் என்றாள். நல்யானை என்றது தன் துணைபிரியாமை குறித்தது. பதுக்கை யின் உயரந்தெரிய யானைக்கிடு நிழலாகும் என்றாள்.

இனிச் சென்றோர்க்குப் பிரிதற்கெளிய வாகிய தடமென் றோள்கள் தவறெனின் தவறோ இல என்று அவரைச் செலவழுங் குவியாது செலவிட்ட நீயே தவறுடையை எனத் தோழியைக் குறிப்பிற்கொள்ளவைத்தாளென்பதும் ஆம்.

சென்றோர்க்குத் தோள்கள் எளிய ஆதல் என்பது சேறற்கண் தலைவனை விலக்காது தொழுது விடுத்தல் ஆம். தோள்கள் செலவு விலக்குதலுண்டென்பது "மடமகள் நலங்கிளர் பணைத்தோள் விலங்கின செலவே" (421) என்னும் ஐங்குறு நூற்றானுணர்க.

---

நக்கீரனார்

78. பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பிச்
சிலம்பி னிழிதரு மிலங்குமலை வெற்ப
நோதக் கன்றே காமம் யாவதும்
நன்றென வுணரார் மாட்டுஞ்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே.

எ-து. பாங்கன் தலைமகற்குச் சொல்லியது.

(வி) அருவி பிறப்பது பெருவரை மிசையாகியும் ஆண்டே நிலைத்தலறியாது முழவின் ஒலித்துத் தாழ்வரைகளில் இழிதரும் வெற்ப என்றது நின் உயர்குடிப் பிறப்பின் மேன்மைக்கு ஏற்ற வாறின்றிப் பொருளில்லாத வறுஞ்சொற் பலபேசித் தாழ்வுழி யெல்லாம் இழிதருவாய் என்றதாம். காமம் நோதல் தக்கது. யாவதும் நன்றென உணரார் மாட்டும் - தன்னைச் சிறிதும் நல்ல தென்று அறியாதாரிடத்தும்; தன்னைத் தீதென உணர்வாரிடத் தும் எ-று. சென்றே நிற்கும் பெரும் பேதைமைத்து—சென்று இரந்தே நிற்கும் பெரிய பேதைமையுடையது ஆதலான். காமம் தீதென வுணர்ந்த பார்ப்பனப் பாங்கனுதலான் பாங்கற் கூட் டத்து தன்னுற் குறியிடம் தலைப்பெய்தல்வேண்டி யிரந்து நிற்கும் தலைவன் இயல்பு தெரியக் காமத்தின்மேல்வைத்துக் கூறினன். காமம் நன்றென வுணரார்மாட்டும் எனக் காமத்தைத் தீதென வுணரும் தன்னையே படர்க்கையாகக் கூறினனும். ‘பேதையாய்க் காமம் பிடித்தாய் பிழைப்பாயோ’ என்றார் கம்பநாடர்; (யுத்தகாண்டம். அதிகாயன்-271) இழிதரும் இலங்குமலைவெற்ப என்றது நீ இழிதருதல் எல்லாராலும் உணரப்படும் என்னுங் குறிப்பிற்று. மலை—அடுக்கல்.

“செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ யுற்றா ரறிவதொன்றன்று” (குறள். 1255) என்புழிப் பரிமேலழகர் “காம நோயுறுதார் மானமுடையார், நன்றென வுணரார்மாட்டுஞ் சென்றே நிற்கும் யானறிவதொன்றன்று என்பதாம்” என இக் குறுந்தொகையைக்கொண்டு கற்பிற்றலைவி கூற்றின்வைத்துக்

கூறினர்; தோழி காமம் நன்றெனவுணராத அறிவரையும் தலைவர் வரவு குறித்துப் பருவவரவு வினவுதல் (குறுந். 277) கண்டுணர்க.

முதுவாய்க்கோடியர்—அறிவையும் அதற்கேற்ற வாயினையுமுடைய கூத்தர். சென்றே நிற்கும்—சேறலும் நிற்றலு மல்லது வேறு பெறுதலில்லை எ-று. முழவிற்றதும்பல்—பாங்கன் நல்லுரையை மறுத்துத் தலைவன் பல சொல்லுதல் குறித்தது எனினுமமையும். யாவதும்—சிறிதும்.

---

## குடவாயிற் கீரத்தனர்

79\. கான யானை தோனயந் துண்ட
பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்க லுலவை யேறி யொய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்ச்
சேந்தனர் கொல்லோ தாமே யாந்தமக்
கொல்லே மென்ற தப்பற்
சொல்லா தகறல் வல்லு வோரே.

எ-து. பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(வி) யாம் தமக்கு ஒல்லேம் என்ற தப்பல் - யாம் பிரிவிற் பொறேம் என்று தமக்குக் கூறிய தவற்றால்; இஃதோர் தவறோ என்பது குறிப்பு. யாம் இத்தவறுரைத்தது எம் மென்மையால் என்பது அகறல் வல்லுவோர் என்றதனாற் பெறப்படும். இத்தவற்றால் என்னிடம் சொல்லா தகறற்கண் வன்மை செய்பவராயினர் எ-று. யாம் ஒல்லே மென்றது தப்பலாயின் அவர் சொல்லாதகறல் யாதாமென்று கருதினளாம். வல்லுவோர் சீறூரிற்றாமே சேந்தனர் கொல்லோ - அவ்வன்மை செய்தற்கேற்பத் தாம் தனியே சிற்றூரிற் சேக்கைகொண்டனரோ; தாமே சேந்தனர்கொல்லோ என்றது தன்னுடன் சேக்கைகொள்ளவே பயின்றவர் என்னுங் கருத்தால். சேந்தனர்கொல்லோ என்றது தான் சேக்கை கொள்

ளாத நிலையைக் குறித்து நின்றது. யானை தோல் நயந்துண்ட என்புழி நயத்தல் அத்தோலுங் கிடைத்தற் கருமைபற்றியதாம்.

புறவு பெடையொடு கூடிக் குலாவி மகிழுங் குரலின் வேறு தெரியப் புலம்புதருகுரல் என்றாள்: தம் தனிமையைப் பெடைகட் குணர்த்துங் குரலுடையவாய்ப் பெடையை அழைக்கும் அத்தம். அத்தம் - சுரவழி. அக்கொடிய பாலையினும் புறவுகள் பெடை விழைந்து பயிரல் காட்டி ஆண்டு அகறல் வல்லுவோர் தாமே சேந் தனர் கொல்லோ என்றாளென்க. புறவு பெடைபயிரும் அத்தம் சொல்லாதகறல் வல்லுவோர் அவ்வத்தம் நண்ணிய சீறூர்த்தாமே சேந்தனர்கொல்லோ என்பதாம். நெடுஞ்சினை வளிபொரு அலங் கலுலவை என்க. நெடியகொம்பிற் காற்று மோதலான் அசைதலு டைய உலந்தகிளை. ஒய்யென - விரைய.

யாம் ஒல்லேம் - யாம் பிரிவுகேட்பது பொறேம் என்ற தவற் றால், சொல்லா தகறல்வல்லுவோர் என்பதுமாம்.

சேந்தனர்கொல்லோ என ஐயத்திறேதினமையால் ஆண்டுப் புறவு பெடைபயிரல் கேட்டுச் சீறூர்ச் சேக்காது மீள்வாரோ எனத் தலைவி கருதினாளெனவுங் கொள்வாருமுளர். (தொல்-கற்பு-7-நச்)

---

## ஔவையார்

80\. கூந்த லாம்பன் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த விருந்திறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறுந் தானஃ
தஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடுங் காக்கதன் கொழுநன் மார்பே.

எ-து. தலைமகட்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை சொல்லியது.

(வி) கூந்தலாம்பல் முழுநெறி அடைச்சி - ஆம்பலினுடைய கூந்தல்போன்ற நெறிப்பினையுடைய முழு நெறித்தழையை உடுத்து. பரத்தையர் ஆம்பல் நெறித்தழை யுடுத்துவருதல் "ஆம்ப லம்பகை நெறித்தழை, தித்திக் குறங்கி னாழ்மா றலைப்ப வருமே சேயிழை" (குறுந்-293) என்புழிக் காண்க. அடைச்சி-உடுத்து; "நெடுந்தொடர்க்குவளை வடிம்புற வடைச்சி" (அடி. 588) என்னும் மதுரைக் காஞ்சிக்கு நச்சினார்க்கினியர் கூறியது கொண்டுணர்க. இது பெரும்பாலும் பரத்தையர் இளை யாரை வசீகரித்தற்கு உடுக்கும் உடையாதலாண்டே காண்க.

பெரும்புனல் வந்த விருந்திறை விரும்பி - பெரிய புனல் விளையாட்டில் வந்த விருந்தாகிய இறைவனை அன்பு செய்து. யாம் அஃது அயர்கம்சேறும் - யாம் அவ்விளையாடல் செய்வே மாகச் செல்லுதும். உடையள் தான் அஞ்சுவது ஆயின்—தலைவனை உடையளாகிய தலைவி தான் அஞ்சுதல் உண்டாயின். எழினிமுனை ஆன்பெருநிரை போல - எழினியின் பகைப்புலத் துள்ள ஆன்பெருநிரையைப்போல. தன் கொழுநன் மார்பைக் கிளையொடும் காத்துக்கொள்க என்க. காத்தாலும் எழினி கவர் தல் ஒருதலையாதல்போல யாம் அவனைக் கவர்தல் துணிபு எ-று.

வெம்போர் நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி - வெய்ய போராகிய தேரின் நுகத்தைத் தாங்குபவன்தானேயாக வெல் லும் பல்வேற் படையுடைய எழினி. யுத்த துரந்தரன் தானாகக் கடக்கும் எ-று. துரம் - நுகம். இது வடநூற்குமொத்தல் காண்க.

இனி, போரிற் பகைவர்கள் தன் காவற்சாகாட்டின் நுகத்தை எருதோபாதியாகப் பூணும்படி கடக்கும் எனினுமமையும். "தெவ் வர்தேஎ நுகம்படக் கடந்து" (மலைபடு. 87) என்பதும் இக் கருத்தேபற்றி வந்தது. இனி, நுகம் எயில் வன்கணையம் எனக் கொண்டு அதுகெடக் கடக்கும் என்பதுமாம். "கொடு நுகம் தழீஇய புதவின்" (பெரும்பாண். 127)

காப்பு மிகுதியினும் கவர்தல் வன்மை குறித்தது. இது பரத்தைக்கு மொத்தல் நினைக. கிளை என்றது தலைவிக்குப் பாங்காயினாரை. வந்த விருந்திறை என்றாள் தலைவன் தானே வந்தவனாகக் குறித்து. யாம் விரும்பி அயர்கம் என்றாள் இளைய வர் விரும்புதலல்லது தாம் விரும்புதல் அருமை என்பது தெரிய.

அஃது என்றது வந்த விருந்திற்குச் செய்யும் விருந்தினை. விருந்திறை விரும்பி - விருந்திற்கு இறுப்பது விரும்பி என்பதுமாம். "திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்ம்மென" (மலைபடு. 319) என்பதனுன் இப்பாடத்தின் உண்மை யுணர்க. பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி என்பாருமுளர். அஃது என்றது புனல் விளையாட்டினை (தொல். கற்பி. 10. நச்).

---

## வடமவண்ணக்கனூர்

81. இவளே, நின்சொற் கொண்ட வென்சொற்றேறிப்
பசுநனை ஞாழற் பல்சினை யொருசிறைப்
புதுநல னிழந்த புலம்புமா ருடையள்
உதுக்காண் டெய்ய வுள்ளல் வேண்டும்
நிலவு மிருளும் போலப் புலவுத்திரைக்
கடலுங் கானலுந் தோன்றும்
மடறும் பெண்ணையெஞ் சிறுநல் லூரே.

எ-து. தோழியிற் கூட்டங்கூடிப் பிரியும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

(வி) யான் தனியே சொற்றது இல்லை என்பாள் நின் சொற்கொண்ட என்சொல் என்றாள். நின்சொற்கொண்ட என் சொல் நின்னதன்றி வேறில்லை என்பது கருத்து. அச்சொற் றேறி இவள் எய்திய பயன் புதுநலம் இழத்தலும் அதன்மேற் புலம்புடைமையும் எ-று. இவள் நலனைத் தருதற்குரியார் பிறரில்லை என்றும், இவள் புலம்பு தீர்க்கும் துணை நீயே என்றும் உள்ளல் வேண்டுமென்பதாம். தெய்ய - அசைநிலை. சிறு நல்லூர் உதுக்காணென்க. நிலவுபோல மணற்கானலும், இருள்போலக் கடலுந் தோன்றுமென்க. 'நிலவுக் கானல்' (மதுரைக் காஞ்சி-114) 'இருணிறமுந்நீர்' (முருகாறு. 293). கடல் உடனுடற்கும் மணற் கானலில் உடனல்கற்கும் ஏற்ற பெற்றி குறித்தவாறும்.

"வெண்டலைப் புணரி யாயமோடாடி, மணிப்பூம் பைந்தழைதைஇ யணித்தகப் பல்பூங்கான லல்கினம் வருதல்" (அகம். 20) பின்னும் புணர்ச்சி வேண்டிய தலைவற்குத் தோழி இடமுணர்த்திய தாக இளம்பூரணர் கூறுதல் காண்க. (தொல். களவு. 24) வரை மடல்தாழ் பெண்ணையால் விசேடித்தது பிறரறியாது மறைந்தொழுகதற்கும் ஆதல் கருதியதாம். ஆர் - அசை. நின் சொல் - விரைந்து வரைவல் என்ற நின்சொல்.

---

## கடுவன்மள்ளனார்

82\. வாருறு வணர்கதுப் புளரிப் புறஞ்சேர்
பழாஅ லென்றுநம் மழுதகண் டுடைப்பார்
யாரா குவர்கொ றோழி சாரற்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்
கொழுங்கொடி யவரை பூக்கும்
அரும்பனி யச்சிரம் வாரா தோரே.

எ-து. பருவங்கண்டு அழிந்த தலைமகள் வருவரென்று வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.

(வி) புறஞ்சேர்பு கதுப்புளரி—முதுகைச் சார்ந்து கூந்தலை வகிர்ந்து. அவரிங்ஙனம் தலையளி செய்வது கண்டு இது பிரிதல் குறித்ததென்று நான் அழவும், அழாஅல் என்று முகஞ் சேர்பு நம் அழுத கண் துடைப்பாரென்க. புறஞ் சேர்பு என்றதனுல் அழுத கண் துடைத்தற்கு முகஞ் சேர்தல் பெற்றும். அழாஅல் என்று அழுத கண் துடைப்பார் யாராகுவர் கொல், அரும் பனி அச்சிரம் வாராதோர் யாராகுவர் கொல் என ஈரிடத்தும் கூட்டியுரைக்க. துடைப்பார் நெகிழ்ந்த நெஞ்சினர் என்பதும், வாராதோர் வன்னெஞ்சினர் என்பதும் கருத்து. ஒரு நெஞ்சிலே ஒரு பொருள் பற்றி வன்மையும் மென்மையும் உண்டாகப் படைக்கப் பட்டார் உலகிற் காணுமையால் இவர் யாராகத் தோற்றஞ் செய்தனர் என்பதாம். ஈண்டுள்ளபோது துடைப்பாராய் ஆண்டு நினைதலுமின்றி வாராதோர் யாராகுவர்கொல் பன்மாயக் கள்வராவர் எனினுமமையும்.

சிறுதினை—சிறிது போழ்தில் விளையுந் தினையுமாம். தினைக் கொண் மறுகாலவரை பூக்கும் அச்சிரம் வாராதோர் எனக் கொள்க. அவரை முதற் பூத் தோற்றுதற்கு முன்னே வருவல் என்று தெளிவித்துச் சென்று அவரை மறுபடி பூக்கும் அமயத்தும் வாராதோர் என்க. முதற்பூப் பூத்தது பனியச்சிரம் என்றும், மறுகாற் பூத்தது அரும்பனியச்சிரம் என்றும் கொள்க. மறுகால்—மறுகாலுழுத நிலமுமாம். “அரிகான் மாறிய வங்க ணகல்வயன், மறுகாலுழுத வீரச்செறுவில்” (நற்—210).

வாருறு வணர் கதுப்பு—வார்தலுற்ற வளைந்த கூந்தல். சாரல்—மலைச்சாரலில்.

---

## வெண்பூதனார்

83. அரும்பெற லமிழ்த மார்பத மாகப்
பெரும்பெய ருலகம் பெறீஇயரோ வன்னை
தம்மிற் றமதுண் டன்ன சினைதொறும்
தீம்பழந் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை வருமென் றோளே.

எ-து. தலைமகன் வரைந்தெய்துதல் உணர்த்திச் செவிலியைத் தோழி வாழ்த்தியது.

(வி) தம்மிற் றமதுண் டன்ன நாடனை அன்னை வரைவுடன் வருமென்றாள் இதனால் அவள் பெறலரிய அமிழ்தம் அருந்தும் உணவாக, பெரும் புகழ் உலகம் பெறுக என்றாள். இக்களவொழுக்கம் தம்மிற் றமதுண்டது அன்றாகவும் இதனையே அவ்வாறு இன்பத்தின் மயங்கிக் கொள்ளுதலால், வரைவுடன் படாது அலர் பேணாமல் மறைந்து வருகின்ற நாடனை, வரைவொடு ஊரறிய வருமென்றாள் என்க.

தம்மிற் றமதுண்டன்ன நாடன்—தம் மனைக்கண்ணே தமக்குரிய தென்று நூல்வகுத்ததை உண்டாற் போன்ற இன்பமுடைய நாடன். அன்ன என்றதனால் தலைவியுள்ள மனை அவன் மனையாகாமையும், குரவர் கொடுப்பக் கொள்ளாமையால், தன்னுடையார் உடன்பட்ட உரிமை தலைவியாகாமையும் குறித்துத் தலைவன் வரைவுடன் படாத களவொழுக்கமாதல் காட்டினாள். அறஞ்

செய்தாரல்லாமல் பிறர் பெறற்கரிய அமிழ்த உணவோடு கூடிய பெரும் பெயர் உலகம், களவொழுக்கத்து இன்பந் துய்த்த மாத்திரையாற் பெறலாகாமை கருதியும், நாடன் வரைதலால் இனி இல்லறஞ் செய்து அது பெறற் கெளிதாதல் கருதியும், அவ்வறத் திற்குடன் பட்டு, மணம் மறுது, தலைவனை வரைவொடு வருமென் றலால் அன்னை பெறீஇயர் என்றாள். தலைவன் களவொழுக்கத் தின்பத்தையே இவ்வாறு மயங்கிக் கோடலும், அதுவே துறக்கத் தின்பந் தருமென்று வரைவுடன் படாதொழுகலுண்டென்பதும் “தம்மிலிருந்து தமதுபாத் துண்டற்று, லம்மா வரிவை முயக்கு” (குறள்-1107) என்புழிப் பரிமேலழகர் “இவளை நீ வரைந்து கொண்டு உலகோர் தம்மிலிருந்து தமது பாத்துண்ணும், இல்லறத் தொடு படல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது” எனவும், “இல்லறஞ் செய்தாரெய்துந் துறக்கத்தின்பம் எனக்கு இப் புணர்ச்சியே தருமென்ன வரைவுடன் படான் கூறியவாறாயிற்று” எனவும் தெளியவுரைத்தவாற்றானுணர்க.

பலவின் ஓங்குமலை நாடன் என்றது வரைந்து செய்யும் இல் லறத்திற்கு வேண்டுந் துப்புரவு நிரம்புதல் குறித்தவாறும். துறக்க இன்பம் பெறீஇயர் என்றதனால் இவ்வுலக நவ்வாழ்க்கை பெறுதலும் கூறினாளாம். ‘தமதுண்டன்ன நாடனை’ என்பதனைப் ‘பெற்றன்ன நீர்த்து’ (குறள்-1143) என்புழிப் பரிமேலழகர் ‘பெற் றன்ன நீர்மை—பெற்றவழி யுளதா மின்பம் போலு மின்ப முடைமை’ என உரைத்தது போலக் கொள்க. தம்மிற்றமதுண் டன்ன நாடனை எனவும், பழந்தூங்கும் மலை நாடனை எனவும் இயைத்துக் கொள்க.

---

## மோசிகீரனர்

84. பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனெ
னென்றனள்
இனியறிந் தேனது துனியா குதலே
கழனுடி யாஅய் மழைதவழ்பொதியில்
வேங்கையுங் காந்தளு நாறி
ஆம்பன் மலரினுந் தான்றண் ணியளே.

எ-து. மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

(வி) யான் முயங்கப் பெயர்த்தனென்—யான் அவள் மார்பை அணைத்தற் பொருட்டுப் புறங்காட்டிக் கிடந்த மகளை என் மார்பிற் கெதிரே பெயரச் செய்தனென். அதற்குடன்படாது வியர்த்தனென் என்றனள். வியர்க்காத நிலையில் வியர்த்தேன் என்று வாயாற் கூறி அப்பெயர்த்தற்குடன் படாளாயினள். அது துனியாகுதலினியறிந்தேன்—அங்ஙனம் பெயர்த்தது வெறுப்பா தலை இப்போது அறிந்தேன். இதனால் தலைவனை அணைந்த மார் பிற்குத் தாயணைதலும் துனியாதல் குறித்தவாறும். இது பயில்வு என்னும் உணர்ச்சி என்ப (தொல்-களவு-23). ஈண்டு நச்சினார்க் கினியர் பயில்வாவது செவிலி முலையிடத்துத் துயில்வேண்டாது பெயர்த்து வேறோரிடத்துப் பயிறல் என்றதனாலுணர்க. இனி—அவளைப் போக்கிய இப்போது.

ஆஅய் பொதியில் வேங்கையும் காந்தளும் நாறி என்றது தலைவன் பகலிற் புணர்தற்கு முன் சூட்டிய வேங்கை மலரும் காந்தள் மலரும் இவள்கண் மணத்தல் குறித்தது. தலைவனைப் பகலிற் புணர்ந்து இரவில் தாய் பக்கற் கிடைகொண்ட தலைவி அவன் சூட்டிய மலர்கள் மணந்து அவ்வின்பத்தால் ஆம்பல் மலரினுந்தண் ணியளாகியும் வியர்த்தனென் என்றனள். அதன் கருத்தை அப் போது அறியாதேன் இப்போது அறிந்தேன் என்றாள் என்க. கழறொடி ஆஅய்—கழலுந் தோள் வளையினையுடைய ஆஅய்வேள். தொடுக்கக் கையை நீட்டும்போதெல்லாம் தோள்வளை கழலுதல் குறித்தது. அவன் கொடையால் மழை தவழ்கின்ற பொதியில் மலை எ-று.

---

## வடம வண்ணக்கன் தாமோதரனார்

85\. யாரினு மினியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனி லிழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாண ரூரன் பாணன் வாயே.

எ-து. வாயில் வேண்டிச் சென்ற பாணற்குத் தோழி சொல்லி வாயின் மறுத்தது.

(வி) யாரினும்—தந்தை தாயரினும், மகவினும், தோழியினும். இனியன்-இவ்வெல்லாரினு மினிமை செய்பவன் என்க. சாவிற் சாகுமியல்பினுற் பெரிய அன்பினன் என்ற பாணனை நோக்கி இங்ஙனம் தலைவனுதல் பாணன் வாயிலே தான் என்று தோழி வாயின் மறுத்தாளென்க. பாணன் வாயே இனியன் பேரன்பினன் எ-று. இதனுற் பாணன் நெஞ்சினும் அங்ஙனம் நினையாமை குறித்தனள். "நாடன் இன்ன நிலையன் பேரன் பினனெனப் பன்மாண் கூறும் பரிசிலர் நெடுமொழி, வேனிற் றேரையினளிய காண் விடுமோ தோழியென் னலனே" (நற்-347) என்புழிப் பரிசிற் பாணர் நெடுஞ்சொல் வேனிற்றேரை ஒலிபோல இரங்கத் தக்கது என்றது காண்க.

ஊர்க் குரீஇச் சேவல்—ஊர்க் குருவிச் சாதியிற் சேவல். காடு வாழ்கின்ற குருவியின் வேறு என்பது தெரிய ஊர்க் குரீஇ என்முர். 'சகடமூர்க் குருவி' என்பது திவாகரம். 'பெருவரை யடுக்கத்துக் குரீஇ' (அகம்—388.) இவற்றின் வேறு எ-று. உள்ளுதற்குரிய ஊர்க் குருவி என்க. இவற்றில் ஆண் பெண் நட்டு வாழ்தல் உள்ளுதற்குரியது எ-று. இவ்வூர்க் குரீஇ மனையுறை குருவியாதலால் தலைவன் பல்காலிவற்றின் நட்பினைக் கண்டு உள்ளுதல் கூடுமென்று குறித்தாள். ஊர்க் குரீஇயினுடைய துள்ளு நடையையுடைய சேவல் ஈனிலிழைக்க வேண்டிக் கொழுதும் என்பதாம். உள்-மனையினுள்ளிடம். 'மனையுறை குரீஇ' (புறம்-218). கருமுற்றிய தன் பேடைக் குருவிக்கு, தேம் பொதிக் கொண்ட தீங்கழை—இனிய சாறு பொதிதலைக்கொண்ட தீவியதண்டு. கரும்பு—சாதி. கரும்பின் வெண் பூ நாறுமை இயல்பு. ஈனில் மெத்தென இழைத்தமைத்தற்குக் கரும்பின் வெண் பூவைக் கொழுதுதல் குறித்தாள். நாறுப் பூ என்றதனுல் பிறர் சூடப் பயன் படாததைத் தான் பயன் கொள்ளுதல் குறித்தாள். பூக் கொழுதும் என்முள் அப் பூவினும் மெத்தென இல்லாதன தள்ளி நல்லன கொள்ளுதல் கருதி. "கரும்பின் வேல் போல் வெண்முகை பரியத் தீண்டி முதுக்குறை குரீஇ முயன்று செய் குடம்பை" என்பது நற்றிணை (366).

ஊர்க் குரீஇச் சேவல் கொழுதும் ஊரன் என அக்குரீஇச் சேவற் குரிய இனிமையும் அன்பு மில்லாமை குறித்தாள். இனித் தலைவன் உண்மையில் யாரினுமினியனுதலும், பேரன்பினுத

னும், பரத்தையர்க்கே யென்றும், அதனை நெஞ்சத்தால் நன்கறிந்த பாணன் வாயிலே தான் அங்ஙனமாவனென்றும் கருதிக் கூறினள். பாணன் வாயே இனியன் அன்பினன் என்றது தோழி வாயினும், தலைவி வாயினு மங்ஙனமல்லன் எ-று.

---

## வெண்கோற்றனர்

86. சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கட்
பொறையரு நோயொடு புலம்பலைக் கலங்கிப்
பிறருங் கேட்குந ருளர்கொ லுறைசிறந்
தூதை தூற்றுங் கூதிர் யாமத்
தானுளம் புலம்புதொ றுளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.

எ-து. ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

(வி) சிறை பனி—வினைத் தொகை. தடுக்கப்பட்ட நீர்த்துளி. பொறை அருநோயொடு—பொறுத்தற்கரிய விரக நோயொடு. புலம்பலைக் கலங்கி—தனிமையலைத்தலால் யான் சேயரிக் கண் கலங்கித் துயிலாதிருப்ப.

என்னை என்னென்று கேட்குநர் உளர் கொல் என்றுள் என்க. கேட்குநர் என்றது 'பெரிதாலம்ம நின்பூசல்.........,அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே' (குறுந்-29) என்புழிப் போல வந்தது. என்னை ஆற்றுதற்குரிய நீயும் துயிறலால் கேட்டிலை என்பது குறிப்பு.

ஊதை சிறந்து உறை தூற்றுங் கூதிர் யாமம் என்க. ஆன் றுளம்பு உலம்பு தொறு—மாட்டு ஈஒலிக்குந் தோறும். கொடுமணி நாநவில் நல்கூர் குரலே உளம்பும்—அதன் கழுத்திலுள்ள வளைவினையுடைய மணியின் நாவினல் நவிலப்பட்ட வறுங்குரல் தான் யாமத்து அசைந்தொலிக்கும். நல்கூர் குரல்—பொருள் வறிதாகிய ஓசை 'நல்கூர் சுரம்' (குறுந்-347). கலங்கி—யான் கலங்காநிற்க. கலங்க என்பது திரிந்தது. "கலங்கழியுங் காரிகை

நீத்து" (குறள். 1262) என்புழி நீப்ப என்பது நீத்தெனத் திரிந்தாற் போல்வது. இனிக் கண் நோயொடு புலம்பலை மனங்கலங்கிக் கேட்குநர் உளர்கொல் கொடுமணி நல்கூர் குரலே உளம்பும் என்று கூறினும் அமையும். கட்புலம்பலை என்று பாடமாயின் கண்ணுடைய அழுதிரங்கலை எனப் பொருள் கூறுக. நம்பி அகப் பொருளுரைகாரர் தனித்துழி இறைவி துனித்தழுதிரங்கலாகக் கூறுதல் காண்க. (கற்பியல்—6). காமத்திற்கு உத்தீபனவேதுவாகிய ஆன் மணிக்குரலல்லது ஆற்றுவிக்கும் குரல் கேட்டிலாமை குறித்தவாறு.

---

## கபிலர்

87. மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதும்
கொடிய ரல்லரெங் குன்றுகெழு நாடர்
பசைஇய பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே.

எ-து. தலைமகள் தெய்வத்திற்குப் பராயது.

(வி) மன்ற மராஅத்த—அம்பலத்திலுள்ள கடம்பிலுறைகின்ற. பேஎமுதிர் கடவுள்—அச்சஞ் செய்தலிற் பழமை பட்ட தெய்வம். மராஅம் முருகக் கடவுட் குரியது. கொடியோர்த் தெறூஉம் என்ப—கொடுமையுடையாரைக் கொல்லுமென்று சொல்லுவர். எம் குன்று கெழு நாடர்—அம்முருகற்குரிய குன்றிற் கெழீஇய எம் நாடர். யாவதும் கொடியரல்லர்—சிறிதுங் கொடுமையுடையவரல்லர்; நல்லர் எ-று. மற்று நுதல் பசந்ததும், தோள் ஞெகிழ்ந்ததும் அவரான் அன்றோ உண்டாயினவெனின் அங்ஙனமன்று. அவர் பசைஇய நுதல் பசந்தன்று—இனிப் பிரிதலாகாதென்று அன்பு செய்தற் பொருட்டு நுதல் பசந்தது. அவர் ஞெகிழத் தடமென்றோள் ஞெகிழ்ந்தன்று—பிரிந்ததற்கு அவர் உள்ளம் நெகிழும் பொருட்டுத் தடமென்றோள் ஞெகிழ்ந்தது.

அவர் இவள் தம்மைப் பிரிந்து இங்ஙனம் பசந்தாளென்று மிகப் பசைதற்பொருட்டும் இங்ஙனம் ஞெகிழ்ந்தாள் என்று உள்ளம் ஞெகிழ்தற் பொருட்டும் என் நுதலும் தோளும் தாமாகச் செய்தன இவை என்றும், அவர் கொடுமையாலுண்டாயின அல்லவென்றும் அவர் கொடியராகாமை தெளியக் காட்டியவாறும். கொடியோர்த் தெறூஉமென்ப என்று தெய்வத்தின் தெறல் கூறியதனால் கொடியரல்லாத நல்லோரை அருள் செய்தலுடன் குறித்தனளாம். இதனால் அந்நல்லரை அளித்தற் பொருட்டுப் பராயதாதல் காண்க. 'செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை' (முருகாறு—51) என்புழித் தெறலும் அளித்தலும் அக் கடவுட்குக் கூறுதல் காண்க. "நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த, கொடியனாகிய குன்றுகெழு நாடன்" (குறுந்—252) என்ற தோழியை மறுத்து எம்தலைவர் கொடியரல்லர் எ-று. நற்றிணையுள் "பெருந்தோள் ஞெகிழ வவ்வரி வாடச், சிறுமெல் லாகம் பெரும்பசப் பூர இன்னேமாக வெற்கண்டு நாணி" (358) என்புழித் தலைவன் பிரிந்து வந்து தலைவியின் தோள் ஞெகிழ்தலும், மேனி பசப்பூர்தலும் கண்டுப் பிரிந்ததற்கு நாணி இனிப் பிரியேனெனத் தெளித்தல் கூறுதல் கொண்டு இப்பொருளுண்மை உணர்க. ஞெகிழ ஞெகிழ்ந்தன்று என்பதற்கியைய பசைஇய பசைந்தன்று என்ற பாடமே சிறந்ததாதல் காண்க. 'நல்லனென்றியாயிற் பல்லிதழுண்கண் பசத்தன்மற் றெவனோ' (ஐங்குறு—170) என்று தோழி கொடுமை உரைத்தாளாக அவற்குக் கொடுமை இல்லாமை காட்டி நன்மை தெளித்துப் பராயவாறும். பசைதல்—அன்பு செய்தல்.

---

## மதுரைக் கதக்கண்ணனார்

88. ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன்முரண் சோருந் துன்னருஞ் சாரல்
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே.

எ-து. இரவுக்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி தலைமகட்குச் சொல்லியது.

(வி) அருவியை உடைய ஓங்குமலை நாடன். பெருங்களிறு வயப் புலியால் தாக்கப்பட்டு இயல்பாகிய பழைய வலிசோர்தற்குக் காரணமாகிய பிறர் துன்னுதற்கரிய சாரலில் நள்ளிரவில் நாடன் வருதலுஞ் செய்வன். இங்ஙனம் அவனை வரச் செய்தலால் இக்களவில் நமக்குண்டாகும் பழியை நாமே நாணலமாவே மென்று தோழி இரவுக்குறி மறுத்ததாம். இதனையே பகற்குறி நேர்ந்ததாகக் கொள்ளுமிடத்து நடுநாள் வருதலும் செய்வன். பகலும் வருதலால் உண்டாகும் அலர்க்கு நாணவேண்டாதேம் ஆவேம் நாமென்று கூறியதாகக் கொள்க. குறியிடம் புகா தொழியின் அவனை வரச் செய்த வடுவுக்கு நாணலமோ என்று குறி நேர்ந்ததாகக் கொள்வதுமாம்.

வயப்புலி களிற்றைத் தாக்க அது வெருவிச் சோருதல் 'பரியது கூர்ங் கோட்ட தாயினும் யானை, வெரூஉம் புலிதாக்குறின்' (குறள்-599) என்பதனானுணர்க. ஒலித்து வரும் அருவிபோல அவன் வரவே அலரொலி பரப்பும் என்பது குறிப்பு. வடுநாணலமோ என்பதும் பாடம்.

---

பரணர்

89. பாவடி யுரல பகுவாய் வள்ளை
ஏதின் மாக்க ளுவறனு நுவல்ப
அழிவ தெவன்கொலிப் பேதை யூர்க்கே
பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை யன்னவிம்
மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே.

எ-து. (1) தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தன்னுள்ளே சொல்லுவாளாய்ச் சொல்லியது.

(2) தலைமகற்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லி வாயின் மறுத்ததுமாம்.

(வி) பரந்த அடியினையுடைய உரலிடத்தனவாகிய நம் வள்ளைப் பாடல்களைப்பற்றி அயன்மாக்களும் பழி சொல்லுதலுஞ்

செய்ப. பகுவாய் வள்ளை—பகுத்து வாயாற் பாடும் உலக்கைப் பாட்டு. மாறி மாறிக் குறும்போது அவரவர் வாயிற் பகுத்துப் பாடப்படுதலால் பகுவாய் வள்ளை எனலாயிற்று. "உலக்கை வயின் வயிஞேச்சி" என்பது குறிஞ்சிக் கலி (4). "காஞ்சி நீழற் றமர்வளம்பாடி, யூர்க்குறு மகளிர் குறுவழி" (அகம். 286) என்பதனுல் மகளிர் பலரும் பாடிக் குறுதலுணரப்படும். அவ்வள்ளையில் இம் மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே, அதற்கழிவது அவ்வேதின் மாக்களையுடைய இப்பேதை யூர்க்கு என்பயன் செய்வது எ-று. ஊர்க்கழிவது எவன் கொல்—ஊர்க்குக் கெடுவது என்னை கொலென்பதுமாம். பேதை ஊர்க்கு—நன்றுந் தீதும் பகுத்துணரமாட்டாத பேதைமையையுடைய ஊர்க்கு. இது களவிற் பொருள் கோளாம்.

இனி, கற்பினுமிடத்து ஏதின் மாக்கள் பரத்தையரெனக் கொள்க. குறுமகள் தலைமகன் பரத்தைமையைப் பாடினளாய்க் குறின், இப் பேதை யூர்க்கு அழிவது எவன்—இப் பேதைமையை யுடைய பரத்தையர் சேரிக்குக் கேடு என்னை என்க.

பெரும் பூட் பொறையன்—ஏழரசரை வென்று அவரெழு முடியானு மாக்கிய பெரும் பூணையுடைய சேரன். இது சேரர்க்கு வென்றியான் எய்திய குலப்பூண் என்பது இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனையும், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலையும், செங் குட்டுவனையும் பதிற்றுப்பத்துள் இவ்வணியாற் சிறப்பித்தவாற் ருனறிக. "பூணணிந்து விளங்கிய புகழ்சான் மார்ப" (பதிற்—65) எனக் கபிலர் வாழியாதனைச் சிறப்பித்ததும் இது பற்றி என்று துணியலாம். பேஎ முதிர் கருங்கட் டெய்வம் அமரர் கணத்தது என்பது "கொல்லிக் குடவரைப் பூதம் புணர்த்த புதிதியல்பாவை விரிகதிரிளவெயிற்ரேன்றி யன்ன" (192) என்ற நற்றிணையாலறியப்படும். இப்பாவை விரிகதிரிள வெயிற்ரேன்றுதலைச் சிறப்பித்தவாற்ருன் இது கொல்லிக் குடவரைக்கண் மேற்குமுகமாக எழுதப்பட்டது தெளியப்படும். "சுடர் பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற் றிலங்குகதிரிள வெயில்" (மதுரைக்கா—702) என்பதனுல் இளவெயில் மறையும் ஞாயிற்றதாதலறிக. "பொறையனுரைசா லுயர்வரைக் கொல்லிக் குடவயின்...தேனுடை நெடுவரைத் தெய்வ மெழுதிய பாவை" (நற்—185) என வருதலான் இப்பாவை கொல்லியின் குடவயி னிருத்தலறியலாம்.

கண்டாரை வருத்துவது கொல்லிப்பாவை. ஈண்டுக் குறுமகள் எதின் மாக்களை தன் வள்ளையான் வருத்துதலால் அதனோடுவமித்தாள்.

---

## மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார்

90. எற்றோ வாழி தோழி முற்றுபு
கறிவள ரடுக்கத் திரவின் முழங்கிய
மங்குன் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட விழுக்கிய பூநாறு பலவுக்கனி
வரையிழி யருவி யுண்டுறைத் தரூஉம்
குன்ற நாடன் கேண்மை
மென்றோள் சாய்த்துஞ் சால்பீன் றன்றே.

எ-து. வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

(வி) கறி வளரடுக்கத்து முற்றுபு கலை தொட இழுக்கிய பலவுக் கனியை என்க. முற்றியதனால் முசுக்கலை தொட்டவளவில் இழுக்குதல் குறித்தார். இரவில் முழங்கிய மங்குல் மாமழை வீழ்ந்தென வரையிழியருவி யுண்டுறைத் தரூஉம் குன்ற நாடன் என்க. பூவில்லாத கோளியாய் நாறுதற்சிறப்பால் பூ நாறு பலவு என்றார். பொங்கு மயிர்க்கலை—குளிராற் சிலிர்த்த மயிர்க்கலை கறி—மிளகு. குளிர்க்கு அழலக் கறி கறித்து அழன் மிகுதி தீரக் கலை சுளை தோண்டப் புக்கது என்பது உய்த்துணர்க. இங்ஙனம் கொள்ளாக்கால் இரவிற் கலை கனி தொடுதற்குக் காரணமில்லையா மென்க. "அதிர்குரன் முதுகலை கறிமுறி முனைஇ" (அகம்—182) என்பதனால் முசுக்கலை கறிகறித்து வெறுத்தலுணர்க.

நாடன் கேண்மை புறத்தே தோள் சாய்த்தும் அகத்தே சால்பீன்றது எ-று. சால்பு—அமைதி என்பர் நச்சினார்க்கினியர். (தொல்—பொருள்-9) இதன் உள்ளுறையும் ஆண்டே அவர் கூறியது காண்க. புறத்தின் மெலிவும் அகத்தின் அமைதியும் ஒருபோதே ஒரு கேண்மையே செய்கிற்பது இஃது எத்தன்மைத்தோ

என்றாள் என்க. வரைவு நீட்டித்தலான் மெலிவும் தெளித்த சொற்பற்றி வரைவன் என்ற துணிபால் அமைதியும் உண்டாதல் காட்டியவாறும். தலைவி உள்ளத்தின் சால்பு தன்னாலே உணரப் படுவதொன்றாகலான் இது தோழி கூற்றாயிற்று.

மங்குல் மாமழை—இருள்போல் கரியமழை. 'மங்குல் ஞாயிறு' என்ற பரிபாட்டுரையானறிக. 'சால் பென்னுந் திண்மை' (குறள்—988.) என வள்ளுவனார் கூறுதலான் இது தோள் சாய்த்த மெலிவிற்கு மாறாதலுணர்க. "செல்லா இரவே சிறுகா இருளே" (கம்ப-உருக்கா-4) என்பதனால் இரவுக்கும் இருளுக்கும் வேற்றுமை உணர்க.

---

## ஔவையார்

91\. அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீ ரிலஞ்சிக் கெண்டை கதூஉம்
தண்டுறை யூரன் பெண்டினை யாயிற்
பலவா குகநின் னெஞ்சிற் படரே
ஓவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தே ரஞ்சி
கொன்முனை யிரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே.

எ-து. (1) பரத்தையர் மாட்டுப் பிரிந்த தலைமகன் வாயில் வேண்டிப் புக்கவழித் தன் வரைத்தன்றி அவன் வரைத்தாகித் தன் நெஞ்சு நெகிழ்ந்துழித் தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது.

(2) பரத்தையிற் பிரிந்து வந்தவழி வேறுபட்ட கிழத்தியைத் தோழி கூறியதூஉமாம்.

(வி) அரில்—பிணக்கம். பவர்—கொடி. பிரம்பின் வரிப் புறத்தை உடைய விளைந்த பழத்தை இலஞ்சிக் கெண்டை கதூஉம் ஊரன். கெண்டை கதூஉம்—கெண்டைகள் பற்றிக்கொள்

ளும். கெண்டை—சாதியொருமை. ஊரன் பரத்தையர் பலர்க்கும் எளியனாதல் குறித்தது. அத்தகைய ஊரன் பெண்டு இன்னையாயின் என்க. இன்னையாயின் என்றது அவன் பரத்தைமைக்கு வெருது அவனைக் கண்ட அளவே நெஞ்சு நெகிழ்ந்து தழுவப் புகுவையாயின் என்பதாம். தன்னையே முன்னிலையாக வைத்துக் கூறியது.

அஞ்சி கொன் முனை இரவூர் போல நின் நெஞ்சிற் படர் பலவாகுக நீ துஞ்சு நாள் சில வாகுக என்று இடைக்கிடந்த உவமையை முன்னும் பின்னும் கூட்டிப் பொருள் கொள்க. படர் பலவாகுக இரவூர் போல எனவும், இரவூர் போலத் துஞ்சுநாள் சிலவாகுக எனவுமுரைத்துக் கொள்க. துஞ்சு நாள் சிலவாதலும் படர் பலவாதலும் நெடுமானஞ்சி கொன்முனை யிரவூர்க்கு முள்ளன காண்க. படர் பலவாதல் காரணமாகவே துஞ்சு நாள் சிலவாதலோர்ந்து கொள்க. "ஒருதலையானின்னாது காமம் காப்போல, விருதலையானு மினிது" (குறள்—1196) என்னும் குறளில் காப்பாரம் ஒரு தலைக்கணின்னாதாதற்கும், இருதலைக்கண்ணுமாயினினிதாதற்கும், உவமையாதல் போல இதனைக் கொள்க. தழுவுதலால் தலைவன் பரத்தைமை ஒழியான் அது பற்றிப் படர் பலவாகும் துஞ்சு நாள் சிலவாகும் என்க. ஓவாதீயும் மாரி வண்கை—இடையிலொழியாது நல்கும் மாரியனைய வள்ளியகை. ஓவாதீயும் மாரி என்றது பருவம்பற்றி நல்கும் மாரியை விலக்கியதாம். கடும் பகட்டியானை—கடிய வேகத்தானாகிய பெருமையையுடைய யானைப் படை. நெடுந்தேர் கூறியதனால் ஆளும், குதிரையும் உடன் கூறினவராவர். இவற்றால் கொடையும் வீரமும் குறித்தார். அஞ்சி கொன்முனை இரவூர்—அஞ்சியினுடைய அச்சம் செய்யும் போர் முகத்து இரவினையுடைய ஊர்.

இனி வேறுபட்ட கிழத்திக்குத் தோழி கூற்றாயின் பெண்டு இன்னையாயின் என்றது நின் இல்லறத்திற்கும் கற்பொழுக்கத்திற்கும் தலைமைக்கும் தக ஊரனை எதிர் கொண்டு வழிபடாது அவன் பரத்தைமை கருதி வேறுபடும் இத்தன்மை யுடையையாயின் என்று கூறியதாகக் கொள்க. தலைவனைத் தழுவாமையால் அவன் பரத்தைமையினும் கொடிய படர் பலவாகு மென்றும், தலைவிக்குத் துஞ்சு நாள் சிலவாகுமென்றும் தோழி கூறினவளாவள். "ஊரன்......பரத்தைமை தாங்கலோ விலனென வறிதுநீ, புலத்

தலெொல்லுமோ மனைகெழு மடந்தை, யதுபுலந் துறைதல் வல்லி யோரே, செய்யோணிங்கச் சில்பதங் கொழித்துத் தாமட் டுண்டு தமியராகித், தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப, வைகுந ராகுத லறிந்து, மறியா ரம்மவஃ துடனு மோரே" (அகம்-316) என்பதனுல் உணர்க. தலைவி தழுவினுல் எளியளாய்க் கேடுறு தலும், தழுவா தொழியின் அரியளாய்க் கேடுறுதலும் கருதிக் கூறியவாறு.

---

## தாமோதரனுர்

92\. ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமாற் செலவே.

எ-து. காமமிக்க கழிபடர் கிளவியாற் பொழுது கண்டு சொல்லியது.

(வி) கொடுஞ் சிறைப் பறவைகள் மராஅத்த பிள்ளையுள் வாய்ச் செரீஇய இரை கொண்டமையின் ஞாயிறு பட்ட அகல் வாய்வானத்துச் செலவு விரையும் இவை தாம் அளிய என்க. கொடுஞ் சிறைப்பறவை—விரைதற்கு உதவியாய் வளைந்த சிறகு களை உடைய பறவைகள். இறை உற ஓங்கிய மராஅம்—தாம் தங்குதல் பொருந்த உயர்ந்த கடம்பு. நெறி அயல் மராஅம்— வழிக் கயலாயுள்ள கடம்பு. மராஅத்த பிள்ளை—கடம்பிலுள்ள குஞ்சுகள். பிள்ளை உள்வாய்ச் செரீஇய—குஞ்சுகளின் உள் வாயிற் செருகும்படி. உள் வாய் கூறியது முன் வாயில் வைத் தால் நழுவி வீழ்தல் கருதி என்க. பிள்ளை உள்வாய் கொள்ளற் கேற்ற இரையாகிய சிறு மீன் கொண்டமையின் செலவு விரை யும் என்க. பறவை ஆண் பெண் இரண்டுமாகிய பொது. இவை காதல் செய்து இன்புற்றுப் பிள்ளைப் பேறெய்தி அவற்றை இனி தோம்புதல் போலத்தானும் தலைவனை வதுவையிற் கூடி மகப்பே றெய்தி அம்மகவினை இனி தோம்பி மகிழ்தல் வேண்டித் தலைவி களவிற் கூறியதாக நினைக. நச்சினுர்க்கினியர் களவிலே இப்

பாட்டை எடுத்தாளுதல் காண்க (தொல்-களவு-20). இவ்வாறு புறத்து நிகழும் நிகழ்ச்சிகள் காமத்தை வளர்க்கு மென்க. இப் பறவைகள் இயற்கையாகிய இவ்வன்பினுல் இரங்கத்தக்கன என்னுமுகத்தால் இவ்வாறு மகப்பேறு இனி தோம்பும் இல்லறத்து வாழ்தற்கு விரையாது வரைவு நீட்டிக்கும் தலைவர் இவ் வன்பு அறிகிலரென்று குறித்தவாறும்.

அளியதாமே—இவை தாம் அறியாதன என்று கொண்டு தலைவர் தாம் மிக அறிந்தவரென்று இகழ்ச்சிக் குறிப்பால் நினைத் தாளெனினு மமையும், "அளித்திரா வென்னல்லதில்லை துணை" [குறள். 1168] என்புழி அளித்து—அறியாமை யுடைத்து எனப் பரிமேலழகர் உரைத்தது காண்க. காலமிடம் தெரிதலும் பிள்ளையை ஊட்டும் அன்பின் விரைதலும் உடைமையால் பறவைகள் அறிவுடையன என்பது கருத்து.

---

## அள்ளூர் நன்முல்லையார்

93. நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினு முரைய லவர்நமக்
கன்னையு மத்தனு மல்லரோ தோழி
புலவியஃ தெவனோ வன்பிலங் கடையே.

எ-து. வாயிலாகப் புக்க தோழிக்கு வாயில் மறுத்தது.

(வி) நல் நலம் என்றது பெண் தன்மைக்கு இயல்பாகிய நாணினுகிய நலத்தை. "நாணென்னு நன்மை குறித்தது சால்பு" (குறள்—1013) எனவும், ", நலஞ்சுடு நாணின்மை நின்றக் கடை" (குறள்—1019) எனவும் வருவன கொண்டுணர்க. புறத்து மேனி நலம் மிகச் சாய்ந்து உள்ளே உள்ள இன்னுயிர் கழியினும் அவ்வுயிரினுஞ் சிறந்த நன்னலமாகிய நாண் தொலைய அவரைப் புலந்ததாகத் தோழி உரையல் எ-று. ஒருவர்க்கு உரைத்தற்கண் நாண் தடையாதல் காண்க. அவர் நமக்கு அன்னையும் அத்தனுமல்லரோ-இரு வேறுருவினுள்ள அன்னையும் அத்தனும் நமக்கொரு வடிவினுகியவர் அவரல்லரோ. அங்ஙனம் அன்னையுங் அத்தனுமாகிய பெற்றோர்க்கு இயல்பாய அன்பு

இல்லாத இடத்து அவரைப் புலத்தலாகிய அஃது என்ன பயனு டைத்தாமென்க. புலவி என்பது அன்புடைக் காதலர் குழையத் தழுவி இன்பமிகத் துய்த்தற் பொருட்டு முன்னிகழ்வதாகும். அன்பில்லுழி அப்புலவியாற் பயனில்லை எ-று. உரையல் என் றது புலந்ததாக வுரையல் என்றே கொள்ளத் தகுமென்றது புல வியஃதெவனோ என்ற கூற்றாலறியக் கிடப்பது. “யாரையோ நிற்புலக்கேம்” (அகம்-46.) என்பது காண்க. தலைவனைத் தலைவி காய்தற்கண் வந்ததென இளம்பூரணர் கூறுதல்கொண்டு இஃதுணர்க. (தொல்-கற்பு-6) இது வாயில் மறுத்ததாதலும் காண்க. நச்சினார்க்கினியர் உரையல் என்றது அன்பிலை, கொடியை என உரையல் என்றதாகக் கொண்டு கூறுவர். (தொல்-கற்பு-18)

அவர் நமக்கு அன்னையும் அத்தனுமல்லரோ என அறிவுறுத் தலான் அன்னையும் அத்தனும் அல்லர் என நினைந்து அன்பிலை கொடியை என உரையல் என்றாள் என்றார். தலைவி அயன்மை கூறியவாறென அவர் கொள்வர்.

நன்னலந் தொலைய உரையல்-நாண் கெடஉரையல் ‘நோய் செய்தார்க் குரைத்தலு நாணுத்தரும்’ (குறள்—1162). நமக்கன் னையு மத்தனுமல்லரோ என்றது அவர் கருத்தால் நாம் மகப் போலக் கொண்டு அன்பு செய்யப் பெறேமாயினும் நம் கருத்தால் பெற்றாரல்லரோ அவர் என்று கருதி நம்மாலன்பே செய்தற்குரி யர் புலத்தற் குரியரல்லரெனக் குறித்தாள். “தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு” (குறள்—212) என்புழித் தக் கார்க்கு—தக்கார்க்காயின் என்பதுபோல, நமக்கு—நமக்காயின் என வந்தது. ஈண்டுப் புலந்துரைத்தலே கருதி உரையலென் றாள் என்பது “இது மற்றெவனோ தோழி துனியிடை, இன்ன மென்னு மின்னாக் கிளவி” (குறுந்—181) என்பதனாலுணர்க. “நாணிட்டுரையவற் குரையாமாயினும்” (நற்—263) என்புழி உரையாமைக்கு ஏது நாணாதலுணர்க. “உயிரினுஞ் சிறந்த நாணு நனி மறந்துரைக்கலுய்ந்தனனே” (நற்—17) என்பதும் அது.

பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணியதாக உரைப்பதல்லது அந்நாண் கெடப் புலந்ததாக உரையலென்பது கருத்தாம். ‘ஒற்றுமையுடைய காதலர் மாட்டுப் புலத்தலன்றே

பேரின்பம்' (குறள்—1323) அஃதில்லார் மாட்டு அஃதெவன் என்க.

---

## கதக்கண்ணனார்

94. பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்
தரும்பே முன்னு மிகச்சிவந் தனவே
யானே மருள்வேன் றோழி பானாள்
இன்னுந் தமியர் கேட்பிற் பெயர்த்தும்
என்னா குவர்கொல் பிரிந்திசி னோரே
அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதருங் குரலே.

எ-து. பருவங் கண்டு ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவ லென்பதுபடத் தலைமகள் சொல்லியது.

(வி) பேதைப் பித்திகத் தரும்பே பெருந்தண் மாரி முன்னும் மிகச் சிவந்தன என்க. மாரிப் பருவத்திற்கு முன்னர்ச் சிவத்தலால் பேதைப் பித்திகம் என்றாள். பித்திகத் தரும்பு சிவக்கு முன்னர்ப் போதுவல் என்று கூறிச் சென்று, இன்னும் வாராது தமியராய்ப் பிரிந்திசினோர். மாமழைச் சிலை தருங்குரல் பானாள் கேட்பின் என்னாகுவர் கொல் யானே மருள்வேன் என்றாள். என்னாகுவர் கொல்—யாதின்கண் ஆவரோ. என்கண் ஆவரோ, தம் வினையின்கண் ஆவரோ இவற்றுளொன்று துணியலாகாது யானே மருள்வேன் எ-று. பெயர்த்தும் என்னாகுவர் கொல் என்றது முன்னே என்கண் ஆகாது வினையின்கணாகிப் பிரிந்தோர் குரல் கேட்பின் திரும்பவும் என்னாவரோ என்றதாம். யான் ஆற்றுவல் அவர் தாம் என்னாகுவர் கொல் என்று தான் யானே மருள்வேன் என்பதுமாம்.

மாமலையின்கண் அருவி தத்தாநிற்க மழைச்சிலை தருங்குரல் என்க. மாமுன்னது பெருமை, பின்னது கருமை. கருவி—தொகுதி. சிலைதருங் குரல்—இடிக்கும் ஓசை. பானாட் கேட்பினென்றது நள்ளிரவினும் தமியர் துயிலாமையைக் குறித்தது. தமியர் கேட்பின் என்றது தானுமவரும் ஒருங்கிருந்து கேட்பின்

கூடற்கினியது கார்கால மென்னுங் குறிப்பிற்று. என்னுகுவர் கொல்—நம்மிலும் வலிதாத்தூக்கிய பொருளிடை யாவரோ (அகம்-265). அப்பொருளினும் வலிதாத் தெளித்த தம் சொல் லிடையாவரோ மருள்வேன் என்றுளென்பதூஉம் ஆம்.

---

## கபிலர்

95. மால்வரை யிழிதருந் தூவெள் ளருவி
கன்முகைத் ததும்பும் பன்மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னவென் னுரனவித் தன்றே.

எ-து. தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

(வி) பன்மலர்ச் சாரற் சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகளுடைய சாயல் என்க. மால்வரை இழிதரும் தூவெள்ள ருவியின் கன் முகைத் ததும்பும் நீரோ ரன்ன சாயல் என்க. "நீரினுமினிய சாயல்" (புறம். 105) என்றார் இவரே. தூய மென்மை என்றற்கு மலையிற் றூவெள்ளருவியின் நீரை உவமித் தார். ஈண்டுச் சாயல் என்பது உடம்பு முழுதும் உள்ள மென்மை. சிறு குடிக்குறவன் குறுமகள் என்றதுதான் பெருங்குடிப் பெருமக னுதலைக் குறித்தது. பெருந்தோள் கூறியது தன் பெருந்தோள் தழுவற்கு ஒப்புமை கருதி. குறுமகள் நீரோரன்ன சாயல் தீயோ ரன்னவென் உரன் அவித்தன்று—சிறுமியின் நீரோடு ஒரு தன் மைத்தாய் ஒத்த மென்மை, தீயோடு ஒரு தன்மைத்தாய் ஒத்த என் வன்மையை மாய்த்தது. மென்மை வன்மையை அவித்தது அதிசயம். உரன்—வன்மை. 'தீமுரணிய நீரும்' (புறம். 2) என்பதனால் தீயும் நீரும் மாறுபடுதல் உணரலாம். பன்மலர்ச் சாரலை நினைந்தது தான் குறு மகளைத் தழுவிய இடனுதல் பற்றி. ஓரன்ன என்பது 'ஓரொத்த' (பரிபா—20) என்பது போல் வந் தது. ஓர் அசை எனினுமாம். கல்முகை—மலைமுழை.

---

### அள்ளூர் நன்முல்லையார்

96. அருவி வேங்கைப் பெருமலை நாடற்
கியானெவன் செய்கோ வென்றி யானது
நகையென வுணரே னாயின்
என்னா குவைகொ னன்னுத னீயே.

எ-து. தலைமகனை இயற்பழித்துத் தெருட்டுந் தோழிக்குத் தலைமகள் இயற்படச் சொல்லியது.

(வி) அருவியான் வளரும் வேங்கையினையுடைய பெருமலை நாடற்கு என்க. அருவியின் தன்மை ஆடவர் தன்மையாகவும், வேங்கையின் தன்மை மகளிர் தன்மையாகவும் நினைக.

அருவி தன்கண் எய்தினாற் பயன்கொள்வதல்லது தானே யதன்பாற் சென்று பயன் கொள்ளவும், அதனைத் தன் கண் எய்துவிக்கவும் மாட்டாத வேங்கை போல, மகளிரும் தம் காதலர் தம்பாலெய்தினாற் பயன்கொள்வதல்லது தாமே யவர்பாற் சென்று பயன் கொள்ளவும், அவரைத் தம்பாலெய்துவிக்கவும் மாட்டாமை உணர்ந்து கொள்க, இக் கருத்தே பரிபாடல் (9) 'மகளிர் திறம்பெய்ய வுழக்கு மழைக்கா' என்பதனாலினிது விளக்கப்பட்டது; ஆண்டுப் பரிமேலழகர் 'காவை ஒத்தலாவது காதனக்கின்றியமையாத மழையை வருவித்துக் கொள்ளமாட்டாது அது தானே வந்துழிப் பொலிந்து, வாராத வழியும் ஆம் அளவு ஆற்றி ஆகாத எல்லைக்கண் இறந்து படுதல், எனத் தெளிவித்த வாற்றானிஃதுணர்ந்து கொள்க. இதனால் நாடன் தன் மலையின் அருவி போல ஒருகாற் பெருகி வந்தும், ஒருகால் வற்றி வாராதும் ஒழுகுவன் என்றும், அம்மலை யருவியால் வளரும் வேங்கை போல் யாமும் வந்துழிப்பயன் துய்த்தும், வாராத வழியாற்றியும் இருப்பதல்லது வேறு அவற்கு யான் தனியே யாது செய்வேனோ என்று அவனை இயற்பழித்துத் தோழி தலைவியைத் தெருட்டினாளாகக் கொள்க. யானெவன் செய்கோ என்றது தலைவன் குறையே என்று குறிப்பானுணர்த்தி இயற்பழித்தவாறும். அவனாற் பயன் துய்க்கும் நின்னாலும் செயற்கரிய தொன்றை நின் நிழல் வாழும் யான் எங்ஙனம் செய்கோ என்று வெறுத்துரைத் தாளெனினுமமையும். தலைவன் வந்து வரையாத குறைக்கு

யான் நிரப்புதலெங்ஙனமென்று நீ குறித்தனை நகையென வுண ரேனாயின் என்னாகுவை கொலென்றாள். இங்ஙனம் நீ என் தலை வரையும் என்னையும் குறிப்பாற் கொள்ளக் கூறியது என்னை நகுவதாகக் கருதாது அவரையே இயற்பழித்ததாக வுணர்வேனா யின் நன்னுதலுடைய நீ என்னாகுவை கொலென்றாளென்க. என் னாகுவை—யாதாகுவை. நன்னுதலுடைமையால் மகளாவையோ அன்றி யான் வேட்ட தலைவரைச் சிற்றூராகக் கருதி இயற்பழித் தலான் மகள் வடிவின் வேறாவையோ? தலைவி, பெருமலைக் கேற் பத் தலைவரை வற்றாத பேராறாகப் பாராட்டி இயற்பட மொழிந் தாளென்று உய்த்துணரத்தகும். நகையென உணரேன் என்ற தனால் தோழி தலைவர் செயலை எள்ளுதற்குறிப்போடு சிறு நகை செய்து வெறுத்துரைத்தனளென்றும் துணியலாம். என்னாகு வைகொல் என்பது என்கண் ஆகுவை கொல் எனினும் பொருந் தும்.

---

## வெண்பூதியார்

97. யானே யீண்டை யேனே யென்னலனே
ஆனா நோயொடு கான லஃதே
துறைவன் றம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே.

எ-து. வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(வி) யானே ஈண்டையேனே—யான் மட்டும் இவ்விடத் துள்ளேன். பிரிந்தமையாத நோயொடு என் நலனே கான லஃதே என்க. "இலங்குவளை நெகிழச் சாஅய் யானே, யுளெனே......என்னலனே......தண்ணந் துறைவனொடு கண் மாறின்றே"(குறுந்—125) என இந்நூலுள் வருதல் கண்டுணர்க. நலன் கானலஃ தென்றது நலன் அவருண்ட கானலிடத்தது எ-று. 'அவருண்ட வென்னலனே' (குறுந்—112) என்பது காண்க. நலனைக் கொள்ளை கொண்ட தலைவன், தம் ஊரான். மறைவிற் செய்தி அலராகி எம்மூர் மன்றத் திடத்தது. மறை

—பிறரறியாமல் என் நலனைக் களவிற் கொண்ட செய்தி. தம் ஊரான் என்றது இன்னும் வரைந்து எம்மூராகச் செய்கின்றிலன் என்னும் குறிப்பிற்று. தம் என்ற பன்மை துறைவன் தந்தையை உளப்படுத்தியதாம். மன்றம்—ஊரம்பலம். அலராகி என்றது அம்பலின் மிக்கது குறித்தது. வரைந்தால் அவரோடு அவர் ஊர் புகுதற்குரியயான் வரைவு நீட்டித்தலால் தனியே ஈண்டையேன் எ-று. இது மாட்டின்றி வந்த செய்யுள் எனப் பேராசிரியர் உரைத்தலான் (தொல்—செய்—211) என் நலனே ஆறு நோயொடு கானலஃ தென்று கூறப்பட்டது. சிறிது மாட்டுடையதாக்கி யானே ஆறு நோயொடு ஈண்டையேனே எனவும் என் நலனே கானலஃ தெனவும் கூறுதல் சிறப்புடைத்தாதல் காண்க. நலனுக்கு நோய் கூறுதலினும் தனக்கே கூறுதல் பொருந்திற்றாகும். இங்ஙனமாயின் துறைவன் தந்த ஆறு நோயொடு யான் ஈண்டையேன். அவன் கொண்ட என் நலன் கானலஃது இவ்வாறு நோய் தந்து நலங்கொண்ட தலைவன் தம்மூரான் அவன் களவினிகழ்த்திய இப் பண்டமாற்றுச் செய்தி அலராகி மன்றத்தஃது என்று கூறி இப்பழி பரிகரிக்க வரைவொடு விரைந்து வருகின்றிலன் எனக் குறித்தாள் என்க.

---

## கோக் குளமுற்றனார்

98 இன்ன ளாயின ளன்னுத லென்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே.

எ-து. பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

(வி) தோழி மாரிப் பீரத்தலர் சில கொண்டு அவர்ச் சென்று துன்ன நன்னுதலின்னளாயினள் என்று செப்புநர்ப் பெறின் நன்றுமன் என்க. "நுதலே, பீரிவர் மலரிற் பசப்பூர்ந் தன்றே" (நற்—197) எனவும், "நுதல் பீரலரணி கொண்டு"

(கலி—53) எனவும் வருவன காண்க. மறைக்கப் படாமையின் நுதற் பசலை அயலார்க்கு எளிதினறிதல் கருத்தாம். "நுதலிறை கொண்ட வயலறி பசலை" (அகம். 235). செப்புநர்ப் பெறின் நன்றுமன்—செப்புநரைப் பெறாமையால் இக்களவு நன்றன்று எ-று. பெறின் நன்று—பெற்ருல் நல்லது. மன்—அது கூடாதன்றே என்க.

"பிரியாயாயின் நன்றுமன்" (அகம்—33) என்புழிப் பழைய உரைகாரர் பிரியாயாயின் நன்று, மன்—அது மாட்டாயன்றே என்றது காண்க. களவின்கண் வாயிலுண்டாயின் களவு வெளிப்படுமாதலாற் பெறலாகாமை பற்றிப் பெறின் என்ருள். இது களவின்கண் வரை பொருள் பற்றிப் பருவங் குறித்து இட்டிடைத் தலைவன் பிரிந்ததாம். பீரத் தலர்சில கொண்டு வாடாது காட்டி இன்னளாயினள் எனச் செப்புநர் என்றதனுனும் இது சேய்மைக்கட் பிரிவாகாமை யுணர்க.

மாரிப் பீரம் என்றதனுல் அவன் வருவது குறித்த பருவம் அஃதாதல் பொருந்தும். பைம் புதற் கலித்த பீரம்—பசிய புதலைப் பற்றுக்கோடாகக் கொண்டு படர்ந்து தழைத்த பீர். பீரத்தலர் போலப் பசந்ததல்லது அதற்குள்ள பற்றுக்கோடு தனக்கில்லை என்பது குறிப்பு.

---

## ஔவையார்

99. உள்ளினெ னல்லனோ யானே யுள்ளி
நினைத்தனெ னல்லனோ பெரிதே நினைத்து
மருண்டனெ னல்லனோ வுலகத்துப் பண்பே
நீடிய மரத்த கோடுதோய் மலிர்நிறை
இறைத்துணச் சென்றற் றாஅங்
கனைப்பெருங் காம மீண்டுகடைக் கொளவே.

எ-து. பொருள் முற்றிப் புகுந்த தலைமகன் 'எம்மை நினைத்தும் அறிதிரோ? என்ற தோழிக்குச் சொல்லியது.

(வி) யானே உள்ளினெனல்லனே—யான் இடைவிடாது நும்மைக் கருதினேனல்லனே. அங்ஙனம் கருதிய நிலையில் பெரிதே நினைத்தனெனல்லனெ—செய்யும் பொருளினும் பெரிதாகிய நும் காம இன்பமே நினைந்தனெனல்லனே. அது நினைந்து மீண்டு, நீடிய மரத்த கோடு தோய்மலிர் நிறை இறைத் துணைச் சென்றற் றாஅங்கு அனைப் பெருங் காம வேட்கை கடைக் கொள உலகத்துப் பண்பின்கண் மருண்டனெ னல்லனே என்க. பெரிதே நினைத்து மீண்டு என்றதனால் பெரிது காம இன்பமாத லுணர்க. "காமமோ பெரிதே" (குறுந்—18) 'பெரிதே காமம்' (கலி—137) எனவரும். அனைப் பெருங் காமம் என்றது அப் பெரிதே குறித்தல் காண்க. அனைப் பெருங் காமம் கடைக் கொள—அவ்வளவு பெரிய காமம் முடிவடைய. "கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளி" (குறள்—1264) என்புழி "நீங்கிய காமத்த ராய் நம்மைப் பிரிந்து போயவர் மேற்கூடிய காமத்துடனே நம் கண் வருதலை நினைந்து" எனப் பரிமேலழகருரைத்தல் காண்க.

நீடிய மரங்களின் கொம்பு தொடத் தோய்ந்த நிறை வெள் ளம்; சென்று இறைத்துண்ண அற்றாங்கு—நெடுந்தூரஞ் சென்று ஆண்டுள்ளார் இறைத்துண்ண வற்றினாற் போல; காம வேட்கை முடிவடைய என்க. கடலில் நின்றுண்டாகிய நீர் மலையிற் பெய் யப்பட்டு அருவியாய் வழிந்து மீண்டும் கடலை எய்தப் புகுமளவில் வற்றி இறைத்துண்ண அற்றாற் போல நும்மின் நின்றுண்டாகிய காமவேட்கை வினை செய்வுழி நின்று பெருகி மீண்டும் நும்பால் எய்திய நிலையில் வற்றிய தென்பது கருத்தாகக் கொள்க. பொருள் கடைக் கூட்டப் ;பிரிந்த யான் காமம் நினைந்து மீண்டு காமம் கடைக்கொண்ட அளவில் உலக இயல்பின்கண் மருண் டனெனல்லனே எ-று.

வினைவயிற் பிரிவுழிக் காம வேட்கை பெருகாமையும் அது முடிந்துழிப் பெருகுதலும் அங்ஙனம் பெருகியது தலைமகளை மீண்டெய்திய வளவில் வற்றுதலும் ஆகிய உலகத்துப் பண்பின் கண் மருண்டனென் அல்லனே என்றான் என்க. பேராசிரியர் திருக்கோவை யுரையில் (9) 'புணராத முன்னின்ற வேட்கை புணர்ச்சிக்கட் குறைபடும்' என்றார். பரிமேலழகர் வினைவயிற் பிரிவுழிக் காம வின்பம் நோக்காமையும், அது முடிந்துழி அவ்

வின்பமே நோக்குதலும் தலைமகற்கு இயல்பு (குறள்—1264) எனக் கூறுதலான் இஃதுணர்க. காம இன்பம் பெரிதாதல் “உலகமும் புத்தேளுடும் சீர்தூக்கின் சீர்சாலாவே......குறுமகள் தோள்மாறுபடும் வைகலோ டெமக்கே” (குறுந்—101) என்புழியும் கண்டுகொள்க.

---

### கபிலர்

100. அருவிப் பரப்பி னைவனம் வித்திப்
பருவிலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்
கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத் துண்ணும்
வல்வில் லோரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே.

எ-து. (1) பாங்கற்கு உரைத்தது.

(2) அல்ல குறிப்பட்டு மீள்கின்றான், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

(வி) அருவிப் பரப்பின்—மலையருவியினை யுடைய பரந்த நிலத்தின்கண். ஐவனம்வித்தி — மலைநெல்லினை விதைத்து. விளைவிற்கு நீரருகே சேர்ந்த நிலன் வேண்டுதலான் அருவிப் பரப்பினைக் கூறினர். மரலினும் உயர்ந்ததாதலின் குளவியொடு என்றார். இவையே களை என்றவாறும். கட்கும்—களையாகப் பறிக்கும். காந்தள் வேலி—காந்தள் படர்ந்த வாழ்வேலிகளை உடைய. சிறுகுடி—குறிஞ்சி நிலத்தூர்க்குப் பெயர். குன்றக் குரவையுள் “சிறுகுடியீரே சிறுகுடியீரே” என வருதலான் உணர்க. பசிப்பின் என்றார் இவ்வாறு முயல்பவர் பசித்தலரிது என்பதுபற்றி கடுங்கண் வேழத்து—வன்கண்மையை உடைய யானையின் ‘கடுங்கண்ண கொல்களிற்றால்’ (புறம்—14) என்புழிக் காண்க. கோடு நொடுத்து உண்ணும்—கொம்பைவிற்று உண்ணும்; என்றது விளைவினையாலும் விறல் வினையாலும் வாழ்தல் கருதி. கொல்

லிக் குடவரைப் பாவையின்—கொல்லியாகிய குடக்கண் வரையி லுள்ள பாவையைப் போல. மடவந்தனள்-கண்டார்க்கு அறி யாமை வருதல் செய்தனள். கண்டார்க்கு மடமை வருதற்குக் காரணமாவள் என்பதுமாம்.

"கடவுளெழுதிய பாவையின் மடவது மாண்ட மாயோளே" (அகம்—62) என்புழிப் பாவை போலக் கண்டார்க்குச் செய்யும் மடமைக்கண் மாட்சிமைப்பட்ட மாயோள் என்று பொருள் கொள்ளக் கிடத்தல் காண்க. நச்சினார்க்கினியர் குறிஞ்சிக்கலி யில் (24) 'மட மருங்குல்' என்புழி நோக்கினார்க்கு மடமையைக் கொடுக்கும் மருங்குல் எனப் பொருள் கூறுதலான் உண்மை உணர்க.

மடவந்தனள் அவள் பணைப் பெருந்தோள்கள் மணத்தற் கரியவும் ஆயின என்றான் என்க. இங்ஙனம் காமத்தால் மடமை எய்தல் தகாதென்ற பாங்கற்கு என்னைக் கொல்லிப் பாவை போல மடமை செய்தனளொருத்தி, அவள் தோள்கள் மணத்தற் கரியன என்றான் எ-று. வல்வில்—ஒரு கணை எய்து பலவற்றை யூடுருவச் செய்யும் வலியுடைய விற்றன்மை. 'வல்விற்கைவீர' (கம்ப—யுத்த—ஒற்று—30). ஓரி—மழவர் பெருமகன்.

---

## பருஉ மோவாய்ப் பதுமனார்

101\. விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தே ளாடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போ லுண்கட் பொன்போன் மேனி
மாண்வரி யல்குற் குறுமகள்
தோண்மாறு படூஉம் வைகலோ டெமக்கே.

எ-து. தலைமகட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது. வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதூஉமாம்.

(வி) எமக்குக் குறுமகள் தோண்மாறுபடும் வைகலோடு தூக்கின் உலகமும் புத்தேளாடும் இரண்டும் சீர்சாலா என்க.

தோண்மாறுபடும் வைகலொடு தூக்கின் - மாறு தோட்டியிலும் அரைநாளின்பத்தொடு வைத்து நிறைகாணின்; இங்ஙனம் தூக்குவதோர் கோலின்மையிற் றூக்கின் என்றான். புலக்கோலாற்றூக்கின் என்பதுமாம். உலகமும் புத்தேணுடும் இரண்டும் சீர்சாலா - உள்ளநாள்வரையும் உலகாளின்பமும், புண்ணியம் உள்ளவரையும் புத்தேணுடாளும் இன்பமும் ஆகிய இரண்டும் பொறைபற்ற. மாறு தோட்டியிறலாவது - தலைவி வலத்தோளிற் றன்னிடத்தோளும் தலைவியிடத் தோளிற்றன் வலத்தோளும் செறியக்கிடந்து உறங்குதல். படுதல் - உறங்குதல் "பரந்து படு பாயல்" (அகம். 39) என்புழிப் படுதல் - கண்படுதல் என்றார் பழைய வுரைகாரர். "பழிதீர் கண்ணும் படுகுவ" (அகம். 11) என்பதும் காண்க. படூஉம் வைகல் என்றதனாற் றுயிறற்குரிய அரைநாளிரவாயிற்று. வென்றியான் எய்தும் உலகவின்பமும் புண்ணியத்தானெய்தும் புத்தேணுட்டின்பமும் ஒத்த அன்பானெய்தும் இவ்வின்பத்திற்குச் சீர்சாலா என்பது கருத்தாம்.

பொருள் வலித்த நெஞ்சிற்குச் சொல்லியதாயிற் குறுமகளைப் பிரிந்து போய் வினைமுற்றி எய்தும் உலகமும் இவளைத் துறந்து தவத்தானெய்தும்புத்தேணுடும் இவள் தோண்மாறுபடும் வைகலின்பத்திற்குச் சீர்சாலா என்றிகழ்ந்தானென்க. படூஉம் வைகல் என்றதனால் விழித்தும் உறங்கியும் உலகாளின்பமும் இமையாமலே விழித்துப் புத்தேணுடாளின்பமும் குறித்தானுவன். உறங்கியும் உலகங்காத்தால் "உறங்குமாயினு மன்னவன் றன்னொளி, கறங்குதெண்டிரை வையகங்காக்குமால்" (சிந். 248) என்பதனுன் அறிக. உலகாளுதலும் புத்தேணுடாளுதலும் வினை செய்தலாகவும் படுதல் வினையொழிதலாகவும் தெரிந்து கூறினுன். கண்ணும், மேனியும், அல்குலும், தோளும் குறுமகட்குக் கூறியது உலகிற்கும் புத்தேணுட்டிற்கும் இவ்வாறு வசீகரிக்கும் உறுப்புக்களில்லை என்பது குறித்ததாம். தோளென்றொழிந்தது அவ்வுறுப்பிற்கு உவமையில்லை என்பது கருதியதாம். உலகமுழுதும் ஆளும் இன்பத்தைக் கருதிப் பெருங்கடல் வளைஇய வுலகமும் என்றான். துன்பத்துடன் இன்பமும் உள்ள உலகமும் இன்பமே உள்ள புத்தேணுடும் ஆதலான் இரண்டுங் கூறினுன்; "இனிதெனப் படூஉம் புத்தேணுடே" (குறுந்-288) என்ப. அரிது பெறு சிறப்பு - செயற்கரியது கொண்டு பெறும் தகைமை. பாங்

காயினர் கேட்பச் சொல்லியதன் பயன் குறு மகளை இம்மை யின்பத்தினும் மறுமையின்பத்தினும் மேலாக வைத்து அன்பு செய்வல் என்றவாறும்.

---

ஔவையார்

102. உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமம்
சான்றோ ரல்லர்யா மரீஇ யோரே.

எ-து. ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யான் யாங்ஙனம் ஆற்றுவேன் என்றது.

(வி;) உள்ளின் உள்ளம் வேமே - காதலனை நினையின் அவர் பிரிவாகிய தீயினல் அந்நினையும் மனமும் வேகாநிற்கும். உள்ளாது இருப்பின் - அவரை நினையாது உயிர் வைத்திருப்பின் எம் அள வைத்து அன்று - அங்ஙனம் காதலரை மறந்து உயிர்வைத்திருப் பது எம் வரைத்து அன்றும்; யாம் மரீஇயோர் வரைத்தாம் என் பது குறிப்பு. காமம் வருத்தி வான்றோய் வற்று - இதனற் காதல் ஈண்டும் சாகவருத்தி ஆண்டுப்புக்க வானத்திடத்தும் தோய்தல் வல்லது. யாம் மரீஇயோர் - யாம் உள்ளம் பொருந்தியவர்; இந் நிலையில் நம்மை அருளாமையால், சான்றோரல்லர் - அருள் நிறைந் தவரல்லர் எ - று.

யாம் மரீஇயோர் என்பது தாம் உள்ளம் மருவாதவர் என் னுங் குறிப்பிற்று. உள்ளம் வேம் என்றமையாற் பிரிவாகிய தீயில் என்பது கருதிற்றும்; ஏகதேச வுருவகம். உள்ளாது இருப் பின் என்றுள் - அவரை மறப்பின் உயிர்போதல் ஒருதலை என் னுங் கருத்தான். மேல் வான்றோய்தல் கூறியதனல் வருத்தி என்பது ஈண்டுச் சாகவருத்தி என்றதாயிற்று. அவரை மறவாது நினைந்து சாதலான் வான்புகுதல் கூறினுள். உள்ளாதிருப்பின் என்றது தான் அவரை உள்ளியிருப்பதை உணர்த்திற்று; "மறப் பினெவனவன்" (குறள்-1207) என்புழிப் பரிமேலழகர் மறப்பின்

ஆவன் எவன் எனக்கொண்டு "யான் மறந்தால் இறந்துபடாது உளேனுவது எத்தால்" என்று பொருள்கூறியது கண்டுணர்க. "மறப்பினெனன்ரேண்மேற் கலங்கழியும்" (குறள். 1262) என்புழி மேல் - மறுபிறப்பினும் என்று அவர் கூறியது மறந்தால் இறந்து படுதல் கருதியதாதல் காண்க. "சான்ரேர் செல்வமென்கட் செல்வமென்பதுவே" (210) என்னும் நற்றிணையாற் சான்ரேர் பொருட் செல்வத்தை மதியார் என்றும் அருட்செல்வத் தையே மதிப்பவர் என்றும் தெரிதலான் அருளாதவரைச் சான் ரேரல்லர் என்ருள். காதலர் வரைவிடைவைத்துப் பொருட் செல்வங்கருதிப் பிரிந்தவரெனின் ஈண்டு நன்கு பொருந்தும். இதனைக் களவியலுள் 'வழிபாடு மறுத்தற்கு' (சூத்.20) நச்சினர்க் கினியர் உதாரணங் காட்டுதலான் இது களவிற்றலைவி கூற்ருத லுணர்க. பேராசிரியரும் இதனைக் "காதல் கைம்மிகல்" (சூத் - 23) என்னும் மெய்ப்பாட்டிற்கு எடுத்தோதி வரைந்து எய் துங் கூட்டத்திற்கு ஏதுவாம் எனக் கொள்ளுதலான் இதுகளவிற் கூற்ருதலுணரப்படும்.

வான்ரேய் வற்றே என்பதை வானினும் தோய்வதற்றே எனக்கொள்வதும் ஆம். "அள்ளிக் கொள்வற்றே பசப்பு" (குறள். 1187) என்புழிப் போல வந்தது.

---

## வாயிலான் தேவனுர்

103. கடும்புன லொருகுத்த நடுங்கயி ரள்ளற்
கவிரித ழன்ன தூவிச் செவ்வாய்
இரைதேர் நாரைக் கெவ்வ மாகத்
தூஉந் துவலைத் துயர்கூர் வாடையும்
வாரார் போல்வர்நங் காதலர்
வாழேன் போல்வ ரேழி யானே.

எ-து. பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(வி) கடும்புனல் தொகுத்தஅயிர் - கடியபுனல் குவித்த நுண்மணல். கடும்புனல் - கடிதாயோடிய நீர் என்பர் நச்சினர்க்

இனியர். (நெடுநல்வாடை) நடுங்கு அயிர் - சிறுகாற்றிற்கும் அசை யும் நுண்மணல். "நடுங்கயிர் போழ்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்" (அகம் 320) என்பது காண்க. அள்ளலில் இரைதேர் நாரைக்கு எவ்வமாக அயிர்தூவும் வாடை என்க. அள்ளல் - சேறு. இரை தேர் அள்ளலில் வாடை அயிர் தூவுதல் நாரைக்குக் கேடுதருவ தாதலுணர்க. "நுண்ணயிர் ஊதை யுஞற்றும்" என்னும் பதிற் றுப் பத்துள் (51) பழைய வுரைகாரர் "ஊதையுஞற்றுதல் - நுண்ணிய அயிரை முகந்து தூவுதலிலே முயல்கை" எனக் கூறி யது கொண்டுணர்க. அயிர்தூஉம் வாடையும் எனவும் துவலைத் துயர்கூர் வாடையும் எனவும் கொள்க. துவலையாற்றுயரை மிகுக்கின்ற வாடைப் போதிலும் நங்காதலையுடையவர் வாரார் போல்வர். அவர் காதலை யாமுடையேமல்லேம் என்பது அருத் தாபத்தியாம். இதனுற்றோழி யானே வாழேன் போல்வல் - யான் தனியே உயிர் வாழேன் போல்வல். வாடைக்கு முன்னர் வருதல் குறித்து அங்ஙனம் வாராமை தெளியப்பட்டதனால் வாடையிலும் வாராரோ என்னுங் கருத்தால் வாரார்போல் வர் என்றாள். அவர் வரல்நசையால் இன்னும் உயிர்வாழ்தற் குறிப்பால் வாழேன் போல்வல் என்றாள்.

கவிரிதழன்ன தூவி - முண்முருக்கின் இதழை யொத்த இறகு. நடுங்குகின்ற அயிர் ஆதலான் அள்ளலில் வாடை எளி திற்றூவுதல் குறித்தாள். தனக்குத் துவலையாற் றுயர்கூர் வாடை என்றாள். இரைதேர் நாரைக்கு எவ்வமாக அயிர்தூவும் வாடை என்று அதனுடைய இரக்கமின்மை காட்டி அவ்வியல்பாற் றன் னைத் துவலையால் நலியுங் கொடுமை குறித்தாள்; மேற்பாட்டில் "தண்சிதருறைப்ப" (குறுந் - 104) என்பது காண்க. நாரையை நினைந்தது தான் விடுதூதாதல் கருதி என்க. தூது செல்லற் குத் துணையாகிய தூவியையும் தூதுரைத்தற்குக் கருவியாகிய செவ்வாயையும் நினைந்தனளாவள்.

நடுங்கு அஞர் அள்ளல் என்பது பாடமெனின் சென்றார் கால் நடுங்குதற்குக் காரணமான வழுக்கு நிலத்திலுள்ள சேற்றில் இரைதேர் நாரைக்கு எவ்வமாகத் தாவுந்துவலையாற்றுயர் கூர் வாடையும் என்க.

வாயிலான் என்புழி வாயில் ஒரூர். நேரிவாயிலே வாயிலென்று பதிற்றுப்பத்துப் பதிகத்து (50) "ஒன்பதின்மர் வீழவாயிற் புறத் திறுத்து" எனக் கூறுதல் காண்க.

---

## காவன் முல்லைப் பூதனர்

104. அம்ம வாழி தோழி காதலர்
நாலறு முத்திற் றண்சித ருறைப்பத்
தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியு நாளும் பலவா குவவே.

எ-து. பிரிவின்கண் ஆற்ருளாகிய தலைமகள் தோழிக்குக் கூறியது. சிறியவுள்ளிப் பெரிய மறக்க வேண்டாவோ என்ற தோழிக்குக் கிழத்தி கூறியதூஉமாம்.

(வி) நூல் அறுமுத்தின் - கோத்த நூலற்ற முத்துக்களைப் போல. தண்சிதர் உறைப்ப - குளிர்ந்த துளிகளைத் துளிக்க. தாளித்தண்பவர் - தாளிப்புல்லின் தண் கொடியை. ஆ நாள் மேயும் - ஆனினங்கள் விடியலில் மேயும்; பனிபடு நாளே பிரிந்தனர்- அவர் வருது மென்ற பனியுண்டாகிய நாளிலே பிரிந்துறை வாராயினர். பிரியுநாளும் பலவாகுவவே - இனிப் பிரிந்துறையும் ஒவ்வொருநாளும் பல நாட்களாதல் துணிந்தது எ-று. ஏ தேற்றம்.

"ஒரு நாளெழுநாள்போற் செல்லுஞ் சேட்சென்ருர் வருநாள்வைத் தேங்கு பவர்க்கு" (குறள் - 1269) என்பதனுன் இவ்வுண்மையுணர்க. ஈண்டுப் பரிமேலழகர் எழுநாள் - பல நாளாகப் பொருள் செய்தல் காண்க.

இங்கு வாராமற் கழியும் நாள்களின் எண் சிறிய என்பது நினைந்து முன்வாராது கழிந்த நாள்களின் எண் பெரிய என்பதை மறக்கவேண்டாவோ என்ற தோழிக்கு இனி அவர் வாராது பிரியும் ஒவ்வொருநாளும் முன் வாராது கழிந்த நாள்களினும் எனக்குப் பலவாதல் துணிபு என்று தலைவி கூறினளென்க. இனிப் பிரியும் ஒவ்வொருநாளும் பலவாகுவ ஆதலால் இப்பிரிவில்

யான் உயிர்வாழேன் தோழி நீ வாழி என்றாள் என்க, அம்ம கேட்பித்தற்கண் வந்தது. தோழி வாழி என்றதனால் இப்பனி படுநாளில் அவரைப்பிரிந்து வாழேன் இறந்து படுவல் என்று குறித்ததாகக் கொள்க. இது நச்சினார்க்கினியர் கருத்தாதல் காண்க. (தொல்-அகத்-10)

பனித்துளி உறைப்பவும் ஆனினங்கள் தம் வினையின் முயலு மாறுபோல இப்பனிபடுநாளிற்றம் வினையிலே முயன்று பிரிந் துறைவா ராயினர் என்றாளென்க. தண்சிதர் உறைப்பப் பிரிந் தனர் எனவும் தண்சிதர் உறைப்பமேயும் எனவும் கொள்க.

---

நக்கீரர்

105. புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பா கின்றே.

எ-து. வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(வி) புனவன் - புனத்தை முயன்று ஆக்கியவன். துடவை- தோட்டத்தின்கண். பொன்போற் சிறுதினை - பொன்போற் போற் றிய சிறிய தினையில். கடியுண் க ட வு ட் கி ட் ட செழுங் குரல் - நாட்கண்டு கிளையுடன் புதிதுண்டற் காரணமாக கட வுட்கு அவிக்காட்ட இட்ட செழியகதிரினை ; கடவுட்கு அவிக் காட்டிப் புதிதுண்டல் மலைக்குறவர் வழக்கு ; "புனத்தினைக் கிள்ளிப் புதுவவிக்காட்டி நின் பொன்னடி வாழ்கவென் றினக் குறவர் புதிய துண்ணுந் திருமாலிருஞ்சோலை" என்பது பெரிய திருமொழி. "சிறுதினை முந்துவிளை யாணர் நாட்புதிதுண்மார்" (புறம் - 168) என்பதனானுந் தெளிக. கதிரில் உயர்ந்ததை அவிக் காட்ட இட்டுவைத்தலாற் செழுங்குரல் என்றாள். புதிதுண்டற் பொருட்டுக் கடவுட் கிட்டதறியாது அதன் செழுமைகண்டு

உண்டமயில். ஆடுமகள். - தெய்வமேறி யாடுபவள். வெறியுறுவனப்பின் - வெறியாடல் பொருந்திய அழகினை யொத்து. வெய்துற்று நடுங்கும் - உள்ளம் வெந்து உடல் நடுங்கும். சூர்மலைநாடன்-தெய்வ மலைநாடன். நாடன் கேண்மை நீர்மலிகண்களால் அயலார் நினைத்தற்கு ஆகியது எ-று. "மறைபெற லூரார்க் கரிதன்றா லெம்போ, லறைபறை கண்ணா ரகத்து" என்ப (குறள் - 1180) கண்ணொடு - கண்களால். கண் நீர்மலிதல் பிறர் நினைப்பாதற்கு ஏது ஆயினது எ-று.

இஃது உண்ணப்படா தென்றறியாது கண்ணுக்கினிய செழுமைகண்டு தினைக்கதிரினை மஞ்ஞையுண்டு நடுங்கி இது கடவுட் கிட்டதை யுண்டதென்று பலரானும் நினையலாயினாற்போலச் சூர்மலைநாடன் யாம் கேண்மை செய்தற்கரிய பெருமையன் என்ப தறியாது கண்ணும் மனமும் மகிழும் அவன் செழுமைகண்டு நட்டு நீர்மலி கண்ணொடு நின்று இன்னளாயினளென அயலார் பலரானும் களவு நினையலாயிற்றென்று குறித்தவாறும். கடி - புதிது.

கடவுட்கிட்ட சில்குரல் என்பதும் பாடம். பல கதிரிற் சில வற்றைக் கடவுட்கு இட்டுவைத்து வளர்த்தலாற் சில் குரலென்றாள்.

---

## கபிலர்*

106\. புல்வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் றோன்று நாடன்
தீதி னெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமும்
நெய்பெய் தீயி னெதிர்கொண்டு
தான்மணந் தனையமென விடுகந் தூதே.

எ-து. தலைமகன் தூதுகண்டு கிழத்தி தோழிக்குக் கூறியது.

(வி) இற்றியினது கல்லிற் படரும் புல்லிய வீழாகிய வெள்ளிய வேர்கள். இற்றிப்புல்வீழ் வெள்வேர் என்க. வீழ் - வீழ்து. இற்றி வீழ்வேர் வரையிழி யருவியிற்றோன்று நாடன் - இற்றியின் வீழ்தாகிய வேர் மலையினின்று வழிகின்ற அருவிபோலத்

தோன்று நாடன் ; ஒன்று மற்றொன்றாகத் தோன்றுநாடன் என்பதனால் நமக்கு உள்ளவாறறியப்படாது மாறித் தோன்றுபவன் என்றவாறும். அன்புடையனாகத் தலையளி செய்து அன்பிலனாகப் பிரிதலால் உள்ளவாறறியப்படாதவன் என்பது கருத்து. புல்வீழிற்றிக்கல்லிவர் வெள்வேர் என்றதனால் இற்றிமரம் கல்லினின்று வெளியே வளர்ந்து கோடுகள் புறப்பட நீடினும் தனக்கு இடனாகிய கல்லினைவிடாது வீழினாற் பற்றிக்கோடற்கு இவர்தல்போலத் தலைவன் இல்லினின்று வெளியே சென்றொழுகினும் தனக்கிடனாகிய மனையை விடாது தூது மொழியினாற் பற்றிக் கொள்கின்றான் எனக்குறித்தாளாம். தீதில் நெஞ்சத்துக்கிளவி குற்றமில்லாத உள்ளத்துண்டாகிய மொழி. நம்வயின் வந்தன்று-நம்பால் வந்தது. பிரிந்த காதல் மக்கள் அறியவேட்பது பிரிந்தவர் தீதில் நெஞ்சமே யாதலான் தீதில் நெஞ்சத்துக்கிளவி என்றாள். நெஞ்ச நிறைந்து புறன்வழிவதே கிளவி என்பது தெரிய நெஞ்சத்துக் கிளவி என்றாள் ; "நெஞ்சுவா யவிழ்ந்தனர் காதலர்' (அகம்-129) என்பது காண்க. தூதுரைப்பானைக் கூறாது தூதுரையே வந்தன்று என்றாள் அதுவேதான் வேண்டுதல்பற்றி : இதனால் யாமும் நெய்பெய்தீ எழுந்து நெய்யை எதிர்கொள்வது போல அதனை எழுந்து ஏற்றுக்கொண்டு நெய்யாற்றீ அவியாதிருத்தல் போல இத்தூதுரையால் யாம் அவியாதுள்ளேம் விரைந்து வருக எனத் தூதுவிடுகம் என்றாள் என்க. பேராசிரியர் இதனைக் கற்பாகக்கொள்ளல் (தொல். மெய்ப்-23) காண்க.

நெய்பெய் தீயினெதிரே எம்மைக்கொண்டு தான் மணந்த நாளின் தன்மையம் என்று கரணத்தொடு அவன் மணந்த நன்னாள் மகிழ்ச்சியைப் புலப்படுத்ததாகக் கொள்க. "தெறலருங் கடவுள் முன்னர்த்தோற்றி, மெல்லிறை முன்கைபற்றிய சொல்லிறந்து" (அகம் 396) என்பதனால் அங்கிகரியாகக் கைப்பிடித்து மணத்தல் உணரப்படும். இப்பாட்டைக் களவிற்குரியதாகக் கொள்வர் இளம்பூரணர் (தொல். கள. 21) அவர்க்கு மணந்தனையம் என்பது மணந்தால் எத்தன்மையம் அத்தன்மையம் என்று பொருளாம் போலும் : இதற்குத் தூதுவிடுகம் என்பது கிளி முதலியவற்றைத் தூதுவிடுகம் என்றவாறாகக் கொள்க. தான் வரைந்தனையம் என்பதும் பாடம்.

## மதுரைக் கண்ணனார்

107. குவியிணர்த் தோன்றி யொண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே நெடுநீர்
யாண ரூரன் றன்னொடு வதிந்த
ஏம வின்றுயி லெடுப்பி யோயே.

எ-து. பொருள் முற்றிவந்த தலைமகனையுடைய கிழத்தி காமமிக்க கழிபடர் கிளவியாற் கூறியது.

(வி) தோன்றி - செங்காந்தள். தோன்றியின் இணரிற் குவிந்த ஒண்பூ அன்ன தொகு செந்நெற்றி. கணங்கொள் சேவல் - கோழிக் கூட்டங்களை வலிந்துகொள்ளும் சேவல்; ஒத்த காதலிற் பயிலாமை குறிப்பு. சேவலே நீ ஊரன் றன்னொடு வதிந்த ஏம இன்றுயில் எடுப்பியோய் இக்கடுநவையாற் பிள்ளை வெருகிற்கு அல்கிரையாகிப் படீஇயர் என்க. சாதலன்ன பிரிவினைச் செய்தலாற் கடுநவையாயிற்று; 'சாதலன்ன பிரிவரியோளே' (அகம். 339) என்ப. ஊரன் உயர்வுதோன்ற ஒடு வந்தது. ஏமஇன் துயில் - இன்பத்திற்குக் காரணமான இனிய துயில். பசிமிகுதியால் இல்லின்கண் நள்ளிருள் யாமத்து எலியைப் பார்த்திருக்கும் பிள்ளை வெருகிற்கு இட்டுவைத்து உண்ணும் இரையாகித் தொலைவாயாக. நெடும்போது துய்த்தற்குரிய இன்பத்தைக் கெடுத்தலான் அக்கடுநவைக்குத்தக நெடும்போது துய்த்தற்குரிய உணவாகுவை என்றாள். நெடுநீர் யாணர் ஊரன்- நெடுங்கால தாமதத்தின்பின் புதிய வரவினையுடைய ஊரன் அவனொடு வதிந்த அருமை குறித்தது. நெடுநீர் "நெடுநீர் மறவி" (குறள். 605) என்புழிப்போல வந்தது. 'யாணர்க் கோங்கு' (சிறுபாண்) என்புழிப் புதிதாய்ப்பூத்த கோங்கு என நச்சினார்க்கினியர் பொருள் செய்தது காண்க. யாணர்ப்புலவர் (மதுரைக்காஞ்சி) என்பதும் இப்பொருட்டெனின் நன்கு பொருந்தும். ஈண்டுத்தலைவி சேவலை வைதுரைத்ததற்கு இயையக்கொள்வுழி இதுவே பொருந்தியதாதலுணர்க. ஊரன் என்பது "அம்ம

வாழி தோழி ஊரன் ” (ஐங். 36-39) என்புழிப்போலத் தனியே வந்தது. நள்ளிருள் யாமத்துப் படீஇயர் என்றது தன்னை அப்பொழுதிற் றுயிலெழுப்பியது கருதி. வதிந்ததுயில் எடுப்பியோய் என்றது அவனொடு நெடுநாள் வதிதற்கியலாத சேணிடைப்பிரிவு குறிப்பது காண்க. இரையாய்க் கடுநவைப் படீஇயர் - இரையாகிக் கடியதண்டம் படுக என்பதுமாம்; “பெரும்பெயர் மன்னனிற் பெருநவைப்பட்டீர்” (சிலப்-16-171) என்புழி நவைப்படுதல் தண்டம்படுதலாதல் காண்க.

---

## வாயிலான் தேவனார்

108. மழைவிளை யாடுங் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயிற் படரப் புறவிற்
பாசிலை முல்லை யாசில் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்
றுய்யேன் போல்வ றோழி யானே.

எ-து. பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.

(வி) விளையாடுதல் - ஈண்டுத்தவழ்ந்து திரிதல். குன்றில் மழை விளையாடுதல் காட்டி அவர் குறித்த கார்ப்பருவ வரவு தெளித்தாள். குன்று சேர் சிறுகுடி - மலையைச் சார்ந்த சிறுகுடிக்கண், யானே உய்யேன் என்க. புறத்து மேயச்சென்ற கறவைகள் கன்றுவயிற் படர என்றதனானும் புறவின் முல்லை செவ்வி கொண்டன்று என்றதனானும் கார்ப் பருவத்துச் சிறு பொழுதாகிய மாலை வந்தது குறித்தாள். கறவை கன்று வயிற்படர்தல் கண்டு தான் மகப்பெற்று இங்ஙனம் அன்பு செய்தற்கு ஏதுவாகிய காதலர் வாராமை நினைந்தாள். பாசிலை முல்லை ஆசில் வான்பூ - பசிய இலைகளையுடைய முல்லைகளில் கற்புடை மகளிர் தம் ஆசின்மைக்குச் சூடற்குரிய வெள்ளிய மலர். இம்மலர் கார்ப்பருவத்து மாலையில் மலர்தலியல்பு. காதலர் பிரிந்திருத்தலாற் கற்புடையாட்டியாகிய தான் தனிமையிற் சூடற்காகாமை நினைந்தாள். பாசிலை முல்லை ஆசில்வான்பூத் தானுண்டாகிய செம்புலப் புறவினாற் செவ்வான் வனப்பினைக் கொண்டது. ‘செம்புலப் புறவின்’ என்பது

நற்றிணை (221). வான்பூ விண்மீனாகவும் செம்புறவு செவ்வானாக வும் நினைந்ததாம். இங்ஙனமன்றி முல்லை வான்பூச் செய்வான் செவ்வி கொண்டன்று என்பது பாடமெனின் முல்லை வெள்ளிய மலர்களை உண்டாக்குதற்குச் செவ்விகொண்டது என்க. செய் வான் என்பது உய்யேன் என்பதற்கு எதுகையாதலுங் காண்க. கறவை கன்றுவயிற் படர்தலையும் முல்லை செவ்விகொண்ட தனை யும் இக்கார்ப்பருவத்து மாலையிற் றனிமையிற் கண்டு உயிர் வாழேன் போல்வல் என்றாள். போல்வல் என்றாள் இம்மாலையி லும் ஒரு கால் அவர் வரல்கூடுமென்னும் நசையால். யானே உய்யேன் என்றது என்னை நீத்து அவர் உய்யும் வலியுடையர் என்பது குறிப்பது. சிறு குடிக்கண் உய்யேன் என்றது அவரில் லாதுள்ள சிறு குடிக்கண் உயிர் வாழேன் அவருள்ளுழி இப்பரு வத்து இம்மாலையி லுளனாயின் வாழ்வேன் என்று குறித்ததாம்.

---

## நம்பி குட்டுவனார்

109. முட்கா லிறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி யிகுதிரை தரூஉந் துறைவன்
புணரிய விருந்த ஞான்றும்
இன்னது மன்னோ நன்னுதற் கவினே.

எ-து. சிறைப்புறம் தலைவி வேறுபாடு கண்ட புறத்தார் அலர் கூறுகின்றமை தோன்றத் தோழி தலைமகட்குக் கூறியது.

(வி) முட்கால் இறவின் - முள்ளைப்போன்ற கால்களை யுடைய இறாமீனின். இறாமீனின் கால்கள் முள்ளையொத்தல் கண் கூடாகக் கண்டது: இக்கால்களால் இவை நடத்தலுண்டு என் பது “நடையிறவு” (10-85) எனப் பரிபாடலின் வருதலானறி யப்படும். முடங்குபுறப் பெருங்கிளை - வளைந்த முதுகையுடைய பெரிய ஓரினத்தை. புணரிஇகு திரை தரூஉம் துறைவன் - கட லிற்றாழும் அலையே உதவும் துறையுடையன்; என்றது வருந் தாமலே துப்புரவு நிரம்புதல் குறித்தவாறு. துறைவன் புணரா நிற்க உடனிருந்த நாளினும் நன்னுதற்கவின் இன்னதுமன்னோ - நின்நல்லநுதலின் அழகு இவ்வாறு பிறரறியும் படித்தாய் இரங் கற்காயதுதான் எ-று.

" பிரிவஞ்சும் புன்கணுடைத்தாற் புணர்வு " (குறள் 1152) என்பதனால், புணர்ச்சி தான் நிகழாநிற்கவும் அது பிரிதற் குறிப்புக்காட்டி அச்சஞ் செய்தலான் அவர் பிரியாத அஞ்ஞான்றும் இப்படித்தே என்று தோழி கூறினாளென்க. தோழியிற் கூட்டத்துப் புணரிய இருந்த ஞான்றினைக் கூறிக் காட்டித் துறைவன் பிரிந்த தனிமையினையுடைய இஞ்ஞான்று நன்னுதற்கவின் இன்னதாதலும் அதனைப் பலரறிதலும் வியப்பன்று என்று குறிப்பித்தாளென்க. புணராநிற்கவும் பிரிவச்சத்தால் நுதற்கவின் இன்னதாகும் மென்மையையுடையை ஆதலால் நின்னைச் சிறிதும் பிரிந்து தனிமையின் வைத்தல் தகாதென்றும் நின்னைப் பிரியாது உடனுறைதற்குரிய வரைவினை அவன் விரைந்து செய்தல் வேண்டுமென்றும் சிறைப் புறத்துத் தலைவன் அறியக் குறித்ததிஃதென்க. நன்னுதல் என்றாள் அவன் நீவுதற் சிறப்பால், மேனியிற் கவின் என்னாது நுதற்கவின் இன்னதென்றது மறைத்தற்காகாது அயலறிய உள்ள சிறப்பால். கவினே இன்னது-அழகே இப்பொலிவழிதலையுடைத்து. கடலை இன்றியமையாத இறவினை அக்கடற்றிரை புறந்தள்ளிப் பலர் அறிய விடுத்தாற்போலத் தலைவனை இன்றியமையாத தலைவியை அவன் வரைவு நீட்டித்தல் புறந்தள்ளிப் பலரறிய வைத்தது குறித்ததாம்.

---

## கிள்ளிமங்கலங் கிழார்

110. வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி நீர
நீலப் பைம்போ துளரிப் புதல
பீலி யொண்பொறிக் கருவிளை யாட்டி
நுண்முள் ளீங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண்ணத் துய்ம்மல ருதிரத் தண்ணென்
றின்னா தெறிவரும் வாடையொ
டென்னா யினள்கொ லென்னா தோரே.

எ-து. பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது ; தலைமகனைக் கொடுமை கூறித் தலைமகளைத் தோழி வற்புறீஇயதுமாம்.

(வி) வாராராயினும் இன்றெறிவரும் வாடையொடு என்னுயினள் கொல் என்றோர் வரினும் அவர் நமக்கு யாராகியரோ என்க. வாடைக்குமுன் வருதல் குறித்தவர் வினைமுற்றாமையின் வாராராயினும் தீதாய் எறியவரும் வாடையால் நாமில்லாத தனிமையில் என்னுயினளென்று ஒரு தூதுவிட்டுத் தம் தீதில் நெஞ்சத்தைப் புலப்படுத்தும் அன்புச் சொல்லு மில்லாதோர் வாடை தானே கொன்றொழித்த பின்வரினும் நமக்கு என் உறவினராவர் என்றதாம்.

"வாடை தூக்கும் வருபனி யற்சிரம்
நம்மில் புலம்பிற் றம்மூர்த் தமியர்
என்னு குவர்கொ லளியர் தாமென
வெம்விட் டகன்ற சின்னாட் சிறிது
முள்ளியு மறிதிரோ வோங்குமலை நாட"

(அகம். 78) என்பது களவாயினும் இக்கருத்திற்கு மூலமாதல் நோக்கிக் கொள்க. வரினும் பயன்படாது வேறுதல் "வறிதாலிகுளை யென் யாக்கையினியவர், வரினு நோய்மருந்தல்லர்" (நற்-64) என்புழியும் வந்தது, யாராகியர் "நீயெமக்கி யாரையுமல்லை, நொதுமலாளனை" (நற் - 395) என்புழிப்போல நொதுமல் என்பதுபட வந்தது. "வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து, வாழ்வாரின் வன்கணா ரில்" (குறள், 1198) என்பதனால் வரினும் யானிதுகாறும் பிரிந்து வாழ்ந்த வன்கண்ணேன் என்பதை அயலறிந்து பழிக்கச் செய்தவரல்லது வேறு என் செய்தவராவர் எனினும் அமையும்.

நீரநீலப் பைம்போதுளரி - நீரிலுள்ள நீலத்தின் பசிய போதுகளை அசைத்து. புதல் பீலி யொண்பொறிக்கருவிளை யாட்டி - புதல்களிற் படர்ந்த மயிற்பீலியின் தெள்ளிய பொறிகளையுடைய கருவிளை மலரை அலைத்து. நுண்முள் ஈங்கைத் துய்ம்மலர் உதிரத் தண்ணென்று - நுண்ணிய முள்ளுடைய ஈங்கையின் துய்யுடைய மலர்களுதிரும்படி குளிர்ந்து வீசி. இவற்றின்கண்ணெல்லாம் மலர்களளவில் உளரி, ஆட்டி, உதிரத் தண்ணென்று வீசி என்பால் மட்டும் இன்னு தெறிவரும் வாடை என்றாள் நீரநீலமும், புதல கருவிளையும், நுண்முள் ளீங்கையுமாதலால் ஆண்டுப் பற்றுக்கோடும் பாதுகாவலு முண்மைகண்டு அவற்றை அழியாது

உளரி, ஆட்டி, உதிரத் தண்ணென்று பற்றுக்கோடும் பாதுகாவலும் இல்லாமை கண்டு என்னை இன்றுதெறிவரும் வாடை என்றுரைளன்க. நுண்முள் ஈங்கைக்குப் பாதுகாவலாதலுணர்க. இங்ஙனங் கொள்ளாக்கால் நீர், புதல், முள்மூன்றும் நின்று பயனிலவாம். பீலி யொண்பொறி "ஒள் ளொளி மணிப்பொறியான் மஞ்ஞை" (பரிபாடல் 18) 'மணிப்பொறிக் குடுமிப்பீலி மஞ்ஞை (நற் - 357) என்பனவற்றானுணர்க.

வாராராயிற் பகைஞர், வரின் நொதுமலர் ஆதலால் நமக்கு உறவினரல்லர் என்பதாம்.

---

## தீன்மிதி நாகனார்

111\. மென்றோ ணெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவே ளென்னு மன்னையும்
அதுவென வுணரு மாயி னாயிடைக்
கூழை யிரும்பிடிக் கைகரந் தன்ன
கேழிருந் துறுகற் கெழுமலை நாடன்
வல்லே வருக தோழிநம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே.

எ-து. வரைவு நீட்டித்தவழித் தலைமகள் வேறுபாடு கண்டு வெறி யெடுப்பக்கருதிய தாயது நிலைமை தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

(வி) நாடன் மென்றோள் நெகிழ்த்த செல்லலை வெறியாடும் வேலன் வேளாலாகிய செல்லல் என்னும். வேலன் வேளென்னும் என்றது ஐங்குறு நூற்றில் (245) "வேலன் முருகென மொழியும்" என்பது போல வந்தது. தெய்வத்தானாகிய நோயைத் தெய்வம் என வழங்குதலும் உண்டு; "நோயணங் கென வுணரக்கூறி" (நற்-322) என்பது காண்க. அன்னையும் - நம்மைப்போல் இளையளாயிருந்துழி இவ்வெல்லாம் நன்கறிந்து மூத்த நம் தாயும். வேலன் வேளென மொழிவன், அன்னையும் அவன் மொழிந்ததனையே உணர்குவள். அதுவென உணரும்

என்றது முருகென வுணரும் எ-று. ஆயின்-அச்செல்லலைப் பரிகரித்தற்கு ஆராயின். ஆயிடை - அவ்விடையில் இல்லோர் நம் பெரு நகை காணிய நாடன் சிறிது வல்லேவருக என்றாளென்க. நாடன், செல்லலை வேள் செல்லலென்று மயங்கிப் பரிகரிக்கப்புகும் வெறியாடற்கண் வேள் வருமுன்னர் நாடன் சிறிது விரைவாக வருக அப்போது தோழி நம்பெருநகையை இல்லோர் காண்க என்றாளென்பதுமாம். காணிய-வியங்கோள். வல்லே வருக என்றதனால் வேலன் மீது வேள் ஆவேசித்து வருவதற்கு முன்னர் என்பது குறிக்கப்பட்டதாம். "வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்......முருகே" (நற்-34) என்பதனால் வேள் வருதலுணர்க. செல்லல் அணங்கன்மை யுணர்ந்தார் தலைவியும் தோழியும் நாடனுமாதலால் நாடனைக்கண்ட மாத்திரையில் வெறியாடலை எள்ளிமற்றை இருவர்க்கும் பெருநகையுண்டாதல் காட்டினார். இதனால் நாடனுக்குத் தலைவியின் கற்பும் புலனும் என்க. செல்லல்-வருத்தம்.

கூழையிரும்பிடிக்கை கரந்தன்ன - கரிய பிடியின்கை சேற்றின் மறைந்தாலொத்த. கேழிருந்துறுகல் - நிறங்கரிய செறிந்த பாறை. கூழை - சேறு. சேற்றிற் காலாழ்தலியல் பாதலிற் கையும் மறைந்தாற் போன்ற என்று கூறினார். துறுகல் கைகரந்த பிடிபோலத் தோன்று மலைநாடன் ஆதலால் அவன் செல்லலும் வேள் செல்லல் என மயங்கிக் கொள்ளப்பட்டது என்பதாம். தீன்மிதி நாகனார் - கடித்துத் தின்பதைக் கருவியான் மிதித்துண்ணு நாகனார். பாகடையைக் கருவியான் மிதித்தல் காண்க. தின்னப்படுவது தீன்.

# செய்யுள் முதற் குறிப்பகராதி

[எண் – பக்க எண்]


| | | | |
|---|---|---|---|
| அகவன் மகளே | 48 | ஐயவியன்ன | 87 |
| அணிற்பல்லன்ன | 86 | ஒடுங்கீரோதி | 114 |
| அதுகொறோழி | 17 | ஒலிவெள்ளருவி | 137 |
| அம்மவாழி தோழி | 123 | ஒறுப்பவோவலர் | 66 |
| அம்மவாழி தோழி காதலர் | 159 | கடும்புனறொகுத்த | 157 |
| அமிழ்துபொதி | 35 | கருங்கட்டாக்கலை | 113 |
| அரிற்பவர்ப் பிரம்பின் | 141 | கருங்கால் வேங்கை | 83 |
| அரும்பறமலர்ந்த | 53 | கருங்கால் வேம்பி | 50 |
| அரும்பெறலமிழ்த | 131 | கழனிமா அத்து | 23 |
| அருவிப் பரப்பின் | 153 | கன்று முண்ணாது | 55 |
| அருவிவேங்கைப் | 148 | காதலருழையராக | 75 |
| அருளுமன்பு நீக்கி | 44 | காந்தள் வேலி | 122 |
| அன்னாயிவனோ | 65 | காமமொழிவதாயினு | 76 |
| ஆம்பற்பூவின் | 82 | காலே பரிதப்பினவே | 79 |
| ஆர்கலிமிதித்த | 90 | காலையும் பகலும் | 63 |
| இடிக்குங்கேளிர் | 98 | காலை யெழுந்து | 80 |
| இவளே, நின்சொற் | 129 | கானமஞ்ஞை | 71 |
| இன்னளாயினள் | 150 | கானயானை | 126 |
| ஈதலுந் துய்த்தலும் | 106 | குவியிணர்த்தோன்றி | 163 |
| உள்ளார் கொல்லோ தோழி கள்வர் | 38 | குறுந்தாட் கூதளி | 102 |
| | | கூந்தலாம்பல் | 127 |
| உள்ளார் கொல்லோ தோழி கிள்ளை | 110 | கூன்முண் முண்டகக் | 88 |
| | | கேட்டிசின்வாழி | 59 |
| உள்ளினுள்ளம் | 156 | கொங்குதேர் வாழ்க்கை | 9 |
| உள்ளினெனல்லனோ | 151 | கோடலெதிர் முகைப் | 105 |
| எம்மணங்கினவே | 91 | கோடீரிலங்குவளை | 29 |
| எவ்வியிழந்த | 43 | சிறைபனியுடைந்த | 135 |
| எற்றோ வாழி தோழி | 140 | செங்களம்படக் | 6 |
| எறும்பியளையிற் | 31 | செல்வாரல்லரென் | 78 |

| | |
|---|---|
| ஞாயிறுபட்ட | 143 |
| தச்சன் செய்த | 103 |
| தாதிற் செய்த | 85 |
| தாமரை புரையுங் | 1 |
| துறுகலயலது | 69 |
| நகைபெரிதுடையர் | 70 |
| நல்லுரையிகந்து | 57 |
| நன்ளென்றன்றே | 19 |
| நன்னலந்தொலைய | 144 |
| நாணிலமன்ற | 68 |
| நிலத்தினும்பெரிதே | 12 |
| நீகண்டனையோ | 121 |
| நீர்வார்கண்ணை | 47 |
| நோமென்னெஞ்சே | 15 |
| பதலைப்பாணி | 100 |
| பல்லாநெடுநெறிக் | 107 |
| பறைபடப்பணிலமார்ப்ப | 37 |
| பாவடியுரல | 138 |
| புல்வீழிற்றிக் | 161 |
| புனவன்துடவைப் | 160 |
| பூவிடைப்படினும் | 97 |
| பூவொத்தலமருந் | 116 |
| பூழ்க்காலன்ன | 111 |
| பெயர்த்தனென்முயங்க | 132 |
| பெருந்தண்மாரிப் | 146 |
| பெருவரைமிசையது | 125 |
| மகிழ்நன்மார்பே | 118 |
| மடவமன்ற | 109 |
| மருந்தெனின்மருந்தே | 115 |
| மழைவிளையாடுங் | 164 |
| மள்ளர்குழீஇய | 61 |
| மன்றமராஅத்த | 136 |
| மாக்கழிமணிப்பூ | 94 |
| மாசறக்கழீஇய | 32 |
| மால்வரை | 147 |
| மாவெனமடலுமூர்ப | 40 |
| முட்காலிறவின் | 165 |
| மூட்டுவேன்கொல் | 56 |
| மென்றோணெகிழ்த்த | 168 |
| யாயாகியளேமாஅயோளே | 25 |
| யாயாகியளேவிழவு | 27 |
| யாயும் ஞாயும் | 74 |
| யாரினுமினியன் | 133 |
| யாருமில்லைத்தானேகளவன் | 51 |
| யானேயீண்டையேனே யென்னலனே | 93 |
| யானேயீண்டையேனே யென்னலனேஆனா | 149 |
| வண்டுபடத்ததைந்த | 45 |
| வன்பாற்றெள்ளறல் | 108 |
| வாராராயினும் | 166 |
| வாருருவணர்கதுப் | 130 |
| விட்டகுதிரை | 120 |
| விரிதிரைப்பெருங்கடல் | 154 |
| வில்லோன்காலனகழலே | 21 |
| வெந்திறற்கடுவளி | 73 |
| வேட்டச்செந்நாய் | 95 |
| வேரல்வேலி | 42 |

# பிழை திருத்தம்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 2 | குறிஞ்சிக்குன்றியினையும் | குறிஞ்சிக்குன்றினையும் |
| ,, 3 | தான்மேயமைமவரை. உலகமாகிய | தான்மேயமைமவரை யுலகமாகிய |
| ,, | நினைத்தற்காகிய களவு மணத்தை | நினைத்தற்காகிய களவு மணத்தை. |
| 10 | முப்பிறப்பிற்பயின்றது | முற்பிறப்பிற்பயின்றது |
| 13 | நீராகிய கடல்சூழ நின்றும் | நீராகியகடல் சூழநின்றும் |
| 14 | தொழி மாற | தொழில்மாற |
| 15 | அமைவிலரொன்றுரொன்றும் | அமைவிலரொன்றுளென்றும் |
| 37 | பணியாமைக்குக்காரணமாக. | பணியாமைக்குக்காரணமாக |
| 45 | நாமே உரவோராக | தாமே உரவோராக |
| 155 | உறங்கியும் உலகங்காத்தால் | உறங்கியும் உலகங்காத்தல் |